லா.ச.ராமாமிருதம்



வானதி பதிப்பகம்

# என் பிரியமுள்ள சிநேகிதனுக்கு...

# என் பிரியமுள்ள சிநேகிதனுக்கு...

லா. ச. ராமாமிருதம்

வானதி பதிப்பகம்
13. தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

முதற் பதிப்பு : நவம்பர் 1992

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை : ரூ. 34-00

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | பிரியதர்சனி | 1 |
| 2. | காரணி | 11 |
| 3. | தேவதையின் கணவன் | 24 |
| 4. | ரஸகுண்டில் ஊறும் நெளியும் சில பிம்பங்கள் | 39 |
| 5. | ஒரு முத்தம் | 50 |
| 6. | கிறுக்கல் | 68 |
| 7. | பரிவட்டம் | 88 |
| 8. | என் பிரியமுள்ள சிநேகிதனுக்கு | 109 |
| 9. | தரிசனம் வேண்டாம் | 139 |
| 10. | கன்றல் | 153 |
| 11. | காதல் | 171 |
| 12. | வீம்புக்கு மருதாணி | 183 |
| 13. | காயிதக் கப்பல் | 191 |
| 14. | வலப்பாகம் | 212 |
| 15. | அமலி | 222 |
| 16. | உச்சி வெய்யில் | 236 |
| 17. | அவள் | 251 |


நேரு அச்சகம், 43 அம்மையப்பன் தெரு, சென்னை-600014

# பிரியமுள்ள வாசகர்களுக்கு

சாகித்ய அகாடமி பரிசு பெற்ற முதுபெரும் எழுத்தாளர் உயர்திரு லா.ச.ரா. அவர்களின் புதிய சிறுகதைத் தொகுப்பை வாசகர்களுக்கு வானதி பதிப்பகம் பெருமையுடன் வழங்குகிறது. இதிலுள்ள கதைகள் எல்லாம் பிரபல பத்திரிகைகளில் வெளி வந்தவை. என்றும் அழியாச் சித்திரங்களாக விளங்கும் அதியற்புதமான கதைகளை வடித்துப் புகழுக்குமேல் புகழ் சேர்த்துக்கொள்ளும் சிறு கதைச் செம்மல் உயர்திரு லா.ச.ரா. அவர்களை நன்றியறிதலோடு போற்றுவது தமிழ் மக்கள் கடமை. அவருடைய கதைகளை தமிழ் வாசகர் களுக்கு வழங்குவதே எங்கள் தலையாய கடமை என்று கருதி இச்சிறுகதைத் தொகுதியை வெளி யிட்டுள்ளோம். நூலாசிரியர் லா.ச.ரா. அவர் களுக்கும் பிரியமுள்ள தமிழ் வாசகர்களுக்கும் எங்கள் நன்றி.

ஏ. திருநாவுக்கரசு
வானதி பதிப்பகம்

சமர்ப்பணம் :

**சேகர்**

என் கோவர்த்தன்

# பிரியதர்சனி

இன்று—பையன் அவசரமாக 'பைக்'குக்கு முகம் துடைத்துக்கொண்டிருந்தான். வெளியே கிளம்ப ஆயத்தம்.

''பெட்ரோல் விக்கற விலைக்கு எங்கே ஷிகாரி?''

சற்று என்னைச் சிந்தித்துவிட்டு என்னிடம் வந்தான். ''நிஜம் சொல்லவா? பொய் சொல்லவா?''

''அது உனக்குத்தான் தெரியும். நீ எதைச் சொன்னாலும் நம்பித்தானே ஆகணும்!''

என் தோள்மேல் கை வைத்தான். ''நல்ல அப்பா. அப்பாவாப் பழகவில்லை... ஸ்னேகிதனாவே பழகறேள்... அப்பா, சைட் அடிக்கப்போறேன்.''

''இப்படி ஒரு உண்மையைச் சொல்லிப் பெருமையைக் கட்டிக் கொண்டதா எண்ணமாக்கும்.''

''சைட் அடிக்கப் போறதாத்தானே சொன்னேன், கையைப் பிடித்து இழுக்கப்போறேன், செடி மறைவுக்கு அழைச்சுண்டு போறேன்னு சொன்னேனா? அதெல்லாம் ஒளியும் ஒலியில்தான்ப்பா. அப்படி என்னேனும் ஆச்சுன்னா, கன்னம் 'பன்' ஆகிவிடும். பெண்கள் இப்போ கராத்தே பழகறாப்பா!''

''அப்போ இப்படி ஒரு பொழுது போக்கு ஏன்? மகனே, நெருப்போடு விளையாடாதே.''

"நோ பிராப்ளம். வரேன்பா! காலேஜ் பஸ் வர நேரமாயிடுத்து. என்னென்ன பெர்ப்யூம்ஸ், என்னென்ன பவுடர், ஜாதிமல்லி, எத்தனை கொண்டை, சடைப் பின்னல், எத்தனை பாப்கட்ஸ்! அப்பா, லைஃப் இஸ் வொண்டர் ஃபுல்."

"மகனே, நெருப்போடு விளையாடாதே."

"அப்பா, நீங்கள் புத்தி சொல்லுங்கோ, கேட்டுக் கறேன். உங்களுக்குத் தலையாட்டிவிட்டு, உங்களுக்குப் பின்னால் வேறுமாதிரியா நடந்துகொள்ள முடியாதா? நம்பணும் அப்பா. அப்பா, எனக்கு நான்தான் காவல், நீங்கள் இல்லை. பொய் சொல்லியிருப்பேன். ஆனால், உங்களை ஏமாற்றினதில்லை. நேரமாயிடுத்து வரேன்!"

'பைக்'கை உதைத்து நிமிஷமாய்ப் பறந்துவிட்டான்.

என் பிள்ளை அழகன். அம்மா ஜாடை. அவன் யமஹாவில் பறக்கையில் காற்றிலிருந்து பிதுங்கிய மின்னல் கொடியாய்ப் பாவிக்க ஆசையாயிருக்கிறது. சோழவரத்தில் கலந்துகொள்ள வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக் கிறான். வயிற்றில் புளியைக் கரைக்கிறது. ஏமாற்றாமல் இருக்கலாம். ஆனால், சொல்வதைக் கேட்கமாட்டான்.

இன்று—

இருங்கள், சற்றுப் பொறுங்கள். இப்போது நான் இன்று என்றபோது எந்த இன்றைக் குறிக்கிறேன் என்று எனக்கே புரியவில்லை. வரவர எனக்கு நேரங்கள் குழம்புகின்றன. மந்தாரமிட்டிருந்தால், (இடாவிடினும்) காலைக்கும் மாலைக்கும் வேறு தெரியவில்லை. ஆகவே, இன்று என்று தனியாகத் தெரியாமல் என்றும் அதனுள் புகுந்து கொண்ட

இன்று—

விடியற்காலையில் என்னோடு யாருமில்லை. கிணற்றுள் எட்டிப் பார்க்கையில்— அது ஒரு பழக்கம்— ஏற்கெனவே பயந்து கொண்டிருந்தபடி தண்ணீர் இறங்கியிருந்தது.

தாரைகளின் நறுங்கல் தவிர ஜலம் அமைதி. ஓரிரண்டு பாதாமி இலைகள் மிதந்தன.

ஆழத்தில், என் முகத்தருகே 'சடக்'கென இன்னொரு முகம் தெரிந்து—யாரிது?—முகம் நிமிர்வதற்குள் பிம்பம் மறைந்துவிட்டது. திரும்பிப் பார்த்தால் முகத்துக்குச் சொந்தக்காரரர் காணோம். ஆனால், ஓடின சத்தமும் கேட்கவில்லை. அத்தனை சுருக்க ஓடி இருக்கவும் முடியாது.

ஆனால், கொஞ்ச நாட்களாவே என்மீது புகார்கள் கிளம்பியிருக்கின்றன வீட்டில் பேசாததெல்லாம் எனக்குக் கேட்கிறதாம். அதனால் சண்டை போடுகிறேனாம்... கண்ணுக்கெதிரே குத்துக்கல்லாய் நிற்பது தெரியவில் லையாம். ஏதோ கேட்டால் சம்பந்தமில்லாமல் ஏதோ பதில் சொல்கிறேனாம். 'வயசாச்சோன்னோ?'—சமயம் வந்தபோதெல்லாம் இடித்துக் காட்டுகிறார்கள்.

பாதாமி மரத்தடியில் பாறாங்கல்லின்மீது உட்காரு கிறேன். தலை லேசாய்க் 'கிர்ர்ர்'. உண்மையில் தோன் றிற்றோ? பிம்பம் தோன்றி ஒளிந்துகொண்ட நொடி நேரத்துள் நெஞ்சில் தங்கிவிட்ட அந்த நினைப்பின் ருசி இப்படி உண்டோ? கொடுமை தி சாங் ஆஃப் தி சைரன்ஸ். அம்மா, என்னைக் காப்பாற்று. தலையை இரு கைகளாலும் பிடித்துக்கொள்கிறேன்

முதலில் அது அவனா? அவளா? அதுவா? என் ஞாபகத்தின் சக்தியை முழு மூச்சில் கூப்பிடுகிறேன். பரட்டை முடியினின்று தப்பின ஓரிரு பிரிகள் என் கன்னத்தில் குறுகுறு?!!? அப்படியானால் அது நிச்சயம் அவள். அவளன்றி வேறாய் வேண்டாம்.

அது அவளானால் அவள் எவள்? அதுதான் கொடுமை. நெற்றி கசகசக்கிறது. 'திகைப்பூண்டு' என்கிறார்களே அது உண்மையா? அடிக்கடி அவள் என்னைக் கேட்கும் கேள்வி.

"என்னப்பா, நாரத்தம் பச்சடின்னா ஒரு வெட்டு வெட்டுவியே, அம்மா நன்னாவும் பண்ணியிருக்கா, ஆனால் குருவியாட்டம் கொறிக்கறே, உடம்பு சரியில்லையா?"

பிள்ளையாண்டான் படு குஷியிலிருக்கிறான். சேவலின் கொண்டைச் சிலிர்ப்பிலிருக்கிறான். பஸ் ஸ்டாண்டில் இவன் கொடி கட்டிப் பறக்கறாப் போல இருக்கு. ஆனால், கண்களில் லேசான மருட்சி—அல்லது என் பிரமையா?

அவன் சொன்னாற்போல், நாங்கள் உண்மையிலேயே நல்ல நண்பர்கள். எனக்கு இந்த உறவு தேவையாயிருக்கிறது. உத்யோக ரீதியில் காம்ப் அல்லது வெளியூரில் கிரிக்கெட் மாட்ச் என்று இரண்டு நாட்கள் சேர்ந்தாப் போல, மது கண்ணில் படாவிட்டால் எனக்கு வேளையே மங்கிவிடுகிறது. திரும்பி வந்ததும் அவனைத் தொடணும் போல ஆசை பெருகுகிறது. வெட்கம், கௌரவம் தடுக்கின்றன.

மது நல்ல பையன்; 'அண்ட் ஐ ஆம் ஆன் ஓல்ட் மேன்.'

என் பெருமூச்சு அவனுக்குக் கேட்டுவிடப் போகிறது. ஆனால், அந்தக் கவலை வேண்டாம். பூமியில் கால் பாவாது அவன் தன் உலகில் மிதந்துகொண்டிருக்கிறான். அவன் புன்னகை, ரகஸ்யமும், கனவொளியும் கொண்டு, அவனுடைய அத்தனை கலகலப்பிலும் அவனைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டிருக்கிறது.

தட் இஸ் யூத்.

உச்சிவெயில். வீட்டுள் வெக்கையின் மயக்கத்தில் அவரவர் தம்தம் மூலையில் கண் செருகிக் கிடக்கின்றனர். சந்தடி செய்யாமல், கிணற்றடிக்குச் சென்று எட்டிப் பார்க்கிறேன். இப்படியும் பேதலித்துப் போகணுமா? மீண்டும் நிகழாதா? பாதாமி மரத்திலிருந்து, பறவை எச்சம் உச்சி மண்டைமேல் சூடாய் விழுகிறது. கோபம் பொங்குகிறது. கூடவே அழுகை பயமுறுத்துகிறது.

மரத்து நிழலடியில் ஒதுங்குகிறேன்; ஓடுங்குகிறேன்.

இந்த வயதில் நீ எனக்கு நேர்வானேன்?

இப்படிக் கேள்வி பிறந்ததுமே நீ நேர்ந்துவிட்டாய். உன்னை எனக்கு உண்மையாக்கிக் கொண்டுவிட்டேன் என்கிற எண்ணம் அதன் முழுக்கனத்துடன் என் நெஞ்சின் ஆழத்துள் அமிழ்ந்ததும் உடல் புல்லரித்துப் போனது.

அப்போது நீ நிஜம்.

உண்மையின் தரிசனம்.

ஆம், மெய்யும் பொய்யும் அவரவர் மட்டில்தானே! ஆதார நிஜம், 'பேசிக் ட்ருத்' என்று ஆயிரம் சொல்லிக் கொண்டாலும் எல்லாமே பார்வைகள். ஆயிரம் பார்வைகள், ஆயிரம் முகங்கள்.

இந்த ரீதியில் எங்கே போய்க்கொண்டிருக்கிறேன்?

உன்னை எனக்கு நிஜம் பண்ணிக்கொண்டதனால் வேதனை அதிகரிக்கின்றதே ஒழிய, தெளிந்ததால் தெம்பு ஏற்படவில்லை.

இதோ பார், நான் காய்ந்த சருகு. என் உடல் இனி சிதைக்கு உரியது. இந்த நிலையில் நீ என்னுள் உன் பொறியை வைத்து வேடிக்கை பார்ப்பது நியாயமா? நெஞ்சில் அமிர்தம் சிக்கியதுபோல் அழியவும் முடியாது. வாழவும் வழியில்லை. தாங்க முடியவில்லையே!

ஒரு பெரிய கேவல் என்னின்று புறப்பட்டதும் மிரண்டு போனேன். புரண்ட பூமியின் பெருமூச்சு. தாளொணா ஏக்கம். அதன் கபந்தவாய், மிருதுவாய் என்னைக் கவ்வியதும் கண்ணீர் புரண்டது.

'நித்யத்வத்தினின்று தெறித்த தருணம்
அது சிதறுண்டு நேர்ந்த கவிதை
சொல்லுக்குப் பதில் உகுத்த கண்ணீரில்தான்
காதல் பூக்கின்றது.

கானல் மேல் காதல். ஆகவே உன்மேல்
காதல் எனும்
எண்ணம் தைரியமாகத் தன்னில் தோன்றிவிட்டது."

இரண்டு நாட்களாக அவன் மாறிவிட்டான். திடீரென ஒரே அடியாக வதங்கிவிட்டான். மகனே, என்ன நேர்ந்தது? உன்னை ஏன் தின்றுகொண்டிருக்கிறாய்? எங்களை, என்னை ஏன் ஒதுக்குகிறாய்?

வாய்விட்டுக் கேட்க முடியுமா? கேட்டால்தான் சொல்வானா?

ஆபீஸ் வேளைக்கு வீட்டை விட்டுப் போகிறான். ஆபீசுக்குப் போகிறானா? வேளை தாண்டி வீடு திரும்புகிறான். வீட்டில் இருட்டு மூலைகளில், மொட்டை மாடியில் வாழ்கிறான்.

காலேஜ் பஸ்சைத் தேடிப் போலையே, பஸ் ஸ்டாண்டில் உன் கொடி விழுந்துவிட்டதா? அப்படித்தான் தோன்றுகிறது.

நேற்று மாலை, மாடு அவளுடைய நந்தவனத்தில் புகுந்துவிட்டது. அவள், கத்திக்கொண்டே லொங்கு லொங்கென்று ஓடிவந்துகொண்டிருக்கையிலேயே அது போகிற போக்கில், செடியோடு ஒரு தொட்டியை இழுத்துச் சென்று தொட்டி உடைந்து ரோஜாச் செடி மாட்டின் வாயில். சாவகாசமாய் நின்று மென்று தின்றது.

அங்கேயே உட்கார்ந்து ஒரு பாட்டம் அழுதாள்.

வாய்விட்டு, நெஞ்சின் கனம் தீர அழுகைக்கு எங்கே போவேன்? நல்ல அழுகை, நல்ல ஸ்னானம்.

நான் தோளில் சாய்ந்தோ, மடியில் முகம் புதைத்து அழக்கூடியவர் யாவரும் மறைந்துவிட்டனர். இப்போது அவர்களை அழைப்பது என் துராசை.

என் வயதுக்கேற்ப, நோய்வாய்ப்பட்டு நாளடைவில் தேய்ந்து, ஒருநாள் மாய்ந்துபோவதில் நியதியிருக்கிறது. ஆனால், இப்படிப்பட்ட மரம் துளிர்க்கும் இன்ப வதையில் நியதி இல்லை. ஆனால் இதுதான் உன் லீலை.

மது படும் வேதனைக்கு மனம் பரிதபிக்கின்றது. ஆனால் அங்கு நியதி தெரிகிறது. அவன் வயதுக்கு நேரும் நோய் வாய்ப்பட்டுத்தான் ஆகணும். ஆனால், மனம் பரிதபிக் கிறது. சாயங்காலே—சாயங்காலம் அதன் அச்சங்களுடன், நாளை எனும் அநிச்சியத்துடன், மங்கல்களுடன் பூஜை அலமாரிக்கெதிரே நிற்கிறேன் உன் படத்துக்கெதிரே. என் தாபத்தினின்று விடுபட உன் காலிலேயே விழுகிறேன்.

அவள் தன் உற்சாகமான பக்தியில், உன் படத்துக்கு மஞ்சள் கோர்த்த மஞ்சள் சருகு அணிவித்திருக்கிறாள். அதன மங்கலமான வேலியின் பத்திரத்தில் நின்றுகொண்டு என்னைச் சிரிக்கிறாய்.

ஆ—!— இப்போது உன் எதிரே நிற்கையில் கிணற்றில் தோன்றிய பிம்பம் யார் என்று ஓரளவு யூகிக்கத் தோன்று கிறது. படலம் விலகுகிறதா?

ஜன்மம் எனும் முடிவற்ற நினைவு அதில் எங்கோ எப்பவோ புதைவுண்ட எண்ணமாய் நீ உன் படுகையினின்று உன் வேளையில் கிணற்றுள் பிம்பமாய் மேல் வந்து மிதந்து, அந்த சலனத்திலேயே மறைந்தும் போய், உன் ஒளிவிலிருந்து வாட்டுகிறாய். அப்படித்தானே? சமாதானங்களை இப்படித் தான் செய்துகொள்ள வேண்டும். ஏனென்றால் நீ நிரு பணைக்கு அப்பாற்பட்டவள்.

மதுவைப் பார்க்க சஹிக்கவில்லை. என் கண்ணுக்குப் பாதியாகிவிட்டான். கண்களைச் சுற்றிக் கறுப்பு வளை யங்கள். நின்றவிடத்தில் நிற்கிறான். நாலடி நடந்து மலைக்கிறான். கண்ணுக்கெதிரே இளைக்கிறான். மது, என்னடா செய்வேன்—செய்வோம்?

மின்சாரம் தோற்றுப்போய், வட்டமேஜை மீது ஏற்றி நட்டு வைத்திருக்கும் மெழுகுவர்த்தி ஒளிகூடத்தின் இருளைக் கூட்டிக் காட்டுகிறது. ஒரு மூலையில் அவள், ஒளியும் ஒலியும் அநியாயமாப் போய்விட்டதென்று புலம்பிக் கொண்டிருக்கிறாள்.

ஏதோ ஒரு அறை வாசலிலிருந்து மது வெளிப்படு கிறான். என்னை நோக்கி வருகிறான். என்னவோ சொல்லப் போகிறான். என் தோள் மேல் கை வைக்கிறான். காத்திருக்கிறேன். எங்கள் நிழல்கள் சுவர்மேல் விநோத நர்த்தனம் புரிகின்றன. அவன் உதடுகள் நடுங்குகின்றன. (க்ஷவரம் செய்து எத்தனை நாட்கள் ஆயினவோ). விழிகள் நிறைகின்றன. கன்னம் கன்ற வழியும் அவன் கண்ணீர் என் நெஞ்சில் ஆவி கக்குகிறது. திரும்பிப் போகிறான். அந்தத் தருணம் வந்து நின்று, தயங்கி, பொரியாமல், அதன் கனத் துடன் திரும்பிப் போய்விட்டது.

'காதல் எனும் புரையோட்டம்
காதல் எனும் துரோக நதி. ஆனால் ஜீவநதி.
காதல் எனும் வெந்நீர் வீழ்ச்சி.
அதன் தழும்பிலிருந்து மீளமுடியாது...'

மாலை நேரங்கள் பயமாயிருக்கின்றன; பயங்கள் தலை விரித்தாடும் வேளை அப்போத்தான்.

என்னை அலசிப் பார்த்துக் கொள்கிறேன். மனதைச் சாட்டையாலடித்துக் கேட்கிறேன். மனம் மருள்கிறது. உடலின் வேட்கை அன்று இது. மனம் துணைக்குத் தவிக் கிறது. ஒரு பாதி குருதி சொட்ட தனிமையின் ஏக்கத்தில் நிற்கிறேன்.

ஒரு எண்ணம் தோன்றுகிறது. இதோ, இந்தக் கிணற்றடி யில் பாதாமி மரத்தின் கீழ், பாறாங்கல்மீது நான் உட்கார்ந் திருக்கையிலேயே என் எண்ணத்தின் தீவிரத்தில், கிணற்றில்

பார்த்த பிம்பத்தின் உருவில் உன்னை நான் சிருஷ்டிக்க முடியாதா? மாலையில் செவ்வான குண்டத்தினின்று, அல்ல இந்தக் கிணற்றிலிருந்தே நீ ஏன் எழக்கூடாது? தவம் என்பதே என்ன, ஒரு எண்ணம், ஒரே எண்ணத்தின் தீவிரம் தானே!

ஒரு பாதாமிக் காய் என் தலைமீது விழுந்தது. என்ன, என்னை மண்டையில் தட்டி உட்கார வைக்கிறாயா?

நான் பைத்யமே ஆகிவிட்டேனா?

அவளுக்கும் அவளுடைய வெண்டைச் செடிக்கும் ஏதோ பேச்சு மெளனத்தில் நடந்துகொண்டிருக்கிறது.

வாசல் கேட் திறக்கும் சத்தம் கேட்டு நிமிர்கிறேன்.

மது, அவன் தனியாயில்லே. நேரே என்னிடம் வரு கிறார்கள். மஞ்சள் க்ரீம் ஜிப்பாவில் மெலிந்து, உயரமாய் வருகிறான்.

"அப்பா, அம்மா சேர்ந்து நில்லுங்கோ. எங்களை ஆசீர்வதியுங்கள்." நமஸ்கரித்து எழுந்து நிற்கிறார்கள். அவளுக்குச் சேவிக்கத் தெரியவில்லை. மண்டியிட்டு, தலை யைத் தரையில் அழுத்தி மீண்டும் மண்டியாகி, மண்டியி லிருந்து எழுகிறாள். பின்னல் பூமியில் புரள்கிறது. தாழம்பூச் சிவப்பு.

"நன்னாயிரு மகராஜீயா"—அவன் தாயார் திகைத்து நிற்கிறாள்.

"அப்பா நான் பொய் சொல்லியிருப்பேன். ஆனால், உங்களை ஏமாற்றியதில்லை. அப்பா! இவள் என்னை நம்பி, தன் பெற்றோரையே துறந்துவிட்டு வந்திருக்கிறாள். அப்பா இவளும் மேஜர். சட்டப்படி இவள் 'ஃப்ரி அப்பா, இவள் பேர் அமீர்ஜான்."

"மதுவின் தடலடி பாணி. அவன் கண்களில் ஒரு கண் ணாடிச் சாமான் தைரியம், துணிச்சல், விளிம்பு பிசகினால்—

"என்னடா சொல்றே மது? இவள் யாருடா?"

நான் அவளைக் கையமர்த்துகிறேன்.

நீ யார் என்று கேட்க எனக்குத் தேவையில்லை. ஏற்கெனவே உன் பிம்பம் காட்டி, சூசகம் காட்டியிருக்கிறாய். நீ வரப்போகும் அடையாளமாய் என் நெஞ்சின் சருகின்மேல் நடந்து சென்றிருக்கிறாய். அவ்வளவுதான். ஆனால் அதுவே எனக்குத் தாங்கவில்லை.

"அப்பா! அழாதேங்கோப்பா" தேம்பினான். 'என்னால் முடியவில்லை.'

உஷ்! மகனே, இது அழுகையில்லை. அருவிஸ்னானத்தில் என் அழுக்குகள் கழுவப்பட்டு துல்லியமாகிக்கொண்டிருக்கிறேன்.

நீ லலிதாம்பிகை.

நீ ராஜ ராஜேஸ்வரி.

நீ கன்யாகுமாரி.

நீ பாலா.

நீ அமிர்ஜான்.

# காரணி X

''ஐயா! ஐயா!''

அவர் பேசவில்லை. யாராவது பதில் கொடுத்துக் கட்டும். மேடையில் படுத்திருக்கும் நிலையில், நரம்புகள் தளர்ந்து, உடலோடு மனம் கண்டிருக்கும் இசைவை இழக்க மனமில்லை.

அஸ்தமித்துவிட்டது. இப்பல்லாம் சுருக்கவே இருள் விழுந்துடறது காக்த்திகை மாதமில்லையா?

''வீட்டில் யாருமில்லே?'' கேட்டிலிருந்து குரல், மீண்டும், அவசரமாக,

யார் அந்தக் கடன்காரன், வேளையில்லா வேளையில், பழனிக்குப் பால் காவடி தூக்கறேன்னு, ரசீது புத்தகத்தோடு வந்திருப்பான்—

''எனக்கென்ன? உங்க வீட்டுள்ளே பாம்பு!''

விழுந்தடித்துக்கொண்டு வெளியே வந்தார். பின்னாலேயே, சமையல் கட்டிலிருந்து அவளும் வந்தாள்.

''என்ன? என்ன?''

முள்வேலி அடிலே படுத்திருக்குது.

உடம்பு உதறல் கண்டது.

''எப்படியானும் போங்க! சொல்லிட்டேன்! உங்கபாடு உள்ளே இருந்துட்டேவா குரல் கொடுக்காமே!''

போய்விட்டான். அவனுக்குக் கோபம். இருளில் உருவக் கோடு கூடத் தெரியாமல் குரலாவே இயங்கிவிட்டுப் போய் விட்டான்.

அடுத்தாற்போலேயே, "இந்து அவங்க அம்மா! பெரீ—ய—பாம்—இல்லே பூச்சி!" ஒரு பெண்குரல் குழறிற்று. "வீட்டுள்ளே நுழையுது—அப்பா, முருகா!"

"ஐயோ என் குழந்தைகள் எல்லாம் வெளியிலே போயிருக்காளே!" அவள் குரல் அழுகையில் நடுங்கிற்று.

அப்பத்தான் அவருக்கு நினைப்பு வந்தது. வாசல் விளக்கைப் போடவில்லை. 'ஸ்விட்ச்சை'த் தட்டினால், மின்சாரம் 'அம்பேல்' தெருவிளக்கும் பேசவில்லை. ஆனால் அது இருந்தும் ஒண்ணுதான், இல்லாமலும் ஒண்ணுதான். வேலியோடுதானும் வீடுகாக்கும் பூவரச மரத்தின் இலைகள் நெருக்கமான பின்னல் கோலத்தில் வெளிச்சம் உள்ளே விழாமல் தடுத்தன.

யாரைக் கூப்பிடுவது? இந்த இருளில் யார் வருவார்கள்? எதிர் வீட்டில் ஊருக்குப் போயிருக்கா. யாருக்கோ சீமந்தமாம். பக்கத்து வீட்டில் சந்தடியிருக்கு. ஆனால் எல்லாரும் உள்ளேயிருப்பா. பஜனையில் மலைக்குப் போறா.

பின் வீட்டில்—ஊ ஹூம். அங்கே போக, பின் வேலியில் வழி திறந்துவிட்டிருக்கு. கிணற்றடி தாண்டி இருட்டில்—சரிப்படாது. நரேஷ் இன்னும் ஆபீசிலிருந்து வந்திருக்க மாட்டான்.

"வெள்ளிக்கிழமையும் அதுமா, இன்னும் சாமி விளக்கு கூட ஏத்தல்லையா?" எரிந்து விழுந்தார். "ஏன் பாம்பு வராது? லாந்துரை ஏத்து."

"வீட்டில் சொட்டு சீமெண்ணெய் இல்லை. gas இன்னிக்கோ நாளைக்கோன்னு காத்துண்டிருக்கு. என்ன செய்யப்போறேனோ தெரியல்லே."

"நிர்வாகம் பலே பேஷ்!"

"என்னைச் சொல்லி என்ன? நானா பண்றேன்? உங்கள் பெண்ணைக் கேளுங்கோ!"

"சீமெண்ணையே எப்போ இல்லையோ, மெழுகுவர்த்தி பத்திப் பேசவே வழியில்லை. அம்மா பதிவிரதா சிரோமணி எப்படியேனும் வீட்டுள் வெளிச்சத்தை வரவழைக்கப்பார்."

அவள் உள்ளே போகையில், பின்னாலேயே கத்தினார். 'டார்ச் என்னவாச்சு?'

'இந்த இருட்டிலே எங்கே தேடறது? கிடைச்சாலும் 'ஸெல்' இல்லை.'

"ஹத்தரி குடக்கல், குடும்பமே பவிஷே!"

செல்லாக் கோபம். வியர்த்தத்தில் உள்ளே அலை பொங்கிற்று.

ஆமாம், இதுவரை காதுக்கு ஒரு சலசலப்புக்கூடக் கேக்கல்லியே! அதனால் சொன்னவா—அதுவும் ஒருத்தருக்கு ரெண்டுபேரா—பொய்யாயிடுவாளா? பெரீ—இ—இ—சாமே! இங்கே வந்து இந்தப் பன்னிரண்டு வருஷங்களில் எத்தனை வீடு முளைச்சாச்சு இன்னுமா நாட்டுப்புறம் மாதிரி!"

ஆ ஞாபகம் வரது. பின் வீட்டில் வாழும் பாம்பு இருக்காமே! பேச்சுவாக்கில் நரேஷ் எப்பவோ சொன்னான். எங்களுக்கு முன்னாலிருந்தே புத்து இருக்கு. நாங்கள் உங்களுக்கு முன்னாலிருந்தே இருக்கோம். அதனால் என்ன? நாங்கள் அது வழிக்குப் போறதில்லை. அதுவும் எங்கள் வழிக்கு வரதில்லை, நாங்களும் சம்சாரிகள்தான். இது வரைக்கும் நாகராஜ சுவாமி புண்யத்திலே இதுவரை நன்னாத்தானிருக்கோம்.

அவா சமாதானமாயிடலாம். பதினஞ்சு அடி தூரத்திலே பாம்பை வெச்சிண்டு சும்மா பார்த்துண்டிருக்க முடியுமா?

இந்த இருட்டில் இங்கேதானிருக்குன்னு அதை ஆணியிலே அடிச்சு சொல்ல முடியுமா, நிறுத்திவைக்க முடியுமா? இருட்டில் நான் எங்குமிருப்பேன்.

அவரை அறியாமல் கைகள் கூப்பின.

வெளியில் போனவர் திரும்பற நேரம்தான்.

சேது ஆபீஸிலிருந்து—

நந்து மாலைக் காலேஜிலிருந்து வர இன்னும் ஒரு மணி நேரம் ஆகும். இந்து ஷாப்பிங் வர நேரம்தான். அவள் தான் தற்சமயம் குடும்பத்தின் கோவர்த்தனதாரி. கையால் ஆகாததை வாயால் இட்டு நிரப்பிண்டு, ஒரே அமுலும் அட்டஹாசமும்தான். அவள் கண்ணை மூடிண்டால் கூடவே உலகமும் அஸ்தமித்துவிடும்.

ஆனால் யாரும் ஒரு தரமேனும் பூமியில் கண்ணைச் செலுத்தி வரமாட்டா. அவாளவாள் குருட்டு யோசனையில், யார் தலையும் ஆகாசக் கோட்டையில்தான்.

பெருமூச்செறிந்து எழுந்தார்.

"எங்கே போறேள்?"

"பக்கத்தாத்துக்கு, புருஷாளைக் கூப்பிட."

"உங்களுக்கு மாத்திரம் பாம்பு குறுக்கப் படுத்திண்டு இல்லையா?"

"இருக்கும். 'ஆபதாமப ஹத்தாரம்' தான் துணை. நடக்கறது நடக்கட்டும். சிறுசுகளெல்லாம் வெளியிலே போயிருக்கு. என்னை உசிர் வெல்லம் கொண்டாடச் சொல்றியா?"

"நீங்கள் எங்கேயும் போக வேண்டாம். இருட்டுலே குருட்டாண்டி. அதுலே தடுக்கி அதன்மேலேயே விழுவேள்."

"அப்படி நேர்ந்தால் அதையும் படவேண்டியதுதான். குந்தளே, பாம்பு சத்யத்துக்குக் கட்டுப்பட்டது. மனுஷனுக்குத்தான் எதுவுமே கிடையாது.

"போக வேண்டாம்னா வேண்டாம். வயசாயிடுத்துன்னா பிராம்மணனுக்கு இப்படியா பேதலிச்சுப் போகணும்?"

பதில் பேசவில்லை. கோபத்தை அடக்கிக்கொண்டார். படியை விட்டிறங்கி விட்டார். வயசான பிறகுதான் இவாளுக்கு நாம் பிராம்மணனாறோமோ? இத்தனை நாளா இவாளுக்கு என்னவாயிருந்தோம்? எனக்கு வயசாயிடுத்து' இவளுக்கு மட்டும் நின்ன இடத்திலேயே நின்னுடுத்தா? இவளுக்கு சரியா பதிலுக்குப் பதில் பேசிண்டிருக்க முடியுமா? உண்மையான கரிசனமிருந்தால் இவளும் என்னோடு வரட்டுமே!

மெல்லியதாய் மடிக் கொம்பைத் தவிர வீட்டில் தடி, கழி என்கிற தினுசில் ஏதுமில்லை, ஊன்றிக்கொள்ளத் தடி வாங்கிக் கொடுக்க சேது தலைகீழாக நின்றான். மறுத்து விட்டார். வயதை ஒப்புக்கொள்ள மனம் ரோசம் பார்த்தது.

வாசற்படியைத் தாண்டுகையில், தாண்டித்தானே ஆகனும்— பயம் இருக்கட்டும், அதுதான் எப்பவும் இருக்கிறதே!— ஆபத்தின் விளம்பில் இரத்தோட்டத்துக்கு ஒரு தனி சுறுசுறுப்பு வந்துவிடுகிறது. அங்கே நேரத்தின் தத்தளிப்பில் ஒரு த்ரில். இப்போ என்ன வேணுமானாலும் நேரலாம்— என்ன நேருமோ? எனும் கேள்வி நெஞ்சில் கொக்கி மாட்டி இழுக்கையில் ஒரு விரக்தி— அந்த விரக்தியினாலேயே மனதுக்கு ஒரு ஆகாச விடுதலை.

ஒன்றும் நேரவில்லை. ஆனால் படி தாண்டினதுதான் தாமதம், நடையை வேகமாய்க் கட்டினார். பின் துரத்திக் கொண்டு வருகிறதோ?

வாசலில் உருவம் நிற்பது அடையாளமாகத் தெரிந்தது.

"சாமி சரணம், யாரது? மாமாவா, அடடா, வாங்கோ மாமா என்னமாமா இந்த இருட்டில்? ஒரு குரல் கொடுத்திருந்தால் வரமாட்டேனா?"

"நான்தான் வந்துட்டேனே! சந்தரு இப்போ திரும்பி போறப்போ நீதான் துணை வரணும்."

விஷயத்தை விளக்கினதும், கிழங்குமாதிரி 'டார்ச்'சை எடுத்துக்கொண்டு சந்தரு உடன் கிளம்பிவிட்டான்.

முள்வேலி பூரா கீழே அடித்து பார்த்தாகிவிட்டது. பூவரச மரத்தின் வேர் முடிச்சுகளுடன் முடிச்சாய்ப் போட்டுக் கொண்டிருக்கிறதா? மேலே கிளையில் சுற்றிக் கொண்டிருக்கிறதா?

இல்லை.

சந்தருவின் காலடியில் கீழே ஜமக்காளமாக உதிர்ந்து கிடக்கும் பூவரசம் சருகுகள் 'சரக் சரக்'.

"மாமா நான் மலைக்குப் போறேன். தரிசனம் பண்ணி வெக்கறது வரை நான் அவனுடைய பொறுப்பு—எனக்கு எதுவுமே நீங்க நெனக்கறபடி நேராது. சாமியே சரணம் ஐயப்போவ்—

நம்பிக்கையின் முதல், சந்தரு பகுத்தறிவு. சந்தேகங்களின் பீடம். ஆனால் இரண்டுமே இல்லாமல் முடியாது. இதென்ன கோலம்?

கேட்டுக்குத் தென் மூலையில் கிடந்த செங்கல் குவியலின் மேல் ஏறி நின்றுகொண்டு சந்தரு, டார்ச் வெளிச்சத்தைச் சுற்றிலும் மேலோட்டமாக விட்டான்.

போன இரண்டாம் வருடம் வீட்டைப் பழுது பார்த்த மிச்சம். முழுதும் அரையுமாய், வெய்யிலில் காய்ந்து, மழையில் ஊறி நாளாவட்டத்தில் கலைந்து சரிந்து அவலமாய்...

"மாமா, எனக்குத் தெரிஞ்சவரை முள் வேலியில் அது இல்லை. இந்த செங்கல் குவியலுள் அது புகுந்து கொண்டிருந்தால், அதை யாரும் ஒண்ணும் பண்ணிக்க முடியாது. சரி வரேன் மாமா, எனக்கு நேரமாச்சு, நைட் ஷிஃபட்—"

போய்விட்டான், கவலைகளை மீண்டும் கொடுத்து விட்டு.

"இன்னிக்கு ஒளியும் ஒலியில் மண்ணா?" என்று அவள் புலம்ப ஆரம்பிக்கையிலேயே விளக்குகள் ஏற்றிக்கொண்டன. வெளிச்சம் வெள்ளமாய்ப் புரண்டது. அதுவே ஆசி.

"ஹாய்!" குதித்துக்கொண்டு குந்தளை உள்ளே ஓடினாள் தலையில் அடித்துக்கொண்டார் மாட்டுப்பெண் வர வயசாச்சு.

அடுத்தாற்போலேயே கேட் 'க்றீச்'. 'பார்த்து வா!' என்று சொல்லக்கூட நேரம் தரவில்லை. இரண்டு கைகளிலும் இரண்டு பைகளைத் தூக்கிக்கொண்டு, குடும்பத்தின் கோவர்த்தனதாரி 'விர்'ரென்று நடந்து உள்ளே வந்து விட்டாள்.

"வேடிக்கை பாத்திண்டிருக்கேளே, ஒரு பையை வந்து வாங்கிண்டால் என்ன? கை, விட்டுப்போறது. இப்படி உழைச்சாகணும்னு என் தலையெழுத்தா?"

ஆனால் பையைக் கொடுக்கமாட்டாள். கொடுத்து விட்டால், தியாகி ஆவது எப்படி? அது நாக்கு அல்ல. கொடுக்கு.

பின்னாலேயே 'கேட்' தடதடா.

அதுதான் நந்துவின் பிரவேசம் சைக்கிளோடு. வாங்கி இரண்டு வருஷங்களாகவில்லை. பேரீச்சம் பழக்காரனுக்குப் போடுகிறமாதிரி, எட்டு ஊருக்குக் கேட்கறமாதிரி கலகலத்துப்போயாச்சு.

"என்னடா, அதுக்குள்ளே வந்துட்டே?"

"இன்னிக்கு 'ப்ராக்டிகல்' இல்லை; வாத்தியாருக்கு ஒளியும் ஒலியும் பார்க்கணுமாம்."

"என்ன மாமா, ஒரே கலாட்டா, உங்கள் வீட்டில்?"

குரலோசை முன்னே, நரேஷ் பின்னே. பின் வீட்டிலிருந்து கிணற்றடி வழியாக எப்பவும்போல் அவன் வழி. பாவம் அவன் என்ன செய்வான், அந்தக் குரல் எப்பவுமே இரண்டு டெஸிபல் தூக்குத்தான்.

"உனக்கு யார் சொன்னது?"

"யார் சொல்லணும். நான் உங்களுக்குப் பின் வீட்டுக்காரன் மாமா. மாமா, ஒண்ணு சொல்றேன். பாம்பைப் பார்த்தேன்னவன் பொய் சொல்லியிருக்கான். உங்கள் சுபாவம் தெரிஞ்சு."

"நரேஷ் நீ கெட்டிக்காரனாயிரு. வேண்டாம் என்க நான் யார்? ஆனால் மத்தவாள்ளாம் மக்குன்னு பண்ணாதே!"

"அப்படின்னாப் பார்த்தவாளுக்குக் காலம் சரியில்லேன்னு அர்த்தம். அப்படியெல்லாம் லேசா, காரணமில்லாமல், யார் கண்ணிலும் பாம்பு பட்டுடாது மாமா. பாம்பு, பசு ரெண்டும் மனுஷாள் மாதிரியில்லே. அதுகளோட பூர்வாம்சமே வேறே—

இந்த ரீதியில் என்னத்தையோ கொட்டிவிட்டுப் போய் விட்டான்.

அவருக்குச் சிரிப்பு வந்தது, கோபம் வந்தது, ஆச்சரியம் வந்தது.

இவனுக்கு ஏன் இத்தனைப் பதட்டம். அவர்கள் வீட்டில் வாழும் பாம்பைச் சொல்கிறார்கள் என்று ரோசமோ?

"வாசலில் வந்து உட்கார்ந்துட்டேளா? இன்னும் அந்த நேரம் ஆகல்லியே!" இவன் எப்போ முளைத்தான். வந்ததே தெரியல்லியே! ஆனால் சேதுவே அப்படித்தான். சத்தமில்லாத பாவனை. சாந்தமும், மரியாதையும் பிசகாத குரல். ஆனால் அப்பா அவனுக்காக வாசலில் உட்கார்ந்திருப்பது அவனுக்குப் பிடிக்காது.

அவனைத் தொடர்ந்து உள்ளே சென்றார். அப்பா என்ன நிம்மதி, புறா மார்பு மாதிரி, மெத்து மெத்துனு எல்லாரும் உள்ளே வந்தாச்சு.

காப்பியைக் குடித்தபடி அவர் சொன்னதையெல்லாம் கேட்டான். அவனுடைய காபியிலிருந்து ஒரு குட்டித் தம்ளரில் அவருக்குக் கொடுத்தான். ஒரு முழுங்குதான். ஆனால் அப்பாவுக்கும் பிள்ளைக்கும் இந்தப் பரிமாறல் நெடு நாளையப் பழக்கம். வேடிக்கையாக ஆரம்பித்து, பிறகு ஒரு சடங்காகவே நிலைத்துவிட்டது. அப்பாவுக்குச் சொட்டுக் காப்பி என்கிற பேரும் கொண்டாச்சு.

சற்று நேரம் பொறுத்து.

'அப்பா ஒண்ணு சொல்றேன், கேட்பேளா?

காத்திருந்தார்.

"இன்னும் பாம்பு, பார்த்த இடத்திலேயே எங்களுக்காகக் காத்திண்டிருக்குன்னு நினைக்கிறேளா? நீங்கள் எங்களுக்காக வாசலில் உட்கார்ந்திருப்பதால் எங்களைக் காப்பாற்றிவிட முடியாது. இன்னும் ஒண்ணு, நாம் எல்லோரும் உள்ளே வந்துவிட்டோம் என்பதால் பத்திரமாகிவிட்டதாக உங்கள் எண்ணமா? இதோ பாருங்கள்." சுட்டிக் காட்டினான். "தண்ணீர் போக வைத்திருக்கும் ஓட்டை. இன்று வெள்ளிக்கிழமை. கூடத்தை அலம்பிவிட்டிருப்பார்கள். மீண்டும் அடைக்க மறந்துவிட்டார்கள். இதன் வழியாக உங்கள் பாம்பு வர முடியாதா? வருவது பாம்பாய்த் தானிருக்கணுமா?"

அதிகப்பிரசங்கி. இந்தக் காலமே நமக்கு உபதேசம் செய்கிறவர்கள்தான். நாம் சொல்வது நல்லதுக்கு வாங்கிக் கொள்ள மாட்டார்கள்.

"யமன் வீட்டுக்குள் மட்டும்தான் இருக்கானா? வெளியில் போகிறோம். திரும்பி வரோம், இல்லை முழுசா

வரோம்னு என்ன நிச்சயம்? நான் விவரித்துச் சொல்லமாட்டேன், நீங்கள் தாங்கமாட்டீர்கள்! புன்னகை புரிந்தான். நாக்கில் சனி என்பீர்கள்.''

தினமும் காலையில் பேப்பரைப் பிரிக்கிறோம். மொத்தமாகவும் சில்லரையாகவும் உலக முழுவதும் உயிரின் செலாவணியைப் பார்த்தால்—ஹூம். இன்று நாம் படிக்கிறோம். நாளைக்கு நாமே பேப்பரில் வந்தால் ஆச்சரியமில்லை.''

கோபம் வந்து என்ன செய்வது? வாதம் அசைக்க முடியாதது.

''வாழ்க்கையின் அநித்யத்தைப்பற்றி, சாஸ்திர பூர்வமாகவும், சம்பிரதாயமாகவும், பக்தி மார்க்கமாகவும் உங்களுக்கு அந்த நாளில் தெரிந்ததென்றால் எங்களுக்கு இப்போ அனுபவபூர்வமாக, உங்களைவிட நன்றாகத் தெரியும். இங்கே விமானம் கடலில் விழுந்தது. அங்கே ரயிலோடு ரயில் மோதல், ஈராக் ஈரான் யுத்தம், பங்களாதேஷில் வெள்ளம், ரஷ்யாவில் பூகம்பம் கோடிக்கணக்கில் உயிர்ச்சேதம்—அப்போ யாருக்கென்று அழுவோம்? நீங்களும் நானும் பாம்பும் எந்தப் பொருட்டு?''

சேது குரல் லேசாக நடுங்கிற்று.

''எங்களுக்குத் தெரிந்தபடி, வாழ்க்கையைக் காரணி ஆள்கிறது. ஆயிரம் கைகள் கொண்டு நீங்கள் எங்களை அணைத்தாலும், அத்தோடு யாரும் போட்டி போட முடியாது.''

பொட்டை லேசாக வலிக்கிறதோ? இரு விரல்களால் தேய்த்துக் கொண்டார். சேது அழகாயிருக்கான் இல்லே? சேது மூச்சுப் பிடிச்சு இத்தனை நாழி பேசி எனக்கு ஞாபகமில்லே.

—வீடு இடிந்துபோயிருக்கும். எல்லாரும் இறந்து போயிருப்பார்கள். ஆனால் கல்லையும் மண்ணையும் தோண்டி எடுத்தால், வீட்டின் குழந்தை ஒரு சிராய்ப்புக்

கூட இல்லாமல் உட்கார்ந்து கண்ணைக் கசக்கியபடி அழுது கொண்டிருக்கும். இல்லே எச்சிலைத் துப்பி விளையாடிக் கொண்டிருக்கும் அதுதான். X அதுக்குத் தனியா உசிர் உண்டா, சுரணை உண்டா, எங்களுக்குத் தெரியாது. ஆனால் அது உண்டு.''

'பேஷ், பேஷ்' அப்படியே என் அச்சுத்தான். ஆனால் கண் மட்டும் சற்றே குழிவு. இவன் வயசில் அப்படியே நான் இவனேதான். ஆனால் மீசையில்லை. பயம், அம்மா முழியை நோண்டிவிடமாட்டாளா? எனக்கும் மீசைமேல் ஆசை கிடையாது. இவன் அனுமதி கேட்டானா? நான் அப்படி எதிர்பார்க்கிறவன் இல்லை. எனக்கு அதில் அக்கறையுமில்லை. ஆனால் மீசை இவனுக்கு நன்றாயிருக்கிறது.

அவன்மேல் அவர் கண்கள் கனிந்தன. கண்முன் இரு தூரங்கள் பாய்ந்தன. அவைகளினூடே சேது காத தூரத்தில் தெரிந்து, மங்கிக்கொண்டே வந்தான். ஆனால் குரல் மட்டும் எட்டிற்று. What is the matter with him?

''நாங்கள் எந்த நிமிஷமும் ரிஸ்கிலேதான் வளைய வரோம். வாழறோம். கையிலெடுத்த கவளம் வாய் போய்ச் சேருவது நிச்சயமில்லை. அதனால் சாப்பிடாமல் இருக்க முடியுமா? வீட்டுள்ளே பாம்பு, வெளியில் விபத்து என்று வெளியில் போகாமல் இருக்க முடியுமா? உங்கள் கவலையில் எங்கள் இறக்கைகளைக் கட்டிப்போட்டு உங்களைச் சுற்றி உட்கார்த்தி வைத்துக்கொண்டிருந்தால் வயிற்றுப் பிழைப்பு எப்படி? அவரவர் வாழ்க்கை எப்படி? காரணி X தான் வாழ்க்கை. அதுவேதான் adventure. என்னப்பா முழிக்கறேள்; லெக்சர் பண்றேனா? என்னப்பா அப்படியே பார்க்கறேள், அப்பா—அப்பா!''

கவிழ்ந்தாற்போல் அவன் மேல் சாய்ந்துவிட்டார்.

X சுழலும் வேகத்தில் சக்கரத்தின் தோற்றத்தைப் பெற்று ஜகஜ்ஜோதியாக அவரைச் சுற்றிச் சுற்றி வந்தது. இவன் என்ன புதுசா சொல்லிட்டான்? சக்கரம் அறுக்கறது கபாலம்

ஏத்தறது, இது பாரதத்திலா, இதை பின் சொல்லா? அது அவர்மேல் மோதிய வேகத்தில் இருளானார். இதழ்கள் விரிந்த ஒரு பெரிய மலரின் அடித்தண்டின் தனி இருளுள் இருளோடு இருளாய் மூழ்கிப் போனார்.

பிசுபிசு காலைப் பனி; தூவிய மகரந்தம், அகில் கமழ் ஓமப்புகை—மூவும் கலவை ஒரு தூப மண்டலத்தில் மிதந்து செல்வதானதோர் பிரமையில் விழிப்பு பொல பொல வென்று புலர்ந்தது. பிரமையா, நிஜமேதானா? கீழே அதல தூரத்தில் தெரிவது பூமியெனும் உருண்டையின் வளை முகடா? பயமாயில்லை. நிர்ச்சலம், தன்மயம், என்ன லேசு, என்ன சுகம்!

எல்லாமேதான், புத்திமயம், ஸ்படிகத் தெளிவு. தனக்கு உடல் இல்லை என்பதை உணர்வு அப்பொத்தான் உணர்த்திற்று. பயமாயில்லை.

உயரே ஒரு கற்கண்டுக் கட்டி சிமிட்டி, ஒளியும் சிரிப்புமாய்த் தன்னிடம் வரும்படி அழைத்தது. அதை நோக்கித் தான் உயர முயன்றபோது மகரந்தத்தில் ஒரு அடைமேகம் மேலே கவிந்துகொண்டு தடுத்தது.

“உஷ்—சத்தம் போடாதீங்க, நினைப்பு வருது காத்துக்கு இடம் விடுங்க! இப்படி அடைச்சுக்கிட்டா, மனுஷனுக்கு மூச்சே விட முடியாது போல இருக்கே!”

சுற்றி குரல்கள். தெரிந்த இடத்துக்குத்தான் திரும்புவதாகத் தெரிந்தது. மனமேயில்லை. ஆனால் தப்ப வேறே வழியுமில்லே. இதென்ன இப்படி ஒரு கூட்டம்? ஏன்? அவருடைய கோபத்தை வெளிக்காட்ட வார்த்தைகள் நெஞ்சில் தவித்தனவன்றி நாக்கு உருவாக்க முடியவில்லே. ஏன்?

“ஸ்ட்ரோக்னு நினைக்கிறேன். மைல்டுதான். நவ்ரோசியான் போட்டிருக்கேன். இந்த மாத்திரைகளைக் கொடுங்க. நாளைக்குப் பார்க்கலாம். ஹலோ ஸார், எல்லாம் சரியா

யிடும்—கொத்தாய் அவர் கன்னத்துக் கதுப்பை நிமிண்டி விட்டு டாக்டர் போனார். அவரைச் சுற்றியிருந்த கும்பலும் சுருக்கவே கலைந்தது.

சேது என்ன இவ்வளவு சுருக்கில் இப்படி கசங்கிப் போயிட்டான்! என்ன ஆச்சு? எனக்கு என்ன ஆச்சு? பேச வரல்லியே, பேசாமலே போயிடுமோ! திகில் சிரித்தது. "சேது! சேது" அவர் கண்களில் தெரிந்த பேச்சில், சேது தாவி அவர் கைகளைத் தன் கைகளில் பற்றிக்கொண்டான்.

அப்பாவும் பிள்ளையும் கண்ணோடு கண் எந்நேரம், இந்நேரம் நீண்டதோ?

சேது பொட்டென்று உடைந்துபோனான்.

"அப்பா! நான் சொன்னதை நிரூபிச்சுக் காண்பிச்சுடா தேங்கோப்பா! எப்படியும் அந்தவேளை இப்போ வேண்டாம்பா!"

மேடை விளிம்பில் அவன் கைகளிடையுள் அவன் முகம் புதைத்து தோள்கள் குலுங்கின.

அவருக்குப் புரிந்தது. ஆனால் நீ சொன்னபடியே காரணி X என் கையிலா இருக்கிறது! என்று சொல்ல வரவில்லை. வாய்தான் அடைத்திருக்கிறதே! ஆனால் உறவின் பரிமளம் பரிணமிக்கும் வேளை இப்படித்தான் அமைவதென்றிருந்தால், இப்படி நேர்ந்தது வீணாகவில்லை.

அவருடைய விரல்கள் அவன் தலையின் அடவியுள் புகுந்துகொண்டு மயிரைக் கோதின. விரல் நுனிகள் அன்பு சொட்டுவது தெரிந்தது. ●

—சுபமங்களா

# தேவதையின் கணவன்

அப்படி வந்து நேரும் என்று அவள் எதிர்பார்க்க வில்லை. சந்தர்ப்பம் அப்படி வாய்த்தது. இருட்டு, மழை, இடி என்றாலே, அவளுக்குப் பயம். தாழ்வாரத்தில் விளக் கில்லாவிட்டால், தலை போனாலும் அவ்வழி போக மாட்டாள்.

'ஐப்பசி மாசம் அடை மழை' என்பார்களே, அன்றைய மழைக்கு, இது நன்றாய்ப் பொருந்தும். அப்படித் தாரை தாரையாய் வானம் உடைப்பெடுத்தாற்போல், ஊற்றியது. பகல் பத்து மணியான போதிலும், அவள் ஒரு மெழுகு வர்த்தியை ஏற்றி மேஜையின்மீது வைத்துவிட்டாள். ஆனால், அவ்வொளியில் அவள் எதிர்பார்த்த தென்பு அவளுக்குக் கிட்டவில்லை.

சுவர் ஓரமாய், ஒரு பிரம்பு நாற்காலியில், பூனைபோல், கால்களை மடித்துப் போட்டுக்கொண்டு, மழைக்குப் பயந்து, அவள் பதுங்கிக்கொண்டிருந்தாள். அங்கே இருந்தும் இல்லாதவனாகவே நிற்கும் தன் கணவனை, அவளது கண்கள் சஞ்சலத்துடன் நோக்கின.

என்ன காத்திரம்! கால்களைச் சற்று விரித்து அழுத்த மாய் ஊன்றிக்கொண்டு, பின்புறம் கைகளைக் கட்டிய வண்ணம், சிலையடித்தாற்போல் அவன் நின்றான். அவனது கண்கள்கூட அதிகம் இமைக்கவில்லை; ஜன்னல் கண்ணாடி

மேல் வழியும் மழை ஜலத்தையும், அதற்குப் பின்னால் எதிரில் ஓங்கி நிற்கும் குன்றுகளிடையில் இன்னமும் திரளும் மேகங்கள் கவிந்து குவிந்து ஒன்றுடனொன்று குழைவதை யும், பார்த்துக்கொண்டிருந்தான். இம்மழைத் திரையின் பின்னால் பதுங்கும் ஏதோ ஒன்றை, அவன் பார்வை தேடி யலைந்தது. அவன் அங்கே இருந்தும் இல்லை.

'சொடேர்!—'

சாட்டையடி போன்றதொரு மின்னல் வீசியது; அதைத் துரத்திக்கொண்டே உருண்டு சென்ற ஓர் பேரிடி 'மொள மொள'வென நொறுங்கியது.

'வீல்' என்று ஒரு அலறு அலறி, ஒரு துள்ளுத் துள்ளி, தன் கணவன்மேல் அவள் துடித்து விழுந்தாள்.

எங்கேயோ, ஒரு கண்ணாடி உடைந்த சத்தம்...

அவன் கைகள், அவளைக் கீழே விழவொட்டாமல் தாங்கின. அவன் கண்கள், அவளது பயத்தைக் கண்டு புன்னகை பூத்தன. அவ்வளவுதான்—

கலியாணமானது முதல் இதுதான் அவளுடைய முதல் ஸ்பர்சம். இதுவரையில் உள்ளேயே குமுறிக்கொண்டிருந்த அவளது ஆசை வெள்ளம், திடீரென்று பொங்கிப் பெருக் கெடுத்துவிட்டது. அவள் தன்னை மறந்தாள். வெறி பிடித்தவள்போல், அவனை இறுக அணைத்தாள்.

அவன் கண்களில் புன்னகை மலர்ந்தது—

'க்ரீச்—!'

அவன் போட்ட கத்தல் ஆகாசத்தைக் கிழித்தது. திடீரென்று, அவன் தலை ஆடியது, யாரோ கன்னத்தில் அறைந்தாற்போல. மறுகணம், அவன் வாயோரத்தினின்றும் ஒரு இரத்த நூல் அரும்பி வழிவதை அவள் கண்டாள். கீழே விழவிருந்தவன், சமாளித்துக்கொண்டு நாற்காலியில் சாய்ந்தான்.

"கண்ணம்மா, இருக்கிறாயா?" என்றான். அவனுக்குக் கலியாணமானது முதற்கொண்டு, அவளுக்கு நினைவு தெரிந்து, அவன் வாயினின்று வந்த முதற்பேச்சு அதுதான்.

ஆனால், கண்ணம்மா?—அந்தக் கண்ணம்மா யார்?

அவன் சாவதானமாய் இரத்தத்தை வழித்து, எழுந்து, ஜன்னலைத் திறந்து, மழை ஜலத்தில் கையை அலம்பிக் கொண்டு, மறுபடியும் வந்து நாற்காலியில் உட்கார்ந்தான்.

அவளுக்குத் திடீரென்று உடல் வெலவெலத்தது. இரத்தத்தைக் கண்ட பயம், துக்கம், சந்தோஷம் இந்த மட்டுக்கும் அவன் வாய் திறந்தானேயென்று. ஆனால் ஒன்றுமே புரியாததினால் ஒரு திகைப்பு—இத்தகைய பல உணர்ச்சிகள் அவளை ஒரே சமயத்தில் தாக்கவே, அவளுக்கு கடைசியில், அழுகைதான் வந்தது. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டாற்போலிருந்தது. அவன் கைகள், தன்னை யணைக்க விரும்பினாள். அவளது கண்களை அவன் துடைத்தால்தான் அவளுக்குத் தைரியம் வரும்.

"வா, இப்படி உட்கார்" என்று அவன் சிரித்துக் கொண்டே சொல்லலானான்: "நான் உனக்கு ஒரு கதை சொல்லப்போகிறேன்— என் கதை—நீ அதை எவ்வளவு தூரம் நம்புவாயோ, அது எனக்குத் தெரியாது. ஆனால், என் வரைக்கும், அது நிஜமாய் நடந்ததுதான்—நீ இதைத் தெரிந்துகொள்வதும் அவசியந்தான். கண்ணம்மாளின் வார்த்தை அப்படித்தான்."

அவன் குரலில் மது மயக்கத்தின் இனிப்பு—கேட்கக் கேட்கத் தெவிட்டவில்லை. அவன் வாயிலிருந்து என்ன வார்த்தை வரப்போகிறதோ?

"நான் சிறு வயதில் மக்கு—ஒரு பதினைந்து வருஷத்துக்கு முந்தின சமாசாரத்தைச் சொல்கிறேன். எனக்கு 'மொத்து' என்று ஒரு செல்லப்பெயர்கூட உண்டு. வாஸ்தவ

மாய், என் சொந்தப் பெயரைக் கூவி, 'தேவராஜா' என்று கூப்பிட்டால், சுருக்கப் புரியாது. அம்மா, ஆசையாய் 'மொத்துக் குட்டீ' என்றுதான் அழைப்பாள்.

''உடம்பு கொழு கொழுவென்று இருப்பேன். அவ்வளவு தான். மற்றபடி, மூளை மஹா மந்தம். சூக்ஷ்ம சக்தி சூன்யம். ஏழு, எட்டு வயதான பிறகுகூட, இந்தச் 'சாமி வைத்து விளையாடுதல்', 'புருஷன் பெண்டாட்டி விளை யாட்டு' இம்மாதிரியான சில்லறை விளையாட்டுக்கள்தான் தெரியும்.

''பழையதைப் போட்டுப் பள்ளிக்கூடம் போகச் சொன் னால், ஸ்லேட்டையும் புஸ்தகத்தையும் எடுத்துக்கொண்டு எங்கள் ஊருக்கருகில் ஒரு மாந்தோப்பு உண்டு—அதில் ஒரு மரத்தின் கிளையில் தொங்க விட்டுவிட்டு, நான் பாட்டுக்கு ஒரு கல்லையோ ஒடிந்த கிளையையோ வைத்துக்கொண்டு, என்னத்தையோ உளறிக்கொண்டு, அந்தத் தோப்பி லிருக்கும் கண்ணம்மாள் கோவிலில் விளையாடிக்கொண் டிருப்பேன்.''

''கண்ணம்மா கோவில், தெருக்கோடியில் காணும் பிள்ளையார் கோவில்மாதிரி, சின்னதாய்த்தான் இருக்கும். கண்ணம்மா எங்கள் ஊர்க் கிராமதேவதை. கிரமமான பூஜை கிடையாது. ஒரு நாளில் ஏதாவது ஒருவேளை— வாரத்துக்கு இரண்டு முறை இருக்கும்—பூசாரி வந்து. விக்ரஹத்தின் தலையில் ஒரு சொம்பு தண்ணீரைக் கொட்டி விட்டு, நைவேத்யம்கூட வைக்காமல் போய்விடுவான். வழிப் போக்கர் யாராவது, தேங்காய் உடைத்தால் உண்டு. விளக்குப் போட்டால் உண்டு. வருஷத்துக்கு ஒரு தடவை எண்ணெய் முறை உண்டு—உம்—கோழிப் பலிகூட உண்டு— அவ்வளவுதான். கண்ணம்மா கோவில் திறந்தேயிருக்கும் சதா. அதுதான் எனக்கு ரொம்பவும் பிடித்தமான விளை யாட்டு ஸ்தலம்.''

''ஒருநாள் காலை 10, 10-30 மணியிருக்கும். தோப்புக்கு விளையாடச் சென்றேன். எனக்கு அன்றைக்கு என்னவோ குஷி; காரணம் தெரியவில்லை. நான் 'பொய்ப்' பூணூல் போட்டுக்கொண்டிருந்தேன். முந்தின நாள் ஆவணி அவிட்டம். அதை, தவறாமல் நாளைக்கு இரண்டு வேளை, சந்தனம் அரைத்துக் குழைத்து அதில் தோய்த்துப் போட்டுக் கொண்டேன், இடம் வலம்கூடத் தெரியாமல். அது நன்றாய் ஊறி, மஞ்சள் மசேலென்று, கம்மென வாசனை வீசிக்கொண்டிருந்தது...வழியில் அடிக்கடி முகர்ந்து பார்த்துக் கொண்டே போய், கோவிலில் உட்கார்ந்து கொண்டேன்.''

''கதவு திறந்திருந்தது. யாரோ, அகலில் திரியை ஏற்றிவிட்டுப் போயிருந்தார்கள். கண்ணம்மாளின் அதிர்ஷ்டம், நாயோ, எலியோ, எண்ணெயைக் குடிக்காமல் விட்டிருந்ததில், திரி சற்று நின்றே எரிந்தது... திடீரென்று 'கீச் கீச்' என்று கத்திக்கொண்டே, ஒரு மூஞ்சூறு கண்ணம்மா மீது ஓடியது. அது எனக்கு ரொம்பவும் தமாஷாயிருந்தது. 'உஷ் உஷ்' என்று அதை விரட்டிக்கொண்டே, விக்ரஹத்தை நெருங்கினேன். அப்பொழுது என்ன நேர்ந்ததோ தெரிய வில்லை. அந்தச் சின்னஞ் சிறு அகலொளியில், கண்ணம்மா வின் முகத்தைப் பார்த்ததும், எனக்கு ஏதோ ஒருவிதமாய்ச் சந்தோஷமாயிருந்தது. செதுக்கிய அந்த வாய் என்னைப் பார்த்துச் சிரித்தது. எனக்கு என்னவோ தோன்றிற்று. சிரித்துக்கொண்டே, என் பூணூலைக் கழற்றி விக்ரஹத்தின் கழுத்திலிட்டேன். எனக்குத்தான் அன்றைக்கு என்று மில்லாத 'குஷி' என்றேனே!—கண்ணம்மாவின் கழுத்தில், அந்தக் கயிறு மஞ்சள் மசேலென்ற தோற்றத்துடன், கம்மென வாசனை வீசியது... அப்புறம் திடீரென்று அந்த விளையாட்டு சப்பிவிட்டது. வேறு எதிலோ கவனம் ஆழ்ந்து விட்டது. பூணூலை எடுக்கக்கூட மறந்து, ஓடிப்போய் விட்டேன்......

''நாட்கள் சென்றன. ஆனால் அன்று முதல், நான் வளர ஆரம்பித்துவிட்டேன். நான் சொல்வது புரிகிறதா?

வளர்ச்சி என்றால், வெறும் உடல் வளர்ச்சி அல்ல—அறிவின் வளங்கூடத் திடீரென்று அதிகரித்து, நான் புதுக்காந்தி யுடன் விளங்கினேன். என் அறிவு வளர ஆரம்பித்து விட்டது. திடீரென்று அதன் மந்தம் மறைந்து, அது அற்புத மான பக்குவமடைந்தது. 'அம்மு வீட்டுத் தேவராஜன், அப்பி வைத்த மண்சுவர் மாதிரி இருப்பானே; அவன் எப்படி இவ்வளவு துடியானான்!' என்று எல்லோரும் ஆச்சரியமடை யும்படியாயிற்று. என் புத்தியின் வளர்ச்சி. எனக்கு என்ன உடம்போ, ஏதோ என்றுகூட, அம்மா பயந்துவிட்டாள். நான் பழைய 'மொத்துக் குட்டியா'யில்லையே இப்பொழுது! எனக்கே என் திடீர்ச் சுறுசுறுப்பைக் கண்ட பிரமிப்பில் ஒரு பீதியும் கலந்திருந்தது. நாளுக்கு நாள், நான் வளர வளர, அதுவும் அதிகரித்துக்கொண்டே வந்தது.

"நாட்கள், வாரங்கள், வருஷங்கள் சென்றன. இடையில் அப்பா இறந்துவிட்டார். எனக்கு இப்பொழுது இருபத்து இரண்டு வயது. எனக்கு என்னையே அடையாளம் கண்டு பிடிக்க முடியாது. பன்றி மயிர்மாதிரி கட்டையாயிருக்கும் என் மயிர் ஒரே சுருள் கொத்தாய், கரும்பட்டுப்போல், பள பளவென்று மின்னியது. என் கண்கள், விரிந்து, பரந்து ஜ்வாலை வீசின. என் நடையுடை பாவனை எல்லாவற் றிலும், ஒரு தனிக் கம்பீரம், ஒரு தனி அழகு—சீ, என் காலில், நானே விழுந்து கொள்வதுபோல் இருக்கிறதே என் பேச்சு! இருந்தாலும், நான் சொல்வதெல்லாம் மெய், மெய், மெய்."

"ஒருநாள் நள்ளிரவு. பௌர்ணமி தினம். அற்புதமான நிலவு. திடீரென்று விழித்துக்கொண்டேன். என்னை ஏதோ ஒரு குரல் தட்டியெழுப்பியது.

"தேவராஜ்"—

"ஆம், மறுபடியும் அதே குரல்தான்; ஆனால் ஒரு முகமும் தெரியவில்லை. வெறும் குரல்தான்... தேன் சொட்டும் குரல். அவ்வழைப்பை எதிர்க்க வேண்டுமென்று

எனக்குத் தோன்றவில்லை. கயிற்றுக்கட்டிலை விட்டு எழுந்து, குரல் கேட்கும் திசையை நோக்கி, கைகளை நீட்டிக்கொண்டு, வாசலைக் கடந்து சென்றேன். அதுவும், இடையில் சப்தித்து எனக்கு வழி காட்டிக்கொண்டு முன் சென்றது, வழியெல்லாம் தேனைச் சொரிந்துகொண்டு...''

''சந்திரிகையென்றால், அன்றிரவின் சந்திரிகைதான் சந்திரிகை. அதுவும், அந்தப் பாதி ராத்திரியில், அந்த நிசப்தமான வேளையில், வழியில் கிடக்கும் ஒவ்வொரு கல்லையும், ஆங்காங்கே சிறு சிறு பள்ளங்களில் தேங்கியிருக்கும் தண்ணீரையும்—அன்று சாயந்திரம் திடீரென்று ஒரு சிறு மழை பெய்திருந்தது—தன் குளிர்ச்சியான நிலவால் அபிஷேகித்துக்கொண்டு, அங்கங்கே தரையில் வெள்ளைப் புள்ளி வைத்துக் கோலமிட்டாற்போல், மர இலைகளின் நிழலிடையில், தனி ஒளியைச் செலுத்தியவண்ணம், சந்திரன் பரிபூர்ண அரசு செய்த காட்சி ஊஹூம், என்னால் சொல்ல முடியவில்லை—கண்டுதான் அனுபவிக்க முடியும் அவ்வழகை!—

''நான் மாந்தோப்பையடைந்து, கண்ணம்மா கோவிலை அணுகிவிட்டேன். கோவிலினின்றும் ஒரு உருவம் குதித்தோடி வந்து, கைகளை வீசி, என்கழுத்தை இறுகக் கட்டிக்கொண்டு, முகம், கண், வாய், மூக்கு, கன்னம் எல்லாம் மாறி மாறி முத்தமிட்டது. எனக்கு மூச்சுத் திணறி, நினைவு தெளியவே சற்றுநேரம் சென்றது......

''பதினைந்து, பதினாறு வயதுதான் இருக்கும். அவள் உடலின் ஒவ்வொரு உறுப்பிலும் யௌவனம் வழிந்தது. சர்வாபரண பூஷிதை. அடர்ந்து வளர்ந்த மயிரை, அழுத்தி வாரி, தாழம்பூ வைத்த அவளது பின்னல், நீண்ட சர்ப்பம் போன்று, தொடைக்கும் கீழிறங்கி, தரையை இடிப்பது போல் தொங்கியது. முகத்தின் ஒவ்வொரு லட்சணமும் கடைந்தெடுத்ததுதான். அவளது கண்கள் வாதாம் பருப்பையொத்திருக்கும்; சற்று மேட்டுவிழிகள், இமை மயிர்கள்,

நீண்டு, நுனியில், சுருண்டிருக்கும். அந்தக் கருவிழிகளில் கணத்துக்கு ஒரு புது ஒளி, புது அழகு தோன்றி, என்னை ஒரே மயக்காய் மயக்கி, தன் மந்திரத்தில் கட்டிவிட்டது.

"என் திகைப்பைக் கண்டு, புன்னகை புரிந்துகொண்டே, என் கையைப் பிடித்து இழுத்து, அங்கே கிடந்த ஒரு கல்லில் உட்காரவைத்து, தானும் என்னருகில் உட்கார்ந்து, என் கழுத்தை ஒரு கையால் கட்டிக்கொண்டு, அவள் என் முகத்தைப் பார்த்துச் சிரித்தாள். அவள்மேல் கமழ்ந்த நறுமணம் என்னைக் குடிமயக்கத்தில் அழுத்தியது.

"'இந் நள்ளிரவில்—நீ யார்? என்றேன்.

"'தெரியாதா—நான்தான் கண்ணம்மா—உன் ஸ்திரீ—நீ என் கணவன்—இதோ பார்.'

"சிரித்துக்கொண்டே, என்மேல் குனிந்து, தன் கழுத்திலிருந்த ஒரு நூலை, என் கண்களில் ஒற்றினாள். மஞ்சள் மசேல் என்றிருந்த அது சந்தனமணம் கமழ்ந்தது... எனக்கு ஞாபகம் வந்தது.

"'ஓ, உனக்காக நான் எத்தனை நாள் காத்துக்கொண்டிருந்தேன் தெரியுமா!— நீயும் நன்றாய்த்தான் இருக்கிறாய்!' என்று சொல்லி, என் கன்னத்தில் ஒரு தட்டுத் தட்டிச் சிரித்தாள். குடத்தில் தண்ணீர் தளும்புவதுபோல் இருந்தது, அந்தச் சத்தத்தின் இனிமை.

"கண்ணம்மா இம்மாதிரியே, ஒவ்வொரு இரவும், என்னை அழைப்பாள். அவளுடைய அற்புதமான மயக்கை என்னால் உதற முடியவில்லை. என் மனம் இரண்டாய்ப் பிளந்து, ஒன்றுடன் ஒன்று போராட ஆரம்பித்துவிட்டது. 'கண்ணம்மாளின் சகவாசம் பொல்லாது' என்று ஒரு குரல் அலறியது. ஆனால், நான் அவளது ஆசை வலையில் சிக்கியதால் நேர்ந்த மதோன்மத்தம், அதை அமுக்கிக்

கொன்றது. அதோடு என்ன செய்ய முடியும்! நான்தான் என் வசமேயில்லையே! விளக்கினிடை விட்டிற்பூச்சியாய் அன்றோ எரிந்தேன்!—

"கண்ணம்மாள், தன் ஆசையைக் காண்பிக்க ஆரம்பித்து விட்டாளானால், அதன் இன்பத்தின் துன்பத்தை ஸஹிக்க முடியாது. அவ்வானந்தமே, பயங்கரமாயிருக்கும். 'விண் விண் ! என்று நெருப்புப்பொறி போன்று அவள் என்னைத் தஹித்தாள்."

"ஒவ்வொரு இரவும் என்னைக் கண்டால் வருஷக் கணக் காய்ப் பிரிந்து கூடியதுபோல்தான் அவள் என் கழுத்தில் தன் கைகளைக் கோத்து இறுகக் கட்டும் வேகத்தில், எனக்கு மூச்சுத் திணறும். முகத்தோடு முகம் பதித்து, அவள் முத்த மிடும்பொழுது, என் உடலின் இரத்தமெல்லாம், ஒருங்கே மண்டையில் 'குபீல்' என்று பாய்ந்து, மூளை குழம்பும். திடீரென்று கீழே உட்கார்ந்து என் கால்களைத் தன் மார்பில் சேர்த்துக் கட்டிக்கொண்டு, 'நான் மானிடப் பிறவியல்ல, நான் தேவதை— எனக்கு அநேக சக்திகள் உண்டு— ஆனால்நான் உன் அடிமை— நீ என் பர்த்தா—நீ எனக்குச் சொந்தம்... என்றெல்லாம் அவள் பிதற்றுவாள்.

"அவளுடைய மூர்க்கமான வாத்ஸல்யத்தின் வேகத்தை என்னால் சமாளிக்க முடியவில்லை. நாளுக்கு நாள் திடீ ரென்று இளைக்க ஆரம்பித்தேன். அதுவும் இராத்திரி யெல்லாம் தூக்கம் கிடையாது.

"நான் என் அனுபவங்களைப்பற்றி வீட்டில் சொல்ல வில்லை; சொல்லவேண்டுமென்றே தோன்றவில்லை. சொன் னாலும் யார் நம்பப்போகிறார்கள்? அம்மாதான் நம்பு வாள். ஆனால், அவளைப் பயப்படுத்த எனக்கு இஷ்ட மில்லை. அவள் சுபாவமாகவே சற்று கோழை. தவிர, நாலைந்து மாதமாய், ஏதோ வைத்தியத்துக்குப் பிடிபடாத வியாதி அவளைப் பீடித்து, கொஞ்சங் கொஞ்சமாய்த்

தின்றுகொண்டிருந்தது...அவளுக்கு வயதாகிவிட்டது... தேற மாட்டோமென்று அவளுக்கும் தெரிந்துவிட்டது. அவ்வளவு தான். தான் போகுமுன், எனக்குக் கலியாணம் செய்து பார்க்க வேண்டுமென்று வீம்பு பிடிக்க ஆரம்பித்துவிட்டாள். கொஞ்ச நாட்களாகவே அவளுடைய மனதிலே ஊறிக் கொண்டிருந்த இவ்வெண்ணம், இப்பொழுது முற்றித் தீர் மானமாகிவிட்டது. எனக்குப் பெண்ணும் தேடவேண்டுமா? எங்கள் வீடு கொஞ்சம் பணக்கார வீடு. நான் வீட்டுக்கு ஒரே பிள்ளை. அப்புறம் சொல்லவேண்டுமா?—உன்னை முடித்து வைத்தார்கள்.

"அம்மா காலையில் வார்த்தை சொன்னாள்— சாயந் திரம், நிச்சயதாம்பூலமாகி லக்னப் பத்திரிகையும் வாசித் தாகிவிட்டது.

"அன்றிரவு வழக்கம்போல் கண்ணம்மா என்னைக் கூப்பிட்டாள். அச்சமயம், சந்திரன் வளர்பிறையிலிருந்த போதிலும், அந்தப் பன்னிரண்டு மணி வேளையிலே கும்மிருட்டுத்தான். கண்ணம்மாள் என்னை ஓடிவந்து அணைத்தபொழுது. அவள் காதிற் குண்டலமும் மூக்குத்தி யும் பளீர் பளீர் என மின்னின. இன்று அவள் என்றுமில் லாப் பொலிவுடன் விளங்கினாள்.

"இருவரும் கல்லின்மேல் உட்கார்ந்தோம். அவளது ஆசைப் பிதற்றலெல்லாம் ஒருவாறு ஓய்ந்தபின், ஏதோ பேச்சுவாக்கில், வேற்று மனுஷ்யர்—நாலைந்து புருஷர் களும், இரண்டு மூன்று ஸ்திரிகளும்—இந்தப் பக்கமாய்ப் போனார்கள்—வேற்றூர் என நினைக்கின்றேன் என்றாள்.

"ஆம், எங்கள் வீட்டுப் புது சம்பந்தம்' என்றேன்.

"அப்படி என்றால்?—?—'

"அவர்கள் பெண் வீட்டார்—எனக்கு இன்றைக்கு மூன்றாம் நாள் கலியாணம்' என்றேன்.

"ஒரு இரண்டு கணத்துக்கு உலக அந்தியில் மௌனம்—

"திடீரென்று கண்ணம்மாள் ஒரு சீறு சீறினாள் பார், அசல் சர்ப்பமென்றே நான் பயந்துவிட்டேன். அவளுடைய கண்கள், அந்த இருட்டில், மரகதப் பசுமையாய் மாறுவதைக் கண்டேன்— கொடிய விஷநாகத்தின் அழகுதான் அவள் அழகு அச்சமயம்.

"மோசம் பண்ணினாயா?—' என்றாள், மெதுவாய் இரண்டே வார்த்தை.

"கண்ணம்மா—இதோ என்னைப் பார்—'

"நான் ஒன்றும் பார்க்கவும் மாட்டேன், கேட்கவும் மாட்டேன்—நீ என் புருஷன்—நீ என்னைத் தொட்டுத் தாலி கட்டினாய்—நீ எனக்குச் சொந்தம். இதோ பார், நீ கட்டிய சரடு என் கழுத்தில் தொங்குகிறது. பார்த்தாயா, பார்த்தாயா?—'

'கண்ணம்மா, இதில் அர்த்தமில்லை—நான் நான், நீ—'

"கண்ணம்மா பளீர் என்று கல்லின்மேல் ஒரு அறை அறைந்தாள். ஒரு நீல ஜ்வாலை, அவளது விரல் நுனிகளினின்றும் புறப்பட்டு, இருட்டில் மின்னென மறைந்தது.

"எனக்கு அதைப்பற்றி அக்கறையில்லை—என்னைத் தொட்டுத் தாலி கட்டின உன் கையால், இன்னொருத்திக்கும் அதைக் கட்டுவதைப் பார்த்துக் கொண்டிருப்பேனா என்ன? (அவள் சிரிப்பு புகைந்தது) என்னைக் கண்டு, அதற்குள் சலித்துவிட்டதா?—ராஜா—சொல் அதற்குள் வெறுத்துவிட்டதா?'

"எங்கேயோ ஒரு பிரதேசத்தில், அற்புதமான அழகுடன் ஒரு மான் சஞ்சரிக்கிறதாம்; யாராவது வழிப் போக்கர் போனால், வெகு சகஜமாய்ப் பக்கத்தில் வந்து கையை நக்குமாம். அது நக்கும் ஆனந்தம் சொல்லமுடியாதாம். நக்கி நக்கி இரத்தம் பீறிட்டுக்கொண்டேயிருந்த

போதிலும், அதன் மாய வலையில் அகப்பட்ட ஆள் உடலெல்லாம் திருப்பித் திருப்பிக் காண்பித்துக்கொண்டேயிருப்பானாம். கடைசியில், அது கையை நக்கி, உடலை நக்கி, சதையை நக்கி, இரத்தத்தை நக்கி, அந்த ஆள் ஒரே மாமிசப் பிண்டமாகி, கொஞ்ச நஞ்சம் துடித்துக்கொண்டிருக்கும் உயிர் ஒருவழியாய்ப் போமளவும், அந்தப் பிண்டம் திருப்பித் திருப்பிக் காண்பித்துக் கொண்டேயிருக்குமாம்...

''அதேமாதிரி தான் இருந்தது கண்ணம்மாளின்மேல் எனக்கு இருந்த உணர்ச்சி. அது வெறுப்போ, விருப்போ...

''கண்ணம்மா இம்மாதிரியெல்லாம் பேசாதே—எங்கம்மா—இன்றைக்கோ நாளைக்கோவென்று அவள் உயிர் ஊசலாடுகிறது—அவளிஷ்டம் இது—'

''நான் உன்னை நம்பி மோசம் போனேன்... உன் மேலிருந்த மோஹத்தில் நான் முழுகியதில், சற்று அயர்ந்து விட்டேன். நீ சமயம் பார்த்து, நழுவப் பார்க்கிறாய்—ஆனால் உனக்குத் தெரியாது நான் யார் என்று—நான் கண்ணம்மா— நான் தேவதை— நான்—'

''அவள் உடலிலும் முகத்திலும் திடீரென்று பாய்ந்த ஒளியை நினைத்தால்— பார், என் உடல் மயிர்க்கூச்செறிகிறது.

''அப்படியானால், என் தாயாரைத் தெளிவி—அவள் வியாதியைப் போக்கிவிடு—இந்தக் கலியாணம் ஒத்திப் போகும்' என்றேன்.

''அவளுடைய முகத்தில் விசனம் நிறைந்தது. 'அவள் விஷயத்தில் நான் தலையிட முடியாது; அவள் ஆயுள் எல்லையை அடைந்துவிட்டாள். இன்னும் மூன்று நாள் தான் அவளுக்கு—ஆயுளை நீட்ட—என்னால் இயலாது—ஆனால் ஒன்று செய்யலாம்' என்று யோசனையுடன் இழுத்தாள்.

"'என்ன?—' என்றேன் ஆவலுடன்.

"அவளது முகத்தில் குரூரம் பொங்கியது. 'ஆயுளைக் கொல்லலாம்; அது தன் எல்லையை அடையுமுன், இடையில் அதை ஒடிக்கலாம்— அந்தச் சக்தி எனக்கு உண்டு' என்றாள் கண்ணம்மாள். என் உடல் நடுங்கியது; 'அம்மாவைக் கொல்லப் போகிறாயா?'

"அவள் சலிப்புடன் புன்னகை புரிந்தாள். அவளைப் பற்றி உனக்குக் கவலையில்லை—என்னை ஏமாற்றிவிட்டு, உன்னையாளக் காத்துக்கொண்டிருக்கிறாளே—அவளை—' என்றாள். என் அடிவயிறு சுருண்டது. 'கண்ணம்மா—கண்ணம்மா—'

"'அவள் சற்று வெறுப்புடன் என்னை நோக்கினாள்; 'நீ எனக்குச் சொந்தம்' என்றாள்.

"'அப்படியானால், என்னைக் கொன்றுவிடு—'

"'உன்னைக் கொன்றால் எனக்குப் பிரயோசனமில்லை— உன் உயிர் என்னைச் சேராது— என்னிலும் மேலதிகாரிகளிடம் சென்றுவிடும்— நான் கைம்பெண்ணாவேன்—ராஜா! மோசம் பண்ணினாயே!' கண்ணம்மாளின் கண்ணீர் என்மேல் விழுந்தது, என் எலும்பை உருக்கியது.

"'ஒரு கணந்தான். மறுபடியும் அகங்காரம் புகுந்து அவளை ஆட்டியது. கிளுக்கென்று வெற்றியுடன் சிரித்தாள்—' சரி, நீ அவளைக் கலியாணம் பண்ணிக்கொள்—ஒருவழியாய் இவ்விஷயமும் தீர்மானமாக வேண்டியதுதான்— ஆனால், நீ என்னிடமிருந்து தப்பமாட்டாய். இனிமேல் ரொம்பவும் கண்ணாயிருப்பேன். உன் விஷயத்தில் நீ எங்கே போய் ஒளிந்தாலும் என்னிடமிருந்து தப்பமுடியாது. உங்கள் இருவருக்கும் சரியான தண்டனை வைத்திருக்கிறேன்— கொன்றுவிடுவதில் சுவாரஸ்யமில்லை—விஷயம் சட்டென்று முடிந்துவிடுகிறது—'

"அவள் மறுபடியும் கலகலவெனச் சிரித்தாள். நான் ஒன்றும் புரியாமல் திகைப்புடன் நின்றேன். அவள் திடீரென்று, என்னை அணைத்து, என் வாயில் ஒரு முத்தமிட்டு என்னைத் தள்ளினாள்.

"ராஜா—இன்றைக்கு ஏழாம் நாள் உன் வாய் அடைபட்டுவிடும். நீ ஒருவருடனும் ஒரு வார்த்தையும் பேசமுடியாது. உன் ஆசை மனைவியுடன் ஒரு வார்த்தையும் ஆடமுடியாது. அவளது உயிர்மேல் உனக்கு அக்கறையிருந்தால் அவளைத் தொடவே தொடாதே—அவளை நீ தொட்டதை நான் கண்டால், முதல் தடவை உன்னைத் தண்டிப்பேன்; மறுமுறை அவளையே கொன்றுவிடுவேன்—மறுபடியும் என் ஸ்பரிசம் உன்மேல் படும்வரையில், உன் வாய்ப்பூட்டு திறவாது. கடைசியாய், நீயாக என்னிடம் வரும் வரையில் நான் காத்துக்கொண்டேயிருப்பேன்—எனக்குச் சொந்தமானதை நான் லேசில் விடுகிறவளல்ல—நான் கண்ணம்மா—'

"'கண்ணம்மா!' என்று அலறிக்கொண்டே அவளிடம் ஓடினேன். அவள் சிரித்துக்கொண்டே கோவிலுக்குள் புகுந்து மறைந்தாள். நான் துரத்திச் சென்று, கல்லில்தான் மோதிக்கொண்டேன். அவளைக் காணோம். அவளது சிரிப்புத்தான் ஒலித்தது.

"அப்புறம் நடந்த விஷயந்தான் அநேகமாய் உனக்குத் தெரியும். நம்மிருவருக்கும் மணம் முடிந்த அன்று சாயந்திரமே அம்மா இறந்துவிட்டாள். என்மீதுள்ள சாபம் பலிக்கும் வேளை நெருங்கிவிட்டதால், நான் ஊரைவிட்டுப் புறப்பட்டு, உன்னைக் கூட்டிக்கொண்டு இங்கே வந்துவிட்டேன். அப்படியிப்படி ஐந்தாறு மாதமும் கழித்துவிட்டோம். கடைசியில் கண்ணம்மாளே வெற்றி பெற்றுவிட்டாள்—"

அவன் பேசி முடித்து, சற்று அடங்கினான்.

மழை நிதானமாய் ஊற்றிக்கொண்டிருந்தது! மெழுகு வர்த்தி எரிந்து உருகி அடியில் இறங்கிவிட்டது. கொஞ்ச நேரம் அதையே உற்றுநோக்கிக் கொண்டிருந்தான்.

"நான் நாளைக் காலை ஊருக்குப் போகிறேன்" என்றான். "கண்ணம்மாவிடம் போகிறேன். இம்மாதிரி வாழ்க்கை நமக்குச் சாத்தியமில்லை. ஒரு சமயம் இல்லா விட்டால், ஒரு சமயம் ஏமாந்துவிடுவோம்—நீ இங்கேயே இருப்பதென்றால் இரு. அல்லது வீடுபோய்ச் சேர்—என் சொத்தெல்லாம் உனக்குத்தான்."

"அவன் எழுந்து போய், மறுபடியும் ஜன்னலண்டை நின்றான், பின்புறம் கையைக் கட்டிக்கொண்டு.

"அவள் எழுந்திருக்கவும் சக்தியற்று, உட்கார்ந்த இடத்திலே சுருண்டு கிடந்தாள். அவனுக்கென்ன பைத்தியமா? அவள் இத்தனை நேரம் கேட்டதெல்லாம், அவனுடைய மூளைக்கோளாறின் கற்பனையா?

ஆனால், அந்த அறை?—கண்ணம்மா, அவன் கன்னத்தில், வாயில் இரத்தம் சிதறும்படி அறைந்த அறை? அது நிஜந்தானே?

இம்மாதிரி அவன் தனக்கு எட்டியும் எட்டாமலே இருக்கும் பயங்கரம் அவளுடைய உடலில் ஊற ஆரம்பித்த பொழுது, அவளது உடல் ரத்தம் சுண்டியது.

'குப்!—'

மெழுகுவர்த்தி அணைந்துபோயிற்று.

—சக்தி

# ரஸகுண்டில், ஊரும் நெளியும், சில பிம்பங்கள்

எங்கள் ஊரை வளைத்து ஒரு வாய்க்கால் ஓடுகிறது. வடக்கு எல்லையில் ஜலம் ஸ்படிகம். உன் நெஞ்சின் பிம்பத்தையே பார்க்கலாம். ஆனால், மற்ற திக்குகளில் அந்தத் தூய்மை இல்லை. கீழண்டை ரொம்ப கரைசல். இது ஏன்? ஒருநாள் வாய்க்காலின் வடக்கு நூலைப் பிடித்துக்கொண்டு கரையோரம் நடந்துகொண்டே போனேன். அப்போ நானும் சின்னப் பையல்தானே! அன்றையப் பொழுது அப்படி போச்சு. அது ஒரு வேடிக்கை.

குரங்கு நியாயம் குப்புசாமிப் பிள்ளைப் பண்ணை. ஒரே இடமாக அத்தனை வயலையும் எப்படித்தான் வளைச்சுப் போட்டானோ? இந்தப் பக்கம் ஆற்றங்கால், அந்தப் பக்கம் ஏரிப்பாய்ச்சல். நடுவே கண்ணுக்கெட்டியவரை கண்ணுக்குக் குளுமையா பயிர்ப் பச்சை காற்றோட்டத்தில், ஒரே ரஹஸ்யம் பூத்துக் கிளுகிளுக்குது. அங்கங்கே ஏத்தக்கால் வேறே. ஊரில் கறுப்பு ஓடினாலும், பிள்ளைவாள் காட்டில் என்னிக்கும் வெள்ளம்தான்! அதுதான் குரங்குநியாயம் போலும்...இத்தனைக்கும் பிள்ளை குட்டி இல்லே. செட்டித் தெருவில் வீடு, மூணடுக்கு மாடி. மூணாவது மாடிக்கு வேலையே இல்லை. ஆனால் காரணம், தன் கட்டடம் ஒரு முழமேனும் உசந்து காட்டணுமாம்... நாட்டுப்புறத்தில், பிள்ளையென்ன—எல்லாருக்கும்தான் இதுமாதிரி ஒரு வீம்பு!

வீட்டுக்கு வீடு கோர்ட்டுக்குப் போகிற மாதிரி ஒரு வியாஜ்ய மேனும் இருந்தால்தான்...பெருமை...அதுக்கொரு தஸ்ஜா வேஜுக்கட்டு—அதை அழகாப் பட்டுத்துணியில் சுற்றி, கோர்ட்டுக்கு அலைச்சல். வாயிதா வாங்கிக்கிட்டுப் போகப் போக சாக்ஷிக்காரன் பாடு கொண்டாட்டம்!

நாலு மைல், ஒற்றை மாட்டு வில் வண்டியில் 'லொடக் லொடக்...' ஆனால் மாடு, ஜாதிக்கன்று; குதிரையா ஓடும். "...ர்ர்...ர்ர்ர்ர்ர் டேய்!" கோர்ட்டுக்கு எதிரே கோகுல் பவனில் 'நாஷ்டா.' 'ஐயரே, இன்னும் ஒரு வடையை சாம்பாரைத் தாராளமாத்தான் ஊத்தேன்...ஓ, முதலாளியே நீதானா? அதான் கஞ்சனாயிருக்கே! விடு ஐயா விடு, புளியாங்கொட்டை விழுதே. இதுகூட கஷ்டமர்கிட்டே வசூல்தானே! உன் கையை விட்டு என்ன தட்டுக்கெட்டுப் போவுது? ஊத்து ஐயா! சாம்பாரிலே வெங்காயம்தானும் காணோம்! பருப்பும் இல்லே. என்னவோ இலை இலையா, புளித்தண்ணிலே உசிரைப் பிடிச்சுக்கிட்டு, உசிருக்கு நீஞ்சுது. இதுக்கு சாம்பார்னு பேரு! இல்வளவு சுகுர். மதுரை, நீயும் ஒரு வடை வச்சுக்க. சாம்பார் வடை நல்லா யிருக்குதய்யா! வவுத்துக்கு வஞ்சனை செய்யாதே... நல்லா சாப்பிடு. இத்தனையும் பிரதிவாதிகிட்டத்தானே பில்! எப்படியானால் நமக்கென்ன?'

இத்தனைக்கும் முழங்காலுக்கு மேல்தான் கட்டை வேட்டி. சொக்காய் கிடையாது. சவுக்கம்தான். கைகட்டி. கஷ்கு முஷ்கு கட்டை உடம்பு. கெட்டித் தொந்தியில் 'விண்'ணுனு தேங்காய் உடையும். மெய்சாக்ஷி, பொய் சாக்ஷி, சக்ஷிக்காரனுக்கு சாக்ஷி!

'யாரு குப்புசாமிப் பிள்ளையா? ஐயையோ! குரங்கு நியாயம்னு முன்னாலேயே ஏன்ய்யா சொல்லல்லே? அந்தத் தரப்புலே அந்த ஆள்னா, அப்புறம் அப்பீலேயில்லே. உன் கப்பலை அடகுவெச்சு அப்பீல் பண்ணினாலும் நீதான்

கவிழ்ந்து போவே! என்னா சர்வீஸ்ஸு, என்ன சட்ட அறிவு. என்னா கோட்பாடுக் களஞ்சியம்... அத்தினியும் விரல்நுனியில் அத்துப்படி! வக்கீலும் ஜட்ஜும் அவன் வாக்குமூலத்தை வாயைப் பிளந்துகிட்டு கேட்டுக்கிட்டு இருப்போம். எங்கள் அத்தனை பேரையும் அவன் முழங்காலில் போட்டு, கண்ணுக்கு எண்ணெய் கட்டி விடுவான்ய்யா! வத்தல்மிளகாய் இல்லே. பச்சைமிளகாய் போட்டுக் காய்ச்சின எண்ணெய்! நாங்கள் அப்புறம் கண்ணையே திறக்க முடியாது, அந்தக் கேஸ்வரை. அந்தக் கேஸ் என்று. அந்தந்தக் கேஸாய், கடவுளே போட்ட தாயம் ஆனாலும் அவரும் கண்ணைக் கசக்கிட்டுத்தான் பார்க்கணும்."

தாயம் அவருதா, குப்புசாமிப் பிள்ளைப் போட்டதா? பைத்தியாரா நீ ஆடிக்கிட்டேயிரு, தாயம் போட்டுக்கிட்டேயிரு...பந்தயம் அத்தன்ாச்சியும் என்னுதுதான். குரங்கு நியாயம் குப்புசாமிப் பிள்ளை, கஷ்கு முஷ்கு கட்டை உடம்பை தாயக்கட்டான் மேலேயே கவிழ்ந்து படுத்துக்கிட்டு, குட்டைக் கையால் கட்டான் கட்டானா, அத்தனை வயலையும் அணைச்சுப் போட்ட சொத்தல்லவா இது?

இப்போ ஸ்பஷ்டமாக அதற்குரிய பாஷையில் புரிகிறது. ஆனால் அப்போ கண் கண்டதைக் கண்ணால் பார்த்துக் கொண்டு, வாய்க்கால் கரையோரம் அது போகும் வழி வளைந்து ஓடுகிறேன்.

திடீரெனப் புளிச்ச கஞ்சியின் வெடிப்பு நாற்றம் மூக்கைப் பொசுக்கறது. குடலைக் குமட்டறது. திருப்பத்தில், ஜலத்தைப் பாம்பு தீண்டினாற்போல், கரும்பச்சையாய் மலைப்பாம்பு தடுமனுக்கு ஒரு சாயம் நீளமாகக் கரையிலிருந்து புரண்டு வந்து கலந்தது. ஓ! இதுதானா கலங்கல்—நான் ஓடி ஓடித் தேடிப் பிடித்த காரணம்?

இத்தனையும் ஏன் எதற்கு, இவ்வளவு விஸ்தாரமா மனசில் கோலமோ கிறுக்கலோ போட்டுக்கொண்டு வந்தது—ஆ, ஞாபகம் வந்துவிட்டது.

ஒருநாள்—ரொம்ப ரொம்ப ஒருநாள் சொல்கிறேனோ என்னவோ, எனக்கு ஆறு வயசு இருக்குமோ என்னவோ, ஏழு வயசு இருக்குமோ என்னவோ—காமுப்பாட்டி சொன்னாளே, என் தாய்—தகப்பன் செத்ததும் என்னைக் காலும் கையுமா அள்ளிப் போட்டுக்கொண்டு வந்ததாக... அப்பவோ என்னவோ? சே! ஒரு தடவை உடம்பு குலுங்கி, கண்ணிலிருந்து தூசி உதிர்ந்தது.

என்மேல் அனுதாபத்தில் மரங்கள் பெருமூச்செறிகின்றன.

நான் இப்போது படுத்திருக்கும் நிலையில் எழுந்திருக்க மனமேயில்லை.

ஒரு கழுகு, கழுகா, பருந்தா? என்ன வித்தியாசம் எனக்குத் தெரியும்? ஆனால் ஒரு சிறிய கன்றுக்குட்டியளவு பெரிதிருக்கும், சிறகடித்துக்கொண்டு தோப்பில் எந்த மரத்திலிருந்தோ கிளம்பிற்று.

—அதோ, மோகாம்பரி மலையை நோக்கித்தான் போய்க்கொண்டிருக்கிறது, அங்கே எந்த உச்சாணிப் பாறை மீது அதன் கூடோ, கூட்டினுள் குஞ்சோ? குஞ்சுகளோ?

மலைமேல் மோகாம்பரி. வெள்ளியும், அமாவாசையும் சேர்ந்த அன்று அங்கு ரொம்ப விசேஷம். அன்று, இன்று வரை அடக்கியும், ஒளித்தும் வைத்திருந்ததெல்லாம், சன்னிதானம் அடைந்ததும் தலைகால் தெரியாது ஆடும்! கூந்தல்கள், ஓயாத சாமரங்கள் ஆகிவிடும். இடுப்புக்கள் மத்தாய்க் கடையும். நரம்புக்கு நரம்பு, நரம்பு தனித்தனி அடையாளங்களுடன் துடிக்கும்...

பூசாரி கிடையாது. அவரவர் கொணர்ந்த பலிகளை அவரவரே கொடுத்து, அவரவரே பூசை செய்துகொள்வது தான், அந்த இடத்து ஐதீகம். பொங்கல் வேகும் தீக்கள், கசக்கிய கண்கள்போல் மலைஉச்சியில்—சரிவில், அடிவாரத்

தில் ஆங்காங்கே விழித்துக்கொள்ளும். இரவுபூரா தன்னைச் சூழச் சிந்தும் ரத்தத்தைப் பார்த்துக்கொண்டு, பக்தர்கள் அவ்வப்போது தீற்றும் ரத்ததிலகம் நெற்றியில் பளபளக்க, ஒழுக, ஜே மோகாம்பரி தேவி, தன் வண்டை விழிகளில் கருணை பொழிய வீற்றிருப்பாள்.

எல்லாம் சொல்லக் கேள்விதான்.

மலைமேல் அவள் பெயரைச் சொல்லி கொலை நடந்தாலும் கேள்வியில்லை.

அவள் பலி அவளுக்கு அர்ப்பணம்.

கொலைகள் நடந்திருக்கின்றன.

சொல்லக் கேள்விதான்.

நான் அவ்வளவு தூரம் போனதில்லை.

ஆசைதான்.

ஆனால், காமுப்பாட்டி காலை ஒடித்து விடுவாளே!

ஆனால், காமுப்பாட்டிக்குப் பயந்து பயந்தே, செத்துச் செத்துப்போய்க்கொண்டிருக்க எத்தனை உசிர் இருக்கு? ஒரு ஆளுக்கு ஒண்ணுதானே! அதுவும் ஒரு வழியா சாகமாட்டேன்கிறதே!

இந்தப் பரந்த உலகம், என்னுடைய உலகம், இவளுடைய நாலு சுவர்களுக்குள்ளேயேதான் அடங்கிப் போயிடணுமா? நான் வாழமாட்டேன்; உன்னையும் வாழ விட மாட்டேன். இதுதானே இவளுடைய வீம்புலகம் அதில் எதிரும் புதிருமா நாங்கள் இருவர்தானே, அவளைப் பொறுத்தவரை, அதன் பிரஜைகள்!

ஆனால்,

ஒருதடவை கால் முளைத்த பிறகு, அதனால் எத்தனை நாள் காத்திருக்க முடியும்? ஒரு மாதம், இரண்டு மாதம், ஆறு—ஒரு வருடம், இரண்டு வருடம்—அட, என் கடவுளே!

நான் முதன் முறையாக ஓடிப்போய் இன்றைக்கு இரண்டு வருடங்கள் ஓடிப்போச்சா? அட, எனக்கு வயசு பதினேழா? இன்னும் முதல் முகக்ஷவரம்கூடப் பண்ணிக்கல்லே. அதுக்குக் காமுப்பாட்டியைன்னா காசு கேக்கணும்! மீசையில் பொன் னரும்பு பளபளக்கிறது.

ஒருசமயம் யுகம், ஒருசமயம் நிமிஷம். நிமிஷமா இரண்டு வருடங்கள்... ஹூம்! இத்தனை நாள் இங்கே நான் என்ன வெட்டி முறிச்சிண்டிருந்தேன்? ஊஞ்சலாடிக் கொண்டிருந்தேனா? ஊசலாடிக் கொண்டிருந்தேனா?

உதறிக்கொண்டு எழுந்தேன். ஊஞ்சலை, ஊஞ்சல் சங்கிலியை, சங்கிலியின் உச்சியில் சொருகின புல்லாங் குழலை ஒருமுறை பார்த்தேன். தோப்பை ஒருமுறை சுற்றிப் பார்த்துக்கொண்டேன். சட்டையுரிப்பில் ஒரு விடுதலை. பழஞ்சட்டை. ஒரு விசனம். பழகிய சட்டை.

வீட்டுள் நுழைந்தபோது, காமுப்பாட்டி கூடத்தைப் பெருக்கிக்கொண்டிருந்தாள். அவள் நினைப்பும் இங்கு இல்லை. வாயில் குஞ்சிரிப்பு. தரையிலும் லேசா மிதப்ப லாகிவிட்ட அந்த நிலையில், அந்த முகம் அழகிட்டாற் போலக்கூட எனக்குத் தோன்றிற்று. அதற்கு முடிந்தால்...

நான் நேரே இருட்டறைக்குப் போய், பானையில் திணித்து வைத்திருந்த சொக்காய், துண்டு, வேட்டி என்கிற பெயரில் இருக்கும் ஒன்றிரண்டு கந்தலைப் பையில் திணித் துக்கொண்டு புறப்பட்டேன்.

காமுப்பாட்டி... ஏனென்று தெரியவில்லை.

வெறும் 'காமு'வென்று அழைத்துப் பார்த்துக்கொண் டால், அவள் வயதுக்கு மிகவும் சிறியவளாக த்வனிக்கிறாள்.

வெறும் 'பாட்டி'யாக நினைத்துக்கொண்டாலும் பொருந்தவில்லை. அவ்வளவு வயசு அவளுக்கு ஆகவில்லை.

ஆகாது.

காமுப் பாட்டியென்றால்தான், முழு நாமமாய் முழு ரூபம் கிடைக்கிறாள்! நிமிர்ந்தாள்.

இருவர் கண்களிலும் வினாவுக்கு வினா உராய்ந்தது.

"எங்கேடா பயணம், சொல்லிக்காமே?"

"......"

"அட, ஊமையாப் போற அளவுக்குப் பெரியமனுஷனா எப்போ ஆனே? காலையில்கூட சரியா இருந்தியே!"

"போறேன்... போயிண்டேயிருக்கேன்."

"விளங்கத்தான் சொல்லேன்! நீ சொல்லாமலே அறிஞ்சுக்கிற அளவுக்கு எனக்குப் புத்திகூர்மை இருக்குமா?"

"சொல்லிண்டு போனால் திரும்பி வரலாம்... சொல்லிக் காமப்போனால்?"

உதட்டைப் பிதுக்கிக் கையை விரித்தேன். 'டயலாக்' பிரமாதமா அமைஞ்சுட்டாப்போல் எனக்கு அப்பவே தோணித்து. ஆனால், அதேசமயம் துடைப்பம் என்மேல் இறங்கத் தலைப்படுவதை உடனே உணர்ந்தேன். அந்தக் கையை அப்படியே பிடித்துக்கொண்டு, லேசா—ரொம்ப லேசா முறுக்கினதும், விளக்குமாறு கீழே விழுந்த இசை கேடில் கட்டவிழ்ந்து, அத்தனைக் குச்சிகளும் புலுபுலு பஞ்சு மிட்டாய் படர்ந்தாப்போல், துக்கத்துக்கு அவிழ்த்துவிட்ட கூந்தல்போல், பாம்புப் படம் அசதியில் படுத்தாற்போல—

துவண்டன.

"விடுடா! கையை விடுடா நாயே!"

எகிறினாள். தவித்தாள். எகிறித் தவித்தாள். பூ! இவ்வளவுதானா? இவ்வளவு சோப்ளாங்கியா இருந்துண்டா இத்தனை அமுல் நடத்தியிருக்காள் இதுவரை? இரண்டு கைகளும், என் ஒரு கையுள் அகப்பட்டுக்கொண்டன. என் தோளில் என் பை தொங்கிற்று.

"விடுன்னா விடு... உன்னைப் பலி போட்டுடுவேன்!"

"பலியா, பொலியா, பாட்டி?"

"என்னடா கழுதை உளர்றே?" அவள் உதட்டில் ரத்தம் கசிந்தது.

"பாட்டி, என்னைப் பெற்றவர்கள் போனவழி என்னையும் போகப் பேசாமல் நீ விட்டிருக்கலாம்."

"உன்னை வளர்த்து ஆளாக்கினப்பறம், உன்னிடம் இப்படியெல்லாம் வாங்கிப் பின் எப்படி கட்டிக்கறது? அதுக்காகத்தான்!"

"இல்லே பாட்டி! நீ எவ்வளவோ நல்ல பண்டமா ஆகியிருக்க முடியும், உனக்கு மறு விவாகம் ஆகியிருந்தால்... பாவம், உன்னை இளவயதிலேயே கோரணி வேறே பண்ணிக் கோலம் பண்ணி— நம் சமூகம் என்ன சமூகமோ?" நெற்றியில் மறுகையால் பளாரென்று அறைந்துகொண்டேன். 'முறை வழியில் வாழ்வை நிறைவு காணவிடாத சமூகம்!'

அவள் கைகளை சட்டென விட்டேன். என் உணர்ச்சி எனக்குப் பெரிதாகிவிட்டது. இனி என்னைத் தொட மாட்டாள். அப்படியே அடித்தாலும், அடித்துவிட்டுப் போகிறாள்... பாவம்! ஆனால், இதென்ன என் பேச்சு திடீரென நாடகபாணியில் போகிறது? எனக்கே உடல் குறுகுறுத்தது.

வாழ்க்கையில் அப்பட்டமான, இதுமாதிரி தோல் வயண்ட சமயங்களை நேருக்கு நேர் பேச்சு வாயிலாகச் சந்திக்க—சமாளிக்க நேர்கையில் இதுமாதிரிதான், நம்மை அறியாமலே அவைகளில் பொய்மை புகுந்துகொள்ளுமோ?

அவள் இடது மணிக்கட்டை வலது கையால் தேய்த்துக் கொண்டு நின்றாள். என்மேல் வைத்த விழி கொட்டவில்லை. என் வாயின் புறப்பாடுகளை அவள் விழிகள் விழுங்கிக்கொண்டிருந்தன.

இவன் என் குட்டுக்களை என்ன கண்டுவிட்டான்?

என்ன உடைக்கப் போகிறான்?

என்கிற...

அழ்-முக்-க்கு வெள்ளைப் புடைவை.

சலவை காணாமலே, தோய்த்துத் தோய்த்து செங்காவி ஏறிப்போய், அழியாத சமையல் கறைகள் படிந்துபோன புடைவை.

'பாட்டி!''

''நான் உன் பாட்டியில்லை!''

''சரி, இந்த மறுப்பை கேட்டுக் கேட்டு எனக்கு அலுத்துப் போச்சு! உன் விஷயத்தில் உன் வீட்டார், இவ்வளவு கொடுமையாக இருந்திருக்க வேண்டாம். உன் புருஷன் செத்தான். செத்தவன் தலைவிதி. செத்தவனுக்குப் போட்ட முழுக்கோடு அவனை மறந்துவிட்டு, உன்னை இன்னொரு இடத்தில் கட்டிக்கொடுத்து, நீ நிறைவு கண்டு— நீயும் நிறைஞ்சு, உன் குழந்தைகளை நீ பெற்றெடுத்துக் கொண்டு—அந்த நிலையில் திக்கற்ற என்னை நீ தூக்கிண்டு வந்திருந்தாலும், நீயும் இப்படி இருந்திருப்பாயா? நானும் இப்படியிருப்பேனா?''

என் கழிவிரக்கத்தில் எனக்கே அழுகை வந்துவிட்டது.

''என்னடா, நூத்துக்கிழவா! என்ன பிரசங்கம் பண்ண வந்துட்டே?''

''எல்லாம் உனக்கு ஏற்கெனவே தெரிஞ்சதுதான்... பாட்டி, உன்னுடைய ஆதங்கங்களுக்கு என்னைப் பயன் படுத்திக் கொள்ளத்தானே என்னைத் தேடிப் பிடித்துக் கொண்டு வந்தே?''

''எச்சக்கலை, என்னடா சொல்றே?''

"சின்னப்பிள்ளைக்கு என்ன ஞாபகம் இருக்கப்போறதுன்னு உன்னைப்போல வயசு காலத்தில் வேகம் தணியாத பெரியவாள் நெனைச்சுண்டுடறேள்... சின்னப் பையனுக்குத் தூக்கக் கலக்கம்...கனவென்று கண்டானா, நனவென்று கண்டானான்னு ஒரு நினைப்பு வேறே...எதுவாயிருந்தாலும் நாக்கில் பல்லைப் போட்டு நம்மைத் தைரியமாக் கேட்டுடுவானா என்று துணிச்சல் வேறே...ஆனால், என்னைக் கணக்கு வெச்சுண்டு சொல்றேன், குழந்தைகளுக்கு மூணு வயசிலேயே ஞாபகம் படிஞ்சுடறது. நல்ல சூழ்நிலையில், நல்ல நினைப்புக்கள் நல்ல பயிரா வளர்றது. என்போல் ஆரம்பத்திலேயே ஏறுமாறாகப் போய்விட்டால், அதிலேயே மனம் புழுங்கிப் புழுங்கி...முதலில் திகைப்பு, பிறகு ஏமாந்த உணர்வு, பிறகு துரோக உணர்வு, அடுத்துக் களங்கம்—அதன் விளைவாய் ஆத்திரம், கோபம், புத்திக் கேடு எல்லாத்துக்கும் உங்களாலேயே அஸ்திவாரம் நட்டாறது...இதெல்லாம் பொது, என்னை ஆறு வயதில் உன் விளையாட்டுப் பொம்மையாய் தூக்கிண்டு வந்துட்டே...எனக்கு ஒண்ணும் தெரியாதுன்னு, நீ பண்ணினதெல்லாம் பளிச்சினு சொல்லவா? இதுக்குமேல் வாய்விட்டுச் சொன்னால் ஒருவருக்கொருவர் முகம் பார்க்கவே வெட்கக் கேடு! வாய்க்காலின் ஊற்று ஜலத்தில், சாயக்கால் கலந்த மாதிரி...பாட்டி ஆண்டவன்...அவன் சித்தம் நம்மிருவரையும் எப்படியானும் வைக்கட்டும். ஆனால், இப்படி ஞானோதயத்தை ஏன் திடீர்னு கொடுத்துக் கட்டடத்தையே இடிக்கிறான்?"

—நான் பேசப் பேச அந்த முகத்தில் வரட்டிபோல் கணகணப்பு ஏறிக்கொண்டே போயிற்று...காமுப் பாட்டி சந்தன நிறம். அவளைக் கோலம் பண்ணாமலிருந்தால், அவளுடைய பாலிய வயதில், அப்படியும் அவளுக்கு ஆபத்துத்தான். (ஆனால் அந்த நியாயம் வேறு) அப்படிக் காய்ந்த வெறும் சட்டிபோல் அந்தக் காங்கை அதன் முழுச்சிவப்பை அடைந்த பின் முகம் படிப்படியாக மங்கத் தலைப்பட்டது. அப்படியே குமுங்கி பஸ்பமா உதிர்ந்துவிடுமோ?

என் கண்ணெதிரே ஓர் அதிசயம் நிகழ்ந்துகொண்டிருந்தது. பயங்கர அதிசயம்...காமுப்பாட்டி, அவளுள் நேர்ந்து கொண்டிருக்கும் கடையலில் காமுவாகவும்—பாட்டியாகவும் பிளந்து பிரிந்து, காமு கருகிப்போய், பாட்டி மட்டும் தள்ளாடித் தள்ளாடித் தள்...ள்...ளா...ஆ...ஆ...

முகத்தைப் பொத்திக் கொண்டு ஓடினேன்.

ஓடிக்கொண்டேயிருக்கிறேன்...

—சிறுகதைக் களஞ்சியம்

# ஒரு முத்தம்

இரவு ஒரு கனாக் கண்டேன். கனவில் உருவில்லை, ஆளில்லை... அங்கும் இருள்தான். இருளில் ஒரு முத்தம் என் வாய்மேல் பதிந்தது. கனவே அவ்வளவுதான். கனவு கண்டு கலையக்கூட நேரமில்லை. அதனால் நனவா என்று நினைத்தால் அதனினும் அசட்டுத்தனம் இல்லை.

நனவாயிருக்கலாகாதா? வெட்கம் கெட்ட அசட்டு ஏக்கம். எப்படியிருக்க முடியும்? யாராயிருக்கலாம்? நினைக்கக்கூட வழியில்லை. பிரம்மச்சாரிக் கட்டை. ஹாஸ்டல் வாசம் சகவாசங்கள் ஏற்கெனவே மட்டும் அதிலும் அந்த சைடு கிடையாது. சங்கோசம். ஆனால், முத்தம் தந்தவளை (ஏன் எப்பவுமே அவள்?) மனம் உருக் கூட்டப் பார்க்கிறது முடியாத காரியம். தெரிகிறது. ஆனாலும்—You fool! கனவுதானா எனச் சந்தேகிக்கும்படி முத்தத்தின் அழுத்தமான பதிவு, அதரங்களில் கசிந்த ஈரம், அதே சமயத்தில் அந்தக் கதகதப்பான மெத்து—உடல் சிலிர்க்கிறது. அதுவேதான் என்னை எழுப்பிவிட்டதோ என்னவோ?

காலை விழிப்பிலேயே (விழிப்பா, விழிப்பிலா? ஒரு அனுஸ்வரத்தில் ராகமே மாறும்போல பொருள் நயம் விளிம்பில் நலுங்குகிறது) ஒரு அழகுதான். கண் வைத்ததும் சித்திரம் உயிர்க்கின்றது. இமைச் சிமிழ்கள், இதழ்கள் விரிவது போலும் மெ...து...வா...ய்த் திறக்கின்றன.

உடனேயே கண்ணுக்குப் பட்ட காக்ஷியுடன் ஸ்மரணை கலக்கும் ஜாதுவில் இன்றைய ஓவியம் உருக்கூட, அவ்வப் போது அதன் சாயங்கள் தோயத் தலைப்படுகின்றன.

இதழ்களில் தோய்ந்த கனவின் சாயத்தின் ஈரம் படுக்கையிலிருந்து எழுந்திருக்க மனம் இல்லை.

ஜன்னலுக்கு வெளியே, விழிக்கு மெத்தடமாய்த் துல்லிய நீலத்தில் வான் மிதக்கிறது. நீலத்தில் தொடங்கி நேரம் ஏற ஏற வானத்தில் ஹோலி. மஞ்சள், ஊதா, சிவப்பு என கெட்ட சாயங்கள். அவைகளிலிருந்து கடுகு, தக்காளி, வெங்காயம், மஜந்தா ரோஸ், குங்குமம், ஆரஞ்ச் என மறு சாயங்கள் மேலும் மேலும் கொப்புளித்த வண்ணம் ஒரே வர்ண ரகளை. இன்று சூர்ய ரதப் புறப்பாடு அமர்க்களம் போல்.

நெஞ்சு துளும்புகிறது;

முத்தம் தந்த செளந்தர்யலகரி.

அம்மா தந்த முத்தம் நினைவின் அலைகளில் எழுகின்றது. எப்பவோ தோன்றி ஆழத்தில் எங்கேயோ புதைந்து இன்று மேலெழ அதன் வேளை.

இரண்டு குழந்தைகளுக்குத் தாயாயும், அம்மா அவளும் எங்களுடன் ஒரு குழந்தை. தொட்டதற்கெல்லாம் சிரிப்பாள். பால் பொங்கினால்—அதற்கு அன்று அப்படிச் சிரித்தாள். அதில் சிரிக்க என்ன இருக்கிறது என்று எனக்கு இன்னும் புரியவில்லை. காரியம் தலைக்குமேல் கிடக்கும் போட்டது போட்டபடி. எங்களோடு விளையாட வந்து விடுவாள். தாயக்கட்டான், புளியங்கொட்டை பல்லாங்குழி, கண்ணாமூச்சி, விடுகதை, கதை சொல்லல்...

'ஆமாம், காரியம் என்னிக்கு இல்லை? செஞ்சாலும் ஓயப் போறதில்லை. இந்த சந்தோஷம் கிடைக்குமா?'

ஒருநாள். அந்த நாள் அம்மா முத்தம் தந்த நாள்.

தற்செயலில் என் இடது மணிக்கட்டில் வலதுவிரல் நுனிப்பட்டு—ஆச்சரியமாயிருந்தது. அப்படியே கையைக் காதண்டை கொண்டுபோய் ஒட்டுக் கேட்டேன். காதுக்குத் தெரியல்லே. ஆனால், விரலடியில்—

''அம்மா! அம்மா!'' கை உள்ளே என்னவோ 'டக் டக்'—

அம்மா சிரித்தபடி, முன்றானையில் கையைத் துடைத்துக்கொண்டே வந்தாள். பிரிகள் கலைந்து சற்றுப் பரட்டையாகிவிட்ட அவளது நெற்றி மயிர் மாலை மஞ்சள் வெயில் பட்டுப் பொன்னாய்ச் சுடர் விட்டது.

என் கையைப் பிடித்துப் பார்த்துவிட்டு ''அதுக்கு நாடின்னுபேர்.''

''அப்படீன்னா?''

''உயிர் துடிப்புன்னு அர்த்தம்.''

''அப்படீன்னா?' நாடி அடிச்சுண்டு இருக்கும்வரை உயிர் இருக்குன்னு அர்த்தம்.''

''அடிக்காட்டி?''

உதட்டைப் பிதுக்கிச் சிரித்தாள்.

''உன் கையைக் கொண்டா, பாக்கறேன்!''

அவள் மணிக்கட்டில் என் விரல் நுனியை வெச்சுப் பார்த்தேன்.

''எனக்கு ஒண்ணும் கேக்கலியே.''

''உனக்குப் பார்க்கத் தெரியல்லே'' அவளே பார்த்துக் கொண்டாள். முகம் மாறிற்று. மறுபடியும் பார்த்துக் கொண்டாள். இந்த முறை நேரமாக.

''அப்பா வராளா பாரு'' அபபா வரல்லே. ஆனால், வர நேரம்தான்.

அப்பா ஆபீசிலிருந்து வந்தார். அப்புறம் டாக்டர் வந்தார். எங்களை விரட்டிட்டா.

அப்பா, டாக்டரை வாசல்வரை கொண்டுபோய் விட்டு விட்டு வந்தார்.

மத்யான சாதம் மிச்சம் கொஞ்சம் இருந்ததை அப்பா தான் பரிமாறினார். எங்களுக்குப் பசிச்சுது. கடையிலிருந்து ரொட்டி அண்ணா தான் வாங்கிண்டு வந்தான். இரண்டு துண்டுகூடப் பிடுங்கிண்டான். அம்மா ரூமிலிருந்தே வரல்லே. நாங்கள் அங்கே போகக்கூடாதுன்னு அப்பா உத்தரவு போட்டுட்டார். அப்பா நல்லவர்தான். ஆனால், சொன்னால் சொன்னதுதான்.

அம்மா தூங்கினான்னு நினைக்கிறேன். அப்பா வெளியிலே வந்து கூடத்துலே சாமிப் படங்களைப் பார்த்துண்டு நின்னுண்டிருந்தார், பின்னாலே கை கட்டிண்டு.

பக்கத்து ரூமிலே எங்களுக்குப் படுக்கை. அண்ணா சக்கையா தூங்கினான். நான் படுக்கையில் பிரண்டுண்டிருந்தேன். கால் தூக்கம், அரைத் தூக்கம் கன்னத்தில் ஒரு ரோஜாப்பூ அழுந்தினாப் போல மெத்துனு...

"அம்மா! அம்மா!" கழுத்தை இறுக்கிக் கட்டிண்டேன். தாலி தொங்கி, மூக்கு குறுகுறு—"உஷ்"—தன்னை மெது வாய் விடுவித்துக் கொண்டாள்.

"சமத்தாயிரு."

போயிட்டா.

அதுவும் கனவு மாதிரிதான் இருந்தது. ஆனால், கனவு இல்லை.

விடிஞ்சதுமே ஊரிலேருந்து பாட்டி, தாத்தா வெயிலானப்புறம் அம்மாவின் அம்மா, அண்ணா—இவாள்லாம் எப்படி வந்தா? ஏன் வந்தா திடீர்னு...

யார் வந்து என்ன?

ஒருவேளை நாடி விளையாட்டு விளையாடாமல் இருந்தா, அம்மா இருந்திருப்பாளோ?

ஆனால், அம்மா தந்த முத்தம்—

என்னிடம் பத்திரமாயிருக்கு.

பழங்கணக்கு ஓயாத கணக்கு. அசை போடப் போட அதிகரிக்கும் கணக்கு.

மனமில்லாமல் படுக்கையை விட்டு எழுகிறேன். ஞாயிறுக்கு மறுநாள் திங்கள் எப்பவுமே ஆபீஸ் நுகத்தடிக்குக் கழுத்தைக் கொடுக்க மனமில்லா கசக்கும் நாள்.

திடீர்ப் பொடியில் சோம்பேறிக் காபி கலக்கிறேன். பிடிக்கவில்லை. குடிக்காமலும் முடியவில்லை. வீட்டுக் காபி வீட்டுச் சோறுக்கு நினைப்பு எடுத்து அடக்கமுடியாவிட்டால் இரண்டு மாதங்கள், மூணு மாதங்களுக்கு ஒருமுறை அண்ணா வீட்டுக்கு. மன்னி சமையல் மிகவும் நன்றாயிருக்கும்.

நேற்று இரவு ரயிலடிக்குப் போயிருந்தேன் மன்னி, குழந்தைகள், அண்ணாவை வழியனுப்ப. கடைசி நேரத்தில் அண்ணா பயணத்துக்குக் கொசிராய் ஒட்டிக்கொண்டான். ரயிலடியிலேயே ஒரு லீவு மனு எழுதி தன் ஆபீசில் சேர்த்துவிடும்படி என்னிடம் கொடுத்துவிட்டான். "மன்னி தீபாவளிக்குப் பிறந்தகம் போகிறாள். நானும் கூடப்போய் விட்டால் எனக்குத் தீபாவளி செலவு மிச்சம் பாரு. மாப்பிள்ளை பழசானாலும் மாமனார் சும்மா விட்டுவிடுவாரா?" என்று மன்னி எதிரேயே சொல்கிறான். தவிர "மச்சினிகள் குறுகுறு" என்று என்னைக் கண் அடிக்கிறான்.

அவனுக்குள் மிக்க சாமர்த்தியமாகவும் வேடிக்கையாகவும் பேசுவதாக எண்ணம். அண்ணாவின் 'றாபணாக்கள்' சரிப்படாமல்தான் அவனுக்குக் கலியாணமான சுருக்கிலேயே நான் ஹாஸ்டலில் இடம் பார்த்துவிட்டேன்.

அப்பாவும் தடுக்கவில்லை.

இப்போதெல்லாம் அப்பா எதற்குமே ஆக்ஷேபம் தெரிவிப்பதில்லை. இல்லை, தன் அபிப்பிராயமே தெரிவிப்பதில்லை.

எனக்குத் தோன்றுகிறது. நாளடைவில் அவர், அவரிடம் எங்களுக்கிருந்த 'அத்து' மட்டும் இருத்திக் கொண்டு மற்றபடி எங்கள் இடத்துக்கே விட்டுவிட்டார். அதனாலேயே எங்களுக்கு அவரிடம் அச்சம் அதிகரித்தது.

அண்ணாவுக்குக் கலியாணமான சில நாட்களுக்கெல்லாம் அப்பா எங்களைத் தன் அறைக்குக் கூப்பிட்டார்.

மன்னியையும் சேர்த்துத்தான்.

"Look here, Boys, உங்கள் தாயார் போன பின்னர் உங்களுக்கு மாற்றாந்தாய்க் கொடுமை நேர்ந்ததென்று உங்கள் வாயிலும், பிறர் வாயிலும் பட வேண்டாம் என்றே நான் மறுமணம் செய்துகொள்ளவில்லை. நானே சமைத்துப் போட்டு, நானே உங்களை வளர்த்தேன். நான் செய்தது சரியா அல்லது சரியாக உங்களை வளர்த்தேனா என்று இப்போது ஆராய்வதில் அர்த்தமில்லை. நீங்கள் இருவருமே ஊன்றிக் கொண்டாகிவிட்டது. உங்கள் பொறுப்புகள் உங்களுடையது. என்னைக் கேட்காத ஆலோசனைகளை, புத்திமதிகளை நான் வழங்கமாட்டேன். இதைச் சொல்லவே அழைத்தேன். நீங்கள் போகலாம்."

நெடுநாளைக்குப் பிறகு நான் அப்பாவிடம் கேட்டது நீண்ட பேச்சுதான். 'சினிமா டயலாக்' என்று கிசுகிசுத்து அண்ணா தோளையிடித்தான். ஆனால், எனக்குச் சொல்லத் தெரியவில்லை. ஏதோ துக்கமாயிருந்தது.

இதற்கு இரண்டு வாரங்களுக்குப் பின் அப்பாவைக் காணவில்லை. மிரண்டு போனோம், தானே பறக்கத் தூக்கியெறிந்த பரிகளைப் போல.

மன்னி ஆருடம் பார்த்தாள். 'மாமனார் உயிரோடு தானிருக்கிறார். நன்றாயிருக்கிறார். இன்னும் இரண்டே வாரத்தில் தானே வந்து சேர்ந்துவிடுவார்!'

ஆச்சு. நிகில் பிறந்து ஐந்து வருடங்களுக்குப் பின் முகேஷுக்கு இப்போ மூணு நடக்கிறது.

அப்பாவும் இன்னும் வரப்போகிறார்; அப்பா இனிமேல் வரமாட்டார்.

அம்மாவின் மறைவுக்குப் பின்னரே, கண்ணெதிரே எங்களுக்குத் தெரியாமலே அப்பா படிப்படியாக மாறி விட்டார். அம்மா போனது அவருக்கு ஊமை அடி.

இப்படிக் காணாமல் போக, அம்மா போனவுடனேயே திட்டம் போட்டு ஒதுங்கிவிட்டார் என்றே நினைக்கிறேன்.

ஆகவே, சின்ன வயதிலேயே எங்களுக்கு—எனக்கு அம்மா இல்லை. அப்பா இருந்தும் இல்லை.

வண்டி புறப்படும் வரை நான் வெளியே நின்றபடி உள்ளே அவர்களுடன் பேசிக்கொண்டிருக்கையில், இருந்தாற் போல் இருந்து முன்பின் சம்பந்தமில்லாமல் மன்னி:

"அம்பி, எப்போத்தான் கலியாணம் பண்ணிக்கப் போறேள்? வயசாயிண்டு வரல்லியா? உங்களுக்கா இல்லா விட்டாலும் எனக்காவேணும் பண்ணிக்கோங்களேன்."

"ஏன், உனக்குப் புதுப் புடவை வருமேன்னு பார்க்கறியா"—அண்ணா.

"அம்பி, எனக்கு இப்படித் தனியாகக் குடித்தனம் பண்ணி அலுத்துப்போச்சு. ரெண்டுபேரும் ஒண்ணாயிருப் போம். இன்னும் சத்தே பெரிய வீடா நானே பார்க்கறேன். பிரிய நேர்ந்தால் நீங்கள் அண்ணன் தம்பியால் நேரணுமே அன்று, நாங்கள் ஓரகத்திகள் ஒற்றுமைக்கு நான் உத்தர வாதம்."

உள்ளூரச் சிரிப்பு வந்தது. இதோ அண்ணா 'றாபணா' பண்ணுகிறான்.

"நீ மனப்பால் குடிச்சுண்டேயிரு. அவனுக்குப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட வரன் தேவைப்படவில்லை. காதல் பண்ணி முடிந்தால் பரீக்ஷையும் வைத்துத் தேர்ந்தெடுக்கப் போறான். மேனாட்டில் கலியாணத்துக்கு முன் ஒருவரையொருவர் புரிந்துகொள்வதற்காகச் சேர்ந்துகூடக் கொஞ்சகாலம் வாழ்கிறார்களாம். என்ன அம்பி, அப்படித் தானே?"

எரிச்சலாய் வருகிறது. என்ன பண்ண முடிகிறது?

"ஆமாம். உன்னைப் போல் அதிர்ஷ்டம் எல்லாருக்கும் வாய்க்குமா" என்றேன்.

மன்னி குறுக்கிட்டு, "அம்பி, அப்படியெல்லாம் சொல்லாதேங்கோ. நான் சொல்றேன், உங்களுக்கு அதிர்ஷ்டம் காத்திண்டிருக்கு. ஊரில் எங்கள் வீட்டுக்கெதிரேயே ஒரு பெண் உங்களுக்காகவே வளர்றா. படிப்பு சுமார்தான். ஆஹா, ஓஹோன்னு செய்யமுடியாது. பெண்ணுக்கு அப்பா, அம்மா இல்லை. அண்ணன்தான் செய்யணும். அவன் உத்யோகம் சுமார்தான். வீட்டுக்காரியம் மாங்குமாங்குனு செய்வாள். என் சமையலை நீங்கள் மெச்சிக்கறேள். அவள் கைப் பக்குவத்துக்கு என்ன சொல்லப்போறேளோ? மருந்து வெச்சமாதிரி பின்னாலேயே கத்துவேள். பார்க்கவும் லக்ஷணம். வெள்ளிக்கிழமை எண்ணெய் தேச்சுண்டால் ஒரு பாடு. கூந்தலைக் கட்டையால் அடிச்சுத்தான் கசக்கணும். அத்தனை அடர்த்தி, அத்தனை நீளம். அவளைப் பண்ணிண்டேள், ஒரு பெண்ணுக்கு வாழ்வு கொடுத்த புண்ணியமும் கட்டிப்பேள்."

நல்லவேளை...வண்டி நகர ஆரம்பித்துவிட்டது. நான் வண்டியோடு கூடவே கொஞ்சதூரம் ஓடவில்லை. பின்தங்கிவிட்டேன்.

இன்று, ஆபீசில் என் 'ஸீட்' சேவிங்க்ஸ் பாங்க் லெட்ஜர்கள்.

கொஞ்சநாட்களாக எனக்கு நிரந்தரமான இடமில்லை. இந்தக் கிளைக்குப் புதிதாக மாறி வந்திருக்கிறேன். எங்கெங்கே ஆள் துண்டு விழுகிறதோ அங்கே நான் முட்டுக் கொடுக்க வேண்டும்.

இன்று என் 'பாக்யம்' ரோஸலின் மார்வாவுக்குப் பக்கத்து 'சீட்.'

"'ஆஹ்ஹா! நீங்களா? ஸோ, என்னை என் ஆபத்துக் களிலிருந்து மீட்க, The hero has come!"'

"உங்களுடைய ஆபத்துக்கள் என்னவோ?"

"இந்த லெட்ஜர்ஸ்தான்!"...அந்தக் கட்டைப் புத்தகங் களை கைவீசிக் காட்டிச் சிரித்தாள்.

"இதுங்களைவிட ஆபத்துங்க வேணுமா என்ன?"

ஓ...ரோஸலின் மார்வா வேலையில் படுமோசம். ஆனால், 'படா' சாமர்த்தியசாலி. இப்படித்தான் 'ஜாலக்' காய்ப் பேசி, தன் வேலையைப் பிறத்தியார் தலையில் போட்டுத் தன் காரியத்தைச் சாதித்துக்கொள்வாள் தகுடு தத்தக்காரி.

ஆனால், நான் மசிவதாயில்லை. ஏற்கெனவே மோச மான 'லெட்ஜர்'களை என் பங்குக்குப் போட்டிருக்கிறது. தவிர இன்று எனக்கு 'மூட் அவுட்.'

"என்ன பேச்சே காணோம்? The 'Strong Silent' man. eh?"

"நான் குனிந்து என் வேலையில் முனைந்தேன். ஆனால் ஓடவில்லை. பக்கங்களுக்கும் என் பார்வைக்கும் குறுக்கே ஏதேதோ நினைவு முகங்கள் மிதந்தன. பேச்சுக்கள் உட் செவியில் ஒலித்தன.

'ஒரு பெண்ணுக்கு வாழ்வு கொடுத்த புண்ணியத்தைக் கட்டிப்பே.'

"ஹூம், நன்றாயிருக்கிறதே மன்னி, உங்கள் பேச்சு. புண்ணியம் சம்பாதிக்கக் கட்டிக்கணுமா? அப்படித்தான் கலியாணங்களெல்லாம் நடக்கின்றனவா?"

'எண்ணெய் தேய்ச்சுண்டால் ஒரு பாடு. கூந்தலைக் கட்டையால் அடிச்சுத்தான் கசக்கணும்.'

"அம்பி சார், முளிச்சுக்கோங்க!"—யாரோ தோளைத் தட்டினார் (யார், அவள்தான்).

நிமிர்ந்தேன். காதளவு முரட்டு மீசை, மேட்டு விழிகள். ராணுவச் சீருடையில் புன்னகை புரிந்தார். உரமான, ஒழுக்கமான பல் வரிசை.

"Day—Dreaming, young man?"

"Quite natural. You know, He is a bachelor."

(எனக்காகப் பரிந்து பேசுகிறாளாம்.)

கஸ்டமர் வாய்விட்டுச் சிரித்தார். "understandable."

அவர் போன பின்னர்:

"என்ன, முறைச்சுப் பார்க்கறீங்க?"

"..............."

"பேசமாட்டீங்க...ஆனால், பார்ப்பீங்க இல்லையா?" புன்னகை புரிந்தாள்.

அவள் உதடுகளின்மேல் என் பார்வை உறைந்தது. கீழுதடு சற்று தடிப்பு. ஆனாலும் சித்திரம் தீட்டினாற் போல் வாய். செக்கச் செவேல் 'பூ.'

(இதுவாயிருக்குமா Absurd, Idiot!)

அவள் கண்கள் கவலை கொண்டன. "என்ன லிப்ஸ்டிக் அளிஞ்சுட்டுதா?" பையை எடுத்து அதில் பதித்த கண்ணாடியில் முகத்தைப் பார்த்துக்கொண்டாள்.

"நிமிசத்துலே பயமுறுத்திட்டீங்களே! You naughty Man!"

இனி இப்படியே பொழுதைப் போக்கிவிடுவாள். தெரிந்துவிட்டது.

தீபாவளி ஸ்வீட்ஸ் பெட்டிகள் இரண்டு மூன்று வந்தன.

"அம்பி ஒண்டிக்கட்டை...இத்தினியும் வெச்சுக்கிட்டு என்ன செய்யப் போறீங்க?"

"You are welcome" அவளிடம் கொடுத்தேன்.

"அதுக்காக ஒண்ணுகூட வெச்சுக்கலியா? ஒண்ணு வெச்சுக்குங்க."

"எனக்குத் தேவையில்லை. ஆமா, நீங்க என்ன செய்யப் போறீங்க? உங்கள் பங்கு வேறே இருக்கு?"

"வேண்டியவங்களுக்குக் கொடுப்பேன். நல்ல பேர் கட்டிப்பேன். வாங்கிக்க மனுசாளாயில்லே?" சட்டென முகம் சிடுத்துப் பெட்டிகளை என் பக்கம் தள்ளினாள். "இல்லே, வித்துடுவேன்."

சமாதானம் பண்ணி பெட்டிகளை அவளிடம் திணித்தேன்.

சாதாரணமாக ஒரு மனோதத்துவக் கோட்பாடு: கனவு என்பதை அடி ப்ரக்ஞையில் புதைந்து கிடக்கும் அந்தரங்க ஆசாபங்கங்கள், ஏக்கங்கள் தங்களை நிறைவேற்றிக் கொள்ளும் வடிகால் என்று. அப்படியானால் கனவில் (யார்?) தந்த முத்தம் எதன் அடையாளம்?

இத்தனைபேர் என்னைச் சுற்றிலும் இருக்கிறார்கள். கஸ்டமர்கள் நெரிகிறார்கள். வங்கிக்கு வெளியே ரோடில் வாகனங்கள் பறக்கின்றன. ஆனால், நெஞ்சில் வெறிச்சோடி நிற்கிறேன்.

என்னைத் தனியென்று எந்த நியாயத்தில் சொல்லிக் கொள்ள முடியும், சமுதாயத்தின் நடுவிலேயே இருந்து கொண்டு? என் இஷ்டப்படி இருக்கத்தானே ஹாஸ்டலுக்கும் வந்தேன்?

ஆனால் அண்ணா, மன்னி, குழந்தைகளைப் பார்க்கும் போது குடும்பத்தின் அடைக்கலத்துக்குத் திரும்பிவிடலாமா என்று மனம் அடித்துக்கொள்கிறது. எட்டு வருடங்களாகத் தனி அறை, ஓட்டல் சாப்பாடு, வயிற்றுப் புண்ணுக்கு மாத்திரை...

மன்னி, தனிக்குடித்தனம் அலுத்துவிட்டதென்கிறாள், குடும்பம் பெருகிய பின்னும்...

தனிமை—அப்பா, உங்களுக்கு அலுக்கவில்லையா? அலுத்திருந்தால் திரும்பி வந்திருப்பீர்களே!

வெளியூரிலிருந்து வந்தவர்கள் பார்த்தமாதிரி இன்னும் பேசுகிறார்கள்.

"உன் தகப்பனார் ரிஷிகேசில் இருக்கிறார். முக்கியமாக உன்னை ரொம்ப விசாரிச்சார்."

"அம்பி, என்னன்னு சொல்வேன், மதுரை கோவில் வாசலில் பரதேசிக் கோலத்தில் பிச்சையெடுத்துண்டிருக் கார். என்னைப் பார்த்துத் தலையைத் திருப்பிக்கொண் டார். எனக்கும் அப்படித்தானிருந்தது. இப்படியிருக்க அவருக்கென்ன தலையெழுத்தா? ஏன் அப்படியிருக்கார்?"

சொல்பவர்க்கென்ன?

"இமயமலைச்சாரலில் ஒரு பனிக் குகையில், அவதூத ராகப் பார்த்தேன்."

முன்னால் இந்த ஆசாமி, இமயமலைச் சாரலில் பனிக் குகைக்குப் போக என்ன நிமித்தம்?

யார் கேட்பது?

ஆனால் அப்பா, நீங்கள் வரமாட்டீர்கள். ஏனெனில் நீங்கள் சுயநலக்காரர்.

நேரம் நகர்ந்தது. குறுகிய சீசாவுள் மணலின் மெது மெதுச் சரிவு.

டிபன் ரூமில், என் டிபன் டப்பாவைத் திறந்ததுமே புளிப்பு வாடை என்னையே பின்வாங்கச் செய்தது.

"என்ன ப்ரதர், தயிர்சாதமா... கள்ளுலே பிசைஞ்சு கொடுத்தாங்களா?"

அவசரமாய் டப்பியை மூடினேன்.

"Leave him alone!" இவளுக்கு என்மேல் ஏன் இவ்வளவு பரிவு தானம்?

"ஹாஸ்டலில் என்ன கட்டிக்கொடுத்தாங்களோ அதைத்தானே கொண்டார முடியும்! எங்கே எந்திருச்சிட்டீங்க? உக்காருங்க. எங்கேயும் போவேணாம். இன்னிக்கு நீங்க நம்ம கெஸ்ட். நான் டிபன் காரியர்லே கொணந்திருக்கேன். காரியர் சாப்பாடு எப்பவும் மிஞ்ச மிஞ்சத்தான்—ஏன் தயங்கறீங்க... இன்னிக்கு விஜ்தான். முள்ளங்கி சாம்ப்ரா, உருளைக்கிளங்கு புட்டு. ப்ளீஸ். எனக்காக... சத்தியமா நீங்க நினைக்கறது இல்லே—எங்களுக்கும் பாவ புண்ணியம், வெள்ளிக்கிழமை உண்டு."

பேசிக்கொண்டே இலையைப் பாதியாகக் கிழித்துப் பரிமாறிவிட்டாள்.

சாதத்தின்மேல், அவள் விட்ட சாம்பார், சாதத்துள் பரவலாக இறங்கியதைப் பார்க்க நன்றாய்த்தானிருந்தது. ஒரு கவளம் போட்டுக்கொண்டேன். உம்ம்—Not bad, not at all bad.

"எப்படி இருக்குது... பார்ப்பார வீட்டுச் சமையலாட்டம் இருக்கா? ரெண்டு தலைமுறைக்கு முன்னாலே கன்வர்ட் ஆவறதுக்கு முன்னாலே நாங்க அய்யமாரு."

அப்பவே நாக்கில் 'சுருக்.'

பிடுங்கி எடுத்தேன்... வெள்ளை வெளேரென்று பொடி முள். அதன் பிரதிபலிப்பாய் எண்ணம் உள் ஊறினதும் உடனே எழுந்த குமட்டலைத் தாங்கமுடியாமல் பாத் ரூமுக்கு ஓடினேன். எல்லோரும் என்னைத் திரும்பிப் பார்த் தனர். அவள் சிரிப்பு துரத்திற்று. திரும்பிப் பார்த்தேன். மேல் வரிசையில் இரண்டு தெற்றிப் பற்கள் தெரிந்தன

இன்று இவள் என்னைச் சாப்பிடுவதாகத் தீர்மானம் பண்ணிவிட்டாள்.

"What a funny man you are!"

மௌனமாய்ச் சற்று நேரம் நடந்தோம். அவள் வீடு என் வழியில் இல்லை. ஆனால், 'ஷாப்பிங்' செய்யணுமாம். "நாளைக்கு தீபாவளியில்லே?"

"உங்களுக்கும் தீபாவளிக்கும் என்ன சம்பந்தம் மிஸ் மார்வா?"

"நான் மிஸ் இல்லை."

"சரி, மிஸஸ் மார்வா..."

"நான் மிஸஸ்ஸூமில்லை."

இதென்ன புதிர்? என்னத்தை விளக்கம் கேட்பது?

பெருமூச்செறிந்தாள்.

"தனிமை பயங்கரம் மிஸ்டர் அம்பி."

என்ன சொல்வது தெரியவில்லை.

"மிஸ்டர் மார்வா சிங்கப்பூர் போய் வருசம் பத்தாச்சு."

"ஏன்?"

நகைத்தாள். "சம்பாரிக்கத்தான். உங்களவங்ககூடத் தான் போவல்லியா...துபாய், குவாயிட், மஸ்கட்."

"போறாங்க. மூணு வருடங்களுக்கு ஒருமுறை தாய், தகப்பன், பெண்டாட்டி பிள்ளைங்களைப் பார்க்க வராங்க."

"இவர் வரல்லே. கடிதாசுகூடக் கிடையாது."

"நான் இப்படிக் கேக்கறேன்னு நினைக்காதீங்க மிஸஸ் மார்வா... ஆள் உயிரோடு இருக்காரா இல்லையா?"

"எல்லாம் கல்லுகுண்டாட்டம் இருக்கான்." வார்த்தைகளைத் துப்பினாள்.

நான் மேலே கேட்க விரும்பவில்லை. மேலே கேட்கத் தேவையில்லை.

"அம்பீ. வீட்டுக்கு வாங்களேன். காபி சாப்பிட்டுப் போலாம். நான் காபி நல்லா செய்வேன், பிராமின்ஸ் மாதிரியே."

"சாம்பார் சேஞ்ச மாதிரியா? sorry, என் பஸ் வந்துட்டு. வரேன்."

எனக்கு பஸ் இல்லை. நான் நடைதான். ஆனால், ஏறி விட்டேன். எனக்குப் பயமாயிருந்தது. இவள் என்னைச் சாப்பிடுவதாகத் தீர்மானித்துவிட்டாள்.

அடுத்த நிறுத்தத்தில் இறங்கி நடந்தேன். கால் போன வழி. இந்தப்பக்கம் வந்ததாக ஞாபகம் இல்லை. இடம் புதிதாக இருந்தது. ஒரு சந்தில் திரும்பியதும், இடமே வெடுக்கெனத் தனியாகத் துண்டிக்கப்பட்டாற்போல் சந்தடியும் இரைச்சலும் சட்டென அடங்கி, ஏன் நிசப்தமே குடிகொண்ட ஒரு குறுஞ்சாலை பிறந்து வளர்ந்தது. மந்திரக் கோல் மஹிமை போலும், புயல் நடுவே அமைதி. சாலை நடுவே ஒழுங்கான இடைவெளிகளில் மரங்கள். இரு பக்கங்களிலும் மதில்களின் பின்னால் தோட்டங்கள், தோப்புக்கள் நடுவே தெரிந்தும் தெரியாததுமாய்ச் சின்னதும் பெரிதுமாய்ப் பங்களாக்கள், காட்டேஜ்கள் பதுங்கின. 'போஷ்' ஏரியா போலும். இல்லை, பூராவே தனியார் சொத்தோ? வரலாமோ கூடாதோ? ஏதோ சைகையால்தான் இங்கு இழுக்கப்பட்டிருக்கிறேன். காலைக் கனவு தொடர்கிறதா? நப்பாசை.

அட, கல் பெஞ்ச் வேறேயா? அமர்கிறேன். அந்திக் காற்று சாமரம் ஆடி நெற்றி முத்தை ஒற்றுகிறது.

முத்தத்தின் மூச்சு.

என்ன சங்கடம்... இந்த முத்தம் நெஞ்சு முள்ளில் மாட்டிக்கொண்டு மாயமான் காட்டுகிறது; என்னைத் தன் பின் விளிக்கிறது. இங்கேதான் எங்கோ மாவும் தென்னையும் சூழ்ந்து இந்த சிலந்திக் கூட்டினுள் சிறையிருக்கிறாள்.

"என் ராஜகுமாரா! வா! வா!"

No, no, இது இந்தச் சமயத்தின் சொக்குப்பொடி. தெரிகிறது.

ஆனால், தொண்டையை அடைக்கிறது.

அந்தரத்தில் பூமி தன் அச்சில் யுகாந்த காலமாய்ச் சுழலும் தனிமையை உணர்ந்த திரண்ட சோகம். அதன் அத்தனை ஜீவராசிகளுக்கும் பங்காகும்போது நேரும் வேதனையின் ரூபிணிதான் என் இளவரசி. கனவில் என் உதட்டில் பதிந்த முத்தம் அவள் அனுப்பிய சேதி. சேதியின் மர்மம் என் இதய நரம்பைச் சுண்டும் சோகஸ்வாகாநாதத்தின் விண்விண்ணில் தத்தளிக்கிறேன்.

பெஞ்சின்மேல் தாழ்ந்த பூவரச இலைகளினூடே ஒரு நக்ஷத்ரம் என்னைச் சிந்திக்கிறது.

இருகைகளையும் அதை நோக்கி நீட்டுகிறேன். "என் எண்ணத்தின் ப்ரதிஷ்டாவந்தி, வா! என்முன் பிரத்யக்ஷமாகு!"

இலைகள் சலசலத்தன. அந்த சலனத்தின் நக்ஷத்ரத்துள் அவள் கலைந்தாள்.

ஒற்றைப் பக்ஷி வானில் தன் ஜோடியைத் தேடிக் கொண்டே எட்ட மறைந்தது.

ஊஹூம். அந்தத் தருணம் என் தோளைத் தொட்டு விட்டுப் போய்விட்டது. இனி வராது.

மறுபடியும் வெட்டோ வெறிச்சுத்தான். அங்கு, இங்கு, எங்கும் இனி அதுதான்.

எழுந்து நடக்கிறேன். கால் வந்த வழி.

ஒரு திருப்பத்தில் நெடுஞ்சாலையின் போக்குவரத்து இரைச்சல், ரொட்டி அடுப்பு அனல்போல் முகத்தில் மோதுகிறது.

கடைகண்ணிகள், வாஹனங்கள், ஜன நடமாட்டம் இரவைப் பகலாக்கிவிட்டது.

நாளைக்குத் தீபாவளி.

ஜவுளிக் கடைகளில் இன்னும் கூட்டம் வழிகின்றது.

பக்ஷணக் கடைகளில் கூட்டம் நெரிகின்றது.

பட்டாசுக் கடைகளில்—சொல்லவே வேண்டாம்.

எங்கும் தீபாவளி! பேரம் அதன் கடைசி நேரத்தின் சுறு சுறுப்பில் பிதுங்குகிறது.

வீட்டு வாசல்களில் விஷ்ணு சக்கரங்கள், அதிர்வெடிகள், ஊசிப்பட்டாசு சரங்கள், அவுட் வாணங்கள்; தெரு வெல்லாம் புகை, கந்தக நாற்றம், கலியாண கோலம்.

ஆனால், நான் மட்டும் 'வெறிச்.'

நடக்கிறேன்.

நட, நட, நட.

பூமியின் விளிம்பு வரை தொடுவானம் எட்டும்வரை

காலம் முடியும்வரை

நடந்து முடியும்வரை

நடந்து கொண்டேயிரு.

No use. விடிமோக்ஷமே கிடையாது.

இன்று வருவாளா?

முத்தம் தருவாளா?

தன்னைக் காண்பித்துக்கொள்வாளா?

எனக்குப் பைத்தியம் பிடித்துக்கொண்டிருக்கிறதா?

இருப்புக் கொள்ளவில்லை.

அறைக்கு வெளியே மொட்டை மாடிக்கு வருகிறேன்.

வானம் இருண்டிருக்கிறது.

அங்குமிங்குமாய்த் தெரியும் ஒன்றிரண்டு நக்ஷத்ரங்களும் மூழ்கிக்கொண்டிருக்கின்றன.

"என்னைக் காப்பாற்று!"

'அம்மா! இல்லை.'

இரண்டு சொட்டுக்கள் என் முகத்தில் விழுகின்றன.

என் கைப்பிடிக்க என்று வருவான் எனக் காத்திருக்கும் கன்னியின் கண்ணீர்த் துளி.

'பளிச்'சென நெஞ்சில் வெளிச்சம் ஏற்றிக்கொண்டது.

உள்ளே போய் ஒரு பேப்பரை எடுத்துக் கடிதம் எழுதினேன்.

வரிகள் வளர வளர கனம் லேசாயிற்று.

"மன்னிக்கு.

நான் சம்மதம். எனக்காகக் காத்திருக்க வேண்டாம். நீங்கள் என்ன சொன்னாலும், எது செய்தாலும் சரி, ஆனால் சுருக்க சுருக்க; வழி இப்பத்தான் தெரிந்தது. தெரிந்துகொண்டே இருக்கிறது."

—இந்தியா டுடே

# கிறுக்கல்

இன்றோடு ரெண்டு வாரங்கள். விஜி, நீ ஏன் இன்னும் கனாவில் வரல்லே; ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்துண்டிருக்கேன். ரெண்டு வாரம், பதினாலு நாளடி! இனிமேல் நீ அவ்வளவுதான். அப்பிடி அப்பிடி அப்படித்தானே?

கனைப்புக் கேட்டு நிமிர்ந்தார்.

"அப்போ நாளை ராத்ரி புறப்படறோம். ரிசர்வ் பண்ணியாச்சு."

அவன் சொன்னதை வாங்கிக்கொண்டதாக அவர் விழிகளில் தெரியவில்லை.

"உங்களுக்கும் சேர்த்துத்தான்."

"நானா? நான் என்?"

"ஆம்ப்பா."

"நான் ஏன்?"

"ஆமாம்பா." இப்போ குறுக்கிட்டது அவள். "உங்களுக்கு இனிமேல் இங்கே என்ன இருக்கு?"

"என்னை ஒரு வார்த்தை கேட்டிருக்கலாமே!" நெஞ்சில் கோபம் பிராண்டிற்று. "இங்கே என்ன இல்லை? ஒருத்தியில்லேன்னா உலகம் அஸ்தமிச்சுப் போயிடுமா?" ஆனால், குரல் தழுதழுத்து விட்டது (விஜி, உலகம் அஸ்தமிச்சுத்தான் போச்சுடி! ஆனால், இவாளுக்கு ஏன் நம்மை விட்டுக் கொடுக்கணும்?)

அவன் கைக்கடியாரத்தைப் பார்த்துக்கொண்டான். அவனுக்கு அது ஒரு பழக்கம். அவனுக்கு எப்பவுமே நேர மிருப்பதில்லை. அவன் வருவதற்குள் அவளுக்கு, உயிர் போய்விட்டது. ஒரே பிள்ளை, மஹானுபாவன். கரெக்டா கொள்ளியிட வந்துட்டான். அவனுக்கு எப்பவுமே நேரம் இருப்பதில்லை.

"அப்பா, கோவப்படாதீங்கோ." சட்டென மண்டி யிட்டு அவர் வலதுகையைத் தன் இரு கைகளிடையே பொத் திக்கொண்டாள். கூசிற்று. விடுவித்துக்கொள்ள முயன்றார். அவள் விடவில்லை. இப்போதெல்லாம் இதுதான் சகஜம் போலும்!

"நீங்கள் ரெண்டுபேருமே எப்போதோ எங்களிடம் வந்திருக்க வேண்டும். நாங்கள் கட்டாயப்படுத்தாமல் இருந் துட்டு, ஏமாந்தும் போயிட்டோம். இப்ப வேணும் எனக்கு ஒரு சான்ஸ் கொடுங்கப்பா, இனிமேல் நீங்கள் ஒண்டியா இருக்க வேணாம்."

பரவாயில்லை. அப்பா உலகம் முழுக்க அஸ்தமிச்சுப் போயிடல்லே.

"உன் பேர் என்ன?" சமாதானத்தில் முறுவலித்தார். அவர் கேள்வி அவருக்கு ஆச்சரியமாகப் படவில்லை. எப்பவோ, வருடத்துக்கு ஒரு முறை அதுவும் நிச்சய மில்லை—வந்து ஒருநாள் தங்கினால் அதிகம். வந்தாலும் இவளோடு எனக்கெங்கே நேர்ப் பேச்சு? பின்கட்டுலே அவளும் இவளும் பேசிண்டிருந்திருக்கலாம். இப்போ பட்டணத்துலே விட்டுவிட்டு வந்திருக்காளே பேராண்டி, அவன் பேரும் தெரியாது. எனக்கும் வயசாச்சு. ஞாபக சக்தி குறைஞ்சுண்டு வரதோ என்னவோ?

எழுந்து நின்றாள்.

"என் பெயர் விஜி."

தூக்கிவாரிப் போட்டது.

"நீயும் விஜியா?"

"என் பேர் விஜயஸ்ரீ. அழைக்கறது விஜி."

"உன் பேர் விஜயம் இல்லை?"

"இருந்திருக்கலாம். ஆனால் நான் விஜயஸ்ரீ."

* * *

தூக்கம் மறுத்தது. புரண்டார். எழுந்தார், உட்கார்ந்தார். மேடையை ஒட்டிய ஜன்னலுக்கு வெளியே, நிலா பட்டை வீறிற்று. கோயில் கோபுர கலசத்தின்மேல் பால் சேறாட்டம் வழிந்தது.

இங்கே என்ன இருக்குன்னு கேட்டாளே? வெதும்பினார். என்ன இல்லை? இதோ எதிரேயே பெருமாள் சன்னதி. இதே கோடியில் சிவன் கோயில். பஸ்ஸில் அரை மணி தூரத்தில் பஞ்சநதேச்வரர் தரிசனம் தர அழைக்கிறார். ஆசைப்பட்டால் அங்கிருந்தே ஒரே மூச்சில் பெரிய கோயில். பங்காரு காமாஷி மாரியம்மன், இத்தனையும் வளைச்ச காவேரி அத்தனையும் பார்த்துண்டு மதியம் சாப்பாட்டுக்கு திரும்பிடலாம்.

நம்ம ஊர் என்கிற எண்ணம் இருந்து அவ்வப்போது வந்து போக இவர்களுக்கு கொடுத்து வைக்காட்டா யார் குத்தமாம்?

சரி! எது எப்படியானும் போகட்டும். நாளை ராத்ரி இங்கே படுக்கையில்லை. இந்த நேரத்துக்குப் பட்டணத்தை நோக்கி ரயில் போயிண்டிருக்கும். திரும்பி வரேனோ இல்லேயோ, ஆகவே விஜி—

விஜி கனவில் வரவில்லை.

* * *

"கார்த்திக், Shake hands with Grand dad, say Good morning!"

"தாத்தாவுக்கு நமஸ்தே சொல் கார்த்திக்!"

"அவன் என்னை அப்பான்னே அழைக்கட்டும்." லேசாகச் சினந்தார்.

பையன் லஜ்ஜையுடன் வந்து அவர் கையுள் தன் கையை வைத்தான். அவ்வளவுதான். எப்படியென்று தெரியவில்லை. அவருக்கு உள்ளே மார்பு அகன்று விரிந்த மாதிரி...

இழுத்து அணைத்து, கன்னத்தோடு கன்னம் இருத்திக் கொண்டார். உடனே அவர் கழுத்தை அவன் கைகள் வளைத்துக்கொண்டன. அவருக்கு மூர்ச்சை போட்ட மாதிரி ஆகிவிட்டது. மெத்து மெத்து...

"வா வா கார்த்திக், நேரமாச்சி. இன்னி குளிக்க வேணாம். ரிக்ஷா வந்துட்டுது. ட்ரஸ் மாட்டிக்க. ஊம், ஜல்தி ஜல்தி—வா, வாரி விடறேன். டிபன் எடுத்துக் கிட்டியா? இன்னிக்கு அந்தத் தாத்தா வீட்டுக்குப் போவேணாம். நேரே இங்கே வந்திடு. இந்தத் தாத்தாவுக்குக் கம்பெனி கொடுக்கணுமில்லே! டாட்டா!"

அவரிடம் வந்தாள்.

"அப்பா, உங்கள் சாப்பாட்டை மேஜையிலே மூடி வெச்சிருக்கேன். எப்பவுமே காலையிலே கெடுபிடிதான். சமையல் விவரமா முடியாது. சாயங்காலம் வந்தாலும் எப்படாப்ப வேலை முடிச்சி, தலை சாய்ப்போம்னு இருக்கு. ஞாயிற்றுக்கிழமைதான் கொஞ்சம் லெஷர். ஆனால் அன்னிக்கு வாஷிங் டே. வேலைக்காரி இங்கே பெரிய ப்ராப்ளம். மொஸாய்க்கைத் துடைக்க மட்டும் முப்பத்தி அஞ்சு வேணுமாம். தலையிலெழுத்தேன்னு கொடுக்கறோம் டி.வி. பக்கத்துலே பாலுக்குப் பாத்திரம் வெச்சிருக்கேன். மத்தியானம் சைக்கிள்லே வருவான். மணியடிப்பான், தூங்கிடாதீங்க. போயிடுவான். வாசல் கதவை மூடியே வையுங்க. பகல்தானேன்னு பார்க்காதீங்க. தெரு வழியே பார்த்துக்கிட்டே போய் வேளை பார்த்து மாடி வழியா

உள்ளே இறங்கிடுவான். ராவரைக்கும் காத்திருப்பான்னு அவசியமில்லை. வகையான நேரம், பொழுது. நம்மைவிட அவனுக்குத் தெரியும்; இந்த வீட்டைக் கட்டி இதைக் காக்கற பாடு, இதன் மேலே கடன்பாடு, ரெண்டுபேரும் சம்பாரிச்சு, ஆயுசே பத்துமா தெரியல்லியே! சரி, வரேன். வீடு பத்ரம் பத்ரம்!"

பேசிக்கொண்டே இறங்கிப் போய்விட்டாள். கட்டிலில் ப்ரமை பிடித்தாற்போல உட்கார்ந்திருந்தார். தும்பை நீள மாக்கி மேயவிட்ட மாடுபோல், வீட்டுள் தன் சிறை நிலை முழுக்க உணரச் சற்று நேரமாயிற்று.

சாப்பிட்ட பின்—சாப்பாடா அது? குழம்பா ரஸமா அதுவே தெரியவில்லை. ஆறிப்போய் விறைத்த சோறு; யாருடைய எச்சில் தட்டோ? "பட்டணத்தில் இலை கிடைக் காது. கிடைத்தாலும் கட்டுப்படி ஆகாது." அவளுக்கா பேசத் தெரியாது? எச்சில் இட சாணம் காணோம்—தூங்க முயன்றார். தூக்கம் வரவில்லை. வீட்டைச் சுற்றிச் சுற்றி வளைய வந்தார்.

அமர்க்களமாத்தான் கட்டியிருக்கான். விசாலமா இரண்டு படுக்கையறைகள். பெரிய பட்டைவாசல் (அதான் ஹால்), சமையலறை, ஸ்னான அறை, கழிப்பு அறை. கீழே போல் மாடியிலும் படுக்கை அறைக்கு ஒரு கழிப்பு அறை, மொட்டை மாடியிலும் ஒரு கழிப்பறை. இது என்ன கழிப்பறை மோகமோ? தலையெழுத்து! அப்படி ஒரு உடம்புக்கு வந்துடுமா அல்லது சேஎம்பேறித்தனமா? அங்கங்கே வாஷ்பேஸின், தரைபூரா, கீழும் மேலும் மொஸாயிக். கால் வழுக்கி இடுப்பு சரிஞ்சதோ என் வயசுக்கு அவ்வளவுதான். சோபா செட்டுகள், விதவிதமான சௌகரியங்களில் நாற்காலிகள். இந்த நாளில் அசல் தேக்கு இவனுக்கு எப்படிக் கிடைச்சது, என்ன விலையிருக்கும்? உசிரையே கொடுத்திருக்கான் இல்லை. இவனை எப்படித்

தனியா சொல்றது அவளும்தான் கொடுத்திருக்காள். ரெண்டுபேருக்குமே நாலு ஸ்தானத்தில் சம்பளம்னு சொல்லக் கேள்வி. ஆனால், போறல்லே போறல்லே கடிதாசுக்குக் கடிதாசு புலம்பல். அப்பா பொடிமட்டைக்கு காசு கேட்டுடுவான்னு பயமோ என்னவோ?''

ஆமாம், இந்த மூணு பேருக்கு அதில் ஒண்ணு அரை டிக்கெட். இவ்வளவு பெரிய வீடு தேவைதானா? ஆனால், நான் கேக்க முடியுமா? "நான் சம்பாதிக்கறேன், நான் கடன் படறேன்" இந்த நாள் சித்தாந்தமே இப்படித்தானே யிருக்கு?

கிருஹப்ரவேசத்துக்கு நா போக முடியல்லே. வயல்லே நாத்துப் பிடுங்கற சமயம். அவள் போய் வந்தாள். வீட்டைப் புகழ்ந்து அவளுக்கும் மாளல்லே. ஆனால், அடுத்த நாளே வந்துட்டாள். ஏன் ஒரு வாரம் இருந்துட்டு வரதுதானேன்னு கேட்டதுக்குப் பிடி கொடுத்துப் பதில் சொல்லல்லே. நானும் அப்புறம் கேட்டுக்கல்லே. ஏன் கேக்கணும்? அவளுக்குத் தெரியாதா? அவளுக்கு என்ன தெரிஞ்சுதோ?

திடீரென்று தாங்கமுடியாத ஆயாசம் அழுத்திற்று. நின்ற இடத்திலேயே உட்கார்ந்துவிட்டார். இங்கே என்னால் தள்ள முடியுமோ? ஆனது ஆகட்டும், இன்னி ராத்திரியே ஊருக்குக் கிளம்பிடுவோமா? கையில் பணமில்லை. அவனைக் கேட்கவும் கூச்சமாயிருக்கு. ஆனால் பெட்டியில் அவ்வப்போ, சொக்காய் வேட்டி மடிப்புகளி னிடையே போட்டு வச்சதைப் பீறாய்ஞ்சால் டிக்கெட்டுக்குத் தேறலாம்.

ஆனால் அங்கே போய் என்ன பண்றது? இவாளே சுட்டிக்காட்டின மாதிரி ஒண்டியா எத்தனை நாள் பொங்கித் தின்ன முடியும்? மூணாம் வீட்டிலிருந்து அம்புப் பாட்டி யைத்தான் அழைக்கணும். அவளுக்கோ கை சுத்தம்

கிடையாது. வீட்டுள் நுழைஞ்சதுமே சுவாதீனமா சாமி அலமாரியிலிருந்து சாவிக் கொத்தை எடுத்து இடுப்பில் சொருகிண்டுடுவாள். "பின்ன என்ன வோய், எண்ணெய் எங்கேயிருக்கு. பருப்பு எங்கேயிருக்குன்னு ஒவ்வொண்ணுத் துக்கும் உம்மைக் கேட்டுண்டிருக்க முடியுமா? உம்ம சொத்து எனக்கு வேண்டாம் வோய். என் பிள்ளை சம்பாதிக்கிறான், ஆம்படையான் விட்டுட்டுப் போன பென்ஷன் வேற இருக்கு. யார் கையும் நான் எதிர்பார்க்க வேண்டாம். ஏதோ பாவம்னு வரேன்."

விஜி, என்னை வேடிக்கை பார்த்துட்டியேடி!

அவனோ நிலத்தை விக்க முஸ்தீபா நிக்கறான். "ஆத்துலே தண்ணியில்லே. பம்பு செட்டுலே காத்து ஊதறது. நாளுக்கு நாள் குத்தகைக்காரன் வெச்சது சட்டமா யிருக்கு. அவன் படி அளந்தால் உண்டு, இல்லாட்டா மண். வித்து உதறிட்டு வரதை விட்டுட்டு"ன்னு மொறு மொறுக் கறான். பெரியவாள் வெச்சுட்டுப் போன மண் ஹூம்... "நீங்க எப்படியானும் போங்கோ, என் பாகத்தைப் பிரிச் சுடுங்கோ"ன்னு ஒரு வார்த்தை சொல்லிட்டான்னா, என்னால் தாங்க முடியுமா? அப்புறம் அப்பன் புள்ளை என்ன இருக்கு?

வகையா மாட்டிண்டுட்டேன்.

யோசனையிலேயே அரைத் தூக்க மயக்கம். கதவுத் தட்டலில் கலைந்து எழுந்து திறந்தார்.

சிரித்தபடி, புத்தகப் பையை மார்போடு அணைத்த படி...செம்பா கோதுமைச் சிவப்பு. பசு நாக்குப் போல், அடைமயிர் நெற்றியில் சரிய... மேல் வரிசையில் ரெண்டு பல் காலி. அதுவே அவன் இளிப்புக்கு வசீகரத்தைக் கூட்டிற்று. ஒரு கையை நம்பிக்கையுடன் அவர் கையுள் வைத்தான்.

"டீ செய்துட்டீங்களா தாத்தா?"

உதட்டைப் பிதுக்கினார்.

“இன்னுமா செய்யல்லே, வாங்க செய்யலாம்.”

மறுபடியும் உதட்டைப் பிதுக்கினார்.

“நான் செய்யறேன். மம்மி செய்யறதைப் பார்த்திருக்கேன்.”

சமையலறைக்குப் போனதும் “ஒரு ஸஸ்பன்ஸ்” என்றான்.

சிரித்துக்கொண்டே புத்தகப் பையிலிருந்து ஒரு பொட்டலத்தை எடுத்து அவர் கையில் கொடுத்தான். மஸால் வடையின் ‘கம்’ அறையைத் தூக்கிற்று, குட்டி குட்டியா, பத்துப் பைஸா அகலத்தில். பசி வயிற்றைக் கிள்ளுவதும் அப்போத்தான் தெரிந்தது.

ஆவலுடன் பையன், வாயில் திணித்துக்கொண்டே, “இங்கேதான் சந்துலே வீட்டிலேயே சூடா செய்யறாங்க. இப்ப நம்ம டீ செய்யலாமா?”

“ஏன், அவள்தான் வரட்டுமே!”

“மம்மி வர ரொம்ப லேட் ஆவும். காலையிலிருந்து நீங்களும் ஒண்ணும் சாப்பிடல்லே, பசிக்கல்லியா? நிங்களுக்கு டீ வேணாமா? எனக்கு வேணுமே?”

ஆற்றில் அடித்துக்கொண்டு போறவனுக்கு கரையோரம் புல்பிடி. அவன் தலை அடவிக்குள் கையை நுழைத்து மயிரை உலுக்கினார். உள்ளே அலை பொங்கியது இத்தனைக்கும் இதற்குமுன் இவனைப் பார்த்ததில்லே. இப்படி அடியோடு ரீடம் புரள ஆச்சரியம் என்ன பய-ம்-ம்-மா இருந்தது.

“என்ன தாத்தா, என் கண், மூக்கு, வாய், மூஞ்சி மேலே விரலாட்டே எழுதறே?” சிரித்தான். “பொம்மை வரையறீங்களா?”

இருவரும், இரவில், கட்டிலில், பக்கத்தில் பக்கத்தில், முன் ரேழியில்.''

''இல்லை பையா, உன் முகம் அப்படியே உன் பாட்டி முகமாட்டம் இருக்கு.''

''பையன் எழுந்து உட்கார்ந்தான் ''ரொம்ப நாளிக்கு முன் இங்கே function நடந்திச்சே. அப்போ வந்தாங்களே, அவங்களா?''

''ஆமாம்''

குரலில் ஜாக்ரதையுடன், ''தாத்தா! மம்மி என்கிட்ட இப்போ சொல்லி அனுப்பிச்சி. நா, பாட்டி பத்தி நிங்களிடம் பேசக்கூடாதுன்னு.''

''ஏனாம்?''

''நிங்களுக்கு மனஸு கஸ்டமாயிடுமாம்.''

''பேரன் முதுகைத் தடவினார். ''நீ பேசலாம் பேசு.''

''என்ன தாத்தா நான் பேசமுடியும்? அவங்களைப்பத்தி எனக்கு என்ன தெரியும்? அடுத்த நாளே கிளம்பிட்டாங்க. என்ன சொல்லிச்சும் கேக்கில்லே. நீங்க ஊர்லே தனியா கஸ்டப்படுவிங்கன்னு சொல்லிப் போயிட்டாங்க.''

ஆம். இந்த அனாச்சாரம், இந்த அசுத்தம், இந்த பாஷை, அவள் அவனைப் பேரிட்டு அழைப்பது (''மிஸ்டர் பரத்வாஜ்'' அதென்ன, பரத்வாஜ்? அப்புறம்தானே புரிந்தது கோத்திரத்தைப் பெயராகவே அழைக்கிறாள். அவன் அவளை ''ஹனி'') துவைக்கற கல் இல்லை. வென்னீருள் குழாயடியிலேயே துணி குமுக்கல், எச்சில் துப்பல், சாப்பாட்டுத் தட்டுக்கள், பற்றுப் பாத்திரம் ஏகமயம்—அவளுக்கு அந்த ஒருநாள் கூத்தே சரிப்பட்டிருக் காது. அதனால்தான் அப்பவே திரும்பிட்டாள். என்கிட்ட காரணம் சொல்லியிருக்கலாம். ஆனால், ஏன் சொல்லணும்? நானும் கேக்கல்லே, ஏன் கேக்கணும்?

அவன் கை அவர் கையுள் புகுந்துகொண்டது.

"தாத்தா நீங்க பேசுங்களேன். பாட்டியைப் பத்தி."

வண்டு ஒன்று ஜன்னல் வழி உள்ளே நுழைந்து அறையைச் சுற்றிச் சுற்றிப் பறந்தது. அதன் ஒரே மூச்சுக் கூவல் விதவிதக் கோடுகளை இருளில் கிறுக்கிற்று. அதெப்படி இந்த வேளை? திசை தப்பிப் போச்சா?

இல்லை நீதானா?

"ஏறக்குறைய உன் வயசில், கார்த்திக், உன் வயசென்ன?"

"ஆறு."

"சரி, அவளுக்கு எட்டு இருக்கும். இந்த வீட்டுக்கு வந்தாள்.

"இந்த வீடா, என்ன தாத்தா, இது கட்டியே வருஷம் ஆவல்லே."

"இந்த வீடுன்னா இந்தக் குடும்பம்."

"Family?"

"ஆமாம், இந்தக் குடும்பத்துள் வந்தாள்."

"அப்படின்னா?"

"அப்படின்னா எனக்கும் அவளுக்கும் கல்யாணம்."

"கலியாணமா, அவ்வளவு சுருக்காகவா?" பையனுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. "நீங்க little boy. little girl!"

"ஆமாம் கார்த்திக். எங்கள் நாள் கலியாணங்கள் அப்படித்தான்."

நினைவின் ரேக்கு சுருள் கழன்றது. உள்ளூர கமகமத்தது. நாயன வித்துவான் மென்ற தாம்பூலம்போல்.

"சொக்காய், பாவாடையிலே, கதவு மூலையில், அது இல்லேன்னா தூணைக் கட்டிண்டு, அவளுடைய அப்பா அம்மா நினைப்பிலே ஏக்கமா நிப்பா. பார்க்கப் பாவமாயிருக்கும். ஆனால் நாங்கள் பேசமாட்டோம்."

"ஏன் தாத்தா?"

"வெக்கம். பெரியவங்களுக்கு மரியாதை."

"பேசினா respect குறைஞ்சுடுமா? நீங்க இப்படி சொல்றீங்க. போன மாஸம், சித்திக்கு—அதான் மம்மிஸ் ஸிஸ்டருக்கு மாரியேஜ் நடந்திச்சு. ரிஸெப்ஷன்போது அவங்க பாட்டுக்கு சோபாவுலே பேசி சிரிச்சுட்டுத்தானிருந்தாங்க, யாரும் கண்டுக்கல்லியே!"

கிழவர் முறுவலித்தார். "இது உங்கள் காலம்."

"அப்படி காலம் தனித்தனியா ஆயிடுமா?"

"சரி விடு அதை."

"சரி அப்பறம் என்ன ஆச்சி?"

"என்ன ஆச்சு, ஒண்ணும் ஆகல்லே. பெரியவா, பக்கத்து வீட்டு மனுஷா யார் வந்தாலும் எழுந்து நிக்கணும். பேசக்கூடாது. தோப்புக்கரணம் போட்டே கால் விட்டுப் போயிடும்."

"பாவம், I am sorry தாத்தா."

"அப்படி இப்படி இங்கேயும் அங்கேயுமா மூணு வருஷம் ஆச்சு. பிறந்த வீட்டுக்கு அழைச்சிண்டு போயிட்டா. அஞ்சு வருஷம் கழிச்சுத் திரும்பி வந்தாள்."

பையன் காத்திருந்தான். கிழவர் வேறு நினைவில் ஆழ்ந்துவிட்டார்.

சொக்காய், பாவாடை போய், இப்போது பாவாடை தாவணியில் அவளிடம் ஏதேதோ புதுப்புது அழகுகள் பெருகியிருந்தன. திடீரென பெரும் வித்யாசமாயிட்டா. அவள் தான்; ஆனால் அவளுமில்லை நெற்றியில் ஒரு சவால் வீசிற்று. காதண்டை வரை, விழியோரங்களில் கத்திப் பிடி போன்று கண் மையை ஏதோ ஒரு தினுசில் நீட்டித் திருகித் தீட்டியிருந்தது. விழிகளில் வாள்கள் மின்னின. விஜயாம்பிகே.

அவரிடமிருந்து புரண்ட கேவலில் அவரே மிரண்டு போனார்.

பையன் உஷாரானான். சமர்த்து, பாட்டி கதை மிச்சம் இனி இப்போ இல்லை. சமயம் பார்த்து அப்புறம்...

ஒருவருக்கொருவர் ஆதரவில் இருவரும் ஒருவருக்கொருவர் அவசியமாகிவிட்டனர். அவர்களிடையே தனி ரஹஸ்யங்கள், விழிப்பேச்சு, ஸங்கேதங்கள், குறும்புகள், பீறிடும் சிரிப்புகள், கும்மாளங்கள் கிளம்பின. கண்ணெதிரே தொங்கிப்போன செடி ஜலம் கண்டு, மீண்டும் பச்சைப் பிடித்து நிமிர்வதுபோல, இவருக்கும் முகம் தெளிந்தது.

முகம் தெளிந்ததே அன்றி பையன் உடல் பூஞ்சையாகத் தானிருந்தான். கேட்டால் கிழவர் வந்ததுக்குப் பின் அவன் இன்னும் இளைப்பாய்த்தான் காட்டினான். கொடுக்கும் ஊட்டமும், தனிச் சத்துக்களும் எங்கேதான் போயினவோ? அவ்வப்போது தொண்டையைக் கனைத்துக்கொண்டான். மார்பில் சலங்கை குலுங்கிற்று.

''ஏண்டா கார்த்திக், தொண்டையை அப்படி செய்துக்கறே?''

''செய்யணும்போல இருக்கு தாத்தா, செய்யறேன்.''

துளசி, ஆடாதோடை, சித்தரத்தைக் கஷாயம் என்று மருமகளிடம் பிரஸ்தாபித்ததும்...

''அப்பா, நீங்க இப்ப சொன்ன பேர்கள்கூட நாங்கள் கேட்டதில்லே. எங்களுக்கும் தெரியாது. என் அம்மா வீட்டிலேயும் தெரியாது. பாட்டி வைத்யம்னு சொல்லக் கேள்வி. அதோடு சரி. முணுக்குன்னா இங்கே டாக்டரிடம் போயிடுவோம். ஊசி, மாத்திரை, பில் ஏன் கேக்கறீங்க? வரவர சமாளிக்க முடியல்லே. ஆனால் எங்களுக்கு இப்படித் தான் பழக்கம். நீங்க சொல்றதுக்கெல்லாம் எங்களுக்கு நேரம் எங்கே? அவனுக்கு உடம்பு ஒண்ணுமில்லே. வைட்ட

மின் 'A', 'C', 'B' காம்ப்ளெக்ஸ், லிவர் எக்ஸ்ட்ராக்ட். இப்படிப் பேசுங்கோ, எங்களுக்குப் புரியும். ஆனால் உங்களுக்கு அந்தப் பாஷை தெரியாது" சிரித்தாள். "இதோ அலமாரியைப் பார்த்தீங்களா?" திறந்து காண்பித்தாள்.

"மருந்து ஷாப்பே நடக்குது. அப்படியும் இவன் இப்படியிருக்கான்னா, நாங்கள் என்ன செய்வோம்? நாளடைவில் சரியாப் போயிடுமின்னு விட்டுட வேண்டியதுதான். இந்த வீட்டையும் அதன் மேல் சுமையையும் நினைச்சா என்பாடே தூக்க மாத்திரையாயிருக்கு. இந்த நாள் Medical system யாரை விட்டது? வியாதியிருக்கணும்னு தேவையில்லை. ஆனால், மாத்திரைகளை முழுங்கியாவணும். உங்களுக்குச் சந்தேகமாயிருந்தால் உங்கள் பிள்ளையைக் கேளுங்க."

பிள்ளைக்கும், நாட்டுப்பெண்ணுக்குமிடையே கண் சிமிட்டலும் கள்ளச் சிரிப்பும் கிழவருக்குப் புரியவில்லை.

"அப்புறம் அப்பா, பையனுக்கு உடம்புக்கு வரதைச் சமாளிக்க light இருக்கணும். அவனுக்குச் சரியா பெரியவங்களும் சேர்ந்துக்கிட்டுப் பெரிசு பண்ணக்கூடாது. கொஞ்சம் ஸ்ட்ரிக்ட்டாத்தான் இருக்கணும். நீங்கள் செல்லம் கொடுத்து அவனுக்கு discipline குறைஞ்சு போச்சு."

கிழவர் திடுக்கிட்டார்: "என்ன பேசறே? என்ன செல்லம் கொடுத்தேன்? குழந்தைக்குச் செல்லம் கொடுக்காமல் அவனோடு மல்லா கொடுப்பா?"

"இல்லேப்பா, நீங்கள் வந்தப்புறம், அவனுக்குப் பாடங்கள்லே கவனம் குறைஞ்சுபோச்சு. இறங்கிட்டான். உங்களிடம் எனக்குச் சொல்லவும் முடியல்லே, உங்களுக்குச் சொன்னாலும் புரியாது. பள்ளிக்கூடத்துலே அட்மிஷன் ரிசர்வ் பண்ணிக்கிட்டு அப்புறம் குழந்தையைப் பெத்துக்கற காலம் இது."

இவளோடு என்ன பேச முடியும்? இந்த அளவுகூட அவர் பிள்ளையோடு பேசுவதில்லை.

ஒருசமயம் அவன் கார்த்திக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருந்தான். மிரட்டலும் அடியும்தான் இருந்தன. பாடம் இல்லை. பையன் மிரண்டு மிரண்டு விழிப்பதைக் காணச் சகிக்கவில்லை.

"என்னடா, குருவி தலையிலே பனங்கா போல அவன் மேல் எவ்வளவு பாடம் ஏத்துவே?"

"இது உங்களுக்குப் புரியாது."

மூர்க்கன். என்றுமே மட்டு மரியாதை கிடையாது. ஓரளவு ஒற்றுமையாக வாழவேணுமானால் தூரத்துப் பச்சையாயிருந்தால் பிழைச்சோம். அதுவும் போச்சு எனக்கு.

'விஜி' என்னைக் கொடுமை பண்ணிட்டேடி! உனக்கு நான் என்ன செஞ்சேன்!

வருவது அரைப் பரிட்சையா, வகுப்பு மாறும் பரிட்சையா? எப்போ வரது?

அப்பனும் ஆயியும் மாறி மாறி பையனைப் பிழிந்தெடுத்தார்கள்.

அம்மா இங்கிலீஷ் சொல்லிக் கொடுத்தாள். அப்பா கணக்கு.

பையன் அடி வாங்கியது அம்மாவிடம்தான். ஆனால், அப்பா பார்த்த பார்வை அடியினும் கொடுமையாயிருந்தது. பல்லைக் கடித்துக்கொண்டு கறுப்பு விழி நடுநடுங்க குழந்தை கருகித் தீய்ந்துவிடுவான் போல...

உண்மையே அதுதானோ? நாளுக்கு ஒரு இம்மியாக இளைத்துப் போய்க்கொண்டு—

அன்றொரு நாள் இரவு. அவருக்குக் கண்கள் சொருகிய சமயம். பையன் நேரே வந்து அவர் மார்பின் மேல் துவண்டு விழுந்ததும் திடுக்கென்ற முழு விழிப்பில் பதறிப்போனார்.

"என்னடா கண்ணா? இதுமாதிரி செல்லச் சொல் அவருக்கு வந்ததில்லை (பாட்டன் சொத்து இதுவரை உள்ளேயே புதைந்திருக்கும் போலும்!)

பதிலுக்கு 'லொக்கு லொக்கு' மார்பு மட்டும் கொதித்து முகம் வேர்த்துக் கொட்டியது.

பாவிகள் குழந்தையைப் பிழிஞ்சு எடுத்திருக்கா.

அவனோடு பேச்சுக் கொடுக்க வாய்க்கவில்லை. இருமல் குமுறிக் குமுங்கி, அமுங்கி ஒருவழியாக மூச்சு சீர்பட்டதும் தூக்கத்தில் ஆழ்ந்துபோனான். மார்பில் மூச்சின் மிதப் பைக் கவனித்தபடி, அவனைப் பார்த்துக்கொண்டிருந்தார். கொஞ்சநாளாவே பையனை அவரிடம் படுக்க விடுவ தில்லை. பரீக்ஷை நெருங்கிப் போச்சாம். "மலை மாதிரிப் பாடம் கிடக்குது. பையன் கவனிக்கமாட்டேன்கறான். முன்னெல்லாம் இப்படி இருந்ததில்லை."

தொட்டார். கன்னம் பூப்போல. அசல் சொக்காய்ப் பாவாடை விஜி. முதல் முதலாய் வீட்டுள் அடியெடுத்து வெச்ச விஜி.

விஜி கனவில் வரவேயில்லை. பேரன்தான் கண்கூடா இருக்கானே என்கிற எண்ணமோ என்னவோ?

"கார்த்திக்!"

அவரை எழுப்பிவிட்டதே அந்தக் கணீர்தான். கண்ணைத் திறந்தால், கிங்கரி நிக்கறா. பின்னாலேயே வந்து அவள் பின்னால் அவன்.

"இன்னிக்கு குழந்தை எழுந்திருக்கிற நிலையில் இல்லை. பித்த நாடி குதிரைக் கணக்கிலே பாயறது."

"நாடி! குதிரை!" அவர் ஏதோ பெரிய ஜோக் அடித்து விட்டமாதிரி, வாய்விட்டுக் கைகொட்டிச் சிரித்தான்.

பையன் எழவில்லை. அசதியில் அரைக்கண். இருவரும் பக்கத்தில் வந்து, பார்த்துவிட்டு ஏதோ கிசுமுசுத்துவிட்டு அவன்: "Alright இன்னிக்கு ஸ்கூல் வேணாம். ஆனால் எழுந்து படிக்கச் சொல்லுங்க. சாயந்திரம் வந்ததும் நான் ஹோம் ஒர்க் பார்ப்பேன். வா, ஹனி. நேரமாயிடிச்சு."

இருவரும் போய்விட்டனர். இன்று ஏனோ தினத்தை விட சுருக்கவே.

அவர்கள் போன சற்று நேரத்துக்கெல்லாம் பையன் எழுந்து உட்கார்ந்துவிட்டான். ஜுரம் இருந்தது. ஆனால், தணிவு. இன்னிக்குப் பள்ளிக்குப் போகவேண்டாம் என்றதே சஞ்சீவி மருந்து. சேதி கேட்டதுமே துடியாகிவிட்டான். அவிழ்த்துவிட்ட கன்றுக்குட்டி. அவனுடைய துள்ளலைக் கண்டு சிரிப்புக்கூட வந்தது. பாவம், இப்படியா பாடம் கட்டிப் போடும்? இரண்டு முறை துள்ளினான். மறுபடியும் ஓடிவந்து தாத்தா கழுத்தைக் கட்டிக்கொண்டான். உள்ளே பாறைகள் உருகின.

"ஏலே, கொஞ்சம் ரஸம் சாதம் சாப்பிடு, கரைச்சுத் தரேன்."

"ஒண்ணும் வேணாம் தாத்தா, பசியில்லை. வேணும்னா bread இருக்குது ஃப்ரிஜ்லே. இப்போ நீங்க எனக்குக் கதை சொல்லணும். கதை சொல்லி ரொம்ப நாளாச்சி."

கதை சொல்லி ஒரு விளையாட்டு. திரும்பி அவன் வகுப்பில் பாடம் கேட்ட கதை கேட்டு—அது ஒரு விளையாட்டு.

"செஸ் ஆடுவிங்களா தாத்தா?"

"'செஸ் தெரியாது. பதினெட்டாம் புள்ளி தெரியும்.'" ஆனால், அதைச் சொல்லிக் கொடுத்து, நாலாவது ஆட்டத்திலேயே பேரன் தாத்தாவை மடக்கிவிட்டான். கிழவருக்கு ரோசம் வந்துவிட்டது. முகத்தை மேல் துண்டால் துடைத்துக்கொண்டு முஸ்தீப்பாக முனைந்தார். மறுபடியும் 'செக்.' உண்மை எப்படியானும் இருக்கட்டும். நானே விட்டுக் கொடுத்ததாவே இருக்கட்டுமே. இவன் முகத்தில் கலர் பார்க்கவே—பார்த்துக்கொண்டேயிருக்கலாம்.

பிறகு இருவரும் தூங்கிப்போயினர்.

அவருக்கு விழிப்பு வந்தபோது, பையன் பக்கத்தில் இல்லே. உடனேயே பால் மணி அடித்தது. பால் வாங்கப் போனார்.

டீ போட்டார். பையனைக் கூப்பிட்டார்.

யோசனையாக மாடியிலிருந்து இறங்கி வந்தான். சொரத்தாயில்லை. ஆனால், அவரும் வேணுமென்றே கண்டு கொள்ளவில்லை. இந்தப் பூஞ்சை உடம்புக்கு இதுவரை உற்சாகமே அசதிதான். தவிர, பாடம்தான் மோடம் போடுகிறதே! அவர்கள் வருவதற்குள் வீட்டுக் கணக்கு செய்தாகணுமே!

ஆனால், கணக்குப் போடுவதாகப் பாசாங்குதான் பண்ணினான். அப்புறம் ஏதோ ஏடுகளைப் புரட்டினான். ஊஹூம். சரியில்லை. அவர்களை எதிர்பார்த்து அவருக்கே பயமாயிருந்தது.

"ஏண்டா ஒரு மாதிரியா?"

"ஒண்ணுமில்லே தாத்தா."

அவர்கள் வந்தபோது—சேர்ந்து வந்தார்கள்—சேர்ந்துதான் மாடிக்குப் போனார்கள். பையன் மாடியடி வளைவில் ஒரு புத்தகத்துடன் உட்கார்ந்திருந்தான். சுற்றி, புத்தகங்கள் சிதறிக் கிடந்தன. படிப்பதாகத் தோன்றவில்லை. எதையோ எதிர்பார்த்து ஒளிந்துகொண்டிருந்தான் என்று தோன்றியது.

அதுவும் உடனேயே வந்துவிட்டது.

"கார்த்திக்!"

நிமிஷமாக வதங்கித் தள்ளாடித் தள்ளாடி மேலே போனான். கால்கள் இழுத்துச் சென்றன. கிழவர் மாடியடியில் காத்திருந்தார். உடனேயே அடி—படபட—உடனேயே அலறல்.

"இனிமே மாட்டேன் டாடி—இல்லே மம்மி—இல்லே டாடி."

ஒரு பாடத்துக்கா குழந்தையைக் கொலை பண்ணுகிறார்கள் பாவிகள்! சீற்றம் பொங்கிற்று. திடுதிடுமென மேலே ஓடினார். மாறிமாறி இருவரும் மொத்த பையன் இடையில் மாட்டிக்கொண்டிருந்தான். ஓடி அவனைப் பொத்திக்கொண்டார். அவர்மேல் ஒரு அடி விழுந்தது. வேணுமென்றல்ல. அடி வேகம்.

Stop it!" அவர் குரல் 'க்றீச்'சிட்டது. அப்பத்தான் அடங்கினார்கள். அவனுக்கு மூச்சு இரைத்தது.

சீறினார், "மிருகங்களா!"

"Look at that!" கோபம் வந்தால் ஐயா இங்கிலீஷில் தான் கொப்புளிப்பார்.

அவன் விரல் சுட்டிய வழி, சுவரில் பென்சிலில். ஒரு கிறுக்கல், வட்டமாய், முறுக்கு தினுசில், கலியாண 'சைஸில்,'

அவருக்குச் சிரிக்க நேரமில்லே. பையன் 'மடே'ரென்று கீழே விழுந்துவிட்டான்.

"இந்தப் புத்தி இவனுக்கு வந்ததே உங்களால்தான். "சீறினான்." நீங்க வந்திங்க, பையன் ரொம்ப Spoil ஆயிட்டான். ஹனி, இனி இவங்க ரெண்டுபேரையும் ஒண்ணு சேர்க்காதே. அப்புறம் நான் ரொம்பக் கெட்டவனாயிடுவேன்."

தரதரவென்று பையனை இழுத்துக்கொண்டு கீழே போய்விட்டாள். அவன் பின்தொடர்ந்தான்.

அவர்கள் மீண்டும் மேலே வந்தபோது கிழவர் நின்ற விடத்திலேயே நின்றுகொண்டிருந்தார். மாறி மாறி நெற்றிப் பொட்டைத் தேய்த்துக்கொண்டு, தலையைத் தடவிக்கொண்டிருந்தார். அந்த சேட்டை அவர் பிள்ளைக்குச் சிரிப்புக்கூட வந்துவிட்டது.

"பாரேன் ஹனி இதை! எப்படி முழிக்கிறார் பாரேன்!"

மறுநாள், பையனைத் தங்களுடன் அழைத்துக்கொண்டு போய்விட்டனர். கார்த்திக் அவரைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. பயம்?

அவர்கள் வீடு திரும்பும்போது நேரமாகிவிட்டது.

"என்ன அக்ரமம்! கதவைத் தாளிட்டுக்கக்கூடயில்லே!"

உள்ளே சென்றால் அவர், அவர் இடத்தில் இல்லை. சாப்பாட்டுக் காரியர், தண்ணீர்ச் சொம்பு, ஃப்ளாஸ்க் எல்லாம் வைத்த இடம் கலையாமல் இருந்தன. சாப்பிடல்லியா?

"அப்பா!"

மாடியேறிப் போனார்கள்.

எல்லா விளக்குகளையும் போட்டு மாடி ஹால் பகலாய் எரிந்தது. மாடியேறினதுமே எதிர்ச்சுவரிலிருந்து பென்சிலில் ஒரு பெரிய பையன் முகம்—அல்ல முகம் மாதிரி ஒரு பாவனை கலைந்த தலையுடன் அவர்களைப் பார்த்து சிரித்தது! பலகை பலகையாய்ப் பற்கள். காதுக்குக் காது முகத்தையே அடைத்த சிரிப்பு. ஒட்டிப்போன கன்னங்கள்.

கிழவர் தோரணையாகக் கையை மற்ற சுவர்களுக்கும் வீசினார்.

பெரிய பெரிய முறுக்குகள் கலியாண சைஸ், கோடுகள், முட்கள், கிறுக்கல்கள், அனேகமாய்க் கிறுக்கல்தான். பென்சிலில், கலர்ப் பென்சிலில், கார்த்திக்கின் கலர்ப் பென்சில் பெட்டி காலி. கீழே, பென்சில் சீவல்களும் ப்ளேடும் கிடந்தன. ஒரு இடத்தில் கறுப்பு மசியைக் கூடி லிருந்து அப்படியே வீசியிருந்தது.

இருவரும் முகத்தைப் பொத்திக்கொண்டனர்.

கிழவர் இன்னமும் கோடுகள் கிறுக்கிக்கொண் டிருந்தார்.

—சுபமங்களா

# பரிவட்டம்

அவன் கைகள் உரம் மிகுந்த கைகள், அதுவும் முழங் கையிலிருந்து விரல்நுனி வரை நல்ல வலிவு. தறியில் உட்கார்ந்து நாடாவை ஒட்டி ஒட்டி நரம்புகள் கெட்டிப் பட்டுப்போன கைகள். ஒரோரு சமயம் வெகு வேகமாய் நெய்யும்பொழுது புஜங்களில் நரம்பு முடிச்சு பந்துபோல் எழுந்து அமுங்குவதும், கண்ணவிந்து திக்குத் தெரியாமல் தவிக்கும் எலிபோல், மூலைக்கு மூலை, நாடா முன்னும் பின்னும் ஓடுவதும் வேடிக்கையாயிருக்கும்!

ஒரு நாளைக்கு ஒரு பீஸ் (14 முழங்கள்).

"அந்தப் பையனுக்கென்ன குறைச்சல்? அவன் தறியி லிருந்து தினம் ஒரு பீஸ் எகிறுது! புளைக்கிற பையன்! சும்மாவா மளிகை வீட்டுப் பெண்ணைக் கட்டினாக!—"

அவனுக்குக் கலியாணமான புதிதில் ஊரெல்லாம் இதுதான் பேச்சு. ஊருக்கே ஒரு மளிகை. கொஞ்சம் சொத் துள்ள இடத்திலிருந்து பெண் வந்தால் பேச்சில்லாமல் இருக்குமா?

பெரிய இடத்துப் பெண்ணென்று வீட்டு வேலையில் அவள் ஒன்றும் சோடையாயில்லை. அவன் தாய் தாழ்வாரத் தில் உட்கார்ந்து நூலை இழைத்துக்கொண்டே, பானையை யும் சட்டியையும் எடுத்துச் சமையலறையில் நடமாடிக்

கொண்டிருக்கும் மருமகளுக்கு சமையலின் பக்குவத்தைப் பற்றி அரற்றிக்கொண்டேயிருப்பாள். ''உப்பு போட்டியா? புளியைப் போட்டியா? நல்லா கொதிக்க வை...''

சமையல் என்னவோ உருப்படியாய் இரவு ஒருவேளை தான். அதுவும் கார்த்திகை மார்கழியில் பகலில் சமைக்கக் கூட நேரமிருக்காது. வேலை அவ்வளவு மும்முரம், அடுத் தாற்போல் பொங்கல் வருகிறதல்லவா?

''பையனுக்கு வென்னீர் விளாவினையா?''

இரவில் கிணற்றடியில், கொதிக்கும் வென்னீரில் உடலின் வலி தீரக் குளித்துவிட்டு, நடுமுற்றத்தில் நிலவின் வெளிச்சத்தில் வெண்கலக் கிண்ணத்துக்கெதிரில் தாயும் மகனும் உட்கார்ந்து மருமகள், சோற்றை ஆவி பறக்க வடித்து, எள்ளுத் துவையலும் ரஸமும் பரிமாறுகையில், ஆஹா! ''வெத்தல் வறுக்கச் சொன்னேனே, வறுத்தியா? மறந்துட்டியா? வறுத்திருக்கையா? பின்னே ஏன் சும்மா வெச்சிருக்கே கொண்டுவந்து வை. கொழந்தே நல்லா யிருக்கா?''

பின்னே எப்படியிருக்குமாம்?

அறையில் பாவு நூல் அடியில் படுத்துக்கொண்டு அரைத் தூக்கத்தில் கண்ணயருகையில், கனவு காண்பதுபோல் வெளிச்சத்தங்கள் காதில் விழும்.

''மாட்டுக்குத் தவிடு வெச்சியா? கண்ணுக்குட்டியைத் தனியாக் கட்டினையா? நேத்தி ராத்திரி நீ கட்டின லட்சணம் இன்னிக் காலையிலே கறக்கப்போனால் தாயும் கண்ணும் துள்ளி விளையாடுது, காலையிலே நம்ப பாவு நூல் ஒடுது போல இருக்குதே, கஞ்சி காய்ச்சினையா? சரி நேரமாச்சு, போய்ப் படு. பாலை எடுத்துக்கோ—அம்மாடி...''

கிழவி தன் உடலை விசுப்பலகையில் நீட்டுகையில் பலகை நொடிக்கும்.

அடுத்த சில நிமிடங்களுக்கெல்லாம் அறைக் கதவு மெதுவாய்த் திறந்து மூடும். 'கீறீச்' சீடும்.

அரிதான பளுவுகளைத் தூக்கியும், உடலைக் "கசிர்" வாங்கும் காரியங்களை அனாயாசமாய்ச் செய்யும் அவன் கைகள், அவள் உடலின் மிருதுவைத் தொடக்கூட அஞ்சும். பகலில், வீட்டுக்கும் தொழிலிலும் மன்னனவன் இரவில், இவ்வோலைப் பாயில், மஞ்சளின் மணம் கமழும் அவள் அருகாமையில் தன்னையிழந்து போவது அவனுக்கே ஆச்சரியமாயிருக்கும். அவன் அணைப்பின் வேகத்தில், அவள் கூந்தல் சரிந்து அவன் தோள்மேல் விழும். பலகணி வழி நிலவொளியில், இடையில் நெகிழ்ந்த ஆடையுடன் பற்கள் தெரிய, மௌனச் சிரிப்பு அவள் சிரிக்கையில் அவன் மண்டை கிறுகிறுக்கும். அவன் கைகள் நிறைந்த அவள் ஆலிங்கனத்தில் குளித்துவிட்டு, அவளை அணைத்த கையுடன், மல்லாந்து படுத்து, அவர்களிருவர் மேலும் பரவி யிருக்கும் பாவுநூலைச் சிந்திக்கையில், அது ஒரு 'குளிர்தரு நிழல்போல் அவனுக்குப் படும். அவர்கள் ஜீவனமே அதன் குடை கீழ்தான். விழித்தெழுவதும் அதன் கீழே, உழைப் பதும், உண்டு உடுப்பதும் அதனாலே, படுப்பதும், பரம்பரை வளர்வதும் அதன்கீழே. அவனேதான் அவன் தொழில். அவன் தொழிலேதான் அவன்.

அவர்களிருவரும் அதிகமாய்ப் பேசின ஞாபகம் அவனுக் கில்லை. அவர்கள் தொழிலிலேயே பேச்சுக்கு அதிக இட மில்லை. பேச்சில் கவனம் போனால், எந்த சமயம் எந்த இழை எப்படி அறுமோ? மத்தியானம், மாமியாரும் மருமகளும் எதிரும் புதிருமாய் உட்கார்ந்துகொண்டு நூல் நூற்பார்கள். மடியில் வைத்திருக்கும் கொட்டாங்கச்சியில் பரிவட்டம் கூத்தாடும். பாவில் குறுக்கே பாயும் கலர் நூலும் வெள்ளை நூலும், நாடாவுக்குத் திட்டமாய்க் கட்டைகளில் ஏற்றியாக வேண்டும். இடையிடையில் வீட்டு அலுவல்கள் காத்திருக்கும். சாப்பாட்டுக்கு நெல் புழுக்-

கணும்; பண்ணையாளுக்குக் கூழ் வார்க்கணும். சாயங்காலம் பரிவட்டத்தைத் தூக்கிக்கொண்டு, பாவுநூல் ஓடும் ஆலைக்குப் போகணும்.

இழைக்கு இழை நிமிட்டி நெய்தாகணும், இழைக்கு இழை.

இதற்குள் இரவு மறுபடியும் எட்டிப் பார்க்க ஆரம்பித்து விடும்.

ஆசை வெறியில் ஒருவர் அணைப்பில் ஒருவர் திணறும் மூச்சுத்தான் அவர்கள் பேச்சு.

கிழவி விசுப்பலகையில் படுத்தவண்ணம் முனகுவாள்.

''அடுப்பைப் பார்த்து மூட்டு. உள்ளே பூனைக்குட்டி தூங்கிக்கிட்டிருக்கப் போவுது; என்னிக்கோ, இந்த வீட்டுக்கு வந்த பெண்ணு ஒண்ணு பார்க்காமே மூட்டிப் பிட்டு, ஒரு குட்டியைப் பொசுக்கித்தான் இப்போ மூணு தலைமுறையா வீட்டுக்கு ஒரே புள்ளையா நிக்கிது. எனக்குப் பாடை கட்டி சங்கூதினப்பறந்தான் பேரப்பிள்ளை வீட்டிலே நடமாடுவான் போலத் தோணுது. மருமவள் வீட்டுக்கு வந்து ஆறுமாதமாச்சு. இன்னும் ஒண்ணுந் தெரியல்லே...!''

கிழவியின் நெஞ்சுக் குறையைப்பற்றி அவர்களுக்குக் கவலையில்லை. அதைத் தீர்ப்பதும் அவர்கள் வசமில்லை. அதெல்லாம் முருகன் அருள். இப்பொழுதைக்கு ஒருவரில் ஒருவர் முழுகியிருந்தனர். அவ்வளவுதான். நெய்ய நெய்ய இடங் கொடுக்கும் பாவுநூல் போல், ஒருவர் இன்பத்தை ஒருவர் நுகர நுகர, அவர்கள் ஆசை இடங்கொடுத்துக் கொண்டே போயிற்று. உடலில் இளமையிருக்கும் வரை அவை தளும்பிக்கொண்டிருக்குமேயொழிய துடிப்பற்று நின்றுகொண்டிருக்குமா?

நாளடைவில், அவனையுமறியாமல் அவளிடம் அவன் விழைந்துபோவதாகத் தோன்றிற்று. அவன் வைத்திருக்கும் ஆசையின் உணர்வே அவளுக்கு ஒரு தனி சோபையை

அளித்தது. கண்ணெதிரில் புது மோஸ்தரில் கட்டான்களுடன் சிக்கலான வர்ணப் பாய்ச்சல்களுடன் உருவாகிக் கொண்டிருக்கும் துணிபோலும், அவளிடம் ஒரு தனி அழகு உருவாகிக்கொண்டிருப்பதை அவன் கண்டான். மேனியில் ஒரு தளதளப்பு. பார்வையில் ஒரு வெற்றி. பணியில் ஒரு சிறு தாமதம். பகலிலோ, இரவிலோ பரிமாறுகையிலோ, தறியிலிருக்கையில், தாகத்திற்கு, சாதத் தண்ணீர் கொண்டுவந்து தருகையிலோ, ஓரக்கண்ணால் அவளைக் கவனியாமல் அவனால் இருக்க முடியவில்லை.

பகலெல்லாம் ஏன் இரவாயில்லை?

அவள் எதிரில் அவள் உலவாத சமயத்தில் அவள் உரு அவன் கண்முன் எழும். நெற்றியில் வியர்வை கட்டும். இடையில் நெகிழ்ந்த ஆடையும், பல்வரிசைப் பளீர் அடிக்கும் மௌனச் சிரிப்பும் அவிழ்ந்து சரிந்த கூந்தலும்...

மனமயக்கத்திலிருந்து அவன் தன்னை உதறிக்கொண்டு வேலையில் முனைகையில், நாடா முன்னும் பின்னும் பறக்கும்.

"பையா இறங்குடா—விளக்கு வெச்சுப் போச்சு—பிள்ளையார் கோவிலுக்கு விளக்குப் போட்டுட்டுவரணுமே!"

"இரு அம்மா, இன்னும் ஒரு முழந்தான்."

அம்மாதம் மொத்தம் முப்பத்தைந்து பீஸ் அறுத்தான். தறியில் புதுப் பாவு பூட்டணும்.

தறியிலிருந்து இறங்குகையிலேயே விளக்கு வைத்தாகி விட்டது. வேலையோடு வேலையாய் இன்னிக்கே பூட்டி விட்டால், நாளைக்குப் பூட்டும் நேரத்துக்கு ஒண்ணு, ரெண்டு முழம் நெய்யலாம். ஒரு முழம் என்றால் ஒரு முழம். ஒருநிமிஷம்தான் சொல்லு. அதுக்குள்ளே நாடா இரண்டு தடவை குறுக்கே போயிட்டு வருமே!.

அவர்கள் தொழிலில் அடுத்தடுத்துச் செய்யவேண்டிய வற்றைச் சொல்லாமலே அறிந்து செய்வது, அத்தொழிலின் இயல்புடனேயே இழைந்தது. இழையிலிருந்து துணியாகும் ஒவ்வொரு கட்டத்துக்கும் சொல்லிச் செய்வதென்றால் கட்டாது. தாயும் பிள்ளையுமாயோ, புருஷனும் மனைவி யாகவோ, இருவரும் சேர்ந்து ஒருருவாக்கும் துணிதான் அது. நெய்யுந் தொழிலுக்கு நிகரில்லை.

பையன் புதுப்பாவு பூட்டப் போகிறான் என்று கிழவி சொல்லாமலே அறிந்தாள். ஒத்தாசைக்கு மருமகளைச் சமையலறையிலிருந்து அனுப்பினாள். அடுப்பில் குழம்பு காய்ந்துகொண்டிருந்தது.

கையில் தகரவிளக்கைப் பிடித்துக்கொண்டு, உயரத்தில் பாவு நூலை அவள் புருஷன் மாட்டுவதைப் பார்த்துக் கொண்டு நின்றாள். வெளிச்சம் அவள் முகத்தையும் மார்பை மூடிய சிவப்புப் புடவையை மாத்திரம் ஏற்றியது. மைதீட்டிய விழிகள், மிருதுவான கன்னங்களுக்கு மேல் ஜ்வலித்தன. மோவாயின் குண்டு, விக்கிரஹத்துக்குச் செதுக் கினாற்போலிருந்தது. குழந்தைச் சிரிப்பில் இரண்டு பற்கள் மாத்திரம் வெளித் தெரிந்தன. ஒருகணம், கண்ணுக்குக் கண்வாள்போல் ஜ்வலித்தன. அதன் காரணந்தானோ என்னவோ கையில் ஏந்திய விளக்கு நூல் பக்கமாய்க் கொஞ்சம் சாய்ந்தது. சரசரவென்று நூல் பற்றிக் கொண்டது. இழைக்கு இழை அதிவேகமாய்ப் பொசுங்கியது இழைக்கு இழை உயிரைவிட்டுக்கொண்டு நிமிட்டிய இழை. தோளிலிருந்து பாவு நூல் தடாலென்று கீழே விழுந்தது. அவன் மனத்தில் எழுந்த குமுறலில் என்ன செய்தான் என்று அவனுக்கே புரியவில்லை. தன்னையே கொளுத்தினது போலிருந்தது. பளீர்! அவள் கன்னத்தில் அவன் அறைந்த தாக, அறைந்த பின்னர்தான் அறிந்தான். விளக்கு அணைந்து கீழே உருண்டது!

அவன் அடித்த அடியில் அவள் திகைத்துவிட்டாள். வலியைவிடத் திகைப்பு. திகைப்பைவிடக் கோபம். அவள் ஒன்றுமே பேசவில்லை. அறைந்த கன்னத்தைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு, அவ்விடம் விட்டு அகன்றாள். வாசற்கதவு தடாலென்று மூடியது.

நடந்ததெல்லாம் நொடிப்பொழுதில்தான். சொல்லத்தான் இன்னேரம்.

சந்தடி கேட்டு, கிழவி சமையலறையிலிருந்து ஓடி வந்தாள். "என்னடா பையா ஒரே இருட்டாயிருக்குது?"

இருளிலிருந்து அவன் குரல் சீறிக்கொண்டு வந்தது. "உன் மருமவளைக் கேளு—"

"எங்கே அவள்?"

"வாசல் பக்கமாப் போனா—பாவை எரிச்சுட்டு—"

"என்ன?"

கிழவி உடலில் பாய்ந்த வீரத்திலும், கோபத்துடன் தெருவைப் பார்க்க நடந்த வேகத்திலும், அவள் வயதில் பத்தேனும் குறைந்திருக்கும். ஆனால் அவள் போன சுருக்கைவிட திரும்ப ஓடிவந்த சுருக்குத்தான் அதிகமாயிருந்தது.

"வாசல்லே காணமேடா பையா!"

கோபத்தில் அவன் உடல் வியர்த்தது.

"வெள்ளிக்கிழமையும் அதுவுமா பாவு நூலை எரிச்சுட்டு வீட்டை விட்டும் வெளியே போயிட்டாளா?"

துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு வெளியில் கிளம்பினான்.

"என்னான்னு நெனிச்சிட்டிருக்கா, இதென்ன மான ஈனம் ஒன்னும் கிடையாதா? ராத்திரி வேளையிலே போட்டதை அப்படியே போட்டபடி போட்டுட்டு நடையைக் கட்டினாளே! இந்த அக்கிரமம் கண்டதுண்டா, கேட்டதுண்டா!" என்று கிழவி ஆற்றிக் கொண்டேயிருந்தாள்.

வாசற் கதவைத் திறந்துகொண்டு அவள் பிள்ளை வரும் சப்தம் கேட்டது. தனியாய்த்தான் வந்தான். விசுப் பலகையில் உட்காருகையிலேயே அவன் மனச்சோர்வு வெளிப்பட்டது. கோபத்தில் மூகத்தில் கறு ரத்தம் குழம்பியிருந்தது.

''எங்கேடா போனே?''

''அவங்க வீட்டுக்கு—''

''ஏண்டா போனே, போன சிறுக்கித் தானா வரா ள். பெரிய இடத்துப் பெண்ணாயிருந்தால் என்ன பெண்டாட்டியென்பதை மறந்துட்டாளா?''

''பெண்ணின் சமத்து அவங்களுக்குத் தெரியவேண்டாமா, என்று சொல்லத்தான் போனேன்.''

''சொன்னியே என்னவாம்?''

''அவங்க பெண்ணை விடமாட்டாங்களாம். அவங்க பெண் வீட்டு வேலை செய்யவேண்டிய அவசியமேயில்லையாம். நம்ம மாதிரி நாலு தறி கூலிக்குப் போட்டு வேலை வாங்க தெம்பு இருக்குதாம்—''

''என்ன, என்ன! பெண்ணின் சமத்துக்கு மேலேன்னா, இருக்குது அவங்க சமத்து?''

'என்னம்மா, அவங்களா பேசறாங்க, பணத்திமிர்ன்னா அப்படிப் பேச வைக்குது. பெண்ணைக் கொடுத்துட்டா, மருமவனை விலைக்கு வாங்கிட்டதா நெனைச்சுருக்காங்க போல இருக்குது. மேலே வேலையை ஓட்டு—''

வேலையை ஓட்டு என்று சொல்லிவிடலாம். ஆனால்...

அவன் தாய் சமயலறையில் குழம்பைக் கிளறிக் கொண்டே காத்துக்கொண்டிருந்தாள். அவள் வயிற்றின் கொதிப்பை அவன் நன்றாய் அறிய முடியும். ஆயினும் அதைவிட அவன் தனிமைதான் அவனை உறுத்திற்று. சோறு, நாக்கு நுனியில் விஷமாய் மாறிற்று.

இன்று அவன் படுக்கையில், பாவு நூல் குடைபோல் அவன்மேல் படர்ந்து இல்லை. ஒரு பாதி எரிந்து, நூல்கள் அறுந்துபோய் ஒரு மூலையில் கிடந்தது.

தூக்கமற்று, முன்னும் பின்னுமாய்ப் புரளுகையில், அவன் கைகள் உயிரற்று வெறும் பாயில் விழுந்தன.

இந்தப் பாழும் பொழுதுதான் விடியுமா?

அவன் தாய் முக்கி முனகிக்கொண்டு எழுந்து வாசலில் சாணித் தெளிக்கிறாள்; வயது காலத்தில்...

ஆயினும் அவர்கள் தொழிலில் வயதுக்காரர் வயதானவர் எல்லோருக்கும் வேலை உண்டு. சும்மாயிருக்க முடியாது. இளமையிலிருந்து மூப்புவரை அவர்கள் வாழ்க்கையே, இழைக்கு இழை பின்னி நெய்த துணிபோலவே தான். மூச்சுக்கு மூச்சு இழை. இழைக்கு இழை மூச்சு.

ஆயினும், இப்பொழுது அவன் மனைவி வீட்டை விட்டு வெளியேறியதிலிருந்து ஏதோ கைக்கடங்காத நாடாபோல், இளமையின் விகாரங்கள் அவன் மனதில் கட்டுக்கடங்காத கட்டான்களை விழைத்தன. கட்டை விரலும் சுட்டு விரலும் இழையை நிமிட்டிக் கொண்டிருக்கையிலேயே திடீரென்று அவைகளின் செயல் நின்றுவிடும். மனக்கண்ணெதிரில் அவள் உரு எழும். உட்செவியில், அவன் அணைப்பில், ஆசை வெறியில் அவள் திணறும் மூச்சின் ஓசை. உள் வாசனையில் மனத்தை மயக்கும் அவள் உடல் நாற்றம்...

"அடே கொழந்தே என்னடா அப்படியே கல்லா சமைஞ்சுட்டே? துணியை எடுத்துக்கிட்டு போக வேணாமாடா..."

இப்பொழுது அவன் மாமனார் கடையில் நெய்த துணியைப் போடுவதற்கில்லை. வாரா வாரம் மூணு மைல் நடந்து பக்கத்து ஊருக்குப்போய் விற்றுவிட்டு நூலை வாங்கி வரணும், போகிற வழியிலும் வருகிற வழியிலும் அவனைக்

கண்ணாலும் கையாலும் சுட்டிக்காட்டி, குசுகுசுவென்று பேசுபவர் எத்தனைபேர்! வாயைத் திறந்து அவனை ஏசுபவர் எவருமில்லை. ஊருக்கே அவன் வேண்டியவன் தவிர, அவனை ஏச என்ன இருக்கிறது?

அவனிடம் கொண்டு கொடுத்து சம்பந்தம் பண்ணின வரை தூற்றத் தைரியமுள்ளவருமில்லை. அநேகமாய் எல்லோருமே கூலிக்கு நெய்பவர்கள்தான். ஊரில் முக்கால் வாசித் தறிகள் அவன் மாமனாருக்குச் சொந்தம். ஏறத் தாழப் பேசினால், அல்லது பேசினதாய்க் காதில் விழுந்தால், வாயில் மண்தான். இந்தப் பணம் பண்ணும் வேலைதான் என்ன? பணம் ஒரு தினுசில் மனிதனை முறியடிக்கிறது. பாசம் ஒரு தினுசினால் முறியடிக்கிறது.

இப்பவும் அவளை மறக்க, வேலையில் மும்முரமாய் விழுந்து நெய்துகொண்டே போகையில் அவள் செய்த செய்கையும், வீட்டை விட்டுப்போன விதத்தையும் நினைக் கையில், நெஞ்சில் மூண்டெழும் சினம், அவன் உடலிலும் மனத்திலும் ஒரு பரவசத்தை எழுப்பி வெகு நாழிகை அவனை வேலையில் நிறுத்தி வைக்கும்.

கோபம், குரோதம் இவையெல்லாம் கெட்ட உணர்ச்சி களாயிருக்கலாம். ஆயினும் அவை உடலுக்கும் மனதிற்கும் ஒரு தினுசில் தீவிரத்தைக் கொடுக்கின்றன. "அப்படியா செய்தி? எத்தனை நாள் இப்படியே இருக்கப் போகிறாள் பார்த்துடுவோம். ஒரு பெண் பிள்ளைக்கு இவ்வளவு திமிரா, அவள் செய்த காரியத்துக்கு?"

"ஆனால் அப்படி என்ன செஞ்சுப்பிட்டா?" ஒரு சிறு கேள்வி, அடுத்தாற்போலேயே, காலடியில் மண்ணைப் பறிப்பதுபோல் எழுந்து, கோபத்தையும் ரோஸத்தையும் கிளப்பிக்கொண்டு திடம் பண்ணிக்கொள்ளும் சித்தத்தைக் கலைத்தது. அன்பும், பிரிவாற்றாமையும் பழைய நினைவு களும் சஹிக்க முடியாத வேதனைகள்...

இரவு எப்பொழுது வரும்?

வந்தால், பொழுது எப்பொழுது விடியும்?

இப்படித்தான், நாளுக்கு நாள், இரவுக்கு இரவு, வாரம் மாதம்...

அவன் அத்தெருப் பக்கம்கூடப் போவதில்லை. ஆயினும் அவ்வீட்டார் அவன் தாயையும், அவனையும் தூற்றும் வார்த்தைகள் மாத்திரம் காதில் படாமல் போகிறதா? அத்துடன் இல்லை. அவ்வார்த்தைகள் முதலில் கிளம்பினது எப்படியோ, வாய்க்கு வாய் மாறி அவன் செவிக்கெட்டுமுன், மூக்குமுழியெல்லாம் அவைகளுக்கு ஏற்பட்டு, ராக்ஷஸப் பிண்டங்களாய்த்தான் வருகின்றன.

"வீட்டுக்கு வந்த பெண்ணை, அந்தக் கிழவி அப்படிப் படுத்தினாளாம், இப்படிப் படுத்தினாளாம்; பெண் தூக்குப் போட்டுக்கக்கூட இருந்ததாம். அந்தப் பையன் அப்படி சம்பாரிக்கிறான்னு பேரு. ஒரு வெள்ளிக்கிழமை வந்தால், அவன் பெண்சாதிக்குன்னு ஒரு காலணா பூ வாங்கி வந்தான்னு உண்டா? அவன் கையாலே ஒரு அஞ்சு ரூபாய்க்குப் புடவை வாங்கிக் கொடுத்தான்னு உண்டா? காசைக் கொண்டுவந்து கிழவிகிட்டக் கொடுத்துட்டா ஆய்ப் போச்சா?"

முதன் முதலில், அவன் தாயின் காதில்தான், இவ்வதந்திகள் விழும். குளிக்கப் போனவிடத்திலும், கடைக்குப் போன விடத்திலும், பேசப் போனவிடத்திலும், பேசவந்தவரிடத்திலும் கேட்டுக்கொண்டு வந்து கிழவி வயிற்றிலும் வாயிலும் அவன் எதிரில் அடித்துக்கொள்வாள்.

"பாருடா உனக்கும் எனக்கும், உன் பெண்சாதி வாங்கி வைக்கிற பேரு. ஏண்டா என்னைப் பார்த்தால் உனக்கு அப்படித் தோணுதாடா? அடே, என் வயித்திலே நீ ஒண்ணு

தாண்டா பொறந்தே. எனக்கு வேறே பொண்ணுகூட இல்லேடா, மருமவளா நினைக்கல்லேடா, மகளாய்த் தாண்டா நெனைச்சேன். ஒங்க இரண்டு பேருக்குமில்லாத சுகம் எனக்கென்னடா? நீங்க ரெண்டுபேரும் சந்தோஷமா யிருக்கறதைப் பாக்கறதுதானேடா எனக்கு சந்தோஷம். என் வயசுக் காலத்திலே—நான் என்னடா என்னோடே தூக்கிக்கொண்டு போவப்போறேன்!...

வீண் அபவாதம் தாங்காமல் அவள் மனம் முறிந்து அழுகையில், அவன் தோள்களிடையில் தலை குனியும், அந்த சமயத்தில் அவன் மூளையைக் குழப்பும் உணர்ச்சிகள் ஒன்றா, யிரண்டா?

கடைசீலே எல்லாம், சாக்கடையிலே சக்கரம் சாஞ்ச தேர் மாதிரி ஒரு காலணாப்பூவிலேதான் வந்து நின்னு போச்சு. தன்னையே அவள்கிட்டக் கொடுத்துவிட்டு அவன் தவிக்கிறது பெரிசில்லே. ஒரு காலணாப் பூதான், அவனை விட, எல்லாத்தையும்விடப் பெரிசு. இதுவரையில் பொட்டலமாயிருந்த குடும்ப கௌரவம், எப்படி சீர்ப்படுகிறது—ஒரு காரணமுமில்லாமே!

நாளடைவில் இன்னொரு சமாசாரம், உடல்மேல் முழு முழுவென்று ஊறும் எறும்புபோல், அவனுக் கெட்டிற்று; வீட்டைவிட்டு வெளியேறினதிலிருந்து அவள் ஸ்னானம் பண்ணவில்லையென்று. அவன் உடலை ஒரு பெரும் வேகம் ஊடுருவியது. அவளைப் போய்ப் பார்க்கலாமா?

இரவில், படுக்கையில், திடீர் திடீரென்று, தீப்பந்தத்தில் குங்கிலியம் போட்டது போன்று, அவ்வெண்ணம் அவனை வாட்டுகையில், வேதனையில் கைகள் முஷ்டித்தன. உடல் அதிர்ந்தது. ஆசை பெருக்கெடுக்கையில் நியாயம், அநியாயம், சரி, தப்பு ரெண்டுக்கும் வித்தியாசம் கண்டுபிடிக்கிற புத்திகூட அடித்துக்கொண்டு போய்விடுகிறது.

பிறகு திடீரென்று ஓரிரவு ஒரு எண்ணம் அவனுக்கு உதித்தது.

அவன் தாய் வீட்டு வேலைகளைச் செய்துவிட்டு, நூலை இழைத்துக்கொண்டிருந்தாள். அவளுக்குத் தள்ளவில்லை. ஆயினும் நூலை இழைத்தாக வேண்டும். மாவை ஆலையில் கொடுத்து ஓட்டியாக வேண்டும். துணி நெய்தாக வேண்டும். தொழில் நடந்தாக வேண்டும். பரம்பரைத் தொழில்!

அசதியுடன், விசுப்பலகையில் உட்கார்ந்தான்.

"அம்மா! நாம் இந்த ஊரைவிட்டுப் போவோம். இங்கே இருக்கப் பிடிக்கல்லே—"

கிழவி பொக்கை வாயைத் திறந்து புகைச்சிரிப்புச் சிரித்தாள்.

"நல்லாயிருக்குதே உன் பேச்சு! என்னமோ மூட்டைப் பூச்சிக்குப் பயந்து வீட்டைக் கொளுத்தணும் என்கிறையா? இதோ பார், நானும் மருமவளாய் இருந்து மாமியாராய் வந்திருக்கிறேன். எங்க நாளிலேயும் எங்க புருஷன் எங்களைக் கோபிக்கறதுண்டு, அடிக்கறதுண்டு. ஆனால் அதுக்காக, வீட்டுக்கு வந்த பொண்ணுங்களெல்லாம் வீட்டை விட்டுப் போனதில்லே. கொண்டவன் கொலை பண்ணால்கூட, படி தாண்டினதில்லே. அந்தக் காலமெல்லாம், அடிச்சாலும் குத்தினாலும் புருஷன்தான் பெரிசு. என்னதான் காலம் மாறிப்போச்சுன்னாலும் இந்த மாதிரிப் பொண்ணுங்களுக்கெல்லாம் பயந்து ஊரை விட்டு ஓடிப்போறதுன்னா என்னமோ அப்பா, எனக்கு மனம் இடம் கொடுக்கல்லே. நீ வேணுமானால் போ—இந்த புதுக் காலத்துப் புள்ளையா. நான் பழங்காலத்துப் பொம்மனாட்டியாவே இருந்துடறேன். எனக்கு இன்னும் ரொம்ப நாளில்லே. வயசாச்சு. நான் புகுந்த வீட்டிலே செத்துப் பூடறேன். எனக்கு அதுதான் கௌரவம். இந்த வீட்டிலே, உன் தகப்பன், அவருக்கு அப்பா, அவங்க அப்பாவுக்கு அப்பா எல்லோரும் வாழ்ந்து நல்லா ஆய்வந்த வீடு. நேத்திக்கு

வந்த ஒரு பெண், இத்தனை நாளாய் இங்கே நிலைச்ச ஒரு குடும்பத்தைக் கலைச்சுடறதுன்னு இருந்ததுன்னா, அந்த அக்கிரமத்துக்கு அடங்கிப்போக என்னால் முடியாது. பெண்ணுக்கும் பெண்ணை பெத்தவங்களுக்கும், முன் புத்தி பின் புத்தி, ஈனமானம் இல்லாமல் போனால், நமக்குக் கூடவா இல்லாமே போச்சு? ஊரைவிட்டு ஓடிப்போகும்படி என்னடா பண்ணிட்டோம்?''

கிழவி நூலை இழைத்துக்கொண்டே பேசிக்கொண்டே போனாள். இழைக்க இழைக்க ராட்டினம் 'கிர்'ரென்று சுழன்றது, அவர்கள் விதியின் சக்கரமே போல்.

''கோழி கூரை மேலே பறந்துபோய் குந்திகிட்டு 'கொக்கரக்கோ' என்று கூவிட்டா, உடனே வீடு அதுக்குச் சொந்தமாயிடுமா? அது அது இருக்கவேண்டிய இடத்திலே இருந்தால்தான் அது அதுக்கு லட்சணம். அவள் இந்த ஊரையே, அரசாளட்டுமே. அதனாலே போன மானத்தைக் கொடுத்துடுமா பணம், இல்லாட்டா புருஷனைத்தான் கொடுக்குமா? வாழாவெட்டி வாழாவெட்டிதானே, எத்தனைபேர் தாங்கினாலும்!

''நீயே பார், அவள் வயத்திலே இப்பொழுது வளருதே, நம்ம வீட்டுக் கொழந்தே, அது பிறக்க வேண்டிய தினுசு இப்படித்தானா? இந்த வீட்டுக்கே மூணு தலைமுறையா ஓரே புள்ளை. என் செல்லப் பேரனை என் மடியிலே வெச்சுக் கொஞ்சணும்னு எனக்கு இருக்காதா? மாதம் ஏழாச்சு. இன்னமும் நம்ம சொத்து நம்மகிட்ட வந்து சேர்க்கல்லே பாரு! சீமந்தம் பண்ணவேண்டாமா? ஊமைக் கொளந்தே பிறந்தால் என்ன செய்வாங்களோ தெரியல்லே! இது மாதிரி அக்கிரமமாயிருந்துட்டா, அவங்க செய்யற காரியம் ஜரிச்சுப்போயிடுமா?''

மனிதன் தானே தனக்கு இழைத்துக்கொள்ளும் அவஸ்தையை, என்னென்று சொல்வது?

ஒரு நாளிரவு தெருக்கோடியில் வசிக்கும் அம்பட்டன் தாயாருக்கு அவசரமாய் ஆள் வந்தது. உடலின் ஊழச் சதை குலுங்க அவள் 'லொங்கு' லொங்கென்று ஓடினாள்.

மனிகை வீட்டுப் பெண்ணுக்கு இடுப்பு வலி எடுக்குதாம் என்று ஊரெல்லாம் சமாசாரம் பற்றிக்கொண்டது.

ஒரே சமயம் இரண்டு பக்கமும் பேசும் சாமர்த்தியம், இந்த ஊர் வாய் என்னும் ஒரு வாய்க்குத்தான் உண்டு!

"என்ன மானங்கெட்ட பிழைப்புப் பார்த்தியா, இந்த மளிகை வீட்டுக்காரருக்கு!"

"இந்தப் பையனும் இப்படி வீம்பாயிருக்கானே; சாவற வரைக்குமிருக்க முடியுமா?"

அன்று இரவெல்லாம் அவன் தூங்கவேயில்லை. இடுப்பு வலியில் அவள் துவளுவதைப்பற்றி நினைக்கையில், அவன் இதயம் மாரைப் பிய்த்துக்கொண்டு வந்துவிடும் போலிருந்தது. இப்பவாவது தன்னைப்பத்தி நினைக்கிறாளோ?

அவன் அறையின் வாசற் பக்கத்து ஜன்னல் கம்பிகளை இறுகப் பற்றிக்கொண்டு கற்சிலைபோல் நின்றான். அதன் வழி பார்த்தால் பக்கத்துத் தெருவின் திருப்பம் தெரிந்தது. வாய்க்காலுக்குப் போகும் வழி.

விடியுமா?

பலபலவென்று புலரும் வேளையில், ஒரு சிறு கூட்டம் அத்திருப்பத்தில் மெதுவாய் ஊர்ந்து செல்வதைக் கண்டான். எல்லோரும் மளிகை வீட்டுக்கார மனிதர்கள். அவர்களில் ஒருவன்—அவன் மாமனார், மஞ்சள் துணி சுற்றிய ஒரு சிறு மூட்டையை ஏந்திச் சென்றார். முகம் தொங்கியிருந்தது.

அவனுக்குப் பிடரி குறுகுறுத்தது. மாரைப் 'பக்' கென்று அடைத்தது.

அன்று அந்திவேளை, வாய்க்காலுக்கும் கழனிக் கட்டுகளுக்கும் அப்பாலிருக்கும் சுடுகாட்டுக்குப் போய், அங்கு புதிதாய் எழுப்பியிருக்கும் மேட்டண்டை நின்றான்! திடீரென மனத்தில் ஒரு எண்ணம். பரபரவென்று மண்ணைப் பறித்து, உள்ளே கிடக்கும் பிண்டத்தை எடுத்து ஒரு தடவையேனும் மார்மேல் அணைத்துக்கொண்டால் என்ன? அதன் முகம்தான் எப்படியிருக்கும்?

அவனை எச்சரிப்பது போன்று, எங்கேயோ ஒரு நரி ஊளையிட்டது.

அச்சமுற்று அவ்விடம் விட்டு அகன்றான்.

ஆயினும், நாளுக்கு நாள் புரை ஓடும் புண்போல் ஒரு அசதி அவனைக் கொஞ்சம் கொஞ்சமாய்த் தின்ன ஆரம்பித்துவிட்டது. வேலையில் மனம் ஊன்றவில்லை. அதற்கு முதல் அறிகுறியாக, அவன் இழைக்கு இழை ஓட்டுகையில், இன்னம் எத்தனை இழை ஓட்ட இருக்கிறது. நெய்கையில் நாடா குறுக்கே எத்தனை தடவை ஓடுது, என்றெல்லாம் அர்த்தமற்று, அசதி மூட்டும் கேள்விகள் உதிக்க ஆரம்பித்துவிட்டன. ''ஓராயிரம், இரண்டாயிரம் பத்தாயிரம் தடவை—பத்தாயிரமா? ஐயோ இன்னமும் எவ்வளவு நெய்யணும் ஒரு பீஸ் அறுக்க? இன்னிக்கு அறுக்க முடியுமா? தோணலே—கொஞ்ச தூரம் நடந்து வருவோம்—''

மாலை வேளை. மணி நாலாய்விட்டபோதிலும், வெய்யலின் வெப்பம் கடுமை. வாய்க்கால் ஜலத்தில், காலைக் குளிர நினைத்துக்கொண்டு, வயற்புறம் சென்றான். கழனிக்கட்டுக்களில் நெற்கதிர்கள் ரகசியம் பேசுவதுபோல் சலசலத்தன. காற்றின் குளுமை, கண்களுக்கும் கொதிக்கும் மண்டைக்கும் இதமாய் இருந்தது. ஏற்றக் கிணறில் குளிக்கலாம்போல் தோன்றிற்று.

ஆயினும் கிணற்றில் இறங்குவதற்காக எடுத்துவைத்த கால் அப்படியே நின்றது. அவன் கண்கள் அவன் கண்ட காக்ஷியில் உறைந்து போயின. கிணற்றுள், ஒரு படிக்கட்டில் எவளோ உட்கார்ந்து குளித்துக்கொண்டிருந்தாள்! இருபத்திரண்டு வயதிருக்கும். பட்டு நூல் போல் பளபளக்கும் கட்டான உடல். யாரோ பண்ணையாளின் மனைவி போலும். அந்த சமயத்தில் யாரும் அந்தப் பக்கம் வருவார் என்று எதிர்பார்த்திருக்க மாட்டாள் சௌகரியமாகவே குளித்துக்கொண்டிருந்தாள்! அவன் நெற்றியில் வியர்வை முத்திட்டது. அதுவரை உள்ளே அடக்கி வைத்திருந்த உடலின் வேட்கை திடீரென்று வெளிப்படுகையில், அவன் உடலே கிடுகிடென்று ஆடிற்று. வெகு வேகமாய் வீட்டுக்கு ஓடிப்போய்க் கதவைத் தடாலென்று அறைந்து தாளிட்டான். மிருகம்போல் அவனுக்கு மூச்சு இறைத்தது. மிருகத்தின் வாய்ப்பட்ட இரைபோல் அவன் தவித்தான். மனப்புயல்...!

அதன் அலைகள் ஓய ஓய, அவன் மனத்தைக் கவித்துக்கொண்டிருந்த பனிப்படலமும் கொஞ்சங் கொஞ்சமாய் விலகத் தலைப்பட்டது.

இன்று மாதிரி இன்னொரு தடவை நேர்ந்ததெனில் அவன் மனத்தை மறுபடியும் வெற்றிகொள்வது கடினந்தான். அவன் வயதுக்கு—அதுவும் ஆண்ட—அவனுக்கும் உடல் வேட்கை இயற்கைதான். அதை அடக்கமுடியாத சமயத்தில் அதை முடக்குவதில் எவ்வளவோ விபரீதம், இயற்கைக்கு விரோதம், அவன் தொழிலுக்கே ஹானி. அப்பனிடமிருந்து பிள்ளைக்குப் பரம்பரையாய் வந்து தன்னிகரில்லா தனித்தொழிலான நெசவுத் தொழில். இந்தப் பரம்பரையைக் காப்பாத்த ஒரு பிள்ளை வேண்டும்.

பெண்டாட்டிமேல் ஆசை இருக்க வேண்டியதுதான். ஆனால் ஆசை அறிஞ்சவதான் பெண்டாட்டி. அன்பை அறியணும்னா அன்பு இருக்கணும். அன்பில்லாதவள்

இடத்திலே அன்பை வெச்சுட்டு அவஸ்தைபட்டால், பட்டுக்கொண்டே இருக்கவேண்டியதுதான். அவளுடைய அசட்டுத்தனத்துக்கும் அழுத்தத்துக்கும் எல்லையில்லாமல் போனாலும் அவன் பொறுமைக்கு எல்லையுண்டு. இதே மாதிரி தன் இடத்தையும் மானத்தையும் மறந்த பொம்மனாட்டிகிட்ட காட்டற பொறுமை பொறுமையில்லே. அசட்டுத்தனம்தான். இத்தனை நாள் அவள் விசாரத்தை அவன் பட்டுக்கொண்டிருந்தது போதும். இனிமேல் அவள் விசாரத்தை அவளே படட்டும். அவன் கஷ்டத்துக்கு விமோசனம் அவன்கிட்ட இருக்குதேயொழிய அவள் கிட்டே இல்லே. உலகத்தை வெறுத்துட்டுப் போற வயசில்லே அவன் வயது. உலகத்தை ஏன் வெறுக்கணும்? உலகத்தை ஜயிச்சுட்டுத்தான் அதை வெறுக்கணும். அதுக்கு முன்னாலேயே வெறுத்தால் அதுக்குத் தோற்றால்போலதான்.

அனுமான் தன் பலத்தை மறந்ததுபோல், தன்னைத் தான் மறந்து இத்தனை நாள் இருந்ததே அவனுக்கு இப்பொழுது ஆச்சரியமாயிருந்தது. சமையலறையில் வேலையாயிருக்கும் தன் தாயிடம் தீர்மானத்துடன் போனான்.

"அம்மா நாம் இனிமேல் நம்ம வேலையைக் கவனிக்கணும்" என்றான். "எனக்கு வயசு ஆச்சு; வீட்டுக்கு ஒரு மருமவள் வந்தாகணும். நல்ல மருமகள்..."

ஒரு பெரும் மூச்சு கிழவியின் தொண்டையிலிருந்து கிளம்பிற்று. எத்தனையோ நாளாய் வெளிப்பட வேண்டுமென்று காத்திருந்த மூச்சு.

"நல்ல பெண்ணாகக் கட்டறேன், நம்மை நாட்டாமை பண்ணாமே, வீட்டுக்கடங்கின சரக்காய் எனக்குத் தெரியும். நம்ம பக்கத்து வீட்டுக்காரன் தங்கை பெண். நல்ல நூலிழைக்கிறாள். நல்லா சமைக்கிறாள். நல்லா குடும்பத்திலே உயண்டிருக்கா. தன்னை நல்லா காப்பாத்திப்பாள்.

புருஷனைக் காப்பாத்தினால் தன்னைக் காப்பாத்திக் கிட்டாப் போலத்தானே? ஒரு பொம்மனாட்டிக்குப் புருஷனைத்தவிர என்ன வேணும். ஆண் பிள்ளைங்களுக்குக் கூட பெண்சாதி அவசியமில்லே. ஆனால் பொம்மனாட் டிக்குப் புருஷன் வேணும். புருஷன் இருக்கிறவரைக்கும் தான் அவங்களுக்கு மதிப்பு. நாளைக்கு நல்ல நாளா யிருக்குது. ஆள் விடறேன்.''

ஊர் சும்மாயிருக்கிறதா?

''இவன் இன்னொரு பெண்ணைக் கட்டினால், அந்த மனிகை வீட்டுப்பெண் கதி என்ன ஆவறது?''

''அதுக்கு அவன் என்ன செய்வான்? கட்டின அப்புறம் கூட பெண்டாட்டியா இல்லாமே, மனிகை வீட்டுப் பெண் ணாய்த்தான் இருப்பேன்னு இருந்தால், அப்படியே இருந் துட்டுப் போவட்டும். அதனால் யாருக்கு நஷ்டம்?''

அவன் தறியில் இறங்குகையில் மறுபடியும் பழைய உற்சாகம் அவன் உடலில் ஊறியது. ஒரு தீர்மானத்திற்கு வருகிற வரையில்தான் அவஸ்தை. வந்துவிட்டால் அப்புறம் அவ்வளவு கஷ்டமில்லை. இத்தனைநாள் அவளில் தன்னை இழந்துவிட்டு, இப்பொழுது தன் மதியால் தன்னைத் திரும்பிப் பெற்றதே ஒரு பெரும் ஆறுதல். அவனை அமுக்கிக் கொண்டிருந்த கேள்வியிலிருந்து தான் மீண்டதே ஒரு ஆச்சரியம். அவ்வனுபவம் சென்று கடந்ததெனினும், இப்பொழுது பின்னோக்கிப் பார்க்கையில்தான், அதன் பயங்கரம் இன்னும் தெளிவாய்த் தெரிந்தது. அவன் கஷ்டம் தீர்ந்தது. இனி அவள் கஷ்டம் தான், அவளே இஷ்டமாய் வரவழைத்துக் கொண்ட கஷ்டம். இஷ்டப்படி படட்டும்.

போனது போகட்டும். இனி மறுபடியும் ஏமாற மாட்டேன். என்னை இனி யாருக்கும் இழக்கமாட்டேன். இனி வருபவளிடம்கூட உஷாராய்த் தானிருப்பேன்.

என்னில் ஒரு பங்குதான் கொடுப்பேன். எனக்கு, என்னை பத்திரமாய் வைத்துக்கொள்வேன். கொடுத்தால் என் தொழிலுக்குங் கொடுப்பேன். என் தறி, என் நூல், நான் நெய்யும் துணி...

"இன்னிக்கு வெள்ளிக்கிழமை. புதுப்பாவு பூட்டணும். விளக்கு வெச்சுப்போச்சு இப்போ, சோம்பல் பட்டால், அப்புறம் நேரமிருக்காது."

அவன் தாய் விளக்கைப் பிடித்தாள். சுருட்டிய பாவைத் தோளில் தாங்கிக்கொண்டு தறி மேடைமேல் ஏறினான்.

வாசற் கதவு திறந்து மூடியது.

"யாரது?"

பதிலில்லை. ஆனால் உள்ளே மாத்திரம் யாரோ.

இருளிலிருந்து விளக்கின் ஒளியின் வீச்சுகள் அவள் வருகையில். அவனுக்கு வாயடைத்துப் போயிற்று. கிழவி யின் உடலெல்லாம் வெடவெடவென்று ஆடியது. மாமி யாரின் கை விளக்கை அவள் தன் கையில் வாங்கிக்கொண் டாள். பேச்சு அவளுக்கும் எழவில்லை. கன்னத்தில் கண்ணீர் மாலையாய் வழிந்தது. எப்படி இளைச்சுப் போயிருக்கா?

கிழவி தள்ளாடிப்போய் விசுப்பலகையில் உட்கார்ந்து கொண்டாள். வெளியிலிருந்து அவள் குரல் கணீரென்று அவர்களை எட்டியது.

"பெண்ணே, விளக்கை உஷாராய்ப் பிடி. அடே பையா, அவள் சரியா பிடிக்காட்டால்கூட நீ அனாவசியமா கையை மிஞ்சிடாதே."

அவன் அவளைப் பார்த்துக்கொண்டு நின்றான். அவள் கண்களிலிருந்து கண்ணீர் மாலை மாலையாய் உதிர்ந்து கொண்டேயிருந்தது. அதைத் தடுக்க அவன் ஒன்றும் முயல வில்லை. இருவர் மனமும் இன்றிரவில்தான் லயித் திருந்தது.

இத்தனை நாள் பட்ட துன்பமெல்லாம் இன்று ஓரிரவில் ஆறிவிடும். பிரிவின் நெருப்பில் கருகி இளைத்த இருவர் உடலும் மறுபடியும் மலரும். மறுபடியும் நல்லரசின் குடை நிழல்போல் அவர்கள் இருவர்மேலும் இன்றிரவு பாவு நூல் படர்ந்து காக்கும். இன்றிரவு பலகணி வழி சந்திர வெளிச்சம் உண்டு. படுக்கையில் புரளுகையில் அவன் கைகள் இன்றிரவு பொத்தென்று வெறும்பாயில் விழாது, இன்றிரவு...

—அசோகன்

# என் பிரியமுள்ள சிநேகிதனுக்கு

இப்படி ஆரம்பிக்கையிலேயே பாஸ்கர், எனக்கு உடம்பை என்னவோ பிய்த்துப் பிடுங்குகிறது. ஆனால் வேணும் என்றேதான். இருக்கட்டும். இந்தக் கடிதம் உனக்கு 'ஷாக்'காக இருக்கலாம். ஆனால் எனக்கு இதுவே பிராயச்சித்தமாக இருக்கக்கூடும் என்பதனால்தான் நம் சினேகத்தின்பேரில் பாரம்.

"ஆமாம், இன்றிரவு பன்னிரண்டு வரை கடற்கரையில், அலையோரம் படகடியில், அனு, நீ, நான் அரட்டை அடித்துவிட்டு, இதென்ன கடிதம் வேண்டிக் கிடக்கிறது?" என்று நீ வியப்புறுவது நியாயமே. இன்று நான் மறக்க முடியாத என் மிக்க மிக்கச் சந்தோஷ நாள். இன்று அனு. Simply Scintillating. பேச்சில், தோற்றத்தில், கண்களின் ஒளியில், என்ன ஜாஜ்வல்யம்! என் பரவசம் அதன் கவானின் உச்சியைத் தொட்டுவிட்டது, எனக்கே தெரிந்துவிட்டது.

நான் ஸஸ்பென்ஸை வெறுப்பவன். It is cheap, vulgar, silly, artificial.

என் பிரியமுள்ள சினேகிதனே, I love your wife. இதை நான் நேரிடையாக உன்னிடம் சொல்ல முடியுமா, நீயே சொல்.

பாஸ்கர், உடனே தப்பாக நினைக்க அவசரப்பட்டு விடாதே. எங்களிடையே ஒரு தப்பும் கிஞ்சித்தும்கூட நேர்ந்துவிடவில்லை. அனுவுக்கு என் நிலை பற்றி ஒன்றுமே

தெரியாது. தெரிந்தாலும் அவள் எனக்குக் கிடைக்க மாட்டாள். அதனாலேயே என் சத்தியத்தை, உன் முன்னிலையில், பொட்டென்று உடைக்கிறேன்.

இதனாலேயே it is time for my Exit. ஆமாம், சும்மா கதையிலும், வம்பிலும், ஏன் நடப்பிலும்தான், 'நாக்குப் பட்டே நைந்துபோன இந்த eternal triangle நிலையை நான் உண்டாக்கப் போவதில்லை. I am going away. எங்கே? இந்த நிமிஷம் வரை அறியேன். இப்போதைக்கு இந்தக் கடிதத்தை எழுதி முடிப்பதில்தான் என் முழு முனைப்பு. என் தன்மையின் உண்மையை, அல்லது என் உண்மையின் தன்மையையா? அதன் செப்புச் சுருளைப் பிரித்துப் படித்துப் பார்த்துவிடணும். அவரவர் தன்மையின் உண்மை, கண்ணுக்குப் புலனற்ற தாமிர இலையில் வரைந்து ஒவ்வொரு பிறவியினூடே, அதன் மூளையில் செருகி அனுப்பப்படுகிறது என்று எனக்குப் பிடித்தமானதொரு கற்பனை. தாமிரமாக இருப்பானேன்? என்னைக் கேட்காதே. ஆசாரத்துக்குத் தாமிரம் என்று நம் ஐதீகம். என்னதான் பகுத்தறிவு வாதத்திலும் இப்படி ஒரு சபல புத்தி. அசடு. பாஸ்கர், எவனுமே முழுக்க முழுக்கப் பகுத்தறிவாளி அல்லன். எப்படியோ ஒரு பழம் பிசுக்கு நம்முடன் ஒட்டிக்கொண்டுதானிருக்கிறது. ஜன்மப் பிசுக்கு? இல்லை அதன் மறுபெயரில் Call it the greasiness of evolution. விதி, நம்பிக்கை, கடவுள் என்கிறோமே இவையெல்லாமே உயிர்த் தொடர்பின் காரைப் பூச்சுத்தானே! நான் விஷயம் தாண்டிப் போகவில்லை. என்னுடைய all out sinceriety அதுவே ஒரு நாடக பாணியாக ஆகிவிடாமல் இருக்கவேண்டுமே என்கிற கவலைதான். ஆகவே, என் பிரியமுள்ள சிநேகிதனே, here goes.

—ஒரு நிமிஷம், பாஸ்கர். நான் நல்ல தமிழ் எழுதுகிறேன் இல்லை? எல்லாம் காலேஜில் உன் சிக்ஷைதான்!

பாஸ்கர், நான் மகானில்லை. ஓ, உனக்கு அது தெரியும். ஒரே வார்த்தையில் சொல்லப் போனால், ஒண்ணு பாக்கி

யில்லை. ஆனால் எனக்கு எதிலேயுமே பிடிப்பு இல்லை. என் கோளாறே அதுதான். இதைவிட அது, அதைவிட எது என்று ருசி பார்த்துப் பார்த்தே, கிளைக்குக் கிளை தாவியே, எனக்கு எதிலுமே ஆழமான பற்று இல்லாமல் போய் விட்டது. பற்றற்றானின் தனிமை பயங்கரம், பாஸ்கர்.

என் பெற்றோர்கள், எனக்குச் சின்ன வயதிலேயே, மோட்டார் விபத்தில் இருவருமே மாண்டபின், nursery, nursing home, hostel, hotel என்று வளர்ந்து, இதற்குள் வங்கியின் trusteeship இல் விட்டுப்போயிருந்த என் சொத்து எக்கச்சக்கமாக வளர்ந்து, எனக்கு வயது வந்ததும் என் னிடம் ஒப்படைக்கப்பட்டதும், அதன்மேல் முதல் வெறி தணிந்த பின், அப்புறம் என்ன? extreme boredom தான். மாறுதலுக்கு, மாற்று ஏதோ ஒண்ணு எனும் desperation, depression தான். எனக்கு discipline கிடையாது, எனக்கே தெரிகிறதே!

காலேஜிலிருந்தே என்னை அறியாமலே எனக்கு இந்தப் பார்வைதான் என்று எனக்கு இப்போ தெரிகிறது. அப்பவே உனக்கு நான் அப்பப்போ புத்தகம், நோட்புக், special fees என்று திருப்பித் தரமுடியாத கடன்களாக உதவி செய்த போதிலும் எனக்கு உள்ளூர Amusement தான். உன் நிலைமை, பாஸ்கர், பாவம், அப்போதிலிருந்தே, ஏன், எப்பவுமே சரியாக இருந்ததில்லை அல்லவா? என் பேப்பர் களை நீ தயார் செய்தாய், என் home work ஐ நீ செய்தாய். நீ எனக்கு ஒரு Sydney Carton ஆக இருந்தாய், பேரம் நல்ல பேரம்தான், இல்லையா?

ஆனால் பாஸ்கர், திவாகர் ஒன்றும் dull boy அல்ல. அதற்கென்ன, உன்மாதிரி தங்கப் பதக்கம் வாங்கமுடியாது என்னால். என்னிடம் முயற்சி என்கிற பெயரில் உடலுக்கும் மனதுக்கும் வரவழைத்துக்கொள்ள உற்சாகம் மட்டும் இருந்தால், உன் தயவே எனக்கு வேண்டாம். ஆனால் அவ்

விதமான முயற்சியே எனக்கு ஒரு bore. அதனாலேயே அதை நான் படவில்லை. எதிலுமே எனக்கு அலுப்பு. எல்லாமே வசதியின் கோளாறுதான். வசதியே ஒரு பீடை.

'அப்படி உனக்குச் செல்வத்தின் பாரம் தாங்க முடியா விட்டால் வாரி வழங்கேன்! ஆஸ்பத்திரி, கோயில், அனாதை இல்லம், டொனேஷன்—என்ன இல்லை' என்கிறாயா? அங்கேயும் எனக்கு ஒரு fixation. தர்மம் செய்வதில் எனக்கு நம்பிக்கையில்லை. அழித்தாலும் அழிப்பேன், கொடுக்க மாட்டேன். என்னுடன் அது ஒரு கொள்கையாகவே ஆகி விட்டது. சும்மாக் கொடுப்பதால் உண்மையில் சைத்தான் பட்டறையும், சோம்பேறிப் பண்ணையும், Corruption உம் தான் வளர்கின்றன. நான் கண்மூடத்தான் ஒட்டுண்ணி களும் பருந்துகளும் கழுகுகளும், நீ குறிப்பிட்ட பெயர்களில் காத்திருக்கின்றனவே! ஒப்படைக்க என் உயிர் வேளையி லேயே என்ன அவசரம்?

'கலியாணம் பண்ணிக்கொள்ளலாம்' என்பாய். Enough. Drop it.

அப்புறம் இன்னொரு விஷயம். இப்படி எல்லாமிருந்தும், எல்லாவற்றிலும் அலுப்புத் தட்டியவனிடம், தனியாக ஒரு குரூரம் வளர்கிறது. தான் இன்பம் காண முடியாமையால், பிறரைத் துன்புறுத்துவதில் ஒரு இன்பம். அதுவே ஒரு பொழுது போக்கு. அவனவன் ரத்தத்தைப் பரிசோதனை செய்தால், அதன் அணுக்களில், நீரோக்களும், கலிகுலாக் களும்தான் நீந்துகிறார்கள். இதயத்தின் மர்ம அரங்கு Roman Arenaத்தான். மாறுதலாக வேறு ஏதேதோகூட இருக்கலாம். ஆனால் அவனவனுக்கு என்ன பார்க்கக் கிடைக்கிறதோ அதுதானே!

So! உன் கலியாணத்தின் ரிஸெப்ஷனுக்கு நான் வந்த போது—ஜானவாசத்துக்கே எதிர்பார்த்ததாக நான் வந்ததும் கோபித்துக்கொண்டாய்—நான் ஒரு ரோஜாப்

பூவை, அதன் காம்பு ஒடியாமல், வெகு ஜாக்கிரதையாக, ஒரு மிகை மரியாதையுடனேயே உன் மனைவியிடம் சமர்ப்பித்தபோது, "ச் அனு, இவன்தான் திவாகர், என் ஆப்த நண்பன்" என்று நீ அறிமுகப்படுத்தினாலும், உன் முகம் விழுந்தது எனக்கல்லவா தெரியும்? உள்ளூர எப்படி அனுபவித்தேன் தெரியுமா? குறைந்தபட்சம் ஒரு ப்ரஷர் குக்கரேனும் எதிர்பார்த்தாய் அல்லவா? Oh! my secret laughter!

ஆனால் அனு, எவ்வித கல்மிஷமுமில்லாமல், புன்சிரிப்புடன், என் புஷ்பத்தை வாங்கிக்கொண்டு தலையில் சொருகிக்கொண்டதும்—நம்பினால் நம்பு, நம்பாட்டிப் போ—அதுவே ஒரு Pleasure ஆக இருந்தது; Oh strange Pleasure, இதுவரை எனக்குப் பழக்கமில்லாத ஒரு Pleasure.

என் secret laughter இத்துடன் முடியவில்லை.

ஒரு பத்து நாள் கழித்து, மாலை, உன் வீட்டுக்கு வந்தேன். இதெல்லாம் உனக்குத் தெரியாததல்ல. ஆனால் எழுத்தில் இப்படி நினைவுகூட்டிப் பார்ப்பதில் ஒரு தனி கவித்வம், எனக்கே சொந்தமானதோர் சந்தோஷம். ஒரு புது dimension உணர்கிறேன்.

அனு நல்லாத்தான் டீ செய்கிறாள்.

என் பாக்கெட்டிலிருந்து ஒரு சின்ன சம்புடத்தை எடுத்து அனுவிடம் கொடுத்து—

"Press the button."

உள்ளே, கருநீல மெத்தையில், ஒரு ஜோடி தொங்கட்டான்கள். அனுவுக்குத் தோளுக்கு இறங்கக்கூடும். ஆனால், பாஸ்கர் உன் முகத்தைத்தான் ஓரக்கண்ணால் கவனித்துக் கொண்டிருந்தேன். ஆ! உன் கண்களில் என்ன 'குபீர்'—உன்மேல் தப்பே இல்லே பாஸ்கர், மனித எடையே அவ்வளவுதான். நான் ஏன் கலியாணம் செய்துகொள்ளவில்லை தெரிகிறதா?

"நிஜ வைரம்போல இருக்கே!" என்றாய்.

"Put it on, lady!" அவசரப்படுத்தினேன்

ஆனால் அனு, பெட்டியை உள்ளங்கையில் தாங்கியபடி, உதட்டில் புன்னகையின் நிழலாட, நகையைச் சிந்தித்துக் கொண்டிருந்தாள். விழிகளில் பெரும் ஆழம். அனுவுக்குக் கண்கள் + பாயின்ட். அந்த சமயத்தில் அந்த பாப்பாக் களுள் ஏதேதோ, ஏதேதோ நான் பார்த்திராத மீன்கள் நீந்துவதுபோல எனக்குப் பிரமை தட்டிற்று.

இதற்குள், என் கைக்கடியாரத்தில் வினாடிகள், நான் செவிக்கு வைக்காமலே, அவைகளின் நொடிப்புக் கேட்டது போல்—அதுவும் பிரமையா, நிஜமா?

"அனு. நான் மாட்டிவிடட்டுமா" ஐயோ பாஸ்கரா, என்ன பரிவோ?

"Take it take it!"

"போட்டுக்கோ அனு, திவாகர் என்னுடைய dearest friend"

Oh, my secret laughter!

அனு, ஒரு பெருமூச்செறிந்து, பெட்டியை என்னிடம் நீட்டினாள். மறுப்பில் தலையை ஆட்டினாள்.

"வாங்கிக்கொள் அனு, இதை உனக்குக் கொடுக்க எனக்குச் சக்தியிருக்கிறது!"

மீண்டும் தலையை ஆட்டினாள். அவள் புன்னகை ஆழ்ந்தது.

"உங்களுக்குச் சக்தியிருக்கலாம் கொடுக்க. ஆனால் வாங்கிக்கொள்ள எங்களுக்குச் சக்தி வேண்டாமா? தற் சமயம் நிச்சயமாக இல்லை. ரொம்ப thanks. உங்கள் டீ ஆறிப்போறது."

என் அனுபவத்தில் முதன்முறையாகக் கன்னத்தில் அறை தாங்கிக்கொள்வது சிரமமாகத்தானிருக்கிறது.

"நகையை வேண்டாமென்று சொல்கிற பொம்மனாட்டி கூட இருக்காளா?" என்றேன். பாதி கேலி, பாதி வெறுப்பு.

"ஏன், என்னைப் பார்த்தால் உங்களுக்கு எப்படிப் படுகிறது? கால்கட்டை விரலிலிருந்து மார்புவரை தன்னை ஒரு கண்ணோட்டம் விட்டுக்கொண்டாள். அது அவளுடைய கேலி. "இந்தாங்கோ, பத்ரம்" நகைப்பெட்டியை என் கையில் திணித்தாள். "வரேன், அடுப்பில் குழம்பு காயறது. இங்கேயே இன்னிக்குச் சாப்பிடுங்களேன். சுண்டைக்காய் வத்தல் குழம்பு. கருவடாம் பொரிக்கப்போறேன். ஓட்டலில் கிடைக்காது. உங்களுக்குத் தினம்தான் ஓட்டல் சாப்பாடு, இன்னிக்கு என் கைவரிசையைப் பாருங்களேன்!"

உள்ளே போய்விட்டாள்.

குழம்பு மணம் கூடத்தைத் தூக்கிற்று.

ஆனால் நான் ஏதோ சாக்குச் சொல்லிக் கழன்று கொண்டேன்.

அன்றுதான் உங்களிருவரிடையே முதல் தர்க்கமோ, பாஸ்கர்?

எனக்கும் அன்றிரவு சரியான தூக்கம் இல்லை; வெகு நேரம் படுக்கையில் புரண்டேன்.

அவளுடைய புன்னகை, பழத்துள் இறங்கும் கத்தி போல், d—n her!

எதிர்ப்பு எனக்குப் பழக்கமில்லை. ஆகையால் பிடிக்கவில்லை, கசந்தது.

But resistance is peautiful; and is a challenge.

அன்றிலிருந்து உன் வீட்டுக்கு வர ஆரம்பித்தேன். The challenge. பாஸ்கர், சவாலை ஏற்கணும், இல்லையா?

நெற்றியில், உழைப்பின் வேர்வை முத்துக்கு இத்தனை அழகு இருக்குமா, என்ன? உழைப்பே அறியாத எனக்கு அது precious ஆகப் படுகிறது.

"எனக்கே வேர்க்கும் சுபாவம்." அவள் சிரிக்கையில் வலது கன்னம் குழிகிறது. அவள் கன்னங்களில், மூக்கு நுனியில், மோவாயில் ஆரோக்கியத்தின் எண்ணெய்ப் பிசுக்குப் பளபளக்கிறது.

"நான் கிராமத்துப் பெண். கிராமத்திலிருந்து போய்த் தான் காலேஜ் படித்தேன். தினம் பஸ். வீட்டில் எப்பவும் சுமைவேலை இருந்தபடித்தான். பெரிய குடும்பம். அதனால் வேலை செய்யாமல் இருக்க முடியாது. இங்கே என்னதான் இழுத்து விட்டுக்கொண்டாலும் என்ன சொப்பு வைத்து விளையாடுகிற மாதிரி—எதிரும் புதிருமாய் இரண்டுபேருக்கு இருக்கிற வேலைதானே இருக்கும்! மிச்சப்போதுக்கு, கொட்டடா குடையடான்னு, பொழுதைச் சுமக்க முடிய வில்லை! இம்சையாயிருக்கு. மத்தியான்னத் தூக்கம், பத்திரிகைகளில், பொம்மைப் பக்கங்களைப் புரட்டுவது, அக்கப்போர்—எல்லாம் இனிமேல்தான் பழக்கிக்கணும்." மறுபடியும் அந்தச் சிரிப்பு.

"ஏன் நீயும் வேலைக்குப் போகலாமே, ஏற்பாடு பண்ணட்டுமா?"

"No, Thanks, வேலைக்குப் போவதில் எனக்கு நம்பிக்கையில்லை. அதற்கு உடல் வணங்கும் தன்மையும் எனக்குக் கிடையாது. வேலையிலிருந்து களைத்து வரும் ஆண்பிள்ளைக்குக் குளிர்ந்த தீர்த்தமேனும் கொடுக்கக் காத் திருக்க வீட்டில் ஒரு பொம்மனாட்டி வேண்டாமா?

"அப்போ கஷ்டப்பட்டு காலேஜ் படித்து. டிகிரி வாங்குவானேன்?"

"ஓ, அது கலியாணத்துக்குக் காத்திருக்கும்வரை, உருப்படியா ஒரு பொழுதுபோக்கு. வாய்ப்பாட்டு, வாத்தியம், the gentle arts எனக்கு வராது. அதனால் என்ன? இஷ்டப்பட்டால் ஒரு பொம்மனாட்டிக்கு வீட்டி லேயே எத்தனை பொழுது இருக்கு தெரியுமோ?"

"இந்த நாளில் இரண்டுபேர் சம்பாதித்துமே போதவில்லை என்பதுதானே பொதுவான புகார்? உனக்குத் தெரியாததல்ல" என்று முனகினேன்.

"அதனால்? பெண்டாட்டி பிள்ளையைக் காப்பாற்றுவது புருஷன் பாடு. அதில் நான் ஏன் புகணும்? பெண்டுகளின் வேலை இன்னதென்று இயற்கையே கோடு கிழித்து விட்டிருக்கே! அதுதான் கிராமவாசத்தின் தத்துவம்— அல்லது கோளாறா?" இப்படிச் சொல்லிவிட்டு அவள் உன்னைப் பார்த்த பார்வை...

பாஸ்கர், உன் மனைவியை நீ பார்க்க உனக்குச் சொல்லிக் கொடுப்பதன் அதிகப்ரசங்கித்தனம் எனக்குத் தெரியாததல்ல. அதற்குக் கண் வேண்டும். ஆனால் கண்ணுக்கு உனக்குப் பொழுதில்லை அதுவும் தெரிகிறது. எவனோ ஒரு மார்வாடியிடம் மாட்டிக்கொண்டிருக்கிறாய். இடம் மாறவும் உனக்கு மனம் இல்லை. Economicsஇல் இதை Commercial inertia என்பார்கள். அவன் நன்றாய்த் தான் கவனித்துக்கொள்கிறான் என்று உன் மனைவியும் உனக்குச் சிப்பக் கட்டுக் கட்டுகிறாள். இருந்தாலும் உன் யோக்யதைக்கேற்றபடி ஒரு நல்ல ஸ்தாபனத்தில்—உனக்காக இல்லாவிட்டாலும்—

யார் என்ன செய்தாலும், செய்யக் காத்திருந்தாலும், அதைத் தடுக்க, விதி என்று இருக்கத்தான் செய்கிறது போலும். உன் விதியின் பெயர் அனு. உனக்கு உதவி செய்யவும் என்னை விடமாட்டாள். அவளுடைய சகஜ பாவம், புன்னகை, சிரிக்கையில் மூக்குத்தண்டின் சுருக்கத்தின் பின்னால் ஒரு அழுத்தம், இறுமாப்பு, அவளுக்கென்று ஒரு குணம்—எனக்குத் தெரிகிறதே! என்னிடமிருந்து ஒரு தித்திப்புப் பண்டப் பெட்டி, கேக் பெட்டி, பழக்கூடை—ஊஹூம், "No. Thank you!" ஆனால் வரும்போதெல்லாம், நான் டிபன், சாங்கோபாங்கமா சாப்பாடு—நானும் சாப்பிடுகிறேன். என் ரோசம் எங்கே போச்சு? The Witch.

இப்ப எல்லாம் உன் வீட்டுக்கு வராமல் முடியவில்லை. ராச்சாப்பாடு ஆகி, அவளுக்குக் காரியம் முடிந்து, மொட்டை மாடியில் நம் மூவர் பேச்சு, அதற்காகவே வருகிறேன். The அனு magic. வெளிக்குத் தெரியாமல், அரித்து அரித்து, உள்ளே சந்தனம், ஜவ்வாது, அத்தர், குங்குமப்பூ கமாளிதம். Oh God! என்னில் நிகழ்ந்துகொண்டிருக்கும் ரசாயனம் எனக்கும் தெரியாமலே... அந்தப் பேச்சு எனக்கு வேண்டியிருந்தது. உள்ளே ஏதேதோ ரணங்கள் ஆற்றும் தைலம் போன்ற பேச்சு.

பாஸ்கர், அனு, ஏதோ பேரழகு என்று சொல்லிக்கலாமே தவிர, அனு அழகு அல்ல. அவள் நெற்றி மேடு, பெண் பிள்ளைக்கு அதிகம். வாய் வார்ப்பு இன்னும் சற்று சின்னதா யிருக்கலாம். உயரம் இன்னும் ஒரு அங்குலம் கூடணும். She should watch her figure. A bit on the buyom side. பிறத்தியான் பெண்டாட்டியை—அதுவும் அங்க விமர்சனம்! என்ன தைரியம்! என்கிறாயா? No, no, my son, She is not my type of sex, I would fall for. How to convince you, it is so boring, because you are boring. அதனால்தான் இந்தக் கடிதமே எனக்குக் கொட்டி ஆற்றிக்கொள்ள ஒரு களம் வேண்டாமா?

ஆனால் ஒரு radiance, பாஸ்கர். உணர உணர விரிவாகிக்கொண்டே போகும் ஒரு ஒளிப்ரபை. அதன் நடுவில் அவள். அவளைப் பார்க்கும்போதும், கேட்கும் போதும், கவனிக்கும்போதும் ஏதேதோ மறந்துபோன தெல்லாம், இந்த ஜன்மத்தில் மட்டுமல்ல, ஜன்மேதி ஜன்மாவின் நினைவுகள், நிழல்கள் ஆடுவதுபோல், ஏதேதோ பழங்கணக்குகள் பிரிவதுபோல்—என்ன நினைவு, என்ன கணக்கு? Ask me another. ஆனால் இந்தப் பழைய பாடத் திருப்பலில், சிக்குப் பிரிதலில் ஒரு இதவு, ஒரு கலிக்கம். அதனால் மனசு லேசு, அதுவே ஒரு புதுமை, ஒரு adventure

அன்று தன் தாத்தாவையும் பாட்டியையும் பற்றிச் சொன்னாளே, நினைவிருக்கிறதா? அவள் சொன்னதைவிட, அவள் பேசினது இருக்கே, இன்னமும் அதன் Wonderment எனக்கு ஓயவில்லை. ஆனால் ஒண்ணு நான் ஒப்புக் கொள்ளணும். சிந்திக்க, ஆச்சரியப்பட எனக்கு நேரம் இருக்கிறது. நினைத்து நினைத்து என் தன்மையின் உண்மையின் கவிதையும் என் சிந்தனையுடன் கலந்த குழைவுக்கு ஒரு தரிசன ருசி வந்துவிடுகிறதோ?

'தாத்தாவையும் பாட்டியையும் பார்த்த நினைப்பு எனக்கில்லை. நான் குழந்தையாம். ஆனால் என்னில், பாட்டியை அப்படியே உரிச்சு வெச்சிருப்பதாகப் பார்த்தவா சொல்றா.

ஒருநாள் தாத்தா விடிகாலை, வெள்ளி முளைச்ச வேளைக்குத் தன் பங்கு ஆற்றுப் பாய்ச்சலை மேலத்தனம் பண்ணப் போனவரைப் பத்து மணி வேளைக்கு நாலுபேர் சுமந்து வந்து, கூடத்தில் விசுப்பலகையில் கிடத்தினார்கள், கழனிக்கட்டுச் சேறில், தன் நினைப்பற்றுக் கிடந்தாராம். Stroke. அந்த நாளில், கிராமத்தில் அதற்கென்ன பாஷையோ? ஒருநாள் இரண்டு நாள் கோமா இல்லை. மூணு வருஷம்; என்ன சொல்றேள்?

தாத்தா வருஷத்துக்கு ஆறு தெவசம் பண்ணுவாராம். அத்தனையும் நின்றுபோய், பிதுர்க்கடன் ஏறிப்போச்சு. இப்போ எனக்குத் தெரிஞ்சே கிராமத்தில் 'துபாய் போறேன்' ஸவுதி போறேன்'னு' அங்கெல்லாம் எந்த சாஸ்திரி கிடைக்கிறான்? தாகத்துக்கே பெட்ரோல்தான். காக்காய்க்குப் பிண்டமாவது வைக்கலாம். ஆனால் அங்கே காக்கா இருக்கோ? எனக்குத் தெரியாது. ஓ, அங்கங்கே problems இருக்கு. ஆனால் அதுக்கெல்லாம் கிராமத்துலே பயப்படுவா. கிராமத்துலே வளர்ந்தவள்தானே நானும்! நானும் பயப்படறேன். எல்லாமே பெரியவாள் காட்டற

பூச்சாண்டின்னு தள்ளிடற அளவுக்கு நமக்கும் முழுக்கத் தைர்யம் இல்லியே; உப்பும் நூணலோடு ஆற்றில் கரைக்கற அஸ்தியும் சேர்ந்து, அதன் பேர் பயமோ, நம்பிக்கையோ, பரம்பரையா உடம்பில் ஊறிப்போயிருக்கே!

பாட்டிக்கு உடம்பிலே ஆயிரம் கோளாறு. கேட்கப் போனால் தாத்தாவுக்கு மேலே. தாத்தாவுக்கென்ன, அவர் விழுந்தது ஒண்ணோடு சரி, பாட்டிக்கு. B.P., சர்க்கரை, உப்பு ulcer, கண்ணில் சதை, கீல்வாயு, ஆஸ்துமா, பல்வலி, ஆனால் முக்கிண்டே முனகிண்டே வளைய வளைய வந்து கொண்டிருந்தாள். சரீரம் வேறு 'பொந்தகா'. ஆனால் தாத்தாமாதிரி உயிர்ப்பிணம் ஆகல்லியே!

தாத்தாவும் பாட்டியும் அப்படி ஒண்ணும் ஒத்துமையான தம்பதியில்லே. ஒரு சமயம், ஏதோ மனஸ்தாபம், மூணு வருஷம் பேசாமலிருந்தாளாம். Can you imagine? பேச்சு மட்டும்தான் இல்லை. மற்றபடி எல்லாம், வழக்கம்போல், கடிகாரக் கணக்கில்... தாத்தாவுக்குத் தினப்படி பூஜா திரவியங்கள், சமையல், பரிமாறல், வஸ்திரமடி. மத்தியான ஆகாரம், ராத்ரி பால், படுக்கை—எல்லாம் மை போட்ட சக்கரக்கணக்கில் நடந்துகொண்டிருந்தது. தாத்தா ஒரு ஜாடைகூடக் காட்ட வேண்டாம். காட்டவில்லை. தாத்தாவின் வயிறு, நாக்கு, பழக்க வழக்கங்கள் எல்லாம் பாட்டிக்கு அப்படி ஒரு அற்றுபடி. தாத்தாவுக்கு ஒரு தலைகூட வலிக்காது. பாட்டிக்கு என்னவாக உடம்பு இருந்தால்கூட தாத்தா திரும்பி நின்னுகூடப் பார்க்கமாட்டாராம் 'My pound of flesh' மனுஷனாம்.

அப்புறம் எப்படித்தான் சமாதானமானாள்னு கேட்பேளே! ஒரு சிராத்தத்தின்போது, ஔபாசனத்துப் புல் பிடிக்க, சமையல்கட்டில் வேலையாயிருந்த பாட்டியைக் கூப்பிடும்படி ஆயிடுத்தாம். மாமியைக் கூப்பிட சாஸ்திரிகள் மறுத்துவிட்டார். 'இந்த நியாயப்படி நித்யானுஷ்டான

கர்மாவுக்கு உங்கள் தர்மபத்தினியை நீங்கள் அழைக்காமல், என்னவோய் சிரார்த்தம் வேண்டிக் கிடக்கு?' சாஸ்திரிகள் தான் புதுசோ, இல்லை இரும்புத்தலையனோ? தெரியல்லே. இல்லை, இதுவே ஒரு சூழ்ச்சியோ? ஆகவே கூடத்திலிருந்து தாத்தா பாட்டியைக் கூப்பிடும்படியாகிவிட்டது. கூப்பிடற தாவது. ஒரு உறுமல். அந்த நாள் பாஷையை அதுதான் உறுமும்படி ஆகிவிட்டது.

அதற்கே பாட்டி, "உங்கப்பாதான் முதல்லே பேசினா"ன்னு பீத்திப்பாளாம். உடனே அதை ஒட்டி இன்னொரு சண்டை."

அப்போது நம் மூவரின் ஒன்றான சிரிப்பு, இப்பக்கூட நினைப்பில் ஒலிக்கிறது!

Freud வந்தபின் இதை என்ன சொல்வான்? "Sex war on a grand scale" என்பானா? Love-hate, hate-love theoryஐச் சேர்ந்ததா?

மனுஷன் ஒற்றுமை வேற்றுமை என்கிறோமே, ஆனால் உண்மையில் இரண்டுக்கும் என்ன barometer? திவாகர். நீங்கள் சொல்லமுடியுமா? மனது என்று ஒன்று இருக்கிறது. அதன் ஓட்டம் என்று ஒன்று இருக்கிறது. அந்த ஓட்டத்தின் படு ஆழத்தின் அந்தகாரத்திலிருந்து எழுந்த சுழிப்புகளின் வெளித்தெரிந்த மட்டம்தானே நாம் போட்டுக்கொள்ளும் சண்டைகள், பண்ணிக்கொள்ளும் சமாதானங்கள், காரைப் பூச்சுக்கள், மீண்டும் வெடிப்புகள்—என்கிற மேலொட்டின வித்தியாசங்கள்— நாமே அங்கிருந்து வந்தவர்கள்தானே— the dark eternal womb of creation என்பது மனம் அல்லாமல் பின் என்ன?'

அவள் அப்படிச் சொன்ன அப்பவே, ஒரு நக்ஷத்ரம் உதிர்ந்தது Thrill. அனு, நீயா கிராமத்துப் பெண்? சட்டி, பானை தேய்க்கத்தான் எனக்கு இஷ்டம் என்று சொல்லிக்

கொள்பவள் நீயா அனு? நெற்றிக் கண்ணைத் திறந்து காட்டுவதுபோல், நக்ஷத்திரத்தை உதிர்த்துக் காட்டு கிறாயே, நீயா அனு? நீ பயத்துக்கு உரியவள், ஹூம்—

"So!" அனுவின் பெருமூச்சு. பேச்சினும் பேசும் பெருமூச்சு. தாத்தாவுக்கும் பாட்டிக்கும் மறுபடியும் இப்போ ஒரு கட்டம் வந்துவிட்டது. நாட்டுப் பெண்கள் நாலுபேர் வந்தாச்சு. ஆனாலும் சுச்ருஷையெல்லாம் பாட்டிதான். மத்தவாளை விடவில்லை. ஏற்கனவே புனர்ப்பாகம் அதை இன்னும் மையா, புளிக்காத மோரிலோ, பாலிலோ கரைச்சு திப்பியை எறிஞ்சுட்டு, நினைப்பில்லாத வாயில், சிறுகச் சிறுகச் செலுத்தப் பொறுமைக்கு மத்தவாளை எப்படி நம்புவது? தவிர அப்பப்போ துணி மாத்துவது, உடல் சம்பந்தமான காரியங்கள் வேறேயிருக்கே! ஒரு நாளா, இரண்டு நாளா, ஒவ்வொரு நாளா மூன்று வருடங்கள்...

ஆனால் இப்போ ரெண்டுபேருக்கும் வயசு என்ன ஆச்சு? தாத்தாவுக்குப் படுக்கையிலேயே கரைச்ச சாதத்திலும், கஞ்சியிலும், உடம்பு அன்னாடம் இம்மிமியென ஒடுங்க ஆரம்பிச்சாச்சு. அதைப் பார்க்கப் பார்க்கப் பாட்டியின் உடல் கோளாறுகள் அதிகரிக்கத் தலைப்பட்டன.

கூடவே எல்லாவற்றிற்கும் மேல் ஒரு திகில். நெஞ்சில் எலி பிராண்டல்; அடிக்கடி அவளை அறியாமலே கை, தாலிச் சரட்டைத் தொட்டுக் கொள்ளுமாம். பழுத்த சுமங்கலி. வாய்விட்டுச் சொல்லிக்கிற விஷயமா? மானத்தின் ரூபங்கள் எப்படி எப்படியெல்லாம் எடுக்கின்றன? இது சமுதாய எடை மானம் இல்லை. வேறு ஏதோ ஒண்ணு, அவாவாளுடைய சத்தியத்தின் எடை. அவாவாளுக்கு மட்டும்தான் தெரியும் போல இருக்கு. சந்திரமதி தாலி." Spell bound. But not Hitchcock. சொல்லே மந்திரமடா அது இது.

"ஆகவே ஒரு வெள்ளிக்கிழமை. எண்ணெய் ஸ்னானம் பண்ணிண்டு, பட்டு உடுத்திண்டு, குத்துவிளக்கை ஏற்றி நமஸ்காரம் பண்ணிவிட்டு, பாட்டி, விசுப்பலகை அடியில்,

தலைப்பை விரித்து, முழங்கையே தலைக்கு உயரமாகப் படுத்துவிட்டாள். பாட்டி தினம் எங்கே படுத்துண்டிருந் தாள்னு அசட்டுக் கேள்வி கேட்காதீர்கள். இது தனிப்பட்ட படுக்கை—அல்ல, ஸமிக்ஞை, "அப்புறம் எழுந்திருக்கவே யில்லையா, குளிக்கல்லியா, சாப்பிடல்லியா வளைய வரல் லையா?" Don't be Silly. எனக்குக் கோபம் வரது. எல்லாம் முறைப்படித்தான் நடந்துகொண்டிருந்தது. தன் கையா லேயே தாத்தாவுக்குப் பணிவிடைகள் உள்பட. ஆனால் அன்று எட்டாம் நாள் வெள்ளிக்கிழமை, தை, பகுளபஞ்சமி தினத்தன்று. விடியற்காலை வேளையில் பாட்டி, இந்த உலகத்தை நீத்தாள். சரியாக இரண்டு மணி நேரம் கழித்து, தாத்தாவின் உயிரும் பிரிந்தது.

ஒரே சிதையில் தகனம். விஷயம் காட்டுத் தீயாகப் பரவி, ஊரும், சுற்றுவட்டாரமும் சமுத்ரம் புரண்டு, மயானம் கொள்ளல்லே. தேர்த்திருவிழா மாதிரி 'ஜேஜே'. அந்தப் பேச்சு ஆறுமாசத்துக்கு. அதன் தஹிப்பு தணியல்லே. வீடு யாத்திரை ஸ்தலமாப் போச்சு.

'இந்த விசுப்பலகையா, இதன் அடியிலா, இங்கேயா?' நமஸ்காரம் பண்ணிக்கொண்டுவந்த தேங்காயை உடைத்து, வெற்றிலைப்பாக்கு மஞ்சளோடு மடியில் கட்டிக்கொண்டு, தொழுதுவிட்டுப்போன பெண்டிர் எத்தனைபேர்? அந்தக் காலம். சொன்னாலும் இப்ப நம்புவாளா?

"என் பாட்டி இருந்தாளே—அல்லது இருக்காளேயா? எதைச் சொல்றது? பொல்லாத பாட்டி. மஞ்சள் குங்குமத் தோடு தான் முந்திண்டுடணும்னு ஒரே எண்ணம், ஒரே சித்தத்தில், she simply willed her death into coming. இந்த நாளில் இது நடந்ததுன்னா. அந்த நாளில் ஒருத்தி, புருஷன் உயிரை யமனிடமிருந்து பிடுங்கிண்டு வந்தாள். ஒருத்தி தனக்குப் புருஷன் தக்கணும்னு உலகத்துக்கே விடியாம இருக்க அடிச்சுட்டான்னா ஏன், நடந்திருக்காது? ஏன்

நம்பக்கூடாது? ஆயிரம் காலேஜ் குமாரியானாலும் நான் நாட்டுப்புறம்தானே! சிரித்தாள், கொல்லும் சிரிப்பு. "போனவா போனாலும் இருக்கறவா இருக்கத்தானே இருக்கா, எல்லாம் உடன்கட்டை ஏறிடறாளா?" என்று என்னதான் பகுத்தறிவுவாதம் பண்ணினாலும், "ஆமாம், எல்லாம் 'காக்கை உட்காரப் பனம் பழம் விழ' இப்படியும் ஒரு வாதம் உண்டு. ராமாயணத்திலேயே ஜாபாலி இருந்திருக்கார்—அதுவும் உண்மைதான், எதுவும் உண்மைதான் ஆனாலும்—

பதிம்தேஹி பதிம்தேஹி பதிம்தேஹி பதிம்தேஹி பதிம்தேஹி பதிம்—

வானம் குமுறிற்று. அப்பத்தான் நானே மீண்டேன். எப்படி, இப்படி எப்போ, இருண்டது?

முகம் தெரியா இருளிலிருந்து அசரீரியாக அவள் குரல் பிரிந்து வந்தது.

"ஒண்ணு தெரியறது. முடியறவாளுக்கு எப்பவும் முடியும். முடியறவாளுக்கும் காலத்துக்கும் சம்பந்தமில்லை."

தூறல்.

"புண்ணிய வசனம் சொன்னாலே மழை வரும்னு சொல்லுவா."

அவசரமாக எழுந்து கீழே இறங்குவதற்குள் மழை இறங்கிவிட்டது. நிமிஷமா கொட்டோ கொட்டு.

"திவாகர் நீங்கள் ரூமுக்குப் போக முடியாது." ஒரு விரிப்பையும் தலையணையையும் கொணர்ந்து கூடத்தில் போட்டாள். "சோபாவில் புரள இடமில்லை. உடம்பு வலிக்கும். Goodnight!"

ஆனால் தூக்கம் வரவில்லை. ஏதேதோ யோசனைகள், ஆனால் பிடிபடவில்லை. ஏதோ வகையில் நான் உள்ளூர கிடுகிடுத்துப் போயிருந்தேன்.

நான் லக்ஷ்மணக் காவல் புரிந்துகொண்டிருக்கிறேன். ஆனால், பாஸ்கர், நான் உன்னைவிட ஓரிரண்டு வயது மூத்தவனில்லை? எனக்கு என்ன நேர்ந்து கொண்டிருக்கிறது?

எழுதி எழுதிக் கைவலிக்கிறது. கொஞ்சம் off

அறைக்கு வெளியே மொட்டை மாடிக்கு வந்தான். புகையை இழுத்து மார்புள் தங்கவைத்து, கொஞ்சங் கொஞ்சமா 'புக் புக்' வெளியே விட்டதும், அம்மாடி! என்ன சுகம்! வேறு சமயம் இந்நேரத்துக்கு ஒரு பாக்கட் காலியாகி யிருக்கும். எழுதுவதே ஒரு discipline போல இருக்கே!

அற்புதமான இரவு, எட்டித் தொட்டுவிடலாம் போல் வான்கவானில், ஒரு பூப்பாரம் கட்டவிழ்ந்து சரிந்ததுபோல், ஒரே நக்ஷத்ரக் கொள்ளை. 'லேசான ஒரு 'கம்' கூட. உண்மையிலா, அல்லது மனம் மனதை ஏமாற்றா?

இந்த நக்ஷத்ரங்களில் எது எனது? இருபத்தி ஏழு அற்ற மற்றதெல்லாம் அநாமி—நானும் ஒரு அநாமி. பின் என்ன, இதுவரை என்ன சாதித்தேன்? புஸ் புஸ் புஸ்—களிமண் பட்டாஸ். நான் செத்தால் எனக்காக அழ, அச்சாரம் கொடுத்து, சம்பளத்துக்கு அமர்த்தியாகணும், என்ன தமாஷ்!

இந்த ப்ரம்மாண்டமான தேன்கூடில், என்னைப் பெற்ற வர்கள் எங்கிருப்பார்கள்? எனக்காகக் காத்துக்கொண்டிருப் பார்களா? அல்லது மீண்டும் தங்கள் தனித்தனிப் பிறவிகளை யெடுத்துத் தங்கள் தங்கள் தேன்களைத் தேடிக்கொண் டிருப்பார்களா? அங்கு போயும் என் தனிமையின் குளிரில் வெடவெடத்துக் கொண்டு, அவர்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கணுமா?

அனுவின் பாட்டியும் தாத்தாவும்—No. தங்கள் வளை யில் பத்திரமாக, கதகதப்பாக, அடக்கமாக அடங்கியிருப் பார்கள். அவர்கள் இனி தேன் தேட வேண்டாம்.

அனு—அவள் Queen Bee. அவளுக்கே தெரியும். தெரியுமோன்னோ? ஆனால் அனுபற்றி எதுவும் சொல்ல முடியாது. எப்படியிருந்தால் என்ன, என்னைக் கொட்டிவிட்டாள். வலிதாங்க முடியல்லே. But how wonderful! வயலினில் எஃகுத் தந்தியில், பஞ்சமத்திலும் அதி பஞ்சமம் சூக்ஷ்ம பஞ்சமம் என வலி தற்சமயம் அந்த ஸ்தாயியில்தான் தெறித்துக் கொண்டிருக்கிறது. போதாது. சாக்ஷாத்கார பஞ்சமம் அதாவது அது அதுவேதான். அதற்குமேல் கிடையாது, வேறும் கிடையாது. அங்கு சேர்ந்துவிட்டால் அதற்கு மேலும் நோக இடமில்லை அல்லவா? ஆனால் அப்படி ஒன்று இருக்கிறதா? இது சங்கீத பாஷை அன்றோ? ஆனால் இதற்கு music தெரியத் தேவையா? இசை ஒரு கலை எனும் பதவிக்கும் முன்னால், அதுவே வாழ்வின், அடிப்படைத் தன்மை என்று சொல்வது உண்மைக்கு இன்னும் நெருக்கமாகும் என்று நினைக்கிறேன்.

"அழியமாட்டேன். புதையமாட்டேன். சமயங்களில் என்னை உனக்கு ஞாபக மூட்ட புதைவினின்று வெளிப்படுவேன்."

கண்கள் பெருகின.

Ecstasy. ஆயிரம் ஸிகரெட், ஹஷீஷ் இதற்கு ஈடாமோ?

சிகரெட்டை எடுத்து, பற்றவைக்குமுன், நுனியை இடது புறங்கை மேல் தட்டினவன், என்ன தோன்றிற்றோ, அப்படியே எறிந்துவிட்டு உள்ளே வந்து, மீண்டும் மேசைக்கெதிரே, மீண்டும் நாற்காலியில்—

சொச்சத்தை எழுதித்தான் ஆகணுமா? பிரியமுள்ள சிநேகிதனுக்கு—உண்மையில் இந்தக் கடிதம் உனக்கா? இல்லை. அவளுக்கா? No Wrong again உண்மையில் எனக்கல்லவா? அப்போ இது அவசியம்தானா? why not? இது ஒரு சுய கணிப்பு அல்லவா? Discovery of me. அதில் ஒரு சந்தோஷம் இருக்கத்தான் செய்கிறது.

No, அந்த trend கலைஞ்சுபோச்சு. அதனாலும் என்ன? ஒவ்வொரு Mosaic detailஐயும் ஆராய்வதானால் நேரம் எங்கே? திடீரென எனக்கு நேரம் குறுகிவிட்டதாக ஒரு உணர்ச்சியா, உணர்வா? So immediately to the turning point.

அன்று மாலை, டெலிபோன் அடித்து எடுத்ததும்,

"மிஸ்டர் திவாகர்?" அனு. அதுவே ஒரு ஆச்சரியம்.

"என்ன அனு, ஏது இந்த கௌரவம்?"

"அவருக்கு ஜுரம். நினைப்பே இல்லை. திவாகர், வாங்கோளேன்!"

அனு கலங்கும்படி ஆனால், Seriousதான்.

டாக்ஸி பிடித்து, கூடவே டாக்டரையும் பிடித்து அழைத்துக்கொண்டு—(நான் ஏன் கார் வைத்துக்கொள்ளவில்லை? கேட்கவில்லையா? அது ஒரு நியூசென்ஸ். அப்படி எனக்கென்ன Social activities, engagements தட்டுக்கெட்டுப் போகின்றன?)—உன் வீடு சேர்ந்ததும், தட்டாமலே கதவு திறந்தது. அனு காத்திருந்திருக்கிறாள். உள்ளே வந்ததும்,

கட்டிலில் நீ கிடந்த நிலை கண்டதும் எனக்கே 'திக்' கென்றது. கண் அரைக்கண். உதட்டோரம் வழிந்து காய்ந்த எச்சில் இன்னும் வழிந்துகொண்டிருந்தது. பரிசீலனையில் டாக்டர் உன் கையைத் தூக்கினால், அது தன் இயக்கம், சுரணையின்றி பொட்டென்று விழுந்தது. இமைகளைத் தூக்கி, டார்ச் அடித்தால், விழிகளில் சுணக்கம் காணோம். மார்பின் அந்த மிதப்பு தெரியாவிடில், நீ பச்சை மூங்கிலுக்குத்தான். என் ஜோக் சமயமாயில்லே. ஸாரி. நான் ஜோக் அடிக்கவில்லை. முகமும் மார்பும் நெருப்புச் சிவப்பு. ஜுரம் மழுவாய்க் காய்ந்தது.

மூவரும் உன்னையே பார்த்தபடி உன்னைச் சூழ்ந்து மோனத்தில் சமைந்து எந்நேரம் நின்றோமோ?

"Some brain fever போலத் தோன்றுகிறது. எப்படி இவ்வளவு சுருக்க develop ஆச்சு? என்ன நேர்ந்தது?"

"தெரியல்லே டாக்டர். டெஸ்கில் எழுதிக்கொண்டிருந்தவர், திடுக்கினு பக்கவாட்டில் சாய்ஞ்சவர் நாற்காலியையும் தன்மேல் தள்ளிக்கொண்டு விழுந்துட்டாராம். மூணு நாளா லேசா ஜுரம்தான் அத்தோடு நடமாட்டம். ரெண்டு நாள் லீவு போட்டுட்டு வீட்டில் இருங்கோளேன்னு சொல்லிப் பார்த்தேன். 'Account-closing, எல்லாம் ஜலதோஷ ஜுரம்தான். போயே ஆகணும்'ணுட்டார். பிற்பகல் மூணு மணி வேளைக்கு, வண்டியிலிருந்து ரெண்டு பேர் தூக்கிண்டு வந்து படுக்கையில் கிடத்தினபோதே நினைப்பு இல்லை."

"ஹூம்—உள் ஜன்னி. ஆஸ்பத்திரிக்கு உடனே remove பண்ணியாகணும், திவாகர், டாக்ஸியை அனுப்பிச்சுட்டேளா? No. இங்கிருந்து G.H. 25 கி. மீ தாங்குமா? இந்த நிலையில், வழியில் ஏதானும் ஆச்சுன்னா?" அவருடைய உரத்த சிந்தனை வயிற்றில் புளியைக் கரைத்தது.

"He should be touching 108. We will get some ice and rub him. இங்கே, நம் அவசரத்துக்கும் தேவைக்கும் கிட்ட ice கிடைக்காது. மருந்து, ஊசி? No, I won't touch him now. The crisis must pass. அப்பப்போ எனக்கு போன் செய்யுங்க. ஒரு பன்னிரண்டு மணிவாக்கிலே வந்து பாக்கறேன். ஏம்மா உங்க வீட்டு மனுஷா, அவங்க வீட்டு மனுஷா? எல்லாரும் ஊரிலேயா? நெனைச்சேன். இந்த சமயத்திலே துணைக் காச்சும் பக்கத்திலே ஆள் இல்லாட்டி கஷ்டம்தான்—"

அவர் போனபிறகு ஓரக்கண்ணால் கவனித்தேன். ஒரு தீர்க்கம் தவிர, அந்த முகத்தில் ஏதும் படிக்க முடியவில்லை. அது கவலையா, பயமா, சொல்லமுடியவில்லை. Damn her! மிதந்து செல்லும் பனிமலையில் தெரிவது அதன் நுனிதான்.

மலையின் உயரமும் அகலமும் கடல் ஆழத்தில் எம்மட்டோ? அப்பத்தான் குளித்தமாதிரி, ஒரு freshness அவளிடம் திகழ்ந்தது.

The Queen Bee.

"உட்காருங்கள், திவாகர், எந்நேரம் நிற்பீர்கள்? Coffee? Tea?"

அவள் சமையலறைக்குப் போனாள். உன்னைப் பார்த்தேன். நீ, நான், அனு இனி ராப்பூரா தனி. இப்படி உன்னோடு இருக்கப் பிடிக்கவில்லை. எந்த சங்கட சமயத்தையும் சந்திப்பதில் மனிதனுக்கு விருப்பம் கிடையாது. அடிப்படை வேறென்ன, பயம்தான். ஆனால் இவளைத் தனியாக விட்டும் போக முடியாது!

கைக்கு ஆவி பறக்கும் கோப்பையுடன் அனு வந்தாள். அவளுடைய ப்ரசன்னமே எனக்கு மாருதம் வீசினாற்போல் ஒரு தென்பாய் இருந்தது, கப் என் கையில் மாறுகையில் கவனித்தேன் நகக் கணுக்களில் என்ன ஆரோக்கியமான ரோஜாத் திட்டு! சுண்டு விரலிலும், அடுத்ததிலும் ஒரு செப்பு மோதிரம், இரண்டு கிராம் பொன் தேறாது. ஒரு நெளி. நெளியில் பதித்த கற்கள் கண்ணாடியென்று காணக் கண்ணாடி வேண்டாம். கட்டை விரலில் சுழி ரேகை அடுக்கில் தனித்தனியாக எண்ணிவிடலாம்.

அந்த சாட்டின் புடவை அவள் நடமாட்டத்திற்கு ஒரு புனிதத்தனத்தைத் தந்தது. கூந்தல் முடிச்சில் சொருகித் தொங்கும் ஜாதிமல்லிச் சரத்தினின்று, திடீர் திடீர் 'கம்'.

இதுபோன்ற நுணுக்கங்களைக் கவனிக்க, தரிசிக்க இதுதான் சமயமா? ஆனால் அது என் இஷ்டமில்லையே! ஆனால் அவை இப்பத்தானே எனக்குத் தென்படுகின்றன! அதுவே ஒரு விபரீதம்தான். நேரத்தின் ப்ருகடை முறுக்கேறியிருந்தது. பின்! இன்னமும் ஏறப்போகிறது. உன் பீதியினால்தான் அவளுக்கு இந்தத் தனி ஒளி:

Stroke, பாஸ்கர்? பக்கவாதத்தில் கொண்டு போய் விடுமோ?

Typhoid? ஆனால் அது இப்படித் திடீர் மூட்டமாய்க் கவியுமோ?

Typhus? நம் ஊரில் சகஜமாக இது கிடையாதே!

மெனஞ்சிட்டிஸ்?

எனக்குத் தெரிந்த பெயர்களை உதிர்த்து, என் அசடு தான் அம்பலமானது எனக்கே தெரிகிறது. ஆனால் இடம், பொருள், ஏவல், இங்கிதம் இன்றி, எந்த இடத்திலும், எப்படியும் தன்னை ஸ்தாபித்துக் கொள்வதில்தான், மனிதனுக்குக் குறி. அதுவும் காரணம் பயம்தான். தன் அநிச்சயத்தின் பயம், சர்வம் பயமயம், ஜகத்.

இருவரும் கட்டிலின் இரு பக்கங்களில், எதிருக்கெதிராய் உட்கார்ந்திருக்கிறோம்.

சுவர்க் கடிகாரத்தில், முட்கள் இரக்கமற்ற தங்கள் மாறாக்கதியில் சேர்ந்தவண்ணம், காலத்தை அதன் அதமத்துக்குப் பொறுத்த அளவில் தனித்தனித் தெறித்து பெரிது பெரிதாக அளந்துகொண்டிருக்கின்றன.

நாங்களும் பொய்.

நீயும் பொய். உன் லயத்தில் உன்னை ஏமாற்றிக் கொள்ள எங்களைப் படைத்தாய்.

பொய் படைத்த பொய் மேல் பொய், ஒன்றையொன்று விழுங்கிக் கொண்டிருக்கிறோம்.

மணி எட்டு, ஒன்பது, பத்து என்பதில் என்னதென்போ?

நடப்பது நடந்து கொண்டேயிருக்கிறது. நடப்பதுதான் நடக்கப்போகிறது.

உன் காய்ந்த உதடுகளை அவ்வப்போது ஈரத்துணியால் துடைக்கிறாள்.

உன் நிலையில் எந்த மாறுதலும் இல்லை.

டாக்டருக்குப் போன் செய்ய என்ன இருக்கிறது? உண்மையில் நாங்கள் சொல்ல வேண்டும் என்று அவர் எதிர் பார்க்கிறாரோ? அவருக்கு ஏற்கெனவே தெரிந்துவிட்டதை நாங்களே நிதரிசனத்தில் தெரிந்துகொள்ள இப்படி ஒரு வழி.

கட்டையாக் கிடந்தபடி பாஸ்கர், என்ன பாடு படுத்து கிறாய்?

மணி பத்து, பதினொன்று...

எனக்குப் பசியென்று தெரியவில்லை. அவளும் அதுபற்றி ஏதும் முற்படவில்லை.

லேசான குளிர் ஒன்று தெரிந்தது. என்னையறியாமலே சிலிர்த்துக்கொண்டேன். ஆனால் இது பனிக்காலம் அல்லவா! ஆனால் இப்போல்லாம், எதுதான் ரீதியில் நேர் கிறது? தொலை தூரத்தில் எங்கோ மழை பெய்து கொண்டிருக்கிறது.

ஜன்னல் கதவுகள் படபடவென அடித்துக்கொண்டன. அனு எழுந்துபோய் அவைகளை அழுந்த மூடி, கொக்கிகளை மாட்டிவிட்டு வந்தாள். உடனேயே வாசற்கதவைத் தட்டும் சத்தம். நான் எழுந்தேன்.

“வேண்டாம்” கட்டளையில் அவள் குரல் கணீர்.

“ஒரு வேளை டாக்டர்—”

“அது டாக்டர் இல்லை.”

பின்னே யார்? ஆனால் நான் கேட்கவில்லை. முதுகுத் தண்டு “சில்”—

அவள் குத்துவிளக்கை ஏற்றிக்கொண்டிருந்தாள். அவள் கண்களில் நீலம் மின்னிற்று. ஏதோ வகையில் மாறியிருந் தாள். அவளே சுடர்போல் தாழ்ந்து, தணிந்து, ஆனால் அமைதியான திடத்தில், விளக்கெதிரே அமர்ந்தாள்.

'மாத்ரே நம:'
சத்யப் பிரசாதினியே நம:
மஹாதாண்டவ மஹாப்ரளய சாக்ஷிண்யே நம:
ஸ்தோத்ர ப்ரியே நம:
தருண்யை நம:
தீரா நம:
விஜயா நம:'

என் மனதில் நின்றதை, வரிசை தப்பி, அவள் சொன்னதைத் திருப்பிச் சொல்கிறேன்.

பிரார்த்தனை மனிதனின் கடைசி அடைக்கலம். இயற்கைதான். நம்புகிறோமோ இல்லையோ? வேறு வழியுமில்லை. இதுவும் ஒரு பழக்கதோஷம்தான். இதுவும் பயத்தின் உச்சத்தின் ஒரு உருத்தான்.

ஆனால் ஒன்று, பாஸ்கர். உனக்காக ஒருத்தி பிரார்த்தனை செய்கிறாள். ஏன்? ஒருத்தி இருப்பதனால்தான். ஒருத்தி மட்டுமன்று. அவள் மூலமாக விருத்தியாக இருக்கும் உன் குடும்பம் உன் முன்னோர்களிலிருந்து உன்வரை தழைத்து வந்திருக்கும் உன் குடும்பம் அவளுடைய பிரதிநிதித்வத்தில் உனக்காகப் பிரார்த்தனை செய்கிறது. ஆனால் எனக்கு?—ஓ இதுஉன் மேல் பொறாமையில் எழுந்த எண்ணம் அன்று (ஆனால் அதையும் எப்படி நிச்சயமாய்ச் சொல்வது?) என் வேளை வரும்போது எனக்காக நானே பிரார்த்தனை செய்துகொள்வதா? இப்பவும் அதில் ஒரு அவமானம் தட்டுகிறது. பயம், பக்தி, நம்பிக்கை எதையும் மறுக்கும் எனக்கு; என் பிரார்த்தனையை, எனக்கும் புரியாத சக்தி, கேட்கப்போகிறதா? நான் எதில் சேர்த்தி? சம்போ சங்கரோவா, அம்போ ஐயகோவா? பாஸ்கர், you lucky guy.

உறவு என்று ஒன்று வேண்டும். இருந்தால்தான் வீடு என்ற களை வரும். நாள் கிழமை, பண்டிகை, பாயஸம், குத்து விளக்கு, கற்பூரம், நமஸ்காரம், ஆசீர்வாதம், உதயம்,

மதியம், சாயங்காலம், இருட்டு, விடிவு, கோலம் இவைகளுக்கெல்லாம் அப்பத்தான் அர்த்தமே ஏற்படுகிறது. இதுவரை எனக்கு இதெல்லாம் தோன்றியதில்லை. அதுவே ஒரு ஆச்சரியம்.

அதனினும் ஆச்சரியம், இதோ அனு பக்கத்தில் நானும் கைகளைக் கூப்பிக்கொண்டு உட்கார்ந்திருப்பதைக் காண்கிறேன். இது எப்போது நேர்ந்தது? அவள் வாயினின்று புறப்பட்டுக் கொண்டிருக்கும் நாமாக்கள் மேல் விளம்புவது போல, நானும் அவளைப் பின்பற்றி என் நாக்கில் உருட்டி உச்சரிக்க முயல்கையில், அலைகள் என் காலடியில் மண்ணைப் பறித்து, என் பத்திரம் பறிபோய், ஒரு பிரம்மாண்டமான நாக்கு என்னை நக்கி உள்ளுக்கு இழுப்பதுபோல—மாட்டேன், மாட்டேன்—

என்ன மாட்டாய்? எதுதான் உன்னால் மாட்டும்? உன் தோத்திரம் உனக்காக அல்ல. அவனுக்காகவும் அல்ல. தோத்திரம் என்று ஒன்று சொல்ல முயல்கிறாயே, அதுவே போதும். எல்லாம் எனக்காக.

"பாஸ்கர்" இருளில் என்மேல் பாம்பு ஊறல் போன்ற இந்த வசியத்தினின்று முழுமூச்சில் என்னை உதறிக்கொண்டு எழுந்தேன். எழுந்து உன்னிடம் விரைந்தேன்.

பாஸ்கர், நீ காகிதமாய் வெளுத்துப்போயிருந்தாய். உன் உள்ளங்கையைத் தொட்டேன். 'சில்' உன் மார்பில் காதை வைத்துத் துடிப்பைத் தேடுகிறேன். நாடியும்—கேள்விக்குறிதான்.

"அனு!"

ஓடிவந்தாள், தழையத் தழையப் பசு.

"ஏமாந்துவிட்டோம்!"

"இல்லை, இல்லை, மாட்டேன், மாட்டேன்—"

எரிமலை வெடித்தது. உன் கால்களை அணைத்தபடி உன்மேல் விழுந்து அவள் வீறிடுகையில், மார்த்துணி நழுவி, தலையவிழ்ந்து, மயிர் வரண்டு, உடலின் பரவாட்டல் பார்க்க சஹிக்கவில்லை.

"முடியாது, முடியாது. மாட்டேன், மாட்டேன்."

எனக்குச் சற்று கோபம்கூட வந்தது. என்ன முடியாது, என்ன மாட்டேன்?

"அனு, We must face facts."

"Facts?" காளி என் மேல் திரும்பினாள் "என்ன Facts ஐக் கண்டுவிட்டாய்?"

"அனு, Look!"

பாஸ்கர், உன் கண்கள் திறந்து, நீ எங்களை அடையாளத்துடன் பார்த்துக்கொண்டிருந்தாய். உன் உள்ளங் காலைத் தொட்டேன். சூடு திரும்பிக்கொண்டிருந்தது. நாடி அசைந்தது. மிக்க பலஹீனமாய், ஆனால் நிச்சயமாக பாஸ்கர், நீ விழித்துக்கொண்டிருக்கிறாய் என்றால், நான் விழித்துக்கொண்டிருக்கிறேனா?

விளக்கில் சுடர் 'சொட சொட.' என்ன பேசுகிறது?

"டாண்! டாண்!" சுவர்க் கடியாரம் ஜயப்ரகடனம் செய்தது.

பாஸ்கர், உன் கண்கள் மூடிக்கொண்டன, நித்திரையில்.

"திவாகர் ஜன்னல் கதவுகளைத் திறவுங்கள்."

நான் திரும்பியபோது அவள், தன் நிலைக்கு வேகமாக மீண்டுகொண்டிருந்தாள். ஆடைகளைச் சரிப்படுத்திக் கொண்டிருந்தாள். ஆனால் முகத்தில் வேர்வை ஜலகண்டமாய்க் கொட்டியிருந்தது.

ஆகவே, எது நிஜம், எது நடக்கக்கூடியது என்பதைக் கூட நிர்ணயிக்க நாம் தகுதியில்லை.

"you love him very much. don't you, அனு?"

"எனக்குத் தெரியாது." அவள் உன்னையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"உனக்குத் தெரியாது என்றால், எதுதான் யாருக்குத் தெரியப்போகிறது! you love him very much don't, you?"

களைப்பாயிருந்தாள். புன்னகை புரிய முயன்றாள்.

"கலியாணம்னு பெரியவா பண்ணி வெக்கறா. இனி மேல் உனக்கு இந்த வீடு இல்லை. இனி இவனேதான் உன் கதி என்று வெளிப்படையாகச் சொல்லாமலும், பச்சை யாகச் சொல்லியும், வம்சம் வழி வழியா, பெண்ணுக்கு வழங்கும் புத்தி—இல்லை, தீர்ப்பு, பரம்பரையா நடந்து வரது. அதுதான் எனக்குத் தெரியும்."

உன்னை வாரிக்கொள்ளும் பார்வையில், உன்னையே பார்த்துக்கொண்டு சொன்னாள். என் பக்கம் திரும்பக்கூட இல்லை. அவளே எங்கிருந்தோ திரும்பி வந்தாற்போல். அத்தனை களைப்பாயிருந்தாள்.

களையாயிருந்தாள்.

"you love him, dont you, அனு?"

"என்னைச் சும்மாவிடு!" எரிந்து விழுந்தாள். "Love எனக்குத் தெரியாது. But want him. இவரில்லாமல் என்னால் முடியாது. உடன்கட்டையேறப் போறேனா? கேக்காதேயுங்கள். ஆனால் இவர் எனக்கு வேணும், எனக்கு வேணும், எனக்கு வேணும், வேணும், வேணும். வேணும்—"

அதற்குமேல் கோர்ட் கிடையாது.

'பதிம் தேஹி பதிம் தேஹி பதிம் தேஹி'

கதை இங்குதான் கேட்டாற் போலிருக்கிறதே!

இப்போது களைப்பில் நான் சாய்ந்தேன்.

பாஸ்கர், அனு சக்தியில் நீ மீண்டாயா? காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்ததா? Crisis எனும் மதில்மேல் பூனை சரியான இடத்தில் குதித்ததா? ஈதெல்லாம் பதிலே கிடைக்காத கேள்விகள். அவரவர் பூத்ததற்குத் தக்கபடி. கேள்விகள்மேல் சுமை ஏற்றும் மழுப்பல்கள், பதில் ஆகா. கண்ணாமூச்சி கண்டுபிடிப்பு ஆகிவிடாது.

ஆனால், பாஸ்கர், காதல், காதல் என்று சொல்லிக் கொண்டு காலம் காலமாய், காவியமாகவும், கவிதையாகவும், கதைகளாகவும், பெருமூச்சாகவும், மலையாய் I want him—எனக்கு அவன் வேணும்—இப்படியும் தேவையெனும் பெயரில். இப்படியும் ஒரு மகத்தான மூர்க்கம் உண்டா? என்ற வியப்பு எழுந்ததகணமே—இந்த மூர்க்கத்தைக் கண்கூடாகக் கண்டதே ஒரு மகத்தான அனுபவம்தான். இந்த வேணும் பொருளாய் விளங்கும் உனக்குக்கூட இந்த தரிசனம் கிடையாது—ஆனால் எதேச்சை வழிப்போக்கன் எனக்குக் கிடைத்துவிட்டது.

இந்த உணர்வு தன் பட்டாசுத் திரிக்கூத்தை என்னில் ஆடியதக்கணமே, என்னுள் கடல் பொங்கி நுரை வழுக்கி, I fell in love with your wife. கூடவே என் வெறுமையின் வெறிச்சு, அதன் முழு பயங்கரத்துடன் கரடி தழுவியதும் நான் பொடிப் பொடியாக நொறுங்கிப்போனேன்.

Ah the beautiful flood of tears!

"Tea, திவாகர்? or Coffee?"

இனி எழுத அதிகம் இல்லை. ஏன், ஏதுமில்லையென்றே சொல்வேன்.

தரிசனம் என்பதே ஒரு தடவைதான். அதுபற்றித் திரும்பத் திரும்ப மிச்சமெல்லாம், பிறரையும் தன்னையும் ஏமாற்றிக்கொள்ள, அதற்குக் காட்டும் கிச்சுகிச்சு.

இதற்குப்பிறகு உன் வீட்டுக்கு நான் வருவது தானாகவே குறைந்துபோயிற்று. நீகூடக் கேட்டாய், உன்னிடம் என்ன சொல்வது?

அவள் கேட்கவில்லை. கேட்கமாட்டாள். அன்று நான் அவள் உயிரை நிர்வாணமாகப் பார்த்துவிட்டேன். அப்படி ஒன்று இருக்கிறதா? என்ன என்று கேட்கிறாயா? இருக்கிற தென்று எனக்கே இப்பத்தானே தெரிகிறது! ஆத்மா என்கிற வார்த்தையை வேணுமென்றே விலக்குகிறேன். ஆத்மாவைப் பற்றி என்ன கண்டேன்?

உயிரின் நிர்வாணத்தில் Sex கிடையாது. I love her Terribly. அவள் நினைப்பில் பற்றி எரிகிறேன. ஆனால் அவள்மேல் எனக்கு இச்சையில்லை. Strange!

புரட்டு பக்கங்களை; The end of the chapter for me.

இந்தக் கடிதத்தை எழுத உட்கார்ந்தபோது, இதைத் தபாலில் சேர்த்ததும் ஊரைவிட்டுப் போய்விடலாம் என்று உத்தேசித்திருந்தேன். எழுதி முடித்ததும் அது end of the chapter ஆகாது என்று தெரிகிறது. எங்கு போனாலும் என்னோடு இருக்கிறேனே! கேட்கிறேன். உண்மையில் இங்கே என்ன இருக்கிறது? முதலில் உண்மை என்பதே என்ன? எனக்கு இப்போ தோன்றுகிறது, Truth is an explosion.

வெடித்த பின்னும் மிச்சமிருப்பின் அது உண்மையான உண்மை அன்று.

George sawnders என்று ஒரு சினிமா நக்ஷத்ரம். தூக்க மாத்திரைகளை விழுங்கிவிட்டு அவன் இறந்துபோனபோது ஒரு குறிப்பை விட்டுவிட்டுப் போனான்.

"I am bored with life"

தன் உயிரின் உரிமையை முறையாக உபயோகித்தவன் என்று சொல்வேன்.

மானஸ்தன்.

'So, now, ஒரு தம்.'

புகைத்துக்கொண்டே, கடிதத்தைத் தலையிலிருந்து அடிவரை படித்தான். ஒரு கணத் தயக்கத்தின் பின் சட்டென முடிவுக்கு வந்தவனாக, அதை நாலு சுக்கல் களாகக் கிழித்து. தீக்குச்சிச் சுடருக்கு இரையாகிச் சுருண்டு, விண்டு கீழே விழும்வரை காத்திருந்தான்.

என் கருகல்.

உதடுகளில் புன்னகை அரும்பிற்று.

அலமாரியிலிருந்து சீசாவையெடுத்துக்கொண்டு கட்டி லில் உட்கார்ந்து, மூடியைத் திறந்து, குப்பியை ஆட்டி ஆட்டி, மறு உள்ளங்கையுள் மாத்திரைகளை உதிர்க்க ஆரம்பித்தான்.

—அமுதசுரபி

# தரிசனம் வேண்டாம்

முள்வேலியுள் வீடு. வீட்டுக்கு வெளியே, வேலிக்குள் சிமிட்டி மேடைமீது கால்களை நீட்டியபடி, நாற்காலியில் சாய்ந்தபடி ஏதோ குருட்டு யோசனை.

கிணற்றடியில் பிள்ளையாண்டான், லாடம் அடிக்க வீழ்த்திய மாடைப்போல் 'யமாஹாவை'க் கிடத்தி என்னத் தையோ நோண்டிக்கொண்டிருக்கிறான்.

பால் இன்னும் வரவில்லை. காப்பி காணாமல் மண்டை யிடியில் அவள் எல்லார்மேலும் எரிந்து விழுந்துகொண் டிருக்கிறாள்.

பசி வயிற்றைக் கிள்ளுகிறது. ஆனால் இந்த சமயம் வாய் திறந்து ஒன்றுக்கொன்று வார்த்தை தடித்துப்போனால், தாங்கிக்கொள்ள இப்போதெல்லாம் சக்தியில்லை.

என் ஜன்னலுக்கெதிரே செம்பருத்திப் பூ ஒன்று கைக் கெட்டா உயரத்தினின்று சிரிக்கிறது. உன் பெருமையும் ராங்கியும் இன்று ராத்தாளாது. நாளைக் காலை, தலை யவிழ்ந்து, அலங்கோலமாய் இதழ் குலைந்து காலடியில் கிடப்பாய்.

ஓ, இந்த எண்ணத்தில் எனக்கும் சந்தோஷமென்று நினைக்காதே. நான், என் மாலையில் இருக்கிறேன், மாலை யென்ன, இருட்டே வந்தாச்சு.

கீழ் கறுத்து, மேவானில் சாயங்கள் தோய்கின்றன. ஆனால் இன்னும் கொஞ்சநேரத்தில் நீர்த்துப்போய்... இப்பவே ஆங்காங்கே இருளின் 'ரிப்பன்கள்', மரங்களி னின்று, செடிகளினின்று, முள்வேலியினின்று தொங்கி, காற்றில் அலைய ஆரம்பித்துவிட்டன. வேளை முதிர முதிர, இருள் தன் கறுப்பு அங்கியை அடர்த்தியாகத் தானே முடைந்துகொண்டுவிடும்.

தெருவில் நடமாட்டம் அவசரமாகிவிட்டது. ரயிலடி வீட்டுக்கு மிக்கக் கிட்ட. வேலையிலிருந்து, பள்ளியிலிருந்து, அவரவர் ஜோலியிலிருந்து சிறுவர், சிறுமியர், ஆடவர், பெண்டிர் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். ரயிலடிக்குப் போய்க் கொண்டுமிருக்கின்றனர், பெரிய ஸ்டேஷனுக்குப் போய், பெரிய ரயில்களைப் பிடிக்க,

இது, இந்தக் காக்ஷிதான் என் பொழுதுபோக்கு, என்னைப் போன்றவர்க்கு.

வாசலுக்கு வெளியே ஒரு பசு மாடு; கள்ளப்பார்வை யோடு நிற்கிறது. ஏன் என்று எனக்குத் தெரியும். ஆடி விதைகள் கண்டிருக்கும் முளைகளைப் பதம் பார்க்க. ஏற்கெனவே ருசி கண்ட மாடு. அவ்வப்போது அவளுடைய கூக்குரல்கள், இடும் சாபங்கள் சான்று.

ஆனால் ஒன்றிரண்டு வாழைக் கன்றுகளிலிருந்து பயந்து கொண்டே எட்டிப் பார்க்கும் குருத்துக்கள், தொட்டியில் கொத்தமல்லித் துளிர்கள், ஓரிரண்டு பூச்செடிகள், இவ்வளவு தான். இதற்குமேல் இந்த மண்ணுக்குச் சக்தியில்லை.

நேற்றுவரை வாசலுக்குக் காவல் இரண்டு பூவரசுகள் நின்றிருந்தன. இன்று ஒன்றுதான் நிற்கிறது. மற்றதை வெட்டித் துண்டம் போட்டு வேலியோரமாக அடுக்கியாகி விட்டது. வீட்டில் இதுபற்றி இரண்டு கட்சிகள். "மரம் நிழல் தருகிறது. குளுமை தருகிறது இருந்து விட்டுப்

போகட்டும்.'' மறுகட்சி: ''உதிரும் இலைகள் ஒரு அடி ஆழத்துக்குக் குப்பை. உள்ளே பாம்பு இருந்தாலும் தெரியாது. பெருக்கிப் பெருக்கி இடுப்பு விட்டுப்போறது. இடி விழுந்த மரம்தானே!''

அழிக்கும் கட்சிதான் ஜெயிப்பு. எப்பவுமே அப்படித் தானே!

வருடக்கணக்காக பார்வை பழகிப்போன மரம். இப்போ அதன் இடத்தில் அதைக் காணாமல் 'திக்'கென்கிறது.

''ஸார், எக்ஸ்க்யூஸ்மி, உள்ளே வரலாமா?''

நினைத்ததற்கும் சீக்கிரமே கவிஞ்கிபோச்சு. வாசலில் ஒரு உருவக்கோடு.

''கண்ணாடி போட்டால்தான் நான் ஆள்'' என்று சொல்லிக்கொண்டே, மேடைமீது கிடந்த மூக்குக் கண்ணாடியை எடுக்குமுன்—

"Don't bother—'' உள்ளே வந்து என் கையிலிருந்து மெதுவாகப் பிடுங்கி மேடைமீது வைத்துவிட்டு, மேடையில் உட்கார்ந்தாள்.

Hope you don't mind—'' இப்படி அனுமதியில்லாமல் நுழைந்து உங்கள் நேரத்தை ஆக்ரமிப்பதை.''

கண்ணாடியை அணிந்துகொண்டேன் (அவள் சொன்னால் கேட்கணுமா என்ன?).

குரலின் திடத்துக்கு உடம்பு ஆகிருதியில்லை. தோளில் மாட்டியிருந்த பையை (டிபன் சம்புடம்)க் கழற்றிப் பக்கத்தில் வைத்துக்கொண்டாள். அழகென்று அடித்துச் சொல்ல முடியாதானாலும், முகத்திலும் பாவனைகளிலும் ஒரு இயல்பான நேர்த்தி தெரிந்தது. அவள் உட்கார்ந்திருந்த வாகில், தெரு விளக்கின் வெளிச்சம், அவள் முகபாவங்களை அங்கஅசைவுகளை ஏற்றிற்று.

''நாம் இதற்கு முன் சந்தித்திருக்கிறோமா?''

"அது அவசியமா?"

மௌனமானேன்.

"ஸார்; ரூடாயிருக்கணும்னு எண்ணமில்லை. உங்களை எனக்குத் தெரியும். ஆனால் என்னை உங்களுக்குத் தெரிந்திருக்கக் காரணமில்லை. நான் உங்களுடைய வாசகி.

"Nice."

"தினமும் காலையும் மாலையும் இந்த வழியாத்தான் போறேன் வரேன்"

Employer?"

"உம். டவுனில் ஒரு சின்னக் கம்பெனிதான். டைபிஸ்ட்."

"I see. ஸார் என்ன பண்றாரோ?"

"ஸார் இருந்தால்தானே! No, 'sir' for me."

வெடுக். இஷ்டமில்லாத பதில் என்ன அர்த்தம்? ஆனால் தெரிந்து எனக்கு என்ன ஆகவேண்டும்?

"காலையில் நேரம் பற்றாது. எல்லாமே ஆபீஸ் அவசரம். மாலையில் திரும்பி வரும்போது சில சமயங்களில் இப்பப் போலவே உட்கார்ந்திருப்பேன். ஆனால் ஏதோ கூச்சம். நான் அப்படியொன்றும் லஜ்ஜைப்படுவர்களில் சேர்த்தியில்லை. இருந்...தா...லும்..." இழுத்தாள். "உங்கள் எழுத்து உங்களைப்பற்றிக் கொடுக்கற இமேஜ்னு நினைக்கிறேன். 'இந்த மனுஷன் அண்டவிடுவாறா?" ஆனால் இன்று தூரத்திலேயே உங்களைப் பார்த்ததுமே முடிவு பண்ணிவிட்டேன் இப்படியே எத்தனை நாள் தள்ளிண்டு போறது?"

"Thank you. ஆனால் நான் அப்படி நெருப்பு நடுவில் நின்றுகொண்டு இருக்கிறேனா பார்?"

"Not that. எல்லாருமே நமக்கு நாமே பண்ணிக்கிற அர்த்தம்தான். என்னுடைய பதினஞ்சாவது வயசிலிருந்தே நீங்கள் எனக்குப் பழக்கம். I mean உங்களுடைய எழுத்து." அவள் சிரித்தபோது, முகத்திலிருந்து ஐந்தாறு வருடங்கள் உதிர்ந்தன. என்ன வயதிருக்கும் முப்பது, முப்பத்தி அஞ்சு? முகத்தில் ஒளியும் நிழலும் மாறும் வேகத்தில், வயதை ஸ்திரம் பண்ண முடியவில்லை.

"Thank you" என்றேன்.

'என்னா அம்மா அப்போத்தான் செத்துப்போனாள்.

இவள் யாரோடு பேசினாலும் இப்படி 'ஷாக் ட்ரீட்டு மெண்ட்தானோ?

என் பையன் இரண்டு தம்ளர்களில் காப்பி கொணர்ந்து எங்களிடையே வைத்துவிட்டுப் போனான். பால் எப்போ வந்தது? விருந்தாளியை எப்போ உணர்ந்தாள்? அதெல்லாம் புரியாத குழப்பங்கள். None of my busniess. காப்பியைக் காணுவோமா என்றாகிவிட்டது. காப்பி நன்றாக இருந்தது.

அவள் சீப்பிக் குடித்தது எனக்குப் பிடிக்கவில்லை. ஆனால் என்ன செய்ய முடியும்?

"நாங்கள் சின்னக் குடும்பம் அப்பா, அம்மா, நான், தம்பி. ஏழ்மையான குடும்பம்தான். ஒரு காலத்தில் சரியாத் தானிருந்தோமாம். அப்போ கூட்டுக் குடும்பம். அந்தக் காலத்து மிராசுதர்பார். நிலத்தைப் பண்ணையாளிடமோ, குத்தகைக்காரனிடமோ விட்டுவிட்டு வாசல் திண்ணையில், பக்கத்தில் வெற்றிலைச் செல்லம், பறங்கிக்காய்ப் பெரிசுக்கு வெள்ளிக் கூஜாவில் தீர்த்தம், போது போவதே தெரியாமல் சீட்டாட்டம். இந்த வர்க்கம்பற்றி என்னைவிட உங்களுக்கே தெரியும். நேரில் பார்த்திருப்பீர்கள். இவர்களுடைய தர்பாருக்கு எதிரே கை கட்டிக்கொண்டு, சிரம் குனிந்து நின்றுகொண்டிருந்த காத்தான், செல்லான், முருகன்,

சுடலைகளே ஒருநாள்—இல்லை, படிப்படியாக இவர்களை விழுங்கி விட்டார்கள். சட்டமும் அவர்கள் பங்கிலிருந்தது. கூட்டுக்குடும்பம் உடைஞ்சு சுக்கல் சுக்கலாச் சிதறிப்போச்சு. அதில் ஒரு சிதறல் நாங்கள். நாங்கள், எனக்கு நினைவு தெரிஞ்ச நாள் முதல் சிரமம்தான்.

அப்பாவைப் பார்த்தாலே பயமாயிருக்கும். புரியாத பயம். அப்பா முகத்தில் கோபம் தனியாத் தெரியல்லே. ஆனால் உள்ளூரத் தன்னைத்தானே தஹிச்சுண்டு—ஓ, உங்களுடைய பாத்திரங்களில் இதுமாதிரி அலாமிகள் வரா."

ஆனால் அப்பாவையும் முழுக்கச் சொல்வதற்கில்லை. நல்ல காலம் பார்த்தவராச்சே! சாந்தவர்கள் சமாதானமாக மாட்டார்கள். ஆகவே அப்பாவின் முன்னிலையிலிருந்து அம்மாதான் எங்களுக்குத் தஞ்சம்.

அப்பாவுடன் தானும் இழந்த வாழ்வு, அம்மாவை அப்பா அளவுக்குப் பாதிக்கவில்லை. பாதிக்கவேயில்லையோ, அம்மாவோ வேறே. தனியென்றே சொல்லவேண்டும். அவளும் நல்ல இடத்திலிருந்து வந்தவள்தான். வீட்டுக்கு ஒரே பெண். செல்லப்பெண். நிறைய சீரும் செனத்தியுமாத் தான் வந்தாள். ஆனால் குடும்பத்தின் ஆடிக்காற்றில் அடிச்சுண்டு போனதைத் தனியாக் கணக்கிட முடியுமா? கணக்கிடலாமா?

ஓ, இப்படிக் கொட்டி ஆத்திக்கத்தான் உங்களைத் தேடி வந்தேன் என்று எண்ண வேண்டாம். நான் எந்தத் திட்டத்துடனும் வரவில்லை. பேச்சுப் போறது அப்படி. அதற்கு நான் மன்னிப்புக் கோரப்போவதில்லை. என் அம்மாவைப்பற்றிப் பேசறேன். நீங்கள் அம்மாவைப்பற்றி நிறைய எழுதியிருக்கேள். எழுதறேள். உங்கள் எழுத்தம்மாவோடு என் அம்மா அங்கங்கே இடிக்கறா. அல்லது அப்படி நினைச்சுக்க எனக்குப் பிடிக்கறதோ என்னவோ."

அவள் தலையை உதறுகையில் நடு வகிடிலிருந்து இரு பக்கங்களிலும் கூந்தலின் வீழ்ச்சிகள், கத்தி வீச்சுக்கள் போல் அலைந்தன.

"உலகம் பூரா ஒரே அம்மா" முனகினேன்.

"ஆ, அதையும் எழுதியிருக்கேள். ஒருவேளை அது தான் என்னை இங்கே இழுத்ததோ என்னவோ?"

தலைக்கு நேரே பூவரசங்கிளையில் கூட்டில் குஞ்சுகளின் ஆரவாரம். தாய்ப்பக்ஷி திரும்பியிருக்கிறது. இனி இன்று வெளியே போகாது.

"அம்மா artist. அவள் ஓவியம் தீட்டவில்லை. கதை எழுதவில்லை. கவிதை புனையவில்லை. ஆனால் artist. இன்னதென்று வார்த்தையாலோ விரலாலோ தொட்டுச் சொல்ல முடியாது. ஆனால் 'அது' அவளிடமிருந்தது. The elusive it. விரலைச் சொடுக்கினாள். "yow know what I mean? தான் அபூர்வமான நல்ல நேரங்களில் அப்பாவே சொல்வார். "அவள் நல்ல Stock; yow know what I mean? மேன்மக்கள் அதாவது அவள் உடுத்தினது பருத்தி ஆனாலும் அவள்மேல் அது பட்டின் அந்தஸ்து பெற்றது. வாக்கு அவள் நாக்கு நுனியிலிருந்து உதிர்கையில், தனி ஓசை, நளினம், ஜதி கொண்டன. அவளைப்பற்றி நிறையப் பேசறேன். அப்படியும் நான் எண்ணியபடி வெளிக்கொண்டு வரப் போதவில்லை.

அடங்கினாள்.

காத்திருந்தேன்.

தெருவிளக்குப் 'பொட்டென' அணைந்தது. எங்களை இருள் சூழ்ந்துகொண்டது. இது இப்படித்தான் 'மக்கர்' பண்ணும்.

அப்போத்தான் பூத்த மலர் மணம் எதிர்த்திசையினின்று வருகிறது.

காலையில் பூக்கும் பூக்கள்
மாலையில் பூக்கும் பூக்கள்
சில அந்தியில், இரவில் சில
சில நடு நிசியில்

இங்கே நட்டதில் குறைச்சலில்லை. தண்ணீர் விட்டதில் குறைச்சலில்லை. ஆனால் இந்த மண்ணுக்கு இவ்வளவு தான்; நீ புழுங்கினாலும், ஆறினாலும், தேறினாலும் மணக்கும் பூக்கள் எல்லாம் மாற்றான் தோட்டத்து மலர்கள்.

"அம்மாவின் விரல்கள் அற்புதமானவை. நீண்டு, மெலிந்து, நுனி கூம்பி, வீணையின் ஸ்வரக் கட்டுக்களை அவை நெருடுகையில், மேல்பாய்கையில், பதுங்குகையில், ஓடுகையில், தேடுகையில், தயங்குகையில், நாதங்கள் புறப்பட்டு அவள் விரல்களினிடையே ஒளிந்து விளையாடுவதைக் கவனித்துக்கொண்டேயிருப்பேன். அலுக்காது. அப்போ சங்கீதத்தைப்பற்றி எனக்கென்ன தெரியும்? இப்பத்தான் என்ன தெரியும்? ஓ, விடுங்கள். 'உனக்கு ஆசையில்லை. ஆசையில்லாதவளுக்குச் சொல்லிக் கொடுக்கமாட்டேன்' என்று அம்மா தீர்த்துச் சொல்லிவிட்டாள்.

ஓ, நான் சொல்லவில்லையோ, அம்மா வைணீகை என்று? அம்மா தன் வீணையைத் தன்னோடு கொண்டு வந்தாள். அந்தக் குடும்பமே ஸங்கீதப் பரம்பரை. அம்மாவின் வீணை அவளுடைய முப்பாட்டனார் வாசித்ததாம். நேரம் கிடைத்தபோதெல்லாம் அம்மா அத்தோடுதான் இருப்பாள். அம்மாவின் வித்வத்தை எடைபோட இந்த வீட்டில் யாருக்கும் யோக்யதை கிடையாது.

அம்மாவின் சாதகத்தில் எனக்கு ஆலாபனை, பாட்டு, ஸாஹித்யம்—தனியாகத் தெரியவில்லை. நாதவீதியில் அவளுக்கும் வீணைக்கும் இடையே ஏதோ சம்பாஷணை, சிந்தனைப் பெருக்கு; இல்லை வீணைமூலம் தாத்தாவுடன் பேச்சு? இதெல்லாம் என் எண்ணம். அசட்டு எண்ணம்.

ஆனால் முற்றிலும் அசடா? ஏனெனில் வீணைக்கும் அவளுக்கும் இடையே ஒரு தனி உறவு கொண்டாடியது போலத் தோன்றிற்று. சிறுத்தையை முதுகைத் தடவி, அதன் புள்ளிகளை ஒவ்வொன்றாய் எண்ணி, அதில் சிறுத்தை உறக்கம் கலைந்து தனி விழிப்புப்பெற்று Scrry cr am I sorry?

ஓரிரவு—

எனக்குத் தூக்கத்தில் கனா மாதிரி ஏதோ சத்தம் கேட்ட மாதிரி. விடிகாலையில் அலறல் சத்தம் கேட்டுத் தூக்கம் வெடுக்கெனக் கலைந்து அலறிப் புடைத்து எழுந்து விழுந்தடித்துக் கொண்டு ஓடினால்—

கூடத்தில் அம்மா மார்க்குலையில் கையை வைத்துக் கொண்டு நின்றாள். எதிரே பாயில் வீணை ரெண்டு துண்டாய்க் கிடந்தது.

தலைக்கு நேரே பட்சிக்கூட்டில் "க்றீஈச்" திடுக்கென்றது. வெட்டின தண்ணீர்போல் எங்கள்மேல் மௌனம் மூடிக்கொண்டது.

நேரம் கழித்து.

என்ன? எப்போ?? எப்படி???

கேள்விகளுக்குக் குறைச்சலில்லை. பதில் கிடைத்து விட்டால், வீணை ஒட்டிக்கொண்டுவிடுமா?

வேலைக்காரி இன்னும் சாணி தெளிக்கவே வரவில்லை.

எலி? பெருச்சாளி தட்டிவிட்டிருக்குமா? இத்தனை நாள் இல்லாமல் இன்னிக்குப் புதுசாவா? அதன் நீலப் பட்டுறையில் எப்பவுமே பட்டுப்பாயில் மல்லாக்க வைத்திருக்கும் வீணை இன்றுவரை இப்படியே இருந்துவிட்டு எலி தள்ளிப் புரண்டுவிடுமா? அப்படி எலியும் மெனக்கெட்டு எத்தனை 'தம்' பிடிக்கணும்!

தம்பி விஷமக் கொடுக்குத்தான். ஆனால் இன்னும் படுக்கையைவிட்டு எழவேயில்லையே! நேற்று எல்லாரும் படுக்கப் போகும்போது வீணை சரியாத்தானேயிருந்தது? நடு இரவில் எழுந்து தள்ளிவிட்டு வந்து படுத்துக்கொண் டானா? அசட்டுப்பிசட்டுத் தனமாய் எண்ணுவதற்கும் ஒரு எல்லை கிடையாதா?

அப்பா அறையைவிட்டு எழுந்துவந்து எங்கள் தோற்றத் தைக் கண்டு நேரே அம்மாவிடம் போய் அவளை அணைத் துக்கொண்டார். அவர் கண்கள் பெருகின. அம்மாவையும் அப்பாவையும் அப்படிப் பார்த்தது அதுவே முதல் தடவை. கடைசித் தடவையும் அதுதான்.

அன்று அந்த அலறலுக்குப் பிறகு ஆத்திரமாவோ அழுகையாவோ அம்மாவிடமிருந்து அந்த மாதிரி சத்தம் வரவில்லை.

ஆனால் வீணையோடு அவளும் சேர்ந்து உள் முதிர்ந்து போய்விட்டாள் என்று எங்களுக்குத் தெரிந்தது. ஆனால் வெளிக் காண்பித்துக்கொள்ளமாட்டாள். Slender and proud. சில சமயங்களில், யோசனையில் பூமியை விரல் நுனிகளால் தட்டிக்கொண்டு... வீணை ஞாபகம். விரல்களின் வழி அவளுக்கு மட்டும் கேட்ட நாதம் கசிந்ததோ? நாத சிந்தாமணி என்று ஒரு ராகமிருக்கிறதாமே!

எதிலுமே அப்புறம் அம்மாவுக்கு முனைப்பு இல்லை. ஒரு காட்சி நினைவில் பிதுங்குகிறது. இதோ இந்த நிமிஷம் சொல்லும்படியாக.

இது மாதிரிதான் அந்தி முன் குறிகள் ஏதுமில்லாமல் திடீரென மழை. கொட்டோ கொட்டெனக் கொட்டிற்று. கூடத்து ஜன்னலில் பதித்த கண்ணாடித் தகடுகளின்மேல் தாரைகள் வழிந்தன. வழிந்துகொண்டேயிருந்தன. அம்மா படுக்கையினின்று எழுந்து கைகளை விரித்தபடி அங்கு

நோக்கிச் சென்றாள், யாரோ விளித்தமாதிரி. சுவாமி அலமாரியில் அகல் சுடரின் மங்கிய ஆடும் வெளிச்சத்தில் கூடத்தின் இருள் தீவிரம் கொண்டது. என்னவோ அவள் உதடுகள் அசைந்தன. ஆனால் எனக்குக் காது கேட்டது.

"வானத்தின் கண்ணீர் பூமியைக் கழுவுகிறது."

எனக்குப் புல்லரித்தது.

"சியாமளீ!"

"அம்மா!" ஓடிப்போய்க் கட்டிக்கொண்டேன்.

என் தலையைச் செல்லமாக் கோதிக்கொண்டே 'பாவம் சியாமளீ—உன் தலையில் பெரிய கனத்தைச் சுமத்திட்டுப் போறேன். உஷ், அழாதே—அதெல்லாம் அப்புறம், அப்புறம்—'

"அப்படியெல்லாம் சொல்லாதேம்மா! எனக்குப் பயமா யிருக்கு" என்று தேம்பினேன்.

"பயப்படாதே." அணைத்துக்கொண்டாள். "பயந்தால் உன்னை விட்டுடுமா, என்னை விட்டுடுமா? நீ சமத்து. எனக்குத் தெரியும்."

"பயமாயிருக்கேம்மா!" அழுதேன்.

அவள் பார்வை ஒளி கூட்டிக்கொண்டு, என்னை இந்த ஜன்ம மட்டுமல்ல, அதற்கும் முற்பிறவியிலிருந்தே அடையாளம் கண்டுகொண்ட கனிவுடன் என்மேல் குனிந்தது.

'ஒண்ணு கேளு. கலைமகளில் ஒரு கதை வந்திருக்கு அதைப் படி. மனசுக்குத் தெளிவு ஏற்படும். சொல்லிக் கொண்டே என்மேல் தாங்கியபடி படுக்கைக்குச் சென்று சாய்ந்தாள். இப்படித்தான் படிச்சு, மனசைத் திசை திருப்பிப் பள்ளம் விழுந்த இடத்தை இட்டு நிரப்பிக்க வேண்டியதுதான். வாழ்க்கையில் வேறு என்னதான் இருக்கு?' கண்ணை மூடிக்கொண்டாள். அசதி ஆயிட்டுது.

பத்து நாட்கள் கழிச்சு அம்மாவை எடுத்துண்டு போய், ஆத்து மணலுக் கந்தண்டை, கருவேல மரத்தடியில் வெச்சாச்சு.

அப்பாமேல் கவிஞ்ச புழுக்கம் முன்னிலும் ஸஹிக்க முடியல்லே. கண்கள் பாட்டுக்குப் பெருகியபடியே, மனுஷன் பேசமாட்டான். அம்மாமேல் இவ்வளவு தாங்கிண்டா இந்த மனுஷன் இருந்தார்? இப்படி உள்ளேயே வெச்சுண்டு இருப்பானேன்? வாய்விட்டு வீற மாட்டானா? எந்த நிமிஷம் வெடிப்பானோ? இது அம்மா போன பயத்தைக் காட்டிலும் பயமாயிருந்தது.

ஆமாம், வெடிச்சார் ஒருநாள். எப்படி? ஒரு பக்கம் விழுந்து, நாக்கும் இழுத்துவிட்டது. எழுதிக் காண்பிக் கட்டும்னு நோட்டும் பென்சிலும் கொடுத்தால் எழுத்து கிறுக்கிண்டு போறது. கண்கள் பேசத் தவிக்கின்றன. என்னவோ சொல்லப் பார்க்கின்றன. ஆனால் கண்ணுக்குத் தெரிந்த பாஷை கண்ணீர்தானே! அவைபாட்டுக்குப் பெருகியபடி.''

தூண்டிய சிந்தனையில் இருவரும் ஆழ்ந்து எந்நேரமோ? நாங்கள் அமிழ்ந்துபோன நிசப்தத்தினின்று ஒரு பெரும் பெருமூச்சு எழுந்தது. நாங்கள் இல்லை. பூமியின் கேவலா? தனி மரம் ஒண்டிமரம் பூவரசா?

''ஸார், உங்களிடம் அனுதாபம் வேண்டவில்லை. ஆனால் எனக்குக் கிண்ணம் விளிம்பு துளும்பிற்று. அப்பா வுக்குக் கையில் சாதத்தைப் பிசைந்து வைக்க வேண்டும்; சமயங்களில் ஊட்டவும் செய்ய வேண்டியிருந்தது; குழந்தை பெறாமலே நான் தாயாகிவிட்டேன்.

பிறகு எங்கள் அரிச்சந்திர புராணமெல்லாம் உங்களுக்கு வேண்டாம். பட்டணம் போக முடிவெடுத்து—முடிவு என்னுடையதுதான்—கிராமம் நீங்கள் எழுதும் Fairyland

இல்லை—சென்னைக்கு மூட்டை கட்டும்போது, அம்மாவின் ட்ரங்க் பெட்டியை ஒழிக்கையில், அவளுடைய துணிமணி மடிப்பிலிருந்து ஒரு கலைமகள் விழுந்தது. புரட்டின பக்கத்தில் இருந்த கதையின் ஆரம்ப வாக்யமே மனதைச் சுண்டியிழுத்தது. போட்டது போட்டபடி அங்கேயே உட்கார்ந்து படித்தேன். படித்து முடித்தவுடன் அங்கேயே உட்கார்ந்து கொண்டிருந்தேன்; என்னேரம் தெரியவில்ல.

"என்ன கதையோ?"

"காலம் காலம் கற்பார்ந்த காலமாய் என்று ஆரம்பிக்கிறது. அதான் ஒரு ஆற்று மணல் பள்ளத்தில் ஒரு கல்லின் வழுக்கை மண்டை லேசாகத் தெரிகிறது. அதைச் சுற்றி உலகம் நல்லது பொல்லாதுடன் அதன் நியதியில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. கால இயக்கத்தில் ஒரு சம்பவத்தின் முத்தாய்ப்பாய், அதுவே கதையின் முத்தாய்ப்பாய், அதை மூடிக்கொண்டிருந்த குப்பை செத்தைகள் கலைந்து ஒரு ஸ்வயம்புலிங்கம் வெளிப்படுகிறது.

'ஆ! யோகம்.'

"yes. ஒரு தெளிவு உணர்ந்தேன். ஓ, எல்லாமே இது தானா, இவ்வளவுதானா? தெய்வமும் ஒரு சாஷிதான் என்கிற தெளிவு. இந்தத் தெளிவும், அது தந்த ஆதரவும் என்னிடம் நிரந்தரமாகத் தங்கின என்று சொல்ல மாட்டேன். அது சாத்யமில்லை. நாம் மனித ஜன்மம் தானே! ஆனால் கண்ணில் ஒரு கீறு அகன்று திறந்து கொண்டது. திறந்தது மூடிக்கொள்ளவில்லை. அது எனக்கு ஒரு திருப்புமுனை; உங்களுக்குச் சாதனை.

இது தெளிவுதானா? தெளிவோ இல்லையோ கூடவே ஒரு பிடிவாதம் வளர்கிறது. விதியே உன்னால் முடிந்தது இவ்வளவுதானா? என்ற சவாலுடன் வாழ்க்கையை ஏற்றுக் கொள்கிறோம். வேறு வழியும் ஏது? நீ அழுதுகொண்டேயிருந்தாலும் விழிக்கு அக்கரையில்லை.

ஆச்சு; இருபது வருடங்கள் ஓடியாச்சு. தம்பி, 'இங்கே மூச்சுத் திணறுகிறது' என்று வடக்கே பிழைக்கப் போய் விட்டான்.

அப்பா இப்போ படுக்கையாகிவிட்டார். கண்ணுக்குத் தெரிய, நாளொரு இம்மி தேய்ந்துக்கொண்டே வருகிறார். அம்மாவின் மறைவிலிருந்து நான் எப்பவோ தேறிவிட்டேன். ஆனால் இவரால் ஏன் முடியவில்லை? எனக்கு ஆச்சரிய மாவேயிருக்கிறது. கண்ணீர் அருவியாகவே மாறிவிட்டார். முதலில் வடிக்க உடம்பில் இவ்வளவு கண்ணீர் இருக்க முடியுமா? இல்லை கண்ணில் கோளாறா? இல்லை டாக்டர் பார்த்தாச்சு. கண்ணில் ஒண்ணுமில்லை. மனசில்தான் வெச்சிண்டு தவிக்கிறார். சொல்ல முடில்லே. நாக்கு இழுத்துவிட்டதே! அப்பாவைப் பார்த்தால் பரிதாபமா யிருக்கு—"

—"நான் நினைக்கிறேன் ஒருவேளை—"

சடக்கெனக் குனிந்து மூர்க்கமாக என் வாயைப் பொத்தி னாள். ஒருவேளை என்ன—எந்த வேளையும் வேண்டாம். நான் எதுவும் தெரிந்துகொள்ள ஆசைப்படவில்லை சில விஷயங்கள் தெரியாமல் இருப்பதே நல்லது. அவை தெரி யாமலே, உங்கள் கதையின் ஸ்வயம்புலிங்கம் போல, குப்பை செத்தைகளுக்கடியில் புதைந்தே கிடக்கட்டும். தரிசனம் வேண்டாம்.

'விர்ர்ர்'ரென்று எழுந்து போய்விட்டாள்.

அப்புறம் அவள் இந்தப்பக்கம் வரவேயில்லை. ●

—இதயம் பேசுகிறது

# கன்றல்

அவர்கள் பஸ்ஸில் ஏறி தங்கள் இடத்தில் அமர்ந்த போது அவர்களுக்கு முன்னராக பஸ்ஸில் இருவரே இருந்தனர். எதிர் சீட்: ஐரோப்பிய ஜோடி.

கவனத்தை உடனே ஈர்த்தது அம்மாதின் தலைமயிர். அந்தப் பிசுபிசு அடர்த்தி மட்டுமன்று; சாயத்தில் தோய்த்து எடுத்தாற் போன்ற அதன் சிவப்பு. அம்மாதிரி கெட்டிச் சிவப்பு, கூந்தலில் அவன் பார்த்திருக்கமாட்டான்.

அவளோடு இருந்த ஆடவனின் தலைமயிர் பழுப்பு. சருமத்தின் செக்கலோடு இழைந்த செம்பட்டையில் பென்சில் கோடு மீசை எடுப்பாய்த் தெரியவில்லை. புருவம் செம்பட்டை. கண் ரப்பை மயிர்கூட செம்பட்டை.

பொறுமையிழந்தவனாய், அவ்வப்போது கைக்கடியாரத்தை அவன் பார்த்துக்கொண்டிருந்தான். அந்தச் சைகையே இவன் பார்வையை அவன் கைக்கடியாரத்துக்கு இழுத்தது. பொறாமை நெஞ்சைப் பிராண்டிற்று. அந்தக் கடியாரத்துக்கு 'ஆசைப்படவே அந்தஸ்து வேண்டும். தீபாவளிக்கு எச். எம். டி. போடுவதாகப் பேச்சு. தலை தீபாவளி இன்னும் எங்கேயோ இருக்கிறது. அப்படியே இருந்தாலும், இந்தக் கடியாரம் மாதிரி கனவில்கூட நினைக்க முடியாது. தன்னை அறியாது ஒரு 'உஸ்' அவனிடமிருந்து கிளம்பிற்று.

பக்கத்தில் அவள்மேல் திரும்பிய அவன் பார்வையின் அணைப்பில், அதன் ரகசியச் செய்திகளில் சுமதி தலை குனிந்தாள் வெட்கத்தில், மகிழ்ச்சியில், வெற்றியில்.

மஞ்ச உறவின் மர்மமே இதுதான். இந்த விளையாட்டில் கெலிப்பு இருவருக்குமே. அவர்களுள் தனித்தனி நினைப்பு. ஒருவருக்கொருவர் 'உளம் கவர்ந்த கள்வர்.' கலியாண தம்பதிகள் என்கிற நினைப்பே அப்புறம்தான்.

அவர்கள் உட்கார்ந்துகொண்டதும், வெள்ளைக்காரி யின் கண் நீலம் வரவேற்பில் கடலாகியது. கூடவே சங்கோஜம், அவர்களைப் பார்த்துக்கொண்டே, புன்னகை யுடன் அவள் துணையின் காதில் 'கிசுகிசு'த்தாள்.

"My wife says—"

உடன் இருந்தவரை அவர்கள் சம்பாஷணை ஆங்கிலத் தில்தான் நடைபெற்றது. சுமதிக்கு பேச்சுப் புரிந்தது. ஆனால் பங்கு கொள்ள முடியவில்லை. அந்த அளவுக்கு அவளிடம் 'தில்' இல்லை, பாஷையுமில்லை. எஸ். எஸ். எல். சி.யில் 'கோட்' அடித்ததும், 'ட்யுடோரியலி'ல் சேரவோ, தொடர்ந்து படிக்கவோ மறுத்துவிட்டாள். அவள் 'மக்கு' இல்லை. ஆனால் வணங்கவில்லை. அப்பா வுக்குக் கோபம், ஏமாற்றம், வருத்தம். படிப்பு முடித்து. ஒரு குட்டெழுத்தும், தட்டெழுத்தும் தேறி, எங்கேனும் ஒரு கம்பெனியில் சேர்ந்தால் கலியாணத்துக்கு எவர்சில்வர் 'சீருக்'கேனும் சம்பாதித்துக்கொள்ள மாட்டாளா என்கிற சபலம். இந்த நாளில் கலியாணம் எங்கே சுருக்க ஆகிறது?

ஆனால் சுமதி 'ஜக்க'வில்லை. ஆனால் கலியாணமும் அவளுக்கு சுருக்கவே கூடிவிட்டது. ப்ரபுவுக்கும் அவன் பார்த்த முதல் பெண்ணும் அவளே, கடைசிப் பெண்ணும் அவளே. பிள்ளை வீட்டாரும் செலவு விஷயத்தில் ரொம்ப சிரமப்படுத்தவில்லை. "சுமதி அதிர்ஷ்டக்காரி."—வீட்டிலும் சுற்றுப்புறத்திலும் அப்படித்தான் பேச்சு.

"என் மனைவி சொல்கிறாள்—'லேடி'யின் ஸாரி, பின்னல், மலர்கள், வளையல், மிக்க சொக்க அடிக்கின்றன" —(My wife says-the lady's sari, plait, flowers, and bangles are simply bewitching!)

"தாங்க் யூ. நாங்கள் எங்கள் தேனிலவில் இருக்கிறோம்." ப்ரபுவுக்கும் பெருமையில் முகம் ஒளி வீசிற்று.

"ஓ, ஹௌ ஒண்டர்ஃபுல். என்ன நேர்த்தியான ஜோடி!" அவள் தன் உள்ளங்கைகளை ஒன்றுடனொன்று சேர்த்து அழுத்திக்கொண்டு சிரித்தாள். சிரிப்பு 'கோல்கேட்.' ஆனால் மிகமிக இயல்பு. குரல் 'கோலா' குளுகுளு.

"எங்கள் பாராட்டுக்கள்."

"தாங்க் யூ."

நாலுபேர் வண்டியில் சேர்ந்தாற்போல் ஏறிக்கொண்டார்கள். அடுத்தடுத்து அவர்கள் பளுவில் வண்டி தழைந்து அசைந்து கொடுத்தது.

ஐரோப்பியன் மீண்டும் கைக்கடியாரத்தைப் பார்த்துக் கொண்டான். நேற்று 'ஸீட்' புக் பண்ணினபோது டூரிஸ்ட் ஆபீஸ் சிப்பந்தி சொன்னாள்—"7.30 a.m. ஷார்ப். இப்போது மணி எட்டு."

"எங்கள் பங்க்ச்சுவாலிட்டி பேர் போனதாச்சே!"

உளுத்துப்போன ஜோக். ஆனால் எல்லோரும் சேர்ந்து சிரிக்க ஒரு சாக்கு. அதனாலேயே 'மூட்' நிரவலாகி, சங்கோஜம் குறைந்து, பேச்சுக்கு இடம் தாராளமாயிற்று.

"ஓ, இவள் மேரி, நான் வில்லியம்ஸ்."

"என் மனைவி பெயர் சுமதி. என் பெயர் ப்ரபாகர்."

"நமஷ்கார்" இருவரும் கை கூப்பினார்கள். அவள் சிரிக்கும்போது மூக்குத் தண்டு சுருங்கிற்று.

ப்ரபாகர்: "எல்லா இடங்களும் ரிசெர்வ்டுதானே! அதனால் முன்னே பின்னே வரலாமே! பஸ்கூட நிரம்பிவிடும். ஆனால் இந்த உலாவை நடத்தும் கைடு வராமல் என்ன செய்வது? அதுதான் நியூஸென்ஸ்."

"யெஸ், ஃபன்னி!" என்றாள்.

"எனக்கு ஃபன்னியாகப் படவில்லை." அவன் சிடு சிடுத்தான்.

"ஆ கம் ஆன் பில், டேக் இட் ஈஸி. நாம் விடுமுறையை சந்தோஷமாக அனுபவிக்க வந்திருக்கிறோம். ரோமுக்கு வந்தால் ரோமர்கள்போல் செய்வதுதான் முறை. அது தான் உண்மையான சந்தோஷம்."

"மேரி வேலைக்குப் போனால்தானே, அவளுக்கு நேரத்தின் அருமை தெரியப்போகிறது." அவனுடைய புன்னகையில், சலுகையுடன் சிறிது ஏளனமும் கலந் திருந்தது.

ப்ரபாகர், சுமதியை ஓரக்கண்ணால் பார்த்தபடியே, "என் மனைவி வேலைக்குப் போகவேண்டிய தேவை இல்லை" என்றான்.

"நாங்கள் அவ்வளவு அதிர்ஷ்டசாலியில்லையே. அப்படி சொல்லிக்கொள்ள முடியாதே!"

இரு ஜோடிகளும் சேர்ந்தாற்போல் சிரித்தார்கள்.

"இதோ கைடு வந்தாச்சு! நாம் அதிர்ஷ்டசாலிகள்!"

பஸ் எப்படி பரபரப்புடன் அத்தனை சுருக்கில் நிறைந்து விட்டது என்று தெரியவில்லை.

பஸ் புறப்பட்டது. காம்பவுண்டு நிழல் தாண்டி, வெளியே வந்து சாலையில் இடது பக்கம் திரும்பி ஊர்தியுள் சூரியன் பட்டு, அவள் தலைமயிரின் சுருள் குவியலை ஊடு

ருவியதும், ப்ரபு பிரமித்துப்போனான். திடீரெனப் பற்றிக் கொண்டாற்போல் அவள் கேசம் ஜ்வாலை சிவப்பில் திகு திகுத்தது. அதுவே அவனுக்கு—ஏன், பஸ்ஸில் அருகாமையில் இருந்தவர்களுக்குத்தான்— ஒரு காட்சியாயிருந்தது. ரொட்டி அடுப்பின் உட்புறத்தின் கணகணப்பின் சிவப்பு.

அவன் கண்களுக்கு எழாமல் அவன் வீணே அடக்க முயன்ற திடீர் மாறுதலைக் கண்டு அவள் புன்னகை புரிந்தாள். ''ஆமாம், நான்தான் ஒரிஜினல் சிவப்புத்தலை'' என்றாள். ''இதுவே தங்க நிறமாயிருந்தால், என் ஜனங்களுக்கிடையே எனக்கு மவுசு கூடியிருக்கும். ஆனால் என் கணவர் என்னை மணந்ததே என் சிவப்புத் தலைக்குத் தான். இல்லையா பில்?''

''லேடீஸ் அண்ட் ஜெண்டில்மென்.' கைடு தொண்டையைக் கனைத்துக்கொண்டு ஆரம்பித்தான். ''என்னைப் பரிச்சயம் செய்துகொள்கிறேன். என் பெயர் மதுகர். மைசூர் சர்வகலாசாலையில் ஆய்வு மாணவன். இது எனக்குப் பார்ட் டைம்.'' சிரித்தான். கஷ்டப்பட்டு சிரிப்பு. ''நாம் இன்று, ஆம். நான் உள்படத்தான், மைசூரிலிருக்க ரொம்ப பாக்யசாலிகள். மைசூர் சரித்திரப்புகழ் பெற்ற ஸ்தலம். மைசூர் எனும் அரண்மனை நகரம்—''

ஒரு நாளா, இரண்டு நாளா? சொன்னதையே சொல்லிச் சொல்லி, தானே ஆக்கிக்கொண்ட கட்டங்களில் அதே சிரிப்பைச் சிரித்துக்கொண்டு, அதே ஆச்சரியங்களைப் பட்டுக்கொண்டு, பாஷையில் அதே தப்புக்களைப் பண்ணிக் கொண்டு—வாய்ப்பாடு ஒப்பிப்பது போன்ற அவன் வர்ணனை, உற்சாகம், உயிர், உப்புசப்பு அற்று—பிரயாணிகள் அவன் சொல்வதற்குச் செவிமடுக்கிறார்களா என்கிற ஆவல்கூட இல்லாமல், ஏதேதோ தகவல்கள், வருடங்கள், வருடங்களில் சம்பவங்கள் அவன் வாயினின்று ஆங்காங்கே உதிர்கையில் அவனுடைய சொற்கூடு சீக்கிரமே அலுப்புத்

தட்டிவிட்டது. ஆனால் சாதாரணமாகவே கைடு சொல்வதற்குக் கவனம் தந்து, சிரத்தையுடன் யார் கேட்கிறார்கள்? வெகு சீக்கிரமே பிரயாணிகள் சிறுசிறு தனித்தனிக் கொத்துக்களாகப் பிரிந்து ஆங்காங்கே தங்கித் தயங்கி, அவரவர் வழியில் காட்சி காண ஆரம்பித்து விட்டார்கள்.

மற்ற மூவர்களின் பேச்சில் அவர்கள் அளவுக்கு சுலபமாக அவளால் பங்குகொள்ள முடியாவிட்டாலும் (ஆமாம், இதென்ன மைசூர், ரஸத்தில் தெளிவு தேடல் வேண்டிக் கிடக்கு?)—அவள் பங்கு அனேகமாக ஊமைச் சிரிப்புத்தான். சுமதிக்கு அந்தக் கலகலப்பு இன்பமாய்த்தானிருந்தது. அவர்களுடைய பேச்சு சுவாரஸ்யத்தில் அவள் தனியாக விடப்பட்டது அவளுடைய சொந்தக் கனவுகளில் திளைப்பதற்குச் சௌகரியமாயிருந்தது. அவளுடைய புருஷன் அவர்களுக்குச் சரியாகப் பேச்சிலும், பேசும் விஷயத்திலும் ஈடுகொடுப்பது அவளுக்குப் பெருமையாக இருந்தது. தண்ணொளிக் கண்களுடன் சொத்துரிமையுடன், கணவனைப் பார்த்துக் கொண்டாள்.

கலியாணத்தில் மணப்பலகையில் அவர்களிருவரையும் சேர்ந்து பார்த்தவர்கள் அனைவரும், அவள் காதுபட, "சுமதி ப்ரைஸ் அடித்தாள்!" என்று சந்தோஷத்திலிருந்து பொறாமை வரை பலரகப்பட்ட உணர்ச்சிகளில் பேசிக் கொள்கையில் சுமதிக்கு உவகை பொங்கிற்று. இப்பவும்தான் பாரேன், இந்த வெள்ளைக் கொய்யாக்களின் நிறத்துக்கு மட்டாவே அவர் இல்லை. பார்க்கப்போனால், ஒசந்த பஞ்சாப் கோதுமையின் அந்தப் பொன்னிற மேனி, மைதீட்டினாற்போல அடர்ந்த கரிய புருவங்களினடியில், கருவண்டு போல் பளபளக்கும் விழிகள் அந்த மோவாய் குழியைப் பார்க்கும்போதெல்லாம் நெஞ்சை அள்ளுகிறது. முகத்தில், புது சவரத்தின் வழவழப்பான லைட் ப்ளூ.

பெண்ணைப் பார்த்துவிட்டுப் பிள்ளை வீட்டார் போனதும் அன்றிரவு, தாயும் பெண்ணும் தனிமையிலே,

"இவரையே நிச்சயம் பண்ணிவிட அப்பாவிடம் சொல்லம்மா" என்று மகள், தாயிடம் கொஞ்சியபோது, அம்மா, "ஏண்டி, உன் மனசை நீ வெளிப்படுத்திட்டே. உன்னை அவன் பண்ணிக்கத் தயாராயிருக்க வேண்டாமா?" என்ற சந்தேகத்தை எழுப்பியதும், அதற்கேற்றபடி அடுத்து நாலு நாட்கள் கிணற்றில் கல்லைப் போட்டாற்போல் அந்த இடத்திலிருந்து எந்தத் தகவலுமில்லை. அவளுக்கு உள்ளே 'திக்திக்'. அடுத்து என்ன சமாதானமென்று மனம் சொந்தமாக வழி தேடிக்கொண்டிருக்கையில், ஐந்தாம் நாள் சேதி அவள் மனம்போல மாங்கல்யமாக முடிந்தது. அப்படியும் மனதில் ஏதோ அநிச்சயம், பயம், மணவறையின் இருட்டில் அவர் கை தேடி வந்து அவள் கையை முரடாகப் பிடித்த அதற்கே அப்பவே, 'அப்பாடா, நல்லபடியா முடிஞ்சுது' என்று ஒரு தனி மூச்சு தன்னிடமிருந்து வெளிப்பட்டதும்—அத்தனையும் கெலிடாஸ்கோப்.

தற்செயலில் மேலாக்குக்கு வெளியே வந்துவிட்ட மாங்கல்யத்தை அவள் கை நெருடிக் கொண்டது. நடந்ததெல்லாம் கனவல்ல, இப்போது பங்களூர்—மைசூர் வேடிக்கை பார்க்க டூரிஸ்ட் பஸ்ஸில் இடித்துக்கொண்டு, உட்கார்ந்திருப்பது, இடித்துக்கொண்டே காட்சி பார்க்க நடப்பதும் பொய் அன்று. என்பதற்கும் இதைவிட சாட்சி வேறு என்ன வேண்டும்? உள்ளே அலை பொங்கிற்று.

—இந்த கைடு என்ன தொணப்பிண்டேயிருக்கான்? இவன் பேச்சும் விளக்கமும் யாருக்கு வேண்டிக் கிடக்கு. இந்த அரண்மனையில் என் இளவரசும் நானும் நுழைந்து சுற்றிவர இவன் உத்தரவு தேவையா? சந்தோஷம் மிகையானாலே, தனியாக ஒரு அசடு வழிகிறது தனக்கே தெரிகிறது. ஆனால் அதுபற்றி வெட்கமாயில்லேயே! என் மனத்தின் எழுச்சியை பங்கிட்டுக்கொள்ள மனம் தவிக்கிறது. ஆனால் அதன் அந்தரங்கங்களில் சில இவருடன் சொல்லிக் கொள்ளக்கூட சாத்தியமில்லை. கன்னத்தில் ரத்தம்

பாயறது எனக்கே தெரியறது. என் வெட்கம், என் பெருமை எனக்கே சொந்தம். இப்படியும் ஒரு பித்து நிலை உண்டோடி?

ப்ரபுவின் குரல் அவளுடைய மிதப்பலிலிருந்து அவளைக் கீழே இழுத்துக் கொணர்ந்தது. அவர்களிடம் சொல்லிக் கொண்டிருந்தான்: "யு ஸீ, இன்றிரவு ரயிலில் நாங்கள் மதறாஸ் திரும்ப வேண்டும். நாளை நான் ட்யூட்டியில் சேர வேண்டும். டில்லியிலிருந்து இங்கே வரை இந்த இருபது நாட்களில் ரங்கராட்டினம் சுற்றினமாதிரியிருக்கிறதே யொழிய, எங்கேயும் எதையும் ஆற அமரத் தங்கி அனுபவிக்க முடியவில்லை. ரயில் சார்ஜ் வரை பேங்க் கொடுக்கிறது. இன்றிலிருந்து மூன்று வருஷங்கள் கழித்துத்தான் மறுபடியும் இந்த வாய்ப்பு..."

"ஓ, நீங்கள் அப்போது டில்லிக்குப் போயிருக்கிறீர்களா?"

"ஆம், மாம்."

"ஆக்ரா? தாஜ்மஹால்?"

"ஆம், மாம்!"

"தாஜ்மஹால், அதுவே ஒரு அழகிய கனவல்லவா?"

உள்ளங்கைகளை ஒன்றோடொன்று அழுத்திக்கொண்டு, அந்த நினைப்பில் அவள் கண்கள் ஒளிர்கையில் அவைகளில் நீலம் பெருகுவது பிரமையா? அசலா?

அவளை அழகி என்று சொல்வதற்கில்லை; ஆனால் நிச்சயமாக வசீகரம். கூடவே தலைமயிரின் செங்கானல். அவளைச் சிந்திப்பதில் ஒரு கணம் தன்னை இழந்த ப்ரபு சட்டென சமாளித்துக்கொண்டு மீண்டான்.

ஆமாம், தாஜ்மஹால் அழகுதான். மிகமிக அழகு. சலவையில் கவிதை. காதலுக்கு நினைவுச் சின்னம். நிஜமும், கட்டுக்கதையுமாக விஷயங்கள் அதைச் சூழ்ந்துகொண்டு,

காவிய பரிமளம் கமழ்கிறது. ஆனால்..." என்று இழுத்தான். மற்ற இருவரும் கைகளைக் கட்டிக்கொண்டு அவன் சொல்லப் போவதற்கு ஆவலுடன் காத்துக்கொண்டிருந்தனர்.

ஆனால் கட்டடத்தின் உள்ளும் வெளியிலும் சுற்றிப் பார்த்துக்கொண்டே வருகையில் என் மனதில் பட்டதென்ன தெரியுமா? முதலில் இனம் தெரியாதொரு பெரிய விசனத் தேக்கம். அதை இனம் தெரியாது என்று முற்றிலும் சொல்வ தற்கில்லை. எப்படியும் அது ஒரு கல்லறைதானே!

பிறகு, "பார்க்கப்போனால் ஒரு மனிதப் பிறவி இறந்து போனதற்கு இவ்வளவு மகத்தான பாடா, கட்டிடமா? இதற்குச் செலவாகியிருக்கும் சிரமத்துக்கும் காலத்துக்கும் பணத்துக்கும் பொருளுக்கும், நம் பக்கத்தில் ஒரு கோவிலைக் கட்டியிருந்தால், தெய்வ வழிபாடுக்கும் அதன் விளைவால் மன அமைதி ஆறுதலுக்கும், ஆன்ம வளர்ச்சிக்கும், எத்தனை பேருக்குக் காலா காலத்துக்கும் எவ்வளவு பயனுள்ளதாக இருக்கும் என்று தோன்றாமல் இல்லை. விட்டுச் சொல்லி விட்டேன்."

சிறிது நேரம் எல்லாரும் மௌனமாயிருந்தனர். பிறகு மேரி, "அங்கு நான் வேறுபடுகிறேன்" என்றாள். "எல்லா வற்றையுமே பயன் தேடும் நோட்டத்துடன் பார்த்தால், வாழ்க்கையில் பிறகு என்னதான் இருக்கிறது? தாஜ்மஹால் காதலுக்குக் காணிக்கை என்று அலட்சியமாகத் தள்ளிவிட முடியாது. அப்படி எதைப் புறக்கணிக்கிறீர்கள்? தாஜ் மஹாலையா, காதலையா? கடவுள்மேல் காதலுக்கும் ஒரு ஆண், பெண் இருவருக்குமிடையே நேரும் காதலுக்கும் என்ன வித்தியாசம்? உங்களுடைய காளிதாசனின் சகுந்தலா, துஷ்யந்தா, எங்கள் ஷேக்ஸ்பியரின் ரோமியோ ஜூலியட் வித்தியாசமானவர்களா? நான் சொல்வதில் இயக்க வார்த்தை கடவுளுமில்லை, மனிதனுமில்லை— காதல்."

சுமதிக்கு வாதம் முழுக்கப் புரியவில்லை. ஆனால் தன்னை அறியாமலே தன்னுள் ஒரு நெகிழ்ச்சி உணர்ந்தாள்

சகுந்தலை—துஷ்யந்தன்

ரோமியோ—ஜூலியட்

மும்தாஜ்—ஷாஜஹான்

சுமதி—ப்ரபு.

அப்படித் தோன்றியதும் ஆச்சரியமாயிருந்தது. அற்புதமாயிருந்தது.

சற்றுத் தயக்கத்துக்குப்பின்,

மேரி—வில்லியம்ஸ்.

ஊஹூம், ஒவ்வி வரவில்லை. இந்தக் கூட்டத்தில் சேர்க்கும் பருவத்தை இவர்கள் தாண்டியாச்சு. மேரி நிச்சயமாக இவரைவிட மூத்தவள். மேரியின் கணவன் அவளைவிட நிறைய வயது வித்தியாசமானவனாகத்தான் இருக்கணும்.

மேரி மேலும் சொல்லிக் கொண்டிருந்தாள். "உங்கள் வயதுக்கு நீங்கள் வெளியிட்ட அபிப்ராயம் மூதாயிருக்கிறது. அதுவும் புதுக் கலியாண ஜோடி!"

சுமதியைப் பார்த்து சிரித்தாள்.

வில்லியம்ஸ் எதுவும் பேசவில்லை. இத்தனைக்கும் ஒரு புன்னகையுடன் சரி. சலுகைப் புன்னகை. சிறிசுகள். மேரியையும் சேர்த்து.

மார்மேல் கைகளைக் கட்டியபடி, யோசனையில் ஆழ்ந்த வண்ணம் மேரி நடந்தாள். சிறிதுநேரம் நால்வருமே பேசவில்லை. அவளுடைய கண்ட சதைகள் மொழு மொழுப்பாயும், மழமழவென்றும் இருப்பதை சுமதி கவனித்தாள். அங்கங்கே பொன் ரோமச் சுருள்கள்.

சாலையோரம் உள்ளே தள்ளி, ஒதுக்கமாக, ஒரு சோலை நடுவே ஒரு ஹோட்டலுக்கெதிரே வண்டி நின்றது. 'இங்கே, காலைச் சிற்றுண்டிக்குப் பதினைந்து நிமிஷம் தங்கும்' என்று கைடு சொல்லிவிட்டு ஹோட்டலில் மானேஜர் அறையுள் மறைந்துவிட்டான். இங்கே வியாபாரமே இது போன்ற உலா வண்டிகளை நம்பித்தான். பண்டங்கள் ருசியாக இருந்தன என்று சொல்வதற்கில்லை. அந்த அவசியமுமில்லை.

ஆனால் அந்த ஐரோப்பிய தம்பதிகள் ரசித்துச் சாப்பிட்டார்கள். நுனிவிரலால் தோசையை விள்ள அவர்கள் முயற்சி சிரிப்பு மூட்டியது. தோசை விள்ளல் ஒன்று சாம்பார் ஈரத்துடன் வில்லியம்ஸின் சொக்காயில் பொத்தான் பட்டை மீது பட்டுத் தெறித்துப் பாண்டிலும் விழுந்துவிட்டது. கைக்குட்டையால் துடைக்க முயன்று திட்டு பரவலாய்ப் படர்ந்தது. வில்லியம்ஸ்ுக்கு முகம் சுளித்தது.

ஆனால் மேரி 'குஷி'யிலிருந்தாள். ''ஓ, திஸ் இஸ் நைஸ். இதை எப்படிச் செய்வது, சொல்வீர்களா?'' சுமதியைப் பார்த்துக் கேட்டாள்.

சுமதியை அவ்வப்போது கலந்துகொண்டு ஆட்டுக்கல், குழவி, அரிசி, உளுந்து, தோசைக்கல், தோசைத் திருப்பி என்று ப்ரபு அடுக்கிக்கொண்டே போனதும், அவள் சிரித்துக்கொண்டே, வியர்த்தத்தில் இரு கைகளையும் விரித்துவிட்டாள்.

''ஓ, எனக்கு அப்பாற்பட்ட சமாச்சாரம். இதற்காகவே நான் லண்டனில் இந்தியர்களை சினேகம் பிடிக்கவேண்டும். எனக்குத் தோசா வேண்டுமானால் வெட்கம் பார்த்து முடியாது.'' சிரித்தாள்.

காப்பி வாயில் வைக்க வழங்கவில்லை. ஆனால் அவர்கள் விரும்பிக் குடித்தார்கள்.

ப்ரபாகர் பீடா வாங்கி வழங்கினான். வில்லியம்ஸ் மறுத்துவிட்டார். மேரி அதை மென்றவுடனேயே அவள் உதடுகள் ரத்தப் பூவாகிவிட்டன. அந்தத் தனிச்சிவப்பு அவள் முகத்துக்குப் பாந்தமாக இல்லை சற்றுநேரம் கழித்துத் துப்பிவிட்டாள்.

வில்லியம்ஸ் சிகரெட்கூட புகைக்கவில்லை. தனக்காகப் பார்க்கிறான் என்று நினைத்துக்கொள்வதில் சுமதி பெருமை கொண்டாள். வில்லியம்ஸ் பேரில் அவளுக்கு மதிப்பு கூடிற்று.

ஒன்று பட்டது. வில்லியம்ஸுக்கு 'போரிங்'காக இருந்ததோ? எனக்கு அப்படித்தானிருக்கு. இருபது நாட்களாக ஓய்ச்சல் ஒழிவில்லாமல் பிரயாணம். இதென்ன தேனிலவு? இதெல்லாம் நமக்கு சரிப்படாது. வீடு போய்ச் சேர்ந்து, நம் வீடு என்கிற சொந்தத்தில் வீட்டுக்காரியங்களைப் பார்த்துண்டிருப்பதில் இருக்கும் நிம்மதிக்கும் நிறைவுக்கும் ஈடாகுமா? வீடு போய் இறங்கின அன்றிரவே சுண்டச் சுண்ட சுண்டைக்காய் வற்றல் குழம்பும், பருப்புத் துவையலும் காண்போமான்னு ஆயிடுத்து.

ஆமாம். கலியாணத்துக்கு முன்னரே கையோடு கையாகக் குடித்தனத்துக்கு வீடு பார்த்தாயிற்று. இன்னும் வீட்டை அவள் பார்க்கவில்லை. அப்பாதான் பார்த்தார். அப்பாவுக்கு இதிலெல்லாம் கொஞ்சம் செல்வாக்கு உண்டு. நுங்கம்பாக்கத்தில் ஒரு சைடு போர்ஷன். வீட்டுக்காராளும் அவர்களும் மட்டும்தான். வாடகை சற்றே சூடுதான். ஆனால் கிடைச்சதே பெரிசு என்கிற காலமாயிருக்கே!

அப்பா வீட்டை விவரிச்சதிலிருந்து, அவளுக்குக் கிடைத்த ஐடியாப்படி, கூடத்தில் காட்ரெஜ் பீரோவுக்கும் ஸோபா செட்டுக்கும் அவள் இடத்தைத் தீர்மானம் பண்ணியாச்சு. ஆனால் அப்பா சொல்றதைப் பார்த்தால் படுக்கை

அறை கட்டிலே கொள்ளாது போலிருக்கே! அப்போ ட்ரஸ்ஸிங் டேபிளுக்கு என்ன வழி? இதுபற்றி அவரை யோசனை கேட்டால்,

'நமக்கு இந்த இடமே அதிகம். டபுள் பெட் எதுக்கு. ஒண்ணே அதிகப்படி'ன்னு சொல்லிட்டு, கண்ணையும் சிமிட்டி. என்னை சங்கடத்தில் மாட்டிவிடுவார். இந்த இருபது நாள் பழக்கத்திலேயே தெரியறதே, ஆள் பேச்சில் கொஞ்சம் எடக்கன்தான்.

கைச்சிற்ப தொழில் எம்போரியத்தில் அரைமணி நேரம் புகுந்து விளையாட பிரயாணிகளை அனுமதித்துவிட்டு கைடு ட்ரைவருடன் அரட்டை அடிக்க வண்டியிலேயே தங்கி விட்டான்.

அவர்கள் தந்தத்தில் ஒரு நடராஜ விக்கிரகம் வாங்கி னார்கள். ஒரு முஷ்டி உயரம் கூட இல்லை. அவளுக்கும் ஆசையாகத்தானிருந்தது. ஆனால் விலையைக் கேட்டதுமே உண்மையிலேயே மிரண்டுபோனாள். நல்லவேளை அவள் வாயைத் திறக்கவில்லை. அவர்கள் கேட்டார்கள். அவர்கள் வாங்கிக்கொண்டார்கள். அதற்கு ஆசைப்படவே ஒரு அந்தஸ்து வேண்டும்.

அவள் இரண்டு ஊதுவத்திக் கட்டுக்கள் வாங்கினாள். அதாவது அவர் வாங்கித்தந்தார். கூடவே அவர் வெள்ளைக் கல்லில் ஒரு குட்டித் தாஜ்மஹால் வாங்கினார். இதற்கு இடம் நிச்சயம் பண்ணணும். அவளுக்கு இப்பவே வீட்டுக்குப் போகவேண்டும் என்று தோன்றிவிட்டது.

பஸ் புறப்பட்டதும், கைடு பிரயாணிகளைப் பார்த்து நின்று கொண்டு...அவன் குரலே வேறு மாதிரி ஆகிவிட்டது. அதுவும் நடிப்புத்தான்.

''லேடீஸ் அண்டு ஜெண்டில்மென், இப்போது உலாவின் கடைசி கட்டத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறோம். இதுவரை நீங்கள் பார்த்த காட்சிகளுக்கே சிகரம், பூலோக

சுவர்க்கம். இந்திரலோகத்தில் நடமாடப் போகிறீர்கள். உலகத்தில் ஒன்பதாவது அதிசயத்தோடு இழையப் போகிறீர் கள். வயதானவர்கள் வயதை மறந்துவிடுவார்கள். இங்கே வயதானவர், ஆகாதவர் என்பதே இல்லை. எல்லோரும் வயதுக்கு வந்தவர்களாகி விடுவார்கள். என் வழிகாட்டலும் வர்ணனைகளும் விளக்கங்களும் இங்கே தோற்றுவிடுகின்றன. அத்தனையும் அதிகப்பிரசங்கம். அவரவர் தமக்கே கண்டு கொள்வார்கள். இதோ பிருந்தாவனம் பாருங்கள்.''

சொல்லி முடிப்பதற்கும் பஸ் உள்ளே நுழைந்து குதிரையை லகான் பிடித்தமாதிரி பின்னுக்குத் தள்ளிக் கொண்டு சட்டென்று நின்று சமைவதற்கும் சரியாயிருந்தது. பிரயாணிகள் இறங்கிக் கலைந்தார்கள்.

''இதுதானா பிருந்தாவனம்? நன்னாயிருக்கு. செடி, பூ, புதர்கள், ஃபவுண்டன்கள் எல்லாம் சுத்தமா, ஒழுங்கா, நல்ல பராமரிப்பில், விளக்குப்போட்டு—அழகாயிருக்கு என் கிறதைத் தவிர தனிப்பட்ட முறையில் ஆஹா ஓஹோன்னு எனக்கு ரசிக்கத் தெரியல்லேன்னா, எனக்குத் தெரிஞ்சது அவ்வளவுதான்னு நான் நினைச்சுக்கணும். ஊரெல்லாம் சுத்திட்டு, உடம்பும் மனசும் களைச்சுப்போய், அப்பாடா எங்கானும் சாய்வோமான்னு இருக்கற நிலைக்கு முன்னால், காலையிலேயே இது முதல் ப்ரோக்ராம்மா இருந்திருந்தால், மனசு வேறேமாதிரி இருந்திருக்குமோ என்னவோ. இதைத் தான் அடிக்கடி சினிமாவில் பார்த்துடறோமே! இந்தச் செடி, பாத்திகள் நடுவே லவர்ஸ் ஓடி ஒளிஞ்சு, ஒருத்தரை யொருத்தர் பாத்துண்டு, மேலாக்கைப் பிடிச்சு இழுத்துண்டு ஆடிண்டு, பாடிண்டு, கும்மாளம் அடிச்சுண்டு, நடப்புக்கும் அவாளுக்கும் சம்பந்தமேயில்லாமே...

சுமதிக்கு சினிமா மோகம் கிடையாது. கிழம், கட்டை கள்கூடப் பித்தாய்ப் பிடித்து அலையும் இந்நாளில் சுமதி அவள் வயசுக்கு அதிசயப்பிறவி, வக்ரம்னுகூட கருதப்

பட்டாள், அதற்கென்ன, கட்டிப் பிடித்து இழுத்துப் போனால் மாட்டேன் என மாட்டாள். வலுக்கட்டாயமாக டி.வி. எதிரில் உட்கார்த்தி வைத்தால், கண்ணை மூடிக் கொள்ளமாட்டாள். ஆனால், வீட்டுக் காரியங்களைக் கவனித்துக்கொண்டு, அப்பப்போ வீட்டை சுத்தம் பார்த்து, சாமான்களைத் தூசி தட்டியோ, தேய்த்துத் துடைத்து, அடுக்கி அழகு பார்த்துக்கொண்டு—அதுக்கு சமானம் ஆகுமா? நான் அசல் நாட்டுப்புறம் இல்லை. ஆனால் கிராமத்து வாசனை என்னிடம் வீசினால், காரணம் என் பூர்வீகம்தான் இருக்க முடியும்.

சுமதிக்குக் கால்கள் கெஞ்சின. மற்ற மூவரும் ஆங்காங்கே தங்கித் தயங்கி ஆற அமர, தாவர இயலையே அவர்களுக்குள் சுவாரஸ்யமாக அலசுவதைப் பார்த்து எரிச்சலாக வந்தது. அவள் கணவனுக்கு இத்தனை விஷயங்கள் தெரிந்திருப்பது அவளுக்குப் பெருமையாயிருந்தது, ஆச்சர்யமாயிருந்தது, பயமாக இருந்தது. இதைப் பார்த்தால் இவர் என்னிடம் என்னென்ன எதிர்பார்ப்பாரோ தெரியல்லியே! நான் இவருக்கு ஏமாற்றம் ஆகாமல் இருக்கணுமே!

உடன் நடந்துகொண்டே, ஆனால் அங்கு இல்லாமல் எண்ணங்கள், சம்பந்தமில்லாதது—(இல்லை, சம்பந்தம் உண்டா?) பிறந்த வீட்டைப்பற்றி ஓடின.

ஒரே நாளில் புகுந்த வீட்டு மனுஷியா, இவாளுடைய ஹை சர்க்கிளுக்குச் சரியா மாறிவிட முடியாது. ஆமாம், நம்மைக் காட்டிலும் பசை உள்ள குடும்பமாத்தான் தோணறது. கரிசனம் பாக்கற மாதிரி தெரியல்லை. ஆனால் நாங்கள் பார்க்சாமல் முடியாது. இரண்டு தங்கைகள் கலியாணத்துக்குக் காத்திண்டிருக்கா. அப்பா என் செலவி லிருந்து சுதாரிச்சுக்கறதுக்குள், மீனா தயாராகிவிடுவாள்.

அண்ணா சி. ஏ. படிக்கிறான். நன்னாப் படிக்கிறான். தினம் சந்தியாவந்தனம் பண்றான். குடும்பம் அவனைத் தான் நம்பிண்டிருக்கு. ஆச்சு, பல்லைக் கடிச்சுண்டு இன்னும்

ஒரு வருஷம்தான். இப்பவே பெண்ணைக் கொடுக்க மேலே வந்து விழறா. பையனுக்கு வயசாகல்லேன்னா, கல்யாணத்தை செளகரியப்படி வெச்சுப்போம். இப்ப தாம்பூலத்தை மாத்திண்டுடுவோமேன்னு சொல்றவாளுமிருக்கா. என்னவோ சந்தையிலே மாடு பிடிக்கற கதையா ஆயிடுத்தே. என் அதிர்ஷ்டம், வீட்டுக்கு அதிக சிரமம் வைக்காமல் எனக்குத் தாலி பாக்யம் வந்துடுத்து. என்னால் முடிஞ்சது அவ்வளவு தான். அட. முடிஞ்சுபோச்சா என்ன?

ஆச்சரியமாயிருந்தது, சந்தோஷமாயிருந்தது, பஸ்ஸில் ஏறிக்கொள்ள—

வழியிலேயே அவரவர்க்குச் செளகரியமான இடங்களில் பிரயாணிகள், தனித்தனியாகவும், கொத்துக் கொத்தாகவும் கழன்றுகொண்டனர். இவர்களையும் கேட்ட இடத்தில் இறக்கிவிட்டு பஸ் பறந்தது.

நால்வரும் ப்ளாட்ஃபாரத்தில் நின்றனர். சுற்றிலும் பல வகை ஊர்திகள் பறந்தன. விளக்குகள் பட்டை வீறி, இரவைப் பகலாக்கின. கட்டடங்கள் உயர்ந்து மேல் இருள் கீழே இறங்காமல் தாங்கிக்கொண்டன. முட்டின பானர்கள் சினிமாப் படங்களையும், விளம்பரங்களையும் காட்டின. மக்கள் நெரிந்தனர்.

"ஸோ, இட் இஸ் ஓவர்."

"என் ஹோட்டலுக்கு வருகிறீர்களா, பக்கா ஸௌத் இண்டியன் மீல் சாப்பிடுவோம்" என்றான் ப்ரபு.

"தாங்க் யூ. நோ டைம்." வில்லியம்ஸ் கைக்கடியாரத்தைப் பார்த்துக்கொண்டான். "இன்னும் ஒரு மணி நேரத்தில் நாங்கள் பாக் பண்ணிக்கொண்டு பாம்பேக்கு இரவு ஃப்ளைட் பிடித்து, நாளைக் காலை லண்டனுக்கு—"

"டிட்டோ இங்கே. நாளை நான் மதராஸில் ட்யூடிக்கு ட்யூ."

“இன்று எங்களுடைய இத்தனை சந்தோஷமான நேரத்துக்கு உங்களுக்கு எங்களுடைய மிக்க மிக்க நன்றி.” காலியாகக் கடந்த ஒரு டாக்ஸியைப் பார்த்து விரலைச் சொடுக்கி விட்டு, குலுக்கக் கை நீட்டினான். கை குலுக்கினர். அவளும் கை நீட்டினாள்.

சடக்கென ப்ரபுவின் கழுத்தைச் சுற்றித் தன் கையை வளைத்து இழுத்துக்கொண்டு அவன் கன்னத்தில் ஒரு முத்தம் பொறித்தாள்.

ஷாக்.

டாக்ஸி உராய்ந்தாற்போல் வந்து நின்றது.

“குட்பை. ஸோ லாங்!” இருவரும் ஏறிக்கொண்டார்கள். வண்டி நகர்ந்து வேகமெடுத்தது.

ப்ரபுவும் சுமதியும் ப்ளாட்ஃபாரத்தில்—ஸ்தம்பித்தபடி நின்றார்கள்.

ஷாக்.

வண்டி போய்க்கொண்டேயிருந்த சில நிமிடங்களுக்குப் பின் கேட்டான்.

“ஏன்—?”

ஜன்னலுக்கு வெளியே பார்த்துக்கொண்டிருந்த அவள் முகம் திரும்பாமலே, “அவன் பாபை நினைவு மூட்டினான்.”

ஓ, ஆமாம், பாப். போன வருடம் ஹாவாய் அருகே, பசிஃபிக்கில் ஹெலிகாப்டரில், தனியாகக் காணாமல் போய் விட்டான்.

அவள் தம்பி.

வண்டி வேகமாய்ப் போய்க்கொண்டிருந்தது. குளிரைத் தடுக்க இறக்கிய ஜன்னல் கண்ணாடிமேல் அவள் முழங்கால்களைக் கட்டியபடி மூலையில் சாய்ந்துகொண்டிருந்தாள். கண்ணீர் தாரை பெருகிய வண்ணம்.

ஜன்னலுக்கு வெளியே உடைந்த மேகப் பாறைகளினிடையே பாதி நிலவு கூடவே வந்துகொண்டிருந்தது. முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு தானும் கூட வருவதால் அவளைத் தேற்ற முயன்றது. அதற்குத் தெரிந்த வழி அது.

எதிர் மூலையில் அவன் உட்கார்ந்து கொண்டிருந்தான். அவளைத் தேற்ற அவன் முன்வரவில்லை. அவன் பார்வை எங்கேயோ வெறித்திருந்தது.

நெருப்புச் சுட்டுக் கன்றிப் போனதுபோல், கன்னத்தில் அந்த இடத்தை கை அவ்வப்போது தொட்டுத் தடவிப் பார்த்துக் கொண்டிருந்தது. ●

—குங்குமம்

# காதல்

**ஹே தேவி!**

கங்கா நதியை கங்காதேவி என்று தொழுகிறோம்.

யமுனையை யமுனாதேவி—

கங்கா, யமுனா, சரஸ்வதி, நர்மதா, காவேரி—

இவைபோலும் உன்னைச் சிந்தாதேவி என்றால் என்ன?

இந்நதிகளைக் காட்டிலும் நீ எத்தனையோ முன்னவள். இவை மட்டுமா? அமேஜான், முஸ்ஸோரி, மிஸ்ஸஸிப்பி, நைல், ஜோர்டான், யாங்க்ட்ஸே, மஞ்சள் நதி—ஏன், சமுத்ரங்களே உனக்கு அப்புறம்தான்.

ஆனால், இத்துணை தழைந்த மூதும் உன்னைப் பாதிக்கவில்லை. நீ நித்ய யௌவ்வனி. அன்றன்று, அவ்வப்போது, புதுமையை வெளிப்படுத்திய வண்ணமாயிருக்கிறாய். எங்களுக்குப் புதிது. ஆனால் தன்னில் எத்தனை பழைமையோ?

தேவி, சிருஷ்டிக்குப் பின் சிந்தனை உண்டாயதா அல்லது சிந்தனைதான் சிருட்டித்ததா? "Lat there be light, and there was light." அல்லது இரண்டும் எப்பவுமே, ஏற்கெனவே ஒன்றுக்கொன்று 'பேரல'லா? அல்ல இணைந்தா?

இந்தக் கேள்விக்கு மட்டும் நேர்ப் பதில் கிடைத்துவிட்டால்—

வேண்டாம், சிற்றலைகள் தவழும் உன் முறுவல் மயக்கும் மர்மமுமே எனக்குப் போதும். அறிந்துகொள்ள நான் ஆசைப்படவில்லை, ஆச்சர்யப்பட்டுக் கொண்டேயிருக்கத்தான் விரும்புகிறேன்; உன் கரையோரம் உட்கார்ந்து காயிதக் கப்பல்களை விட்டுக்கொண்டிருக்க, ஒரு நாள் உன் கரையோரம் செடியிலிருந்து கழன்ற பூவாய் உன்னில் விழுந்து, உன் அலைகள் மீது மிதந்து சென்று உன் சுழிப்பில் மூழ்கிவிட—

தாயே!

தாய் மட்டும்தானா நீ?

தாயாய்ச் சுரக்கிறாய்

பாசமாய்ப் பொங்குகிறாய்

காதலாய்க் கசிகிறாய்

காமமாய்ச் சுழிக்கிறாய்

சிந்தாதேவி, காட்டாறின் வெறியில் உன்னை நினைக்கவே பயமாயிருக்கிறது.

கோபாமுத்திரை.

கண்ணீரின் ப்ரவாகமாக—வேண்டாம் வேண்டாம், மாட்டேன். எண்ணமே தாங்க முடியவில்லை.

நீ நித்ய கல்யாணி.

ஆனால் இவ்விரண்டு தன்மைகளின்—இல்லை, எத்தனையோ தன்மைகள், உன் தொப்புள் சுழிப்பில் சீறிக் கொப்புளித்து மேலே அமைதி பாயும் நதி நீ. சாந்தஸ்வரூபிணி.

ஆனால் உன் சாந்தம் நம்புவதற்கில்லை.

ஆனால் உன்னை நம்பாது எதை நம்புவேன்?

நீயலால் கதி ஏது?

ரிஷிகேஷில், ஒரு பாறை உச்சியிலிருந்து ஒரு அருவி யிறங்குவதைப் பார்த்தேன். பாறையையே நூல் கட்டி அளப்பதுபோல், அத்தனை சன்னம்; காற்றில் அலையும் ஜரிகைபோல், பாறைமேல் அதன் கதியில் நாணிக் கோணி நலுங்கி நெளிந்து...

பாறைமேல் தாவரங்களின் அடர்த்தியிலிருந்து ஒரு மான் வெளிப்பட்டது. அருவி விளிம்பில் நின்றது. குட்டி அல்ல, அந்த ஜாதியே அப்படித்தானோ? நவராத்ரி பொம்மை. சுருண்ட மாவிலை போன்ற காதுகள், கொம்பு கள் இல்லை. அதன் உயரத்தில் என்னைச் சற்று சிந்தித்து விட்டு, சாவகாசமாகத் திரும்பிப் பச்சையுள் மீண்டும் மறைந்தது. அப்படித் திரும்புகையில், அதன் பின்னழகில் மனம் பறிபோனேன். சொப்புகளைப் பதித்தாற்போல், இறுக்கமான, வழுவழுத்த சப்பைகளின் மேல் மொட்டை வால் ஆடி ஆடி அழைத்தது. எனக்கு அங்கங்கள் முறுக் கேறின.

ஓஹோ, மானோடு காதலா?

ஏன், ஆகாதா?

சீ, தூ! உன் வயதில்—வெட்கமாயில்லை?

காதலுக்கு வெட்கமுண்டா என்ன?

இல்லை, என் வயதில் காதல் எண்ணமே ஆகாதா?

சிந்தா நதிக் கரையோரம் உட்கார்ந்து, என் காயிதக் கப்பல்களை விட்டுக்கொண்டிருக்கிறேன்.

பெரிய கோவில் பிரம்மோற்சவம் போயிருந்தோம். காஞ்சிபுரம் அருகாமையில், கிராமத்தில் அப்பா ஹெட் மாஸ்டர்.

இரண்டு மூன்று நாட்கள் வேறிடத்தில் தங்கப்போற சந்தோஷம். அதற்கு ஏற்பாடு தடபுடல். என் அன்றைய (பன்னிரண்டு) வயதில் அந்த இருப்புக்கொள்ளாமைக்கு

இணை கிடையாது. சமையல் சாமான், மூட்டை முடிச்சுடன், குடும்பமே ரெட்டை மாட்டு வண்டியில், ஜல்ஜல்ஜல் மாட்டுக் கழுத்துச் சலங்கை (கேட்கிறதா?)—அஞ்சு மைல் போக ரெண்டு மணி நேரமாவது ஆகும். கடகட கடகட கட—லொடக் லொடக் லொ—ட—க் மேடு பள்ளமா ரோடு. ஜாலி ஜாலி.

வழியில்—

சந்தனியாத்தா சன்னதி, ஒரு கோரி, அரசமரத்துப் பிள்ளையார். கோவில் பிள்ளையார், நாகப்ரதிஷ்டை, அப்புறம் மாடன் சிலை, வண்டிச்சக்கரம் மாதிரி முழி. கையில் கத்தி, மைல் நீளம் மீசை, ஜாலி ஜாலி.

வழிய வழிய பூசணிக்காய்களோடு ஒரு ரெட்டை மாட்டு வண்டியை நாங்கள் கடந்ததும், சொல்லி வெச்சாப் போல் ரெண்டு வண்டிக்கும் ரேஸ் வந்துடுத்து. அவ்வளவு தான்—

ஜல்ஜல்ஜலஜலஜல— (சலங்கை சத்தம் கேக்கறதா? அங்கே இல்லியே! ஆனால் அதுகளுக்கும் கொம்புலே பூண்) கடகடாகடகடகடகடகட கடா— வண்டியுள் எழுந்து நிற்க முடியாமல், உக்கார்ந்த நிலையிலேயே நாங்கள் குதிக்கிறோம். மண்டையோடு மண்டை டணால் டணால். அம்மா சிரிக்கிறாள். மடியில் அங்கச்சிப் பாப்பா வீறிட்டு அழறது. அப்பா சிரிப்பை அடக்கிக்கிறார். அப்பா சிரிக்கக் கூடாது. அப்பா ஹெட்மாஸ்டர் 'ஹைஹாய்! காத்தான் போடற சத்தத்துலே வாலை முறுக்கற முறுக்குலே அதுகள் மிரண்டு சாணியைப் போட்டுண்டு குதிரையாப் பறக்கறதுகள். நாங்கள் தாண்டிட்டோம். குதூகலம் தாங்க முடியல்லே. அந்த வண்டி பின் தங்கினது தங்கினதுதான். நாலஞ்சு பூசணிக்கா சரிஞ்சு ரோடில் உருண்டோடிப் போச்சு. எங்களுக்கென்ன ஆச்சு? அதோ ஒரு வளைவிலே வண்டி மறைஞ்சும்போச்சு.

மறுபடியும் 'பொடக் பொடக் தக்கடா புக்கடா'வில் விழுந்தாச்சு.

ஒரு பாழ் மண்டபம்—டோல் கேட் உடனேயே சின்னக் காஞ்சிபுரம் பெருமாள் கோயில் மதில்— முடியவே முடியாதோ? ஒரு வழியா முடிஞ்சு, ஆடிசன் பேட்டை தேர் முட்டி இரட்டை மண்டபம், ராஜவீதி வந்தாச்சு. பெரிய காஞ்சிபுரம். எங்கள் இடம், சன்னதித் தெருவில் நாலுகால் மண்டபத்து எதிரிலேயே, தெருவெல்லாம் அந்தந்த வீட்டுக் கெதிரே செம் மண்ணிட்டு பிரம்மாண்டமான கோலம்.

'வீடு வந்தாச்சு. வண்டியை விட்டு இறங்கறோம். கோவில் பட்டறை வெடி கேக்கறது. நெஞ்சு துள்ளறது.

வாசலில் வீட்டுக்கார மாமாவும், மாமியும் வரவேற்கக் காத்துண்டிருக்கா.

''வரவேண்டும் வரவேண்டும்! எங்கள் குடிலை மிதித்து அனுக்ரஹிக்க வேண்டும் (ஐயோ இலக்கணமே, ஐயோ போலியே) இரண்டு கைகளையும் ஆராதனையில் காட்டிய படி மாமா வீட்டுக்குள்ள அழைச்சுண்டு போறார்.

''தாங்களுக்கு இந்த அறை ஏற்பாடு பண்ணப்பட்டிருக் கிறது. அசௌகர்யங்களுக்கு க்ஷமிக்கணும். உறவு மனுஷாள் வந்துட்டா. பிரம்மோத்ஸவமோன்னோ? அதுவும், நாளைக்கு அஞ்சாம் நாள் கைலாச வாஹனம் வெள்ளிக் கவசம் முதல் புறப்பாடு.''

நாங்கள் வாசலுக்கு ஓடுகிறோம். ஜனம் நெரிசல் ஆரம் பிச்சாச்சு. இன்னும் கொஞ்ச நேரத்துல வெறும் தலைகளும், இரைச்சலுமாக பன்மாதிரி ஒரு பெரிய மொத்தை ஆயிடும். வீட்டுக்கார மாமா ஏதோ ஸ்தோத்திரம் சொல்லியபடி, லாந்தர் சிமினிகளைத் துடைச்சுண்டிருக்கார். குறுக்கே குழந்தைகள் விழுந்தடிச்சுண்டு ஓடறப்போ, வாயில் வரத் தகாத வசவுகள் ஸ்தோத்தரத்தோடு கலக்கிறது. அதோ ஓஹ கொல்லையில் கிணறுமேல் தாம்பு தொங்கறது.

அம்மாவின் வற்றல் குழம்பு வாசனை அறையிருட்டிலிருந்து கூடத்தைத் தூக்கறது.

அறையிருட்டுத்தான். இடம் கிக்கடம்தான். படுக்கையில், மார்மேல் இருட்டில் கரப்பான் பூச்சி பறக்கறது. கூரையில் பட்சிக் கூட்டில் குஞ்சுகள் அடிச்சுப் புடிச்சுண்டு குப்பையும் செத்தையும் உதிர்றது. முக்கல், முனகல் மொண மொணப்பு, புகார், இதெல்லாம் பெரியவாளுக்குத் தான். எங்களுக்குத் தெரியாது. சாப்பிட்டுப் படுத்தோமா, தூக்கம் வந்ததும் தெரியாது போனதும் தெரியாது. ஒவ்வொரு விழிப்பும் ஒரு புது உலகம், ஒரு புது கண்காக்ஷி. முதல் எண்ணமே—

இன்னிக்கு அஞ்சாம் திருவிழா வெள்ளிக் கைலாச வாஹனம் புறப்பாடு.

அமர்க்களமாயிருக்கும். எங்கள் பாடு ஜாலி ஜாலி.

"ஆமா, இதில் உங்கள் பாடு என்ன? கேக்கறேளா? கேக்காதீங்கோ எங்களுக்குத் தெரியாது. ஆனால் ஜாலி.

பல் விளக்கப் புழக்கடைக்குப் போறேன். பின்கட்டுக் கூடத்தில் ஒரு காலை நீட்டி உக்காந்துண்டு படகாட்டம் பெரிசா ஒரு பாட்டி இரும்பு சொப்பு உரல்லே, இருப்பாணியிலே வெற்றிலை இடிச்சுண்டிருக்கா.

"என்னடா குழந்தை, நின்னு பாக்கறியா? பழக்கமாப் போச்சுடாக் கண்ணே, பல்லு போயும் பழக்கம் விடல்லே. ஒருநாளைக்கு நாலுவேளை," சிரிக்கிறா. பொக்கை வாயோரம் எச்சில் வழியறது. தலைநரை—அலைநுரை பொங்கறது.

ஒரு மாமி, ஏணையில் குழந்தையைப் போட்டு ஆட்டிண்டிருக்கா. அது தூளியிலிருந்து தலையை வெளியே விட்டுண்டு என்னைப் பாக்கறது.

"சனியனே தூங்கித் தொலையேன். தலைக்கு மேலே வேலை கிடக்கு."

கூடத்து அறையிலிருந்து பூஜை மணி. சாம்பிராணி வாசனை மூக்கைத் துளைக்கிறது.

''ஏ பையா, எட்டிப் பார்க்காதே—''

ஆனால், எட்டிப் பார்க்கிறேன். தண்ணி இருக்கிற இடம் சட்டுனு தெரியல்லே. இருட்டு; ஆழம்.

ஒருவேளை வெய்யில் இன்னும் உசந்தால், உள்ளே பட்டால், மேனோக்கறேன். மாமரத்தில் இலைகள் சூரியனில் தங்க இலைகளாய்த் தகதகக்கறது. கொல்லை, தன் எல்லையைத் தேடிண்டு, போயிண்டே இருக்கு. அத்தனை நீளம்.

கிணற்றடி ஒரே 'கலீஜ்'. ஒருவர், தாம்புக் கயிற்றையும், பக்கெட்டையும் ஆக்ரமித்துக்கொண்டு குளிக்கிறார். ஒருவர் வேட்டி துவைக்கிறார். அவர் உடல் அசைவில் தொந்தி தனியாய் 'தொளக், தொளக்'. இரண்டு மாமிகள் பற்றுத் தேய்க்கிறார்கள்.

''அம்பி, எட்டிக்கறியா?''

திரும்பிப் பார்க்கிறேன். இப்பத்தான் அவளைச் சற்று விவரமாகப் பார்க்க முடிகிறது. பின்கட்டில் தூளியில் குழந்தையை ஆட்டிக்கொண்டிருந்த மாமி; இடுப்பில் குடத்துடன், கொசுவக்கட்டில் நிற்கிறாள். அவளுடைய கோண வகிடுக்கும், புதுமையின் கலவை—என் கண்ணுக்குப் பழக்கமில்லையாகையால் வேடிக்கையாக இருந்தது. சிரிப்புக் கூட வந்துவிட்டது.

நான் சிரிக்க, அவளும் சிரித்தாள். ஏனென்று சரியாக இருவருக்குமே தெரியாது. அது இன்னும் சிரிப்பு மூட்டிற்று. கிணற்றடியின் இத்தனை ரகளையில் எங்கள் சிரிப்பு, வாய் விட்டுச் சிரிக்காத சிரிப்பு, தனித்தனிச் சிரிப்புகள் அஸ்திர சந்திப்பில் நடுகதியில் ஒருமித்து ஒரு சிரிப்பாகி, எங்களது சிரிப்பு, எங்களுக்கு மட்டுமே தனித்துப் போனது. அவளு

டைய கீழ் உதடு, அதனுடைய ஒரு மாதிரியான சிவப்பு ரஸ ஓட்டத்துடன் பளபளத்தது. சற்றுத் தடித்த உதடு. பற்கள் சற்றே பெரிசு; ஆனால் வரிசை.

"மாமா தாம்புக் கயிறை விடுங்கோ" குரல் தாழ்ந்திருந்தாலும், அதில் அழுத்தம் தடித்தது. மாமா தோற்றுப் போனார். குடத்தைக் கிணற்றின் சுவற்றுக் கட்டைமீது நிறுத்தி, அதன் கழுத்தில் தாம்பைச் சுருக்கிட்டு, கிணற்றுள் விட்டு மொள்ளக் குனிந்தாள். பின்னல் பாம்புபோல் தடித்துக் கழுத்தில் சரிந்து நழுவிக் கிணற்றை நோக்கித் தொங்கிற்று.

"ஏ குந்தளே, என்ன பண்ணறே, போனால் போன இடம்தானா?" உள்ளிருந்து குரல், புகாரில் உரத்த மொண மொணப்பில்.

"தோ வந்துட்டேன் அத்தே!" இடுப்பில் குடத்தை ஏற்றிக்கொண்டு, உள்ளே விரைந்தாள், அவள் கண்டசதையின் வெண்மை, மஞ்சள் வெய்யிலில் கண்ணைப் பறித்தது. அதைக் கொசுவம், மறைத்து மறைத்து விளையாடிற்று.

என்னுள் ஏதோ நேர்ந்துபோச்சு. என்னென்னு புரியல்லே. ஒரே சமயத்தில் பயம், சந்தோஷம், துக்கம், பரபரப்பு எல்லாம் சேர்த்து அழுத்திற்று. ஒரே சமயத்தில் இத்தனையுமா? பல் தேய்த்தேன். காப்பி குடிக்க மறந்தேன். எதுக்கோ எரிச்சலோடு அம்மா முதுகில் ஒண்ணு வெச்சாள். அதுவும் வலி தெரியல்லே. திண்ணைக்குப் போய் உக்காந்துட்டேன். இந்த ஜன நடமாட்டம், கோபுரம், பஜனை கோஷ்டிகள், கடைகண்ணி எல்லாமே தூர நிழல்கள். சுவத்துக்கு வெளியே சத்தங்கள். அப்படியும் மனசில் உரைக்கல்லே. ஒரு இடத்தில் இருப்புக் கொள்ளல்லே. மிதந்துண்டே நடக்கறேன். சாதம் வேண்டியில்லே. ('என்ன உனக்குக் கேடு வந்துடுத்து?') மிதந்துண்டு புழைக்கடைக்குப் போறேன். பின்கட்டு வழிப்போக சாக்கு. அவள் கண்ணில் படல்லே. ராக்ஷஸ உடம்பில் பாட்டி குறட்டை விட்டுண்டு தூங்கறா.

அவள் படுவாளா? இல்லை, படமாட்டாளா? இல்லை. என்ன 'இல்லை இல்லை?' தெரியல்லே. கிணறு தனி ஆயிடுத்து. எட்டிப் பாக்கறேன். உள்ளே வெய்யில் வந்திருக்கு. அதல பாதாளத்தில் தண்ணி தெரியுது. நிழலில் என் மூஞ்சிக்குப் பதில் அவள் முகம்—'வந்துட்டியா?' திரும்பிப் பாக்கறேன். ஒருத்தருமில்லே. 'கீச் கீச்' பச்சைக் கிளி கேலியில் மரத்தில் ஒரு கொத்து மாவிலை மறைச்சு மூடி ஒரு மாங்காய்.

எவ்வளவு சுலபமாயிருந்தேன். திடீர்னு எப்படி இத்தனை சிக்கலானேன்? பயமாயிருக்கு. அழுகையை அடக்கிக்கிறேன்.

சாயங்காலம் மஞ்சள் வெய்யில் வேளைக்குக் கோயி லுக்குப் போகிறோம். இன்று சோமவாரம். சுவாமிக்கு மாவடி சேர்வைக் கவசம் பொருத்தியிருக்கு. தங்கக்கவசம். அந்த அலங்காரத்தில் அம்பாள் லிங்கத்தைத் தழுவிக் கொண்டிருக்கிறாள். காஞ்சி புராண ஐதீகம், தத்வம், தாத்பர்யம், தேவரஹஸ்யம் எல்லாமே இந்த நிலைதான் (இந்த பாஷை இப்போதையது. ஆனால் ப்ரவசனம் அப்பவே கேட்டது).

"தானே தன் கைகளால் பிடித்து வைத்த மணல் லிங்கத்தைப் பேணி, தேவி செய்யும் தவத்தைச் சோதிக்க திருவுளம் பற்றி ஆண்டவன் ப்ரவாஹித்த கங்கா நதியாகப் பட்டது, லிங்கத்தை அழித்துவிடுமோ என்கிற பயத்தில் அம்பாள் லிங்கத்தைத் தழுவிக்கொண்டதும், தன்மேல் அவளுடைய மு...களின் குழைவில், பகவான் உடலும், மனமும் அப்படியே நெகிழ்ந்து போனார்."

புராணிகர் சொல்கையில் எனக்குக் கேலியாகவும், அசிங்கமாகவும் இருக்கும். சாமி கூடவா—?

ஆனால், இப்போது கர்ப்பக்ருஹ இருட்டில், இருளை மங்கலாகக் கலைத்துக் கொண்டிருக்கும் பெரிய குத்து விளக்குச் சுடரில் அந்த அலங்காரம் உயிர்பெற்றுப் பிதுங்கி

யதும்...அப்பப்பா உடல் சிலிர்த்துப்போச்சு ஆனால் திடீரென்று அம்பாளிடத்தில் வேறு முகம் தோன்றிற்று. கோண வகிடு. பளபளக்கும் உதடுகள். மோவாய்க் குழியில் ஒரு மரு. எழுதினாற் போன்ற புருவங்கள். யாரை அப்படித் தழுவிக் கொண்டிருக்கிறாள்? நெஞ்சு தடுமாறிற்று. அங்கு என்னால் இருக்க முடியவில்லை. அகன்றேன்.

வாசற்கதவு திறந்திருந்தது. யாருமில்லை. ஆனால், இந்தப் பக்கம் இது ஒன்றும் புதிசு இல்லை. பின்கட்டுக்குச் சென்றேன்.

இருந்தாள். தூணை முட்டினாற்போல் உட்கார்ந்து கொண்டு, மடியில் குழந்தையைப் போட்டுக்கொண்டு, என்னைப் பார்த்ததும் முறுவலித்தாள்.

ஏண்டா பையா, கோவிலுக்குப் போகல்லே? எல்லாரும் போயிருக்காளே!''

எனக்கு நா எழவில்லை. வெற்றாக நின்றேன்.

''சரி வா, இப்படி உக்காரு கொஞ்சநாழி பேசலாம்.''

உட்கார்ந்தேன்.

''என்ன அப்படிப் பார்க்கறே?'' சிரித்தாள். ''எனக்கென்ன கொம்பா முளைச்சிருக்கு?''

மேலுதட்டில் கறுகறுன்னு அரும்பு கட்டியிருக்கு. ஆனால் இவளுக்கு நன்னாயிருக்கு.

''உற்சவம் பார்க்க வந்திருக்கேளா? வீட்டுக்காராளுக்கு சொந்தமா? எங்கேருந்து வரேள்? எல்லாருமே வந்திருக்கேளா? அம்மா, அப்பா, அண்ணன், தம்பி எத்தனை பேர்? உனக்கு அக்கா தங்கச்சி இருக்காளா? நான்தான் பேசிண்டிருக்கேன். ஏன் வாயே திறக்கமாட்டேன்கறே! ஊமையா?''

எனக்குப் பேச வேண்டாம். எனக்கு ஒண்ணுமே வேண்டாம். உன்னைப் பார்த்துக் கொண்டிருந்தால் போதும். ஆனால், இதை எப்படி உன்னிடம் சொல்வேன்? சொன்னால் என்ன புரியப்போறது? எனக்கே என் நிலை புரியல்லியே! இருட்டிலே தங்கச் சங்கிலியிலே குத்து விளக்கு தனியா ஆடறது. அதில் சுடர் டான்ஸ் ஆடறது சந்தோஷமாயிருக்கு, பயமாயிருக்கு...என்னவோ தூக்கமும், துக்கமுமா வரது.

ஆமா என்னை ஏன் பையா என்கறே? கோவமா வரது. உன்னைவிட ஒரு பத்துப் பன்னிரெண்டு வயசுதானே சின்னவனாயிருப்பேன்.

உன் கண் முழுக் கறுப்பு இல்லை. வெளிர் மஞ்சளும், நீலமும் கலந்து பளப்பள. இவ்வளவு கிட்ட, கொஞ்ச 'க்ராஸ்' கூட. அதனால் என்ன? எதனால்தான் என்ன. என்ன உளர்றேன். இல்லை, இது உளர்றல் இல்லை. இது ஏதோ பாஷை புரியல்லை, பயமாயிருக்கு!

குழந்தை அழுதது. அதை சௌகரியமா மடியில் கிடத்திக் கொண்டு ரவிக்கையை நெகிழ்த்திவிட்டுக் கொண்டாள். காம்பில் பால் துளித்தது. அவள் என்னைச் சட்டை செய்யவே இல்லை. மேலாக்கைக் குழந்தை தலைமேல போட்டு மூடிக்கொண்டாள்.

"என்னடா வெறிச்சு இதையே பார்வை.." திடீரெனச் சீறினாள். "என்ன அக்ரமம்டியம்மா. தீசத்தனத்தைப் பார்த்தியா? இந்த பிஞ்சிலேயே இப்படி முத்திப் போய்—"

அவளுடைய கோபம்கூட எனக்குப் பெரிதாயில்லை; ஆனால், அவள் கோபத்தில் கையை வீசி ஆட்டுகையில் அதில் ஆறாம் விரல்கட்டை விரலிலிருந்து அசிங்கமாத் தொங்கிற்று. என்னுள் என்னவோ இடிஞ்சு சரிஞ்சுது. அங்கு விட்டு ஓடினேன். அவள் வசவு துரத்திற்று. ஓடிப்

போய் எங்கள் அறையிருட்டில் மூலையில் அடுக்கியிருந்த படுக்கை, பாய், தலையணையுள் முகத்தைப் புதைத்துக் கொண்டேன். மாரே உடைஞ்சிடும்போல் விக்கி விக்கித் தேம்பித் தேம்பி அழுதேன். ஏன்னு புரியல்லே,

அன்றிரவு, வெள்ளிக் கைலாச வாஹனத்தில் சுவாமி எங்கள் வீட்டுக்கெதிரிலேயே இசைகேடாகச் சரிந்து—நல்ல வேளை கட்டு கெட்டியா இருந்ததோ விழவில்லை. ஏக ரகளை, கலாட்டா. பூசணிக்காய் உடைந்து, திருஷ்டி கழித்து, இடையில் போலிஸ் வந்து, விசேஷ தீபாராதனைகள் காட்டி, சுவாமி கிளம்ப மூணு மணி நேரம் ஆகிவிட்டது. ஒரு ஆள் காலின்னு கேள்வி.

பின்கட்டுப் பாட்டி, திண்ணையில் ஒரு காலை நீட்டியபடி, அதை உருவி விட்டுக்கொண்டே, 'கலி முத்திப்போச்சு. எல்லாம் தலையில்லாமல் வாலாடறதுகள். இல்லாட்டா இப்படி நடக்குமா என்ன?''

அவளும் திண்ணைத் தூணை கட்டியபடி நின்றுகொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். என்னைப் பார்த்துச் சிரித்தாள். ஆனால் எனக்குச் சிரிப்பு வரவில்லை. என்னுள் ஏதோ உடைஞ்சுபோச்சு.

நாளைக்கு வீடு திரும்ப காத்தான் எப்போ வண்டி கட்டுவான்?

வளை ஓசை

# வீம்புக்கு மருதாணி

இருபத்தி ஐந்து வருடங்களுக்கு முந்திக் கதை.

'அப்போது குடியிருந்த வீட்டில் எங்களைச் சேர்த்து இரண்டு குடித்தனங்கள். நாங்கள் வந்து ஒரு மாதத்துக்குப் பின் அந்தக் குடித்தனம் ஏறியது.

முற்றத்தில் மருதாணி மரம்.

ஸார், என்னிலும் பத்து வயதேனும் இளையவர். புது நாட்டுப் பெண். மாமியார், நாத்தனார், நாத்தனாருக்கு ஒரு பெண், சின்னஞ் சிறுசு.

நாத்தனாரும் மன்னியும் வெகு ஒற்றுமை. மாமியார் பசு. ஸார், தங்கை மேல் உயிர்.

உத்தியோக ரீதியில் காலையில் போனால், விளக்கு வைக்கும் நேரத்துக்குத்தான் திரும்புவார். அதிகமாகப் பேச மாட்டார். முசிடு இல்லை. குரலும் தூக்காது. பேச்சு, குரல், தோரணை எல்லாமே அமைதி. அழுத்தத்தில் அமைதி. Strong, Silent Male. அப்படியிருக்க எனக்கு ஆசை. ஆனால் அம்சம் இல்லையே!

துளசி, ஏதோ பள்ளியில் ஆசிரியையாக இருந்தாள். குடும்பத்துக்கு அவளால் இயன்றது குருவிக்கணக்கில் இருக்கலாம். ஆனால் குடும்பம் என்றால் எல்லாமும்தான் தேவையாயிருக்கிறதே! சுயகௌரவம் வேறே.

துளசி நல்ல நிறம். ஆனால் அழகு என்று சொல்வதற்கில்லை. அடர்ந்த ஆண் புருவம். சிறு கூடு. துருதுருவென்றிருந்தாள். அவள் வளைய வருவதைக் காண்கையில் எனக்குச் சூரியனின் கதிர் நினைப்பு வந்தது. காலைக் கதிரின் உற்சாகத்தோடு கலந்த மாலைச் சோகம்.

துளசியின் நெற்றி 'வெறிச்'சாயிருந்தது. ஆனால், கழுத்தில் சரடு தெரிந்தது. சரடு மட்டும்தான்? யார் வழிக்கும் யாரும் போகக்கூடாது; என் கொள்கை பார், கவனி, புழங்கு, ஆனால் கேளாதே.

துளசி என்னோடு பேசுவதில்லை. Good. ஆண், பெண் இடையே அந்த ஒதுக்கம்தான் முறை எனும் கருத்தினன் நான். அந்தப் பரஸ்பர அத்துவில் ஒரு கலையழகு கண்டேன்.

பொதுவாக அந்தக் குடும்பம், பழகவும் கவனிக்கவும் சந்தோஷத்தை விளைவித்தது.

ஆனால்—இதுதானே. புல்லில் பாம்பு! எப்போது என்று நிச்சயமாகத் தெரியவில்லை. ஏரி அமைதி. காற்றில் அலண்டாற்போல்; அங்கே சலனம் உணர்ந்தேன். அது உடனே வெளிக் காட்டவில்லை. அதன் சுழல் வெகு ஆழத்தினின்று உள்ளேயே திரள் கட்டிக்கொண்டு, வெளித் தெரியவில்லை. கிசு...கிசு...கிசு...கிசு...குமையல்...

ஸார் முகத்தில் கல் இறுக்கம் கண்டது. அதைக் கண்டு மாமியாருக்கும், நாட்டுப் பெண்ணுக்கும் 'பேஸ்து' அடித்தது.

துளசிக்கு முகத்தில் காலைக் கதிரொளி கூடியது. லேசாகப் பாட்டு முனகல்கூட.

கூடிய சீக்கிரம் இரு குடும்பங்களின் மூதாட்டிகளிடையே விஷயம் உடைந்தது.

துளசியின் கணவன் வயணமில்லை. புதுக்குடித்தனத்தின் ஆறு மாதங்களுக்குள் நகைகள் காலி. அப்புறம் பண்டம். பாத்திரங்களின் படிப்படியான மறைவு. எங்கே

போயின, எப்படிப் போயின? "தெரியல்லியே மாமி!" இத்தனைக்கும் கெட்ட பழக்கங்கள் இருப்பதாகத் தெரியல்லே; சிகரெட் தவிர. ஆனால் இப்போ யார் பிடிக்கல்லே?

மளிகை, பால், அரிசி, வாடகை என்று எங்கும் பாக்கி வைத்துவிட்டுக் காணாமல் போய்விடுவானாம். இதுபோல் இதுவரை நான்கு முறைகள் ஆகிவிட்டன. "சாபம் மாமி! சாபம்!" மாமி தலையில் அடித்துக்கொண்டாள்.

அண்ணா பொறுமைசாலி. பொறுமை, கடலினும் பெரிது. ஆனால் கடைசி முறையில் கரை புரண்டுவிட்டது. "இனிமேல் அவனுக்குச் செருப்பு." துளசியை எச்சரித்துவிட்டார். பிறகு தங்கைக்கு ஆசிரியை வேலை தேடித் தந்தார். இங்கே குடித்தனம் வந்தபோது, குடும்பத்தின் நிலை இது.

இப்போ என்ன?

மூன்று வாரங்களுக்கு முன் துளசியின் கணவன் கண்ணில் பட்டானாம். பள்ளியின் தெருமுனையில் காத்திருந்து துளசியை மடக்கிச் சந்தித்து வாழ அழைக்கிறானாம். மீண்டும் மீண்டும்.

ஓஹோ. அதான் துளசியின் புது மலர்ச்சியா?

எங்கே பஹாதூர், தூர் வானம் மௌனமாகக் குமுறுகிறது. இங்கே நெஞ்சு இடிகிறது. வான்விளிம்பில் மின்னல் படபடக்கிறது—தேவியின் விஷம கண்சிமிட்டல். ஆனால் அவளுடைய வேடிக்கை அவளுக்கே புரிகிறதோ?

அதோ வெகு எட்டத்தில் அலை திரள்கிறது. அதன் பெரிது இங்கே கரையிலிருந்தே தெரிகிறது. உருண்டு, திரண்டு, உயர்ந்து, விலகி, புடைத்து கரை நோக்கி வருகிறது. கரை நோக்கித்தானே வரவேண்டும்! அதன் விதி வேறு.

எது? வந்தும், கரைமீது மோதி—

ஒருநாள் அவர்கள் கூடத்தில் உடைந்தது.

துளசி அவள் குழந்தை கையைப் பிடித்துக்கொண்டிருந்தாள்.

"போயிட்டு வரேன் அண்ணா!"

அவர் அவளைக் கண்ணெடுத்துக்கூடப் பார்க்கவில்லை. வெற்றிலைச் சுண்ணாம்புத் தடவிக்கொண்டு இருந்தார்.

"பட்டுப்பட்டும், சொல்லச் சொல்லப் போறே. சரி. ஆனால் மறுபடியும் இங்கே படியேறமாட்டாய் என்றே எதிர்பார்க்கிறேன்; எக்காரணத்தைக் கொண்டும்—"

எனக்கு முதுகுத்தண்டு சில்லிட்டது. அந்த அமைதி, அந்த தோரணை, பொறுக்கியெடுத்த சொற்கள், ஊடே ஒரு Menoce.

பிள்ளை பக்கத்தில் நின்றுகொண்டிருந்த மாமி, பெண் பக்கம் நடந்தாள்.

அதற்கும் பிள்ளை முகம் நிமிரவில்லை.

* * *

ஒருநாள் தற்செயலாய் மாமியை மார்க்கெட்டில் சந்தித்தேன்.

"நீங்கள் எங்கள் வீட்டுக்கு வரக்கூடாதா? துளசியை ஆசீர்வாதம் பண்ணக்கூடாதா?"

பதில் சொல்லத் தெரியாமல், அசட்டுச் சிரிப்பு சிரித்தேன். "சௌக்யம்தானே?" என்றேன்.

"எல்லாம் உங்கள் ஆசீர்வாதம். துளசி, வாழ ஆசைப் படுவது நியாயமில்லையா? ஆனால் ஸேது ரொம்பவும் கஷ்டப்பட்டுட்டான்."

மாமியே இரண்டு பக்கமும் பேசிவிட்டாள். ஆனால் நியாயத்துக்கு இரண்டு முகம்தானா? நியாயமெனும் ஸ்படிக முப்பட்டகம்.

ஸார் வீடு மாற்றிக்கொண்டு போய்விட்டார். எனக்குத் தெரிந்தவரை, அவர் அப்படி அவசரமாகப் போகும்படி, இங்கே அவருக்கு வசதிக் குறைவு இல்லை. ஆனால் அவரவர் சௌகரியம், சௌகரியமே நியாயம்.

என்னவோ நினைப்பு வந்தது. இங்கு இருந்தவரை துளசி அடிக்கடி மருதாணி இட்டுக்கொள்வாள். எனக்கு ஒரு குழப்பம். அவளே பறித்து, அவளே அரைத்து அவளே இட்டுக்கொள்ளும் நிலைமையில், ஆட்டுக்கல்லிலோ, அம்மியிலோ மருதாணியை ஒரு கையால் தள்ளித் தள்ளி அரைக்கும்போதோ, அந்தக் கையில் பற்றிக்கொள்ளாதோ?

இல்லை. அழகுக்காக இட்டுக்கொள்ளவில்லை. ஏதோ ஒரு கனவைத் தன்னோடு இருத்திக்கொள்ளும் வீம்பில் இட்டுக்கொண்டாளோ? மருதாணிக் கனவு. கனவின் வீம்பு.

கனவின் வீம்பு.

ஒரு நாள், வாசல் அறையில் நான் ஏதோ பைலைப் புரட்டிக்கொண்டிருக்கையில், ஜன்னல் வழி நிழல் தட்டிற்று. தலை நிமிர்ந்தால் வெளியே மாமி.

"இன்னிக்கு நீங்கள் கட்டாயம் வந்தே ஆகணும். துளசி உங்களை அவசியமாப் பார்க்கணுமாம். மறக்காதேங்கோ." நிற்கவில்லை. போய்விட்டாள்.

Slum area மீன் கடை இரைச்சல். நாற்றம்கூட, பல தரப்பட்டோர் குடித்தனங்களிடையே வளை போன்று அவள் இடம். வளை போன்று இருட்டு.

"மாமா வாங்கோ வாங்கோ, சத்தே குனிஞ்சு—" ஆனால் நான் தலையில் இடிச்சுண்டாச்சு. "ஐயோ ஸாரி, உக்காருங்கோ. என்ன சாப்பிடறேள்? காபி. ஹார்லிக்ஸ் B.V?"

அவள் பின்னாலிலிருந்து மாமி வேண்டாம் என்று அவசரமாக சாடை காட்டினாள். ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு மௌனமாக நின்றோம். எந்நேரமோ?

சடக்கென்று அவள் முகம், அவள் கைக்குள் புதைந்தது. விக்கி விக்கி மாரே வெடித்துவிடும்போல்...

தலை நிமிர்ந்தபோது அவள் முகம் கொழுந்துவிட்டெரிந்தது.

"எனக்கு அவசரமா ஐம்பது ரூபா வேணும்."

நல்லவேளையாக பர்ஸில் அவள் கேட்டது இருந்தது. ஏதோ அவசரச் செலவுக்கு அன்றுதான் புரட்டினேன். ஆனால் யார் தேவை, முன்?

வெகு நாட்களுக்குப் பின்.

பிற்பகல் மூன்று மணி இருக்கும். சேத்துப்பட்டு மேம்பாலம் வழி போய்க்கொண்டிருந்தேன்.

ஸ்டேஷனுக்கு இறங்கும் இடத்தில், மூன்று ரெளடிகள் ஒருத்தியைச் சூழ்ந்துகொண்டு கலாட்டா பண்ணிக்கொண்டிருந்தார்கள். நான் ஒன்றும் சூரப்புலி இல்லை. என்னைக் கண்டதும் நழுவிவிட்டார்கள். ஒருகணம் எங்கள் கண்கள் சந்தித்தன. ஆனால் அவள் அடையாளம் காட்டிக் கொள்ளாமல் 'விர்'ரென்று படிக்கட்டு வழியிறங்கி மறைந்து போனாள்.

மீண்டும் வெகுவெகு நீள இடைக்காலத்துக்குப்பின், மாலை வேளை மவுண்ட்ரோடு.

ஆபீஸ் விட்டு திரும்பிக்கொண்டிருந்தேன். முதல் தேதி சம்பளம். குழந்தைகளுக்கு 100 கிராம் சாக்லேட். என் பங்கு போகும் வழிக்கு— அதோ யார், எனக்கு நாலடி முன்னால்.

"துளசி!" வெடுக்கெனத் திரும்பினாள். என்னைப் பார்த்ததும் முகத்தில் சூரியன் புறப்பட்டது.

என்ன பேசுவதென்றே தெரியவில்லை. பேசாமல் கையை நீட்டினேன். ஐந்தாறு சாக்கலேட்டுகள்.

ஒன்று எடுத்துக்கொண்டாள்.

"எல்லாம் உனக்குத்தான். கமலிக்கு வேண்டாமா?" இன்னொன்று எடுத்துக்கொண்டாள். "நான் வரேன் மாமா" சரசரவென 'ஜே ஜே'வில் மறைந்துவிட்டாள்.

ஏன், இந்த அவசரம்? என்னிடமிருந்து ஓட ஏன் இவ்வளவு கவலை?

வருடங்கள்.

நாங்கள் வீடு மாறி வேறு ரோந்துக்கே போய் விட்டோம். காலை ஆபீஸ் நேரம்.

அந்த 'பஸ் ஸ்டாப்'பில் நான் ஏறுவதில்லை. அதுவே என் 'ரூட்' இல்லை. வேறு ஜோலியாக அந்தப் பக்கம் வந்து இசைகேடாக மாட்டிக்கொண்டு விட்டேன்.

'மாமா, சௌக்யமா?'

வயது 18, 19 இருக்கும். தோளில் பை, கையில் டிபன் பாக்ஸ்.

"என்னைத் தெரியல்லியா? கமலி."

"ஓ!"

கேட்க ஆயிரம் கேள்விகள், பேச ஆயிரம் வார்த்தைகள். ஒரே சமயத்தில் முந்திக்கொண்டு நாக்கு நுனிக்கும் போட்டியிட்டன.

“அம்மா சௌக்கியமா?” கத்தினேன். அவள் என்ன சொன்னாளோ, சொன்னதை பஸ் தன்னோடு அடித்துக் கொண்டு போய்விட்டது. கையை ஏதோ பலமாக ஆட்டுவது தான் தெரிந்தது.

ஜங்கிளில் திக்குத் தப்பி நின்றேன்.

தனக்கும் பயனின்றி, எதற்கும் பயனின்றி வெறும் வியர்த்தத்துக்கே ஒரு பிறவியில் உன் எண்ணம் என்ன, நியாயம் என்ன?

—தினமணி கதிர்

# காயிதக் கப்பல்

அங்கு நிற்கவேணும் உத்தேசத்தில் அங்கு நிற்க வில்லை. வானமே ஒரு மாபெரும் பூவிதழ் போலும், பொல பொல புலு புலு நலு நலு மலர்ந்துகொண்டிருக்கும் அத்தனை விடி நேரத்தில், மேலே பூச்சரங்கள் தொங்கிக் கொண்டு கலர் பல்புகள் மாறி மாறிச் சிமிட்ட அந்தப் போர்டு என்னவெனும் சிறு அவாவில் கண் இமைக்கும் நேரத்துக்கு நடை தடைப்பட்டு நின்றதெனச் சொல்லக் கூடியபடி நேரம்கூட இல்லை. ஏதோ ஒரு நொடித் தயக்கம். அதற்குள், உள்ளேயும் இருளைப் பகலாக்கும் பளிச்சு வெளிச்சம். புத்தம் புதிய நாற்காலிகள் மேசைகள் மாடிக்குப் படிக்கட்டு—யாவதும் மனத்தில் தாக்கலாகி விட்டது.

## ஸ்ரீ கணேஷ் பவன்

நான் மேலே நகர்வதற்குள் உள்ளிருந்து. கூப்பிய கரங் களுடன் ஆசாமி படியிறங்கி வந்தார். கட்டை குட்டை யாகச் சற்று அகலவாட்டில், ஆனால், கட்டுமஸ்தான தேகம். சந்தன நிற மேனி.

"வரணும் வரணும் வாங்கோ உள்ளே வாங்கோ—"

காதில் கடுக்கண் சிமிட்டிற்று. கழுத்தில் மைனர் செயின், இரண்டு கைகளிலும் மோதிரங்கள், ஸில்க் சட்டை.

பைசா நஹி என்கிற ஜாடையில் கை விரித்தேன்.

"அது பற்றி யார் பேசினா? உள்ளே வாங்கோ சும்மா"

ஏதோ அச்சமோ, கூச்சமோ அவரைத் தடுத்தது. அல்லேல் என்னைக் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டே உள்ளே போயிருப்பார். வரவேற்பில் அத்தனை ஆர்வம், அவசரம்.

நேரே மாடி. அங்கே தனி அறை (ஆபீஸ்?)யில், தம் நாற்காலியில் உட்கார வைத்தார்.

"இதோ ஒரு நிமிஷம். ஏலே நாராயணா!" உரக்கக் கூவிக்கொண்டே வெளியே போனார்.

என்னைச் சுற்றிலும் பார்க்க அவகாசம் கிடைத்தது. இந்த அறையிருக்கிற வளத்தைப் பார்த்தால், இவர் கல்லாவில் உட்காரமாட்டார் என்று தோன்றுகிறது. அதற்கு வேறே ஆள். எனக்குப் பின்னால் சுவரில் பெரிய வெங்கடாசலபதி படம் தொங்கிற்று. படத்துக்கடியில் ஷெல்பில் ஸ்டாண்டில் ஒரு டஜன் அத்தர் ஊதுவத்திகள் கமகமாய்த்தன.

இதோ முதலாளி வந்துவிட்டார். பின்னாலேயே நாராயணன், முதலாளி நிறத்துக்குத் தோற்காமல், அப்போதுதான், ஸ்நானம் பண்ணி நெற்றியில் குழைத்திட்ட விபூதி மூன்று பட்டைகளாகத் துலங்கிற்று நடுப்பட்டையில் சந்தனப்பொட்டு, நடுவே கண் திறந்தாற்போல் குங்குமம். ஒரு கையில் புது எவர்ஸில்வர் தட்டில் இட்ட வாழையிலைப் பாளத்தில், தும்பை போன்று மூன்று இட்டிலி, இரண்டு மெது வடையை ஒட்டி, கெட்டிச் சட்னி; மறுகையில் எவர் ஸில்வர் குவளையில் சாம்பார் மணமும் ஆவியும் பறந்தது. தட்டை மேசை மேல் வைத்த பின்னர்தான் தெரிந்தது, அதன்மேல் இன்னொரு இலைப் பாளத்தில் சர்க்கரைப் பொங்கல். முழிமுழியென முழு முந்திரிப்பருப்பும் நெய்யும் மினுமினுத்தன.

முதலாளி சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தார்.

"அண்ணா, மன்னிக்கணும் ஸ்வாமிஜி—பிஷை நடக்கட்டும்."

என் புருவங்கள் வினாவில் உயர்ந்தன.

"இன்னிக்கு ஹோட்டல் திறப்பு விழா. தை பிறந்துடுத்தில்லியா? நேத்து ராத்ரியே மனசில் என்னவோ தோணித்து. என் சொந்த வேண்டுதலையோ, ஆண்டவன் கட்டளையோ, ஐயப்பன்தான் அறிவான். இன்னி காலையில், இந்த வழியில் முதல் முதலா வரும் யாராயிருந்தாலும் சரி, அவர்தான் ஓட்டலின் முதல் அதிதி. என் சங்கல்பத்தைச் சாஸ்தா உங்கள் தரிசனத்தில் நிறைவேற்றிக் கொடுத்ததுக்கு நான் தனி பாக்கியம் பண்ணியிருக்கணும். இனி இந்த ஹோட்டலின் அதிர்ஷ்டம் பற்றி எனக்குக் கிஞ்சித்கூடச் சந்தேகம் இல்லை."

Courtier's language. ராஜஸ்னேகனின் பாஷையென்று சொல்வார்கள். அதில் முகஸ்துதியையும் இன்பமயத்தையும் தவிர வேறு ஏதும் காணமுடியாது, காணக்கூடாது.

இந்த அளவு அபிமானத்துக்கு இவர் என்னிடம் என்ன கண்டார்? மார்பிலிருந்து கால்வரை என்னை ஒருமுறை பார்த்துக்கொண்டேன். மேல் முண்டு. இடுப்பில் கட்டை வேட்டி, வேறு தெரியவில்லையே, ஓ, பூணூல்? ஓஹோ, நேற்று இரவே பனியனோடு கழன்று கொடியில் தொங்கிக் கொண்டிருக்கிறதே? அதனால்தான் சாமியார் ஆயிட்டேனோ? சிரிப்பைச் சிரமப்பட்டு அடக்கிக்கொண்டேன்.

"தேவ முகூர்த்தத்தில் எங்களுக்காக ப்ரஸன்னமாகியிருக்கிறீர்கள். தித்திப்பை ஒருகணம் வாயில் போட்டுக் கொள்ளும்படி பிரார்த்திக்கிறேன்."

டிபன் என்னவோ அமர்க்களந்தான். அடுத்து நாராயணன் கொண்டுவந்த அந்தக் காபி இதுவரை நான் எங்கும் அருந்தியதில்லை. இனிமேலும் அருந்தப் போவது மில்லை. இது கணேஷ் பவனின் போணிக் காபி. இதுபோல் இங்கேயும் இனி கிடைக்கப் போவதில்லை. டிகாக்ஷனையும் பாலையும் ஒன்று சேர்க்கும் வேளை ஏதோ ராசியில் நேர்ந் திருக்கிறது. அந்த ராசி திரும்ப நேராது. எதுவுமே திரும்ப நேர்வதில்லை.

"நாராயணா!"

பேரைச் சொன்னதிலே அந்த அந்தச் சமயத்துக்கு என்ன என்ன கட்டளையென்று நாராயணனுக்கு வாசனை யிலேயே தெரியும் போலும். சட்டென வெள்ளி விபூதி மடலைக் கொண்டுவந்து கொடுத்தான். நானும் இட்டுக் கொண்டு அவர்களுக்கும் இட்டேன். இருவரும் மீண்டும் சேவித்து எழுந்தனர்.

"நான் பரம சந்தோஷம் ஆனேன். இனிமேல் கீழே போய்க் கவனிக்கணும். உத்தரவு வாங்கிக்கறேன். சுவாமி கள் அவசரப்பட வேண்டாம். நன்னாயிருந்து சிரமப் பரி காரம் பண்ணிண்டு—"

காஷாயம் கட்டவில்லை. தலையை மழித்துக் கொள்ள வில்லை. ஆனால் எனக்குப் பட்டம் சூட்டியாச்சு; அவரவர் மனசு அவரவரது. இன்று விழித்த வேளை இப்படி. என் நடையைத் தொடர்கிறேன். இல்லை, என் நடை தொடர் கிறது. காரணம் தெரியாத உள் பூரிப்பில் நெஞ்சு வெளியே குதித்துவிடும்போல் தாவுகிறது. நான் ஏன் ஸ்வாமி? தேஜஸ்? இத்தனைக்கும் ஒருவேளைதான் ஸந்தியா வந்தனம்; அதுவும் ஸ்திரமில்லை. 108 காயத்ரிதான், அதுக்கே இத்தனை மவுசா? அப்போ தினம் 1008க்கு எப்படி இருக்கும்? அர்த்தமே இல்லாத குருட்டுக் கணக்கில் மனம் இறங்கிவிட்டது. ஆனால் மனசை யார் கேட்பது? மனசை மனசாலேயே அடக்க முடியல்லையே!

சூரியோதயம் கம்பீரமாய், அவகாசமாய்—சூரியோதயமா உலகத்துக்கே ஜானவாசமா? அவனே வானத்தின் வாயிலாகக் காட்டுகிறான். அந்தத் திசையிலிருந்து வரும் மாந்தர், தூரப் பார்வையோடு சேர்ந்த மனோல்லாசத்துக்கு அவன் வாயிலிருந்தே புறப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அனைவரும் சூரிய புத்திரர்கள், புத்திரிகள். விழா உடையில், விழாக் களியில், பேசிச் சிரித்துக்கொண்டு வருகின்றனர், போகின்றனர். எல்லாரும் ஓர் குடும்பம். ஓ, இன்று மாட்டுப் பொங்கல் அல்லோ?

ஏனோ, இன்று மூன்று மணிக்கே விழிப்பு வந்துவிட்டது. இனித் தூக்கம் இல்லையெனத் தெளிந்துவிட்டது. தெரு விளக்கின் மெர்க்குரி வெளிச்சம், என் கிடக்கைக்கு எதிர்ச் சுவரில் பட்டு, ஏதேதோ பிம்பங்கள், நிர்ணயிக்க முடியாத உருவங்களில் கோடுகளில் பிழம்புகளில் மிதந்தன, ஓடின, ஒளிந்தன, மாறின, மறைந்தன, மீண்டும் தோன்றின.

இயற்கையின் கெலிடாஸ்கோப் Modern artஐக் காட்டிலும் Modern art. இனி, உருவாகப்போகும் எண்ணத்தின் நிழல்கள்? அந்த ஜாலக்கின் குறுக்கே ஓர் எண்ணம்—இல்லை, அதன் கிறுக்கல் மின்னல் வெட்டிற்று. இப்பவே, இப்படியே, மேல்துண்டு, அரை வேட்டியோடு படியிறங்கி விட்டால், என்ன? கால்போன வழி—மனம் வகுக்கும் திசை அல்ல. கால் எங்கே தன் இச்சையில் இழுத்துச் செல்கிறதோ, அவ்வழியே போய்க்கொண்டு...போய்க்கொண்டே, இன்று பூரா, அதாவது இரவு படுக்கும் நேரம் வரை—கையில் ஒரு செல்லி கூடாது. பசி? அந்த Problem தானே தன்னைப் பிரித்துக்கொள்ள வேண்டியதுதான். அதெப்படியப்பா? வயிறு கேட்குமா? வயிறு வயிறு வயிறே! உலகமே அதில் தானே இருக்கிறது! அம்மா வயிற்றிலிருந்து விழுகிறாய். வாழ்க்கையின் மறுபெயர் வயிறு. ஈசுவரோ ரக்ஷது; சமஸ்கிருதம் எல்லாம் இருக்கட்டும். உனக்குத் தெரிந்த ஸம்ஸ்கிருதமும் அவ்வளவுதானே! வயிற்றைக் கிள்ளும்பே,

தல்லோ தெரியப்போகிறது! வாய் திறந்து கேட்பையா? பழக்கமிருக்கா? எனக்கு இப்போ எப்படித் தெரியும்? பசி வந்திடப் பத்தும்—பறந்து போகட்டும். எனக்கு இப்போ எப்படித் தெரியும்? பழக்கம் இருக்கா. பிச்சையெடுக்கவோ பல்லை இளிக்கவோ, திருடவோ, அடித்துப் பிடுங்கவோ, அகப்பட்டுக் கொண்டால் கொடுப்பதை வாங்கிக் கொள்ளவோ—

லிஸ்டை அடுக்கிக்கொண்டே போனால்? இனிமேல் தான் தெரியணும். பட்டினி—உன் புளிச்சேப்பத்துக்கு டாக்டர் விதிக்காமல், பட்டினிக்காகவே பட்டினி, பட்டினின்னா அது ஒரு தின்பண்டத்தின் பெயர் என்று நினைத்துக்கொண்டிருக்கிறாயா? இல்லையப்பா மகனே, பசிக் கொடுமை படர்றபோதுதானே தெரியப்போகிறது.

தெரியட்டும் சைத்தான்.

மனமெனும் சைத்தான்.

கேம் ஆரம்பித்துவிட்டது. இதோ நடந்துகொண்டிருக்கிறேன். என்ன கேம்? இன்றைக்கு நான் எனக்குப் பொறுப்பு இல்லை. ஆனால் கேம் ஆரம்பம் நன்றாத்தானிருக்கிறது. ஏ! சைத்தான் நீ காட்டின பசிப் பூச்சாண்டி, எடுத்தவுடனே மறைஞ்சு போச்சு, என்ன சொல்றே? கத்துக்குட்டியின் ஆரம்பம் அதிர்ஷ்டம் என்பார் அல்லவா?

உள்ளிருந்து எதிர்ப் பேச்சு எழவில்லை. பாம்பு படுத்திருக்கிறது, நம்ப முடியாது. இப்போதுதானே, போதே ஆரம்பித்திருக்கிறது.

சன்யாசியாகவே நாடு முழுதும் திரிந்த ஸ்வாமி விவேகானந்தரின் எந்தப் படத்திலும் அவரது கன்னங்கள் ஆப்பிள்களாகத்தானே பிரகாசிக்கின்றன!

அவருடைய குருநாதரும், தானாகத் தன் தவங்களில் தன்னை வருத்திக்கொண்ட பட்டினிகள் அன்றி, பசியால் வருந்தியதாக வரலாறே இல்லை. கேட்கப் போனால் அவர்

தித்திப்பு நொறுக்குத் தீனிக்காரராமே! அதனால் மதுர் எப்பவும் ஸ்டாக்கில் மிட்டாய் வைத்திருந்ததாகவே வரலாறு சொல்கிறது.

இவர்கள் பேருக்கோ, சொற்களுக்கோ, செயல் களுக்கோ காப்பிரைட் இல்லை. இவர்கள் உலகத்தின் சொத்து, இவர்களைப் பற்றித் தைரியமாகப் பேசுகிறோம். வேறு பெயர்களும் எனக்குத் தெரியும். இப்போது சன்யாசி கள், தனியாகவோ, சேர்ந்தோ ஸ்தாபனமாக விளங்கு கிறார்கள். இலை, சருகு, கிழங்கு, காற்றைப் புசித்த ரிஷிகள் புராணங்களோடு சரியா?

மேலே ஆகாசம், கீழே பூமி—இவன்தானே சன்யாசி? சரி இன்று திடுக்கென, இப்படிக் கிளம்பிவிட்டேனே. இதனு டைய மன அடிவாரம் என்ன? தோ பார், உன்னைப் பற்றி எல்லாமே உன்னால் தெரிந்துகொள்ள முடியும் என்று எண்ணாதே! எல்லாம் பையப் பைய. இதுவே ஒரு சூத்திரம். இதன் சரடு ஜன்மா ஜன்மாவாக ஜன்மாவுக்குமப்பால் நீளம் கொண்டது. முடிவேயற்ற நீளம்.

இதைப் பேசுவது இப்போது என்னுள் யார்?

இது சைத்தான் அல்ல.

வீட்டில் தேடுவார்கள். கொஞ்சநாழி கவலைப்படு வார்கள். உனக்கு அதிர்ஷ்டமிருந்தால், ஓரிரு கண்ணீரும் சிந்தலாம். அவ்வளவுதான். உனக்காக யாரும் ஒருவேளை காபியைத் தவறப் போவதில்லை. அடுப்பில் பூனைக்குட்டி விளையாடப் போவதில்லை. அரைத்து வைத்திருக்கும் தோசை மாவை வார்க்காமல் விடப்போவதில்லை. நீயே சொல், புளித்துப் போகாதா? பலூனை ஊசியால் குத்தி னாற்போல், என் மானம் எனக்கே குலைகிறது. Track மாறு gearஐ மாற்று. சீட்டைக் குலுக்கு மறுபடியும் வெட்டு.

மனமெனும் சீட்டு.

எங்கு வந்திருக்கிறேன்? சாலையோரம் என் வலப் பக்கத்தில் என்னுடையே ஒரு வாய்க்கால் வந்துகொண்டிருக்கிறது. குழைந்து குழைந்து, இழைந்து, இழைந்து, வளைந்து வளைந்து, நெளிந்து நெளிந்து, தொடர்ந்து தொடர்ந்து. இதன் விசுவாசம் உயிர்கொண்டு எனக்கு ரொம்ப வேண்டியிருக்கிறது, பிடித்தமாயிருக்கிறது. காவேரி வாய்க்கால் தான்.

பேர், ஊர், பரம்பரை, மூலம்— எல்லாம் உங்களுக்குத் தான் அவசியமாயிருக்கின்றன. ஏனோ? இதில் என்னத்தைக் கண்டீர்கள்? எனக்கு ஏதுமே இல்லை. இதோ பாய்ந்து கொண்டே இருக்கிறேனே—மேலே ஆகாசம், கீழே பூமி. இரவு வேளைக்கு என்மேல் சந்திரிகை என் அலைபாயலில் சிதறிய அதன் நிழல் சுக்கல்கள் என் ஓட்டம்தான் என் வழி. என் பிராணன், என் பலன், என் ஆதி, என் அந்தம். என் பாஷை, என் எல்லாமே வேறெதும் அறியேன்; வேறெதும் வேண்டேன். ஆனால் உங்கள் பாஷையிலேயே உங்களுக்குப் பேசிப் பார்க்கிறேன். அதுகூட ஒரு ப்ரயத்தனமாக இல்லை, அதுவும் என் ஓட்டத்தில்தான்...

மனப்ரவாஹத்தில் மணிப்பிரவாளம்.

வயல்களில் கதிர்கள் கனத்துச் சாய்ந்து பொன்னிறத்தில் அறுவடைக்குக் காத்திருக்கின்றன. வான விளிம்பின் முத்தத்தின் நாணத்தில் பூமி ஒரு பெரிய கன்னமாகப் பொற்பிழம்பு குழம்புகிறது. மண், பெண், பொன் மூன்றுமே ஹே பூமா நீயேதான்.

வாழைக் கொல்லைகள் இலைகள், பசும்பொன் தகடுகளாக, தாம்பாளங்களாக, தட்டாமாலை சுற்றும் பாவாடையில் கிழிசல்களாகக் காற்றில் ஆடுகின்றன. வாழ்வே, ஏமாந்துபோன சமயங்களின் கோவை போன்று, மனதில் ஏதோ ஏக்கத்தைத் தூண்டுகின்றன. ஏதோ ஓர் உண்மையை, ஒருவேளை என்னுடைய உண்மையைத்தானோ, நிர்வாணத்தில் பார்க்கிறேன், வெட்கமாயிருக்கிறதா?

வெட்கம் வேறு உண்மை வேறு. வாய்க்கால் இப்போது ஒரு தென்னஞ் சோலைக்குள் புகுந்துகொண்டது. 'போய் வா' என்று அதற்குக் கையாட்டிவிட வேண்டுமா என்று தோன்றுகையில், தாழும் புதர்களிடையே வெளிப்படுகிறது.

நட, நட, நடந்துகொண்டேயிரு.

ஆம், ரஸ்தாவும் நடக்கிறது. மேடு ஏறுகிறது. ஒரு வளைவில் பாலம் தென்படுகிறது. வாய்க்காலின் இரு கரைகளும் திடீரென மணற் குன்று அலைகளாக உயர்ந்து விட்டன. ஓரமாக வந்துகொண்டிருந்த வாய்க்கால், இப்போது சாலையின் குறுக்கே பாலத்தின் கீழ் ஓடுகிறது.

கரை மேட்டில் இரு மணல் அலைகளின் இடைத் தாழ்வில் ஒரு ஸ்திரி இடுப்பில் குடத்துடன் தோன்றுகிறாள். கரைச்சரிவில் சறுக்கினாற்போல், தடதடவென இறங்கி, தண்ணீர் ஓரமாகக் குடத்தை வைத்துவிட்டு—ஆ! ஆ! அவசரமாகப் புடைவையை அவிழ்க்கிறாள். முப்பது இருக்குமா? வாய்க்காலின் அடிவயிற்றில் கிடக்கும் கூழாங் கற்களின் மேல் கவனம்போல் பாலத்தின்மேல் குனிகிறேன்.

அவள் என்னைச் சட்டை செய்யவே இல்லை. புடைவைக் கொடுக்கை மோவாயால் மார்மேல் அழுத்திக் கொண்டு ரவிக்கையை உரித்தெறிகிறாள். அது கொப்புளம் போட்டுத் தண்ணீரில் மிதந்து செல்கிறது. புடவையை அதி வேகமாக இடுப்பில் சுற்றி நுனியை விலாவில் இறுக்கிச் செருகிக்கொள்கிறாள். சதையோ, உடலின் வரையோ, ஒரு இம்மிகூடவா காட்டாது? துறை ஸ்நானத்தில் சர்வீஸ் ஆனவள்போல் இருக்கிறது. ஏமாற்றத்தோடு பின்வாங்கு கிறேன். கால்கள் நடையைத் தொடர்கின்றன. அவள் கொக்கரிப்பு என்னைத் துரத்துகிறது.

''வயசாச்சு மனுசனுக்கு! ஏய், உனக்கு மவ இருக் காளா?''

பேசினது அவளா, அல்ல அவள் குரலில் மனத்தின் எதிரொலியா?—நட நட நடந்துகொண்டேயிரு. ஓடாதே. நட— நான் ஏன் ஓடணும்? ஆகாது என்ன செய்து விட்டேன், என்ன நடந்துவிட்டது?

ஆண்டவனே நீ என்று ஒன்று இருந்தால், நீயும் ஒப்புக் கொள்ளவேண்டிய விஷயங்கள் இருக்கின்றன. உயிர் என்று படைத்தாய். அதை உடலினுள் வைத்தாய். உடலைப் பாலென்று பிரித்தாய். கன்றுப் பருவத்திலேயே அதற்குரிய உணர்வுகளையும் வேட்கைகளையும் ஊட்டி உயிரை வேதனையாக்கி, 'நீ மனிதன், ஆறு அறிவு படைத் தவன், மனத்தை அடக்கி ஆளவேண்டும் என்று எனக்கு நியாயம் பேசுவது நீயா, அல்லது மனிதன் கூட்டுவாழ்வின் பத்திரத்துக்காக, குற்றமுள்ள நெஞ்சு, மனசாட்சியென்று என்னையே எனக்குக் காவல் வைத்துக் காட்டும் பூச்சாண்டியா?

சிந்தனா சுவாரஸ்யம், நடை தெரியாமலே வெகுதூரம் வந்துவிட்டேன்.

அட! வாய்க்கால் இன்னுமா கூடவே!—வயிறுள் பிராண்ட ஆரம்பித்துவிட்டது. இருக்கட்டும் ஒருவேளைப் பட்டினியில் பிராணன் போய்விடுமா? வார்த்தைகள் தைரியம் சொல்லும் பாணியில், உண்மையில் கேலி செய் கின்றன.

ஓடை, சட்டெனு என்னைவிட்டுப் பிரிந்து, வேகமாக, அகலமாக ஒதுங்கிய விசாலத்தில் ஒரு கோயில் தோன்று கிறது. மதில் மூலைகளின் மேல் ரிஷபங்கள் படுத்திருக் கின்றன. ஆலயம் தோன்றிய திடீர், ஏதோ எனக்காகவே அப்பவே படைக்கப்பட்டது போன்ற ஓர் எண்ணத்தில், ஏதோ ஒரு பெருமிதம், சிருஷ்டிக்கு நன்றி. நான் நினைப்பது எத்தனை சிறுபிள்ளைத்தனம் என்பதுகூட மறந்து உணர்கிறேன். இந்த எண்ணத்தில் பசிகூட மறக்

கிறது. நான் இவ்வேளைக்கு வழிபடல் வேண்டுமென்று ஆண்டவனுக்கே விருப்பமானால், அது என் பாக்கியமல்லவா?

கோயிலுக்கு வெளியே திருக்குளத்தில் கை கால்களைச் சுத்தி செய்துகொண்டு உள்ளே போகிறேன். துவஜஸ்தம்பத்தருகே ஒரு குட்டித் தூணில் தொங்கிய குடுக்கையிலிருந்து விபூதியை எடுத்துப் பூசிக்கொள்கிறேன்.

கோயில் காலியாகத் தோன்றுகிறது. ஒரே இருட்டு. தரை கரடு முரடு. ஆனால் கர்ப்பகிருகத்தில் சங்கிலியினின்று தொங்கும் பெரிய வெண்கல அகலில் சுடர், அதுவும் துணை விளக்கிலாது—லிங்கமும் அதுவும் ஒன்றுக்கொன்று துணை— அந்த வெளிச்சத்தில் சுவாமி இருளிலிருந்து மங்கலாகப் பிதுங்குகிறார். ஆவுடையாரைச் சுற்றிய அழுக்குத் துணி மீது ஒன்றிரண்டு பொன் அரளிகள்.

சாமிக்கும் வளப்பனாக அம்மன் நிலை. சுள்ளி பொறுக்கும் சிறுமியாட்டம் கிழிந்த பாவாடை; முழங்காலுக்கு மேல் தூக்கிக்கொண்டு, வடிவமும் வாளிப்பால், சரியான நாட்டுக் கட்டை. கோவில் பராமரிப்பு இவ்வளவு குறைவாக இருக்க முடியுமா? இல்லை, கோயில் மஹாத்மியமே, அம்மையும் அப்பனும் இத்தனை பரதையாக இருப்பதுதானா? நம் ஐதீகங்களை எதுவும் சொல்ல முடியாது. கதையும் அப்படியும் திரும்பிவிடுவதுண்டே!

உள் பிராகாரத்தைச் சுற்றிவிட்டு வெளிவந்ததும் நடராஜர் சந்நதியில் குருக்கள் உட்கார்ந்திருந்தார். பக்கத்தில் தாம்பாளத்தில் விபூதி, குங்கும மடல்கள். எதிரே ஒரு கூடை. அதில் நான்கு பொட்டலங்கள் இருந்தன. நெருப்பைக் குளிப்பாட்டின மேனி.

விபூதி குங்கும ப்ரசாதம் வாங்கிக்கொண்டேன்.

"ஏன் சாமியாரே, பசிக்கல்லியா? பட்டைசாதம் வாங்கிக் கோமேன்!"

காசுக்கு வழியில்லையென்று தெரிவிக்கக் கை விரித்தேன்.

குருக்கள் ஏதோ உரத்த சிந்தனையில் ஆழ்ந்தவராய், "ஹூம், நாழியாச்சு. இனிமேலும் எவனும் வரமாட்டான். விலைபோக வழியில்லை. ஹூம், பாழாப்போவதில் பரதேசி வயித்தில் போகட்டும்—சரி இந்தாரும் பிடியும்!"

மறுபடியும் கையை விரித்தேன்.

"தெரிகிறது சுவாமி! உம்மிடம் இருந்தாலும் இனிமேல் இருக்கிறதாகக் காண்பிப்பேளா? எனக்கும் வீட்டுக்குப் போகணும். பிடியும்!"

மூன்று பொட்டலங்களைத் திணித்நார். "இதையும் கொடுத்துடலாம். ஆனால் கூடையைக் காலியாக்க வேண்டாம்னு பார்க்கறேன், நடவும் உம் காட்டிலே மழைதான்."

குளத்தங்கரையில் உட்கார்ந்து பொட்டலங்களைப் பிரித்தேன். ஒரு புளியம்சாதம், இரண்டு தயிர்சாதம். முதல் பொட்டலத்தில் கொஞ்சம் வாழைக்காய்க் கறி, தயிர் சாதத்தின் ஓரமாய் விட இலையில் புளிக்காய்ச்சல்.

தேவாமிர்தம்.

பசித்துப் புசிக்க தனிப் புண்ணியம் பண்ணியிருக்க வேண்டும். பசி வேளையின் ருசியே தனி! பசிக்கு எதுவும் ருசி. உயிர் வாழவே உண் எனும் சூத்திரத்தை அநுபவமாக அறியும் வேளை புண்ய காலம். ஆனால் இந்தச் சாதங்கள் உள்ளபடி ருசியாகவும் இருக்கின்றனவே! பாகம் குருக்களா, மாமியா? யாராயிருப்பினும் வாழ்க!

கடைசிப் பொட்டலத்தின் பாதியில் வயிறு 'தம்' ஆகிவிட்டது. காக்கைக்கும் நாய்க்கும் போட்டேன். ஆண்டவன் அவைகளுக்கும் சேர்த்துத்தான் எனக்கு அளந்திருக்கிறான்.

என் பசியாற்றவே கோயிலைக் காட்டி, உள்ளே இழுத்தாயோ? அடுத்த நிமிடம் நேரப்போவது என்னென்று

பொத்தி மூடுகிறானே, அதிலேதான் கருணையிருக்கிறது. தெரியாமல் இருப்பதே உனக்கு நல்லது. நல்லதை மதிக்க மாட்டாய். தீம்பைப் பொறுக்கமாட்டாய்.

துண்டை உதறிப்போட்டு, மரத்தடியில் படுத்தேன்.

Our Father which art in Heaven

Hallowed be thy name

Thy Kingdom come—எத்தனை அர்த்தங்கள், எத்தனை ஆறுதல்கள்! கண் செருகுகிறது. உலகம் சுற்றும் அச்சில் (axis) தேன் சொரிகிறது!

பிறகு எப்பொழுது எழுந்தேன்! எப்பொழுது நடக்க ஆரம்பித்தேன்? தூக்கத்திலேயே நடந்து வந்திருக்கிறேனா? அங்கே மூடு சூளையாக இருக்கிறது! நினைப்பு வந்தபோது நடந்து கொண்டிருக்கிறேன். Somnambulism?

இடது பக்கத்தில் வாய்க்கால் துணை வந்துகொண் டிருக்கிறது.

ஏதேனும் புதுப்பரிணாமத்துள் புகுந்துவிட்டேனா? எனக்கு நேர்ந்துகொண்டிருப்பதெல்லாம் உண்மைதானா? கனவில்லை; பொய் இல்லை. ஆனால் ஏதோ நம்பத்தக்க தல்லாத நிலை. கவிதை மாதிரி. கவிதையே நடப்பாக.

வெயிலில் மஞ்சள் காணத் தொடங்கிவிட்டது முதிர்ந்த பிற்பகல்.

வாய்க்கால் இப்போது வெகு நெருக்கத்தில் வந்திருக் கிறது. கரைமேலே நடந்துகொண்டிருக்கிறேன். கரை உயரம் தண்ணீர் தாழ. அதோ அந்தச் சின்னப் பையன் தண்ணீர் மேல் ஏன் கவனமாக இருக்கிறான்? பக்கத்தில், புத்தகப் பை அலக்ஷியத்தில் கிடக்கிறது. இறங்கிப் போய் அவன் அருகே நிற்கிறேன், பிறகு உட்காருகிறேன். ஓ காயிதக் கப்பலா? பள்ளிக்கூடத்துக்கு 'டிமிக்கி' யா? என்னைத்தான் கேட்டுக்கொள்கிறேன். அப்படியே இருந் தாலும் இவன் வயதுக்குப் பொருத்தம்தானே!

என் அரவம் கேட்டு நிமிர்ந்து பார்க்கிறான். வெயிலில் நீலக் கண்கள் கூசுகின்றன. தலை தங்க மோதிரக் குவியல் வேர்வை விட்டுக்கொண்டு, மேனி, ஒரு பொன் ரோஸில் தகதகக்கிறான். அழகான பையன்.

அவனுடைய கப்பல் சரியாக இல்லை. அவனுக்குச் செய்யத் தெரியவில்லை. நான் உதட்டைப் பிதுக்குகிறேன். சுற்றுமுற்றும் பார்க்கிறேன். செய்து காண்பிக்க, குப்பைக் காயிதம் ஏதேனும் தென்படாதா? அவனுக்குப் புரிந்து விட்டது. சடேரென்று பையிலிருந்து ஒரு நோட்டுப் புத்தகத்தை உருவி நடுப்பக்கத்தைக் கிழிக்கிறான். ஆட்சேபிக்க எனக்கு நேரமே தரவில்லை. இந்தக் காலத்துப் பையனில்லையா? துணிச்சலுக்குக் கேட்கணுமா?

Spoilsport ஆக இருக்காதே இது இவனுடைய நேரம். இப்போ நீயும் இவன்தான். பெரிய கப்பல் என் விரல்களி னிடையினின்று புறப்படுகிறது. ப்பேப்பர் நல்ல தடுமன். ஆதலால் கப்பலும் திடம்.

கப்பலைப் பார்த்ததும் பையனுக்குப் பரபரப்புத் தாங்க வில்லை. தன்னைத் தழுவிக்கொண்டான். எகிறிக் குதித் தான். என் கையிலிருந்து பிடுங்க முயன்றான். அமைதிக்கு அவனைக் கையமர்த்தி, கப்பலைத் தண்ணீரில் விட்டேன். அவனிடம் கொடுத்திருக்கலாம். ஆனால் என்னுடைய குழந்தைத்தனம் தலைதூக்கிவிட்டதே!

கம்பீரமாக ஒரு திரும்புத் திரும்பித் தன் சமனைக் கண்டு கொண்டு, கப்பல் நகர்ந்தது. அதன் பயணத்தில் எங்கள் இருவரின் கவனங்களும் ஒருமித்தன.

ஆனால் அதன் கம்பீரம் நீடிக்கவில்லை. வாய்க்காலின் ஓட்டம், தன்போக்கில் அதை இழுத்துக்கொண்டது. எங்கள் கை எட்டலைத் தாண்டிவிட்டது. சாய்ந்து, சரிந்து, பிரிந்து, அலங்கோலமும் அவமானமுமாகி, தட்டாமாலை சுற்றி, தண்ணீருள் போய்விட்டது.

அடக்கிய அழுகையில் அவனுடைய உதடுகள் தவித்தன. முகம் குங்குமம். சமாளித்துக்கொண்டு, தோளில் பையை மாட்டிக்கொண்டு பெரிதாகக் கொக்கரித்தபடி ஓடினான். பெருமூச்செறிந்தேன். சொல்ல இயலாத விசனம், என் கப்பல் கவிழ்ந்ததற்கு, என்னை உதறி விடுவித்துக்கொண்டு கரையேறி நடக்கிறேன்.

இந்த வாய்க்கால் எனக்கு ஏதோ போதிக்கத்தான் இப்படிக் கூடவே வந்துகொண்டிருக்கிறது.

"என் ஓட்டம் என் கையிலிருக்கிறதா? ஓடுகிறேன், ஓடிக்கொண்டேயிருக்கிறேன். பயிருக்குப் பாய்ச்ச என்னை எங்கெங்கே வெட்டுகிறார்களோ அந்த வழி பாய்கிறேன். வரப்புப் போட்டுத் தடுத்தால் தடைபடுகிறேன்; தேங்குகிறேன். என்னைப் பற்றி, எதைப் பற்றியுமே சிந்திக்க அறியேன். என் தாய் மூல நதிக்கு ஒரு வேளை தனிப்புத்தி, தனிக் கோபம், தனி உணர்ச்சிகள் இருக்கின்றனவோ என்னவோ? ஆனால் நான் கவலையற்றவள். எதைத் தெரிந்து எனக்கென்ன ஆக வேண்டும்?"

இன்னொன்றும் சொல்லாமல் சொல்கிறது. "உங்கள் வழியும் உண்மையில் என் வழிதான். உங்கள் இஷ்டத்துக்கு உங்களைப் பற்றி நீங்கள் எதுவேணுமானாலும் நினைத்துக் கொள்ளலாம். அதோடு சரி. எண்ணத்துக்கும் நடப்புக்கும் எடை சம்பந்தமேயில்லை."

"ஈசனே என் செயலாவது ஏதுமில்லை" ஏதோ பாட்டின் அடி இப்போ சமயம் பார்த்து நினைப்பின் ஆழத்திலிருந்து மேல் வந்து மிதப்பானேன்?

ஆம், இதுவேதான் பேருண்மையாகத் தோன்றுகிறது! மேம்பாடுக்கு விருதாவாய், காரியம் அற்ற இந்த நடையில் எண்ணம் விழுந்ததற்கே முன் என்ன, பின் என்ன? இந்தச் செயலில் என்னை உந்திவிட்டதால் எங்கும் பரவிய உயிர் சக்தியின் மகத்தான நோக்கம் ஏதோ நிறைவேறிக்கொண்

டிருக்கிறது. அது என்ன? என்னை அறியாமலே என்னை பற்றி நான் படும் கவலையை ஏதோ மேலிடத்தில் ஒப்படைத்துவிட்ட விச்ராந்தி. அந்த மேலிடம் எது? இது தற்போதைய நிலையாலே இருக்கலாம். ஆனால் இதில் ஏதோ ஒரு 'ஹாய்' இருக்கிறது. பழகிக்கொண்டு விட்டால் இதைவிடச் சுகம் இல்லை.

பிறந்த குழந்தையைப் பசி தாக்கும் வேகத்தில் 'வீல்' என்று துடித்து அழுகிறது. உடனே அதன் வாயில் திணிக்கப் படும் முலைக்காம்பின் வழி உள் பாயும் அன்பின் சுரப்பும், இன்னும் பார்வையும் நிலைக்காத நிலையில், அதன் பிஞ்சுக் கரம் தேடிக் கண்டு அதன் கீழ் அழுந்தும் ஸ்தன பாரத்தின் மெத்துதான். உணர்ச்சி பூர்வமாய் அதன் பூரண சரணாகத விளைவு, முடிவாய அனுபவானந்தம்.

உயிரின் இந்த முழு அடைக்கலத்தைக் கடைசிவரை, அது பிறந்த தூய்மையுடன் வேண்டுவானெனில், அதில் இருவருமே அடையும் ஏமாற்றம் தவிர்க்கமுடியாதது. ஏதோ ஐந்துக்கு இரண்டு பழுதில்லை என்று அவனே தன்னுடைய அகண்ட கருணையில் ஏற்றுக்கொள்ளும் சமாதானத்தில்தான் இன்று என்னுடைய நடை நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. இது ஏதோ ஒரு விதத்தில் அவன் விதித்தபடி அவனை நோக்கிய யாத்திரைதான்.

வெயிலில் கடுமையில்லை. நிழல்கள் நீளத் தொடங்கி விட்டன. லேசான பனி.

என்னை யாரோ பின்தொடர்வது போன்ற உணர்வில் திரும்புகிறேன். ஆம்.

முதலில் என் கண்ணில் பட்டதும் கவனத்தைத் தன்னில் இருத்திக்கொண்டதும், பெரிய இளநீர் போன்ற அந்தக் கூந்தல் முடிச்சுத்தான். கண்படுகிற பெரிது. பிடரிக்கு ஒரு பாரமாவேயிருக்கும் கனம். அந்த உடல் வாட்ட சாட்டத் தைப் பார்த்தால் ஆந்திரவாகு? 30, 35?

சற்றுப் பின்தங்கி வந்த நடை, நான் அவளைப் பார்த்து விட்டதால் என் சம தூரத்தை அடைந்தது. என் நடை ஏனோ அவளுக்காகவே அனுதாபத்தில், அவளுக்குச் சரியாகத் தளர்ந்தது.

இருவர் நடக்கையில், ஒரு விஷயம் கவனத்துக்குரியது. நடை அதன் சுருதியைக் கண்டுவிட்டால் மூன்றாவது நண்பன் ஒருவன் கூடவே வருகிறான். மோனம். எங்கு, எப்போது சேர்ந்துகொண்டது தெரியாது. ஆனால் அதன் ஆதிக்கம்தான் ஓங்கி வருகிறது. ஆறுதலான ஆதிக்கம்.

இப்போது, இங்கு நாங்கள் நால்வர்— நான், அவள், மோனம், வாய்க்கால்.

எங்கள் மௌன நிலையில் என்னை நான் என்று பிரித்துக் கொள்வது அசம்பாவிதம் அஸ்ருதி.

நான் எனும் என் அகந்தையை இங்குக் கழற்றி அவன் ஆகிவிடுதலே இந்தச் சமயத்தின் சாந்தி, சுஸ்ருதி.

ஆகவே, அவன், அவள், மோனம், வாய்க்கால்.

இங்ஙனம், நான் அவனாய விரக்தி, வியப்பாயில்லை. இயற்கையாய், இயல்பாய், தன்வழியாய், அதன் விளை வாய் உள்ளமும் உடலும் ஒரு தனி லேசாய் அவனும் அவளும் ஒருவருக்கொருவர் ஊடே காணும் பளிங்குத் தெளிவில்—

மோனம் ஒரு வாயில், உள் நுழைந்ததும் வியாபிக்கும் விதானங்களை வியப்பது மனத்தின் ஏழைமை.

மோனம் மேலே ஸ்பரிசம் படா ஆலிங்கனம்.

மோனம் ஒரு வானம்.

மோனம், பல் படாத பாம்புக் கடி.

மோனம், லக்ஷ்மணக் கோடு, உள்ளே பத்ரம்.

மோனம், தன் மேல் நூற்ற கூடு.

மோனம், ஒரு சரடு. என்னை, நானாய 'அவனை', அவளை, வாய்க்காலை, வாய்க்கால் வழி அதன் தாய் நதியை, வேளையை, கவியும் இருளை, இதுவரை கடந்து போனதை, இப்போ நிகழ்ந்துகொண்டிருப்பதை, இனி எதிர் நோக்கியும், எதிர்பாராமலும் வரப்போவதை, யாவதையும் கோத்த உள்ளோட்டம்.

மோனம் ஒரு காவல்.

மோனம் ஒரு விடுதலை.

மோனம் ஒரு சுருதி.

நடந்துகொண்டேயிருந்தவர், சட்டென யாரோ தடுத்து நிறுத்தினாற்போல், நடுவழியில், எதிருக்கெதிர் நின்றனர். அவன் கையை, அவள் பற்ற, அவள் நடத்திய வழியே அவன் சென்றான்.

தண்ணீரில் இறங்கிக் கடந்து, எதிர்க் கரையேறியதும் அடர்ந்த புதர்களை அவள் மறுகையால் விலக்கியதும், அங்கே அடக்கமாய், மறைவாய், பறவைக் கூட்டின் உட்புறம்போல், சுற்றிலும் புதர் சூழ்ந்து, சிறு வட்டமான மணற்பாங்கு. அவள் உட்கார, எதிரே அவன் அமர்கிறான்.

விழிகொட்டாமல் அவனையே பார்த்துக்கொண்டிருந்தவள், திடீரெனக் கையில் முகத்தைப் புதைத்துக்கொண்டு, குலுங்கிக் குலுங்கி அவள் உடல் குலுங்கிய குலுக்கலில், அங்கங்கள் தனித்தனி விண்டுவிடும்போல்—

ஈதென்ன மடை திறந்தது? அவள் கண்ணீர் அவன் நெஞ்சில் விழுந்தது. அவனுக்குத் தொண்டையை அடைத்தது. எப்படித் தேற்றுவது? புரியாது திகைத்தான்.

இரு கைகளையும் ஏந்தித் தாலாட்டினான். தோள் மேல் சார்த்திக்கொள்வதுபோல் தன் இடது மார்பை இரு கைகளாலும், ஒன்றின் கீழ் ஒன்று பொத்தினாள். அப்படியே

ஊஞ்சாடினாள். சட்டென அவன் கைகளைப் பற்றி இழுத்து, தன் வயிற்றின்மேல் வைத்துக்கொண்டாள். அவள் வயிற்றுக் கொதிப்பில், அவன் உள்ளங்கைகள் கன்றின.

நான் என் செய்வேன்? என்னால் என்ன செய்ய முடியும்?

அவளை அலட்டிய புயல், படிப்படியாக அடங்கிற்று. அவளுடைய விரித்த கைகள், துவண்ட மலர்கள்போல் மடியில் கிடக்க கைகளை மூடித்திறந்து, மூடித்திறந்து, ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தாள்.

அவளை அழகு என்று சொல்வதற்கில்லை. ஆனால் விழிகள் கரை புரண்ட ஆழிகள்.

மல்லாந்து, அவனைத் தன்மேல் இழுத்துக்கொண்டாள். அவள் முகத்தில் அழைப்பு இல்லை. சிரிப்பு இல்லை, ஏதோ விதியின் அவசியம் இருந்தது.

மரங்களில் தொங்குவன விழுதுகளா, பாம்புகளா, இருள் சரங்களா? நக்ஷத்ர ஜாலக் ஒரு சமயம், சிறு வெளிச்சம், உள்ளே இருட்டு.

அழுது அழுது வீங்கிச் செவந்துபோன ஒரு மாபெரும் செவ்விழிபோல, மரங்களின் அடவியின் பின்னணியில் அம்புலி எழுகிறது. அவிழ்ந்த அவள் கூந்தல் அவ்வப்போது அவன் முகத்தின்மேல், கருமேகமாய்க் கவிந்தது.

ஆத்மா என்பது என்ன? எல்லாப் பாதிப்புகளையும் தாண்டிய, ஆனால் எல்லாவற்றிற்கும் ஆதார நிலை என்பதெல்லாம் இருக்கட்டும். அந்த நுண்ணிய தர்க்கங்களுக்கு அவன் தன்னைத் தகுதியாக நினைக்கவில்லை. அவனைப் பொறுத்தவரை, அது ஒரு ப்ரக்ஞை நிலை என்றே அறிவான்.

உடல் இல்லாமல், ப்ரக்ஞைக்குச் செயல்பாட்டுக்கு வழியில்லை. ப்ரக்ஞையில்லாமல், உடலும் சவம். ஆகவே, ஒன்றுக்கொன்று இன்றியமையாத உறுதுணை. அதே சமயத்தில் ஒன்றுக்கொன்று வெளியீட்டின் வேதனையில் ஒன்றையொன்று காயப்படுத்திக்கொள்கிறது. அவளுக்கு ஏமாந்த தாய்மையின் தவிப்பு. அவனுக்கு அவன் தனிமையின் சுமை. அவரவருக்கு அவரவர் காயம். அதனாலேயே ஒருவருக்கொருவர் காயம். காயத்தினின்று புறப்படும் ஜீவ நதி.

காலமெனும் ஜீவநதி.
பிரக்ஞை உடலை மீட்டுகிறது.
ஸரிகமபதநி
நித்யா லோலௌ
வித வித கானமு—

மோன கானத்தின், உச்சஸ்வரத்தில், மூர்ச்சையில் மூழ்கிப் போனான்.

'அவனி'ல் இருந்து, நான் மீண்டதெப்போ?.

என் கையின் துழாவலுக்கு அவள் பக்கத்தில் இல்லை. முழு விழிப்பில் எழுந்து உட்கார்ந்தேன். எப்போது போனாள்? எங்கே? ஏன்? திரும்பி வருவாளா? மாட்டாளா? இல்லை, இதுவரை எல்லாமே கனவா? மணலில் ஏதோ கைக்குத் தட்டுப்படுகிறதே, என்ன?

—ஸில்வர் வளையத்தில், ஒரு சாவி. மெல்லியதாய், மாட்டுக் கொம்பில் செய்தது. அவள் ஆடை நெகிழ்ச்சியில் விழுந்திருக்கிறது. ஆகவே நடந்தது கனவு அல்ல. நிலா சிரிக்கிறது. இந்த நனவின் ருசுவை வைத்துக்கொண்டு அவளை எங்கே தேடப்போகிறாய்? எந்தப் பூட்டைத் திறக்கப்போகிறாய்?

இல்லை, இரவெல்லாம் அவளுக்காக இங்கே காத்துக் கொண்டிருக்கப் போகிறாயா?

அப்போதுதான் மனம் பூரா தெளிந்தது.

மீண்டும் தண்ணீரைக் கடந்து, கரையேறி மீண்டும் சாலையை அடைவதற்கும்,

இதுவரை நான் வந்த வழியை நோக்கி, எதிர் திக்கில், சக்திமிக்க ஒளி தூலங்களைப் பாய்ச்சிய வண்ணம் இரண்டு வெளிச்சங்கள் நெருங்குவதற்கும் சரியாயிருந்தது. ஹெட் லைட்டைப் பார்த்தால், லாரி போல் தோன்றுகிறது.

நிறுத்தக் கைகளைப் பலமாக வீசி ஆட்டுகிறேன்.

லாரி வேகம் குறைந்து, மெதுவிடத் தொடங்குகிறது!

●

—அமுதசுரபி

# வலப்பாகம்

இன்று வெள்ளிமலை உச்சிக்கு வானம், விதானம். நட்சத்திரங்கள், தங்களை தோரணங்களாத் தொடுத்துக் கொண்டு ஊஞ்சல் ஆடின. கூட்டம், ஜேஜேவென நெரிந்தது. தேவர்களுடன் அசுரர்கள் தோளோடு தோள் உராய்ந்தனர். அவனுக்கு எல்லோரும் ஒன்றுதான். கருணாமூர்த்தி. அவனுடைய புன்னகைக்கு அர்த்தம் கிடையாதா? அல்லது கண்டுபிடிக்க முடியாதா? ஏமாறாதீர்கள். திரிபுரத்தை எரித்த புன்னகை. அவன் புன்னகை மன்னன். அந்தக் குஞ்சிரிப்பு இன்னும் சற்று விரிந்தது, இஷ்டப்பட்ட செயலோடு, அது சட்டென அதன் முழுமையின் பக்குவத்தில் விழ, அமைதல் எனும் அம்சம் அவனுடைய அருளையும் செயலையும்கூட மீறி வரும்போலும்! இன்று தாளமும், ஸ்ருதியும், லயமும், கானமும் அப்படி ஒரு அமைப்பில் சேர்ந்தன.

திமி திமி தக்கத்தக்க
தக்கத் தக்க திமி திமி—

'இதோ ஆடப்போகிறேன்' என்று சாங்கோபாங்கமாகச் சொல்லிக்கொண்டு அவன் ஆட்டம் துவங்குவதில்லை. அதுபோன்ற செயற்கையான முன் அறிவிப்பு ஆனந்தத்தின், எழுச்சியின் விளைவாய் ஆட்டத்துக்கே மாறானது.

அவன் ஆடிக்கொண்டேயிருப்பான். ஆடிக்கொண்டேயிருந்தான். கூட தாளங்கள் தட்டட்டும். தம்பட்டங்கள்

கொட்டட்டும். தாரைகள் முழங்கட்டும். வாத்யங்கள் வாசிக்கட்டும். கானங்கள் சேரட்டும். பாடுபவர் பாடட்டும். ஆடுபவரும் ஆடட்டும்.

ஆனால் அவனோடு யாரால் ஆட முடியும்? ஆட்டத்தில் வேகம் ஏற ஏற, அந்தச் சூடு கக்கிய ஆவி வெள்ளி மலையைச் சூழ்ந்துகொண்டு, அகில் மணம் வீசிற்று. அவன் மேனி கக்கிய வேர்வையினின்று அபூர்வமான சந்தனம் உச்சியிலிருந்து அடிவாரம் வரை கமழ்ந்தது.

அந்த வேகம் தாங்காமல் வெள்ளியங்கிரியே மத்தாய்க் கடைந்தது. 'நானா வாசிக்கிறேன்? என் கைகள் என் வசத்தில் எங்கு உள்ளன? விரல்கள் தனித்தனி உயிர்கள் பெற்றுக்கொண்டிருக்கின்றன. வாத்யத்தின்மேல் அவை களின் துடிப்பு அவைகளுடையது. என் சுயத்தன்மையில் என் வாசிப்பு இந்தத் துரிதத்துக்கு ஈடுகொடுக்க முடியுமா?' நந்திக்கே தெரிந்தது.

ஆண்டவனே, இது என் ஆச்சர்யம். எப்படி, எப்படி— என் எண்ணத்துக்கு மூச்சுத் திணறுகிறது. உன் செயலில் ஆச்சர்யப்படுவதே அபராதம். மன்னித்தருள்வாய்—எப்படி உன் தூக்கிய திருவடிக்குச் சரியாக தூக்கிய இடதுகை விரல் கள் தனித்தனி நுனி வளைந்து, உன் நர்த்தனத்தின் ஈடு பிசகாமல், தனித்தனி அசைவுகள், முத்திரைகள் காட்டு கின்றன.

ஆனால் வலதுகை அபய முத்திரையில் அசைவற்று அப்படியே நிலைத்து நிற்கின்றது. சரணாகதர்களுக்கு அதுவே துணை. ஆகையால் இத்துணை கோலாகலத்திலும் அது நிலை பிசகவில்லை. அதில்தான் அவன் கருணை அவ்வளவு துல்லியமாக வெளிப்படுகிறது. உள்ளங்கை ரேகை மலரின் இதழ்களாக விரிந்திருக்கின்றன.

இன்று அவன் சதுர்ப்புஜம் காட்டுகிறான். இடதுகை நடுவிரல்களிடையே துள்ளும் மானின் உடலில் புள்ளிகள் சுடர் வீசுகின்றன.

விரித்த சடையில் கங்கை குலுங்குகையில் அவள் சிந்தும் புனித ஜலத்துடன், சடையில் தரித்த மூன்றாம் பிறையி னின்று ஒழுகும் அமுததாரை கலந்து அதுவே ஒரு மதுர தீரமாகி, அதுவே வெள்ளியங்கிரியின் பல பாறைகளின் நடுவே, ஒரு வெடிப்பு வழி. அவனுடைய அகண்ட கருணை யில் மாந்தரின் உய்வுக்குப் பூலோகத்துக்கு அருவி பாய் கின்றது.

அவன் ஆட்டத்துக்கு, அஷ்ட திசைகளும் அசைகின்றன, பூமியைத் தாங்கும் அஷ்டதிக் கஜங்களும் களிதாங்க மாட்டாது, கால் மாற்றி நடனம் புரிகின்றன.

இந்தத் திமிலோகத்தின் திகிரி நடுவே அதன் அச்சாணி யாய் அவன் திகழ்கிறான். வலது கால் கட்டை விரல்நுனியில் நின்றபடி கூத்துக் காட்டுகிறான்.

அவன் மருங்கில் அவள் நிற்கிறாள். இடதுகை இடை மேல், வலதுகையில் கன்னத்தை ஊன்றி அதிசயத்தில் தன்னை மறந்து. அவன் ஆட்டம் நெஞ்சில் ஏதேதோ துகள் களை எழுப்புகின்றன. மகரந்தப் பொடிகள் விழித்து எழு கின்றன. வெட்கமும், வேட்கையும் இதயம் தாண்டி முகத் துக்கு வந்து கண்களில் தவிக்கின்றன.

சுடலைப் பொடி பூசி என் உள்ளம் கவர் கள்வன். நெற்றிக்கண் திறந்துதான் இருக்கிறது. இமயத்தையும் பாகாய் உருவாக்கவல்ல அக்கண்ணில் சுடர் இப்போது தண் ணொளி காட்டுகிறது. ஞானச்சுடர் அந்த ஒளியில் வெள்ளி மலையைச் சூழ்ந்த வானத்தின் அடிவாரத்தில் செந்திட்டுப் படர்கின்றது.

"இன்று நான் ஆனந்தக்கூத்தன்! இன்று நான் ஆனந்தக் கூத்தன்! காணுங்கள்! காணுங்கள்! கண்டதெல்லாம் எடுத்துச் செல்லுங்கள்! என்னிடத்தில் எதுவும் விலைக்கு

இல்லை எடுத்துச் செல்பவருக்கு!'' அவன் அப்படிச் சொல்ல வில்லை. ஆனால் ஆனந்தக்கூத்து யாவர் நெஞ்சிலும் எழுப்பிய சதங்கை ஒலி இதுதான்.

ஆடுகிறான், ஆட்டுவிக்கிறான்.

தியானத்தில் மூழ்கி, சிந்தனையைத் தோற்றங்களாகக் கண்டுகொண்டிருந்த நிலையில் மண்டையோட்டுள் ஒரு மின்னல் பளிச்சிட்டு தியானம் வெடுக்கென கலைந்து விழித்தான்.

இடப்பாகத்தில் அவள் இல்லை. அவனைப் பிரிந்து சென்ற பாதச் சுவடுகளின் குங்குமப் பிழம்பு தந்த தனி வேதனையில் இது பிரிவு என்று உணர்ந்தான். இடதுதோள் அப்படி வலித்தது.

தியானம் ஒரு வாடும் மலரே. வாடும் மலர்களே மணக்கும் மலர்கள். சுவடுகள் காட்டிய வழி பூலோகத்திற்கு இறங்கும் பாதை. இறங்கினான்.

சுடலை ஆண்டியை, பித்தனைத் தவங்கிடந்து அவளே தான் வரித்தாள், எனினும் திடீர் திடீர் என்று அவளுக்குப் பழைய நினைப்பெடுத்துவிடுகிறது. நான் பர்வதராஜ குமாரி. ஹிமவான் புத்ரி, ஹைமவதி, தடாதகை, மதுரை மீனாக்ஷி, தக்ஷன் புத்ரி. தாக்ஷாயணி, அவனுக்குச் சரியாக ஆட முயன்று, காளி வேஷம் காட்டினாலும் அவள் பெண். அதிலும் பேதை. அவள் பேதமையின் ஆழம் இன்னும் எனக்குக் கிட்டிய பாடு இல்லை.

இந்தப் பேதமைக்குத்தான் ஆண்மை, வைராக்கியம், ஞானம், விவேகம், யதார்த்த உணர்வு யாவும் பலியா கின்றன. சீதையால் ராமன் இப்படித்தான் அழிந்தான். விஸ்வாமித்ரன் தவமிழந்தான். என்னையும் இவள் இப்படித் தான் அழிக்கப் பார்க்கிறாள். ஏனோ?

அவன் சிரசுக்கு நேர் உச்சியில் வெண்மேகத்தின் நடுவில் கறுப்பு நக்ஷத்திரம் இப்போது ஒரு கட்டியளவு பெரியதாகிச் சினந்துகொண்டு இன்னும் பெரிதாகிக் கொண்டிருந்தது.

அவளைத் தேடி அவன் நடந்து சென்ற வழியில் இடப் பாகத்தினின்று உதிரம் அவ்வப்போது சொட்டிற்று. பூமியில் புதைந்துபோய் காலகதியில் இத்துளிகள் மதிக்கவொணா பவழங்களாகவும் சாலிக்ராமங்களாகவும் மாறி, அவரவர் விதிப்பயனாய், மாந்தர் செல்வமாகவும், பூஜைக்காகவும் கண்டெடுத்த பொக்கிஷங்களாகத் திகழும்.

அவன் வானின்று கீழிறங்கி வருகையில் தொங்கும் திரைச்சீலையில் தீட்டிய சித்திரம் போலும் பூலோகம் படபடத்தது.

நாடகமே உலகம். அன்று மலர்ந்தது, அன்றே மணம் கமழ்ந்து, சூடி, வாடி... மறுபடியும் பூத்து, நலுங்கிக் கொண்டேயிருக்கும் பூவுலகின் அழகுக்கு ஈடு ஏது? ஸ்வர்க் கத்தில் அழகு இருக்கலாம். அது அழிவற்றதாக இருக்கலாம். ஆனால் மணம் என்னவோ இங்குதான். அவள் கூந்தலில் செருகவேண்டிய முதல் புஷ்பம் இங்கிருந்து பறித்ததாகத் தான் இருத்தல் வேண்டும். ஆனால் அவள் எங்கே?

நெஞ்சில் தேரைத் தாவலில் அது பிரஸன்னம் தன்னைத் தெரியப்படுத்திக் கொண்டது. இதோ எதிரில் அடர்ந்த புதரைத் திரும்பினால் தேடல் முடிந்தது. தேடி வந்ததைக் காண்பதற்கு, அதற்கு ஒரு முன்சுவை உண்டு. அதுதான் இதயத்தின் நோக்காடு.

அவன் வருகைக்கு எதிர்பார்த்திருந்தாள்? அது ஒருவருக் கொருவர் அறியமுடியாதது. நீலமேனியாள். அவள் நின்ற தோரணையில் அவளைச் சுற்றி செம்பருத்தம் பூக்கள் பிரபைகட்டி, அவள் மேனி நீலத்தை எடுத்துக் காட்டின.

நீல முகத்தில் செக்கச் செவேல் அதரங்கள். நெற்றியில் பளிச்செ ன மூன்று பட்டைகளில் துலங்கும் திருநீற்றின் அடிப்பட்டையின் கீழ் புருவ மத்தியில் குங்குமத் திலகம்.

க்ரீடி. அவள் அரசிளங்குமரி அன்றோ! மதுரைக்கு அரசி.

இன்று என்ன இவளைப் புதிதாகவா பார்க்கிறேன்? ஆனால் ஏன் எனக்கு இந்தப் பரவச நிலை? தொண்டையில் கேவல்? ஆண்டவனே ஸ்தம்பித்துப்போனான். நான் யாரை எனக்கு மேலாக இப்போது அழைக்கிறேன்?

நீலாம்பரி. நீலாயதாக்ஷி, நீலாம்பிகே, நீலோத்பவே, நீலகமலே, கமலாம்பிகே, சர்வமங்கள மாங்கல்யே, அகில லோக நாயகி.

அவனுடைய பரவச நிலையில் அவனின்று நாமாவளி புறப்பட்டது.

அன்னபூர்ணே! ஆனந்தமயீ!

ஆனால் இப்போது அவள் கோபமயீ. கோபம் அவளுக்குத் தனி அழகு தருகின்றது. அதே சமயத்தில் கண்களில் ஒரு மான் மருட்சி. இவைதான் நெஞ்சை அள்ளுகின்றன. ஐயோ! அவள் கண்கள் பயத்தில் சுழன்றன. அவனுடைய இடப்பாகத்தினின்று சொட்டிய ரத்தத்தினைச் சுட்டிக் காட்டினாள்.

"இது நீ!"

அவன் அவளை நெருங்குகையில் காலடியில் சீறல் கேட்டுக் குனிந்தான். அவன் காலடியில் காவலாக ஐந்து தலைக் கருநாகம் படம் எடுத்துப் பூமியில் அடித்து நிமிர்ந்தது.

அதை வாரியெடுத்துத் தன்மேல் விட்டுக்கொண்டான். குழந்தாய்! உன் கோபம் மெச்சற்குரியது. ஆனால் நான் விடமுண்ட கண்டன். நீ என் செய்வாய்! நானும் என் செய்வேன்.

நெற்றிக் கண்ணைத் தாங்குகிறேன். மானைத் தாங்குகிறேன், மழுவைத் தாங்குகிறேன்.

உன் கோபம் தாங்க முடியவில்லையே. இதயப் பேழை திறக்கின்றது. சத்யத்தின் மனம் வெளிப்படுகிறது. "இப்போது யாது காரணம்? நீ கேட்டு நான் கொடுக்காமல் இன்னும் என்னிடம் என்ன உள்ளது?"

"இடப்பாகம் என்னுடையது என்று பெயர். ஆனால் வலப்பாகத்தில் நீங்கள் இல்லாது இடப்பாகம் எனக்கெதற்கு?"

"தேவி! நீ சொல்வது புரியவில்லையே!" அவன் திகைத்தான். "இடப்பாகம் போதவில்லை! முழுப்பாகமும் வேணும் என்கிறாயா? நான் ஒன்று சொல்கிறேன். வலப்பாகம் யாரும் தாங்க இயலாமையால்தான் நான் தாங்குகிறேன். உனக்கு அது வேண்டாம்! உனக்கு அது தருவதற்குமில்லை."

"நானும் ஒன்று கேட்கிறேன். இடப்பாகம், வலப்பாகம் இரண்டுக்கும் இடைப்பாகம் என்று உளதோ?" அவன் ஆச்சர்யத்தில் ஆழ்ந்தான். இதுவரை எனக்கு ஏன் தெரியவில்லை. தியானத்தின் இடம் அதுதான் போலும்! எத்தனை மர்மமான, ஈடற்ற இடம்! இடப்பாகத்தின் சக்திக்கும் வலப்பாகத்தின் ருத்ரத்துக்கும் சமன்கோல் இடம்!

"என்ன வாயடைத்துப் போயிற்று? அங்கு எவள் இருக்கிறாள், அல்ல அந்த இடத்தைப் பிடிக்க முயற்சி செய்கிறாள்?"

அவனுக்கு அதிர்ச்சி கண்டது. என்ன தேவி! என்ன அபஸ்வரம் பேசுகிறாய்? அற்புதமான ஒரு கட்டத்திற்குப் போய் அங்கேயிருந்து தள்ளிவிட்டு நீயே விழுந்துவிட்டாய்!

"சிருஷ்டி என்று என்ன தனி? விழிப்புதான் சிருஷ்டி. முதன் முதலில் 'நான்' ஆக எனக்கு விழிப்பு நேர்ந்ததும் என்

முதல் தரிசனம் 'நீ' அங்கிருந்தாய். விழிகளில் என் கேள்விக்குப் பதிலாக உன் விழிகளில் கேள்வியும் அமைந்தது கண்டேன்.

"ஆம் உன் விழிப்பும் என் விழிப்பும் ஒரே சமயம்.

"நானும் நீயும் அதே சமயம்.

"சொல் பிறக்கு முன்னரே 'நானும் நீ'யும் என பாஷை பிறந்து விட்டது."

"புவனத்தின் ஆதிமகன் ஆதிமகள் நாம். அச்சமயத்திலேயே உன் சந்தேகத்துக்கு இடம் தரும்படி வேறு மகள் தோன்றவில்லையே! மற்றவை எல்லாம் நம் சிருஷ்டிதானே. தேவி நம்மிடையே இதுபோன்ற சந்தேகங்களுக்கு வழியே இல்லையே. தேவி, உன் பொழுதுபோக்குக்கு ஏதேனும் எண்ண வேண்டும் என்று எண்ணினாயா?"

அவள் புருவங்கள் பயத்தில் நெரிந்தன. கைகள் கூப்பிக் கொண்டன.

அவன் பரவச நிலையை எய்திவிட்டான். அவன் குரல் அசரீரி போல் வந்தது அவளுக்குப் பயமாக இருந்தது. வியப்பாக இருந்தது. இன்பமாக இருந்தது.

தியானத்தில் அமர்கிறேன். மோன நிலையைத் தாண்டி மூலகர்ப்பாசயத்தை அடைகிறேன். அங்கு என்னையும் நான் இழக்கும் இருள். அதற்கு முன்னும் இல்லை. பின்னும் இல்லை. எதற்குப் எதுவும் எங்கும் அதுதான். அது என்றால் எது?

பித்தனின் சிரிப்பு, கேட்பவர் பாக்யம்.

"அந்தத் தியான நிலையில் இருள் கழன்று வெளிப்படுவதே என் மார்பில் உதைக்கும் உன் பாதம்தான். சக்தியாய் நீதான் தியானப் பொருள். தேவி, நீ சொல் ஒருமையின் இருகூறாக இருந்த 'நான்' 'நீ' அன்றி வேறு அறியேன். மூன்றாவதாக நீ எது கண்டாய்?"

''ப்ரபோ! என்னை மன்னித்துவிடுங்கள்.'' அவள் அலறினாள். அவள் கண்ணீர் பெருகிப் பூமியில் விழுந்து அங்கங்கே வெந்நீர் ஊற்றுகள் புகைந்தன.

''தேவி எங்கு செல்கிறாய்?''

''என் பிராயச்சித்த தவத்துக்கு. நான் இயங்கும் சக்தி. உங்கள் மாறாத புனிதத்தை நான் என்றும் அடைய முடியாது. என் தீக்குளியில் ஞான ஸ்நானத்துக்குத்தான் அவ்வப்போது இப்படி நேருகின்றதோ என்னவோ? அவ்வப் போது அறியாமல் பிரிந்துவிடுகிறேன். ஆனால் உங்களைப் பிரிந்து என்னால் இருக்க முடியாது. ஆனால் என்னைப் புனிதப்படுத்திக் கொள்ளாமல் உங்களுடன் நான் ஒன்ற முடியாது.''

அவன் வாயடைத்து நின்றான்.

''சந்தேகம் ஒரு துரோகம். பாபச் செயல்களிலேயே கொடுமையானது. வழக்கம்போல் தவங்கிடந்து வழக்கம் போல உங்களை வரித்து, வழக்கம்போல் தாங்கள் வந்து என்னை ஆட்கொண்டு என் இடம் உங்கள் இடப்பாகத்தை முறைப்படி அடைகிறேன்.''

கண் இமைக்கும் நேரத்தில் அவள் அங்கு இல்லை.

வானத்தை அண்ணாந்து சிவன் இட்ட கூக்குரல். வானம் பட்டை உரிந்து நக்ஷத்ரங்கள் பூமியில் உதிர்ந்தன. நெளிந்து ஊர்ந்து ஒளிய இடம் தேடின. வெண்மேகத்தின் நடுவே கறு ரத்தக் கட்டி உடைந்தது. செடிகள், கொடிகள் மரங்கள் கருகின.

வெறி பிடித்தவனாய், வெள்ளிமலை உச்சிக்கு ஓடினான். மலை உச்சியில் நின்றான். ''இடப்பாகம் தந்தேன். அவள் அதைப் புரிந்துகொள்ளவில்லை. இப்போது எல்லோரும் என் வலப்பாகம் பாருங்கள்.''

தரையினின்று அள்ளி அள்ளி மண்ணையும், சாம்பலையும் பூசிக்கொண்டான். அவன் நடனம்கூடச் செய்யவில்லை. இடுப்பில் கைகளை ஊன்றி, கால்களைப் பரப்பிக் கொண்டு நின்றான்.

"இப்போது ஊழிக்கூத்தன் நான்!" நெற்றிக்கண் திறந்தது.

அஷ்ட குலாசலங்கள் குலைந்தன.

அஷ்டதிக் கஜங்கள் பிளிறிக்கொண்டு திசைமாறி ஓடின.

குவலயம் கவிழ்ந்தது.

ஆழாழி கரை புரண்டு கடல் பொங்கி பூமியை அதன் உயிர்களுடன் மூடிற்று. ஆங்காங்கே பூகம்பம் அலை அலையாக உயிர்களை விழுங்கின.

கடலடியில் பனிமலைகள் வெடித்து எரி கக்கிற்று.

இரு கைகளாலும் மார்பில் தட்டிக்கொண்டான்.

"ஊழிக்கூத்தன் நான்! ஊழிக்கூத்தன் நான்!"

—சாவி

# அமலி

கார் புறப்பட்டு வேகமெடுத்துத் தெருமுனையில் சத்தம் ஒய்வது கேட்டது.

அடுத்து அவள் உள்ளே வந்து 'அம்மாடி' என்று பெரு மூச்சுவிட்டுக் கூடத்துத் திண்ணையில் சாய்ந்தாள்.

''ஒருவழியா அனுப்பியாச்சு?'' அவர் ஊஞ்சலில் உட்கார்ந்திருந்தார்.

''ஆச்சு, தாஸு இப்பத்தான் போறான்.''

''உன்னைக்கூட அழைச்சான்போல இருக்கே, தன் வீட்டில் கொஞ்சநாள் தங்கும்படி!'' அவர் குரலில் ஏளனம் சிந்திற்று.

சூள் கொட்டினாள். ''சேஷோமம் பண்ணினமாதிரி வீடு வீடாக மூணு நாளாகும். எல்லாம் போட்டது போட்டபடி—''

''ஆமாம், இருக்க வேண்டியதுதானே! பையன் எல்லாரு மாச் சேர்ந்து நமக்குக் கலியாணம் பண்ணி வெச்சிருக் காங்களே!''

அவள் முகம் மலர்ந்தது. மஞ்சள் பூத்த நரைக்கூந்தலில் சிக்கிக்கொண்டிருந்த நேற்றைய பூச்சரத்தை இழுத்து அதைச் சற்றுநேரம் நோக்கினாள். ''நமக்குக் கலியாணம் ஆகி அறுபது வருஷம் ஆறதுன்னா நம்பமுடியல்லே.''

"என்ன வேண்டிக் கிடக்கு?" பெரியவர் பொறுமினார். "நான் ஒண்ணு கேட்க நீ ஒண்ணு சொல்லி ஒருவரை ஒருவர் புரிஞ்சுக்காமே இப்படியே அறுபது வருஷம்."

"அப்படித்தானிருக்கட்டுமே! ஊஞ்சலைச் சித்தே நிறுத்தறேளா, நீங்கள் சொன்னபடி இந்த அறுபது வருஷத்துக்கு உங்களுக்கு ஒரு தனி நமஸ்காரம்."

"நமஸ்காரம் பண்ணி என்னை மன்னிக்கறையாக்கும்!"

"சரி, நானே மன்னிப்புக் கேக்கறதாயிருக்கட்டுமே!"

"ஏதேது! இத்தனை பவ்யம்?"

"உண்மையில் சொல்லப்போனால், இந்த வயசிலே நமக்குள்ளே மன்னிப்புக் கேக்கறதிலும், மன்னிக்கறதிலும் அர்த்தமிருக்கோ?"

"அப்போ இந்த நமஸ்காரத்திலும் அர்த்தமில்லை."

"எல்லாமே அர்த்தம் புரிஞ்சா செய்யறோம்? புரிஞ்சு தான் என்ன ஆகணும்? பெரியவா இதை இதை இப்படி செய்னு சொல்லிட்டுப் போயிருக்கா; செஞ்சுட்டுப் போறோம். எனக்கு அது போதும்."

"ஏதேது, நேத்திலிருந்து ஞானப்பல் முளைச்சிருக்கு."

"பல்லுக்கு இனி எங்கே போவேன்? வாய் பர்ஸாகிப் பத்து வருஷமாச்சு."

"சரி, மூணாம் கண்."

"நெற்றிக்கண் உங்களுக்குத்தான்—கொஞ்சம் காப்பி சாப்பிடறேளா?"

"இதோ பார் அமலி, இந்த மூணுநாள் அடிச்ச கூத்துப் போதும். எனக்கு, ஒரு மிளகு ரஸம் எதேஷ்டம். நீயா இழுத்துவிட்டுக்காதே—"

"உங்கள் சமையல் சுலபம்னா ஆயிடுத்தா? அவல் இடிச்சுத்தர ஆண்டாளு வரேன்னு இருக்கா. இன்னிக்கு விட்டால் அகப்படமாட்டாள். மாட்டுக்குப் புண்ணாக்கு ஊற வைக்கணும். பருத்திக்கொட்டை அரைக்கணும். வரதன் பால் கறக்க வர நேரமாச்சு. நேற்று சாயந்திரம் சுருக்கக் கறந்தாச்சு. கொட்டாய்ப் பக்கம் எட்டிப் பார்க்கல்லே. மடிகனம் தாங்காமல் மாடு தவிக்கிறதோ, இல்லே கன்னுக்குட்டி தும்பையறுத்துண்டு துள்ளி விளையாடறதோ? முத்தத்தில் தேய்க்கற பத்து அம்பாரமாகக் கிடக்கு."

சொல்லிக்கொண்டே கைகளைத் தரையில் ஊன்றிக் கொண்டு எழுந்தாள்.

"உன் தலையெழுத்து. எக்கேடு கெட்டுப்போ."

தள்ளாடித் தள்ளாடி நடந்து பின்கட்டுக்குச் சென்றாள்.

கிழவரின் கோபத்தில் ஊஞ்சல் வேகம் கண்டது.

—கலியாணம் பண்ணினான்களாம், கல்யாணம்! சேஷோமம் பண்ணின வீடாம்! என்னைக் கேட்டால் மூணு நாளாய் வீட்டில் சர்க்கஸ்னா நடந்தது! ஹோமம் எங்கே நடந்தது? புதுவேட்டியும் புதுப்புடவையும் சாத்தி நாற்காலியில் உட்காத்தி வெச்சுக் கலர் ஃபோட்டோ எடுத்துட்டா ஆயிடுத்தா? சடங்கிலெல்லாம் நம்பிக்கை இல்லையாம்! என்னெதிரேயே இப்படிப் பேச என்ன துணிச்சல்!

இப்பவே தாஸ் புரசல் விட்டாச்சு. 'நீங்கள் ரெண்டு பேரும் இனிமேலும் இங்கேயிருந்துண்டு என்ன பண்ணணும்? பட்டணம் வந்துடுங்கோ, இவன் எண்ணம் எனக்குத் தெரியாதா? கார்க்கோடகன். நிலத்தை வித்துப் பணமாக்கிப் பங்காக்கணும். ஆமாம், எங்கே பணம் அதிகமாயிருக்கோ அங்கேதான் தேவையும் அதிகமாயிருக்கு, விபரீதம்! "அமலி! அமலி! என்ன பண்றே?"

"வென்னீரடுப்பு மூட்டறேன். இதோ வந்துட்டேன்!"

"இல்லை, நானே வரேன்," சற்று விந்தியபடி பின் கட்டுக்குப் போனார்.

"அமலி, இன்னிக்கு எனக்குப் பூஜை பண்ற மாதிரியில்லை."

"அவ்வளவுதானே!"

"இல்லை அமலி, இன்னியிலிருந்தே முடியும்னு தோணல்லே. இந்தக் கலியாண தினத்தைக் கொண்டாடினதிலே எனக்கு என் வயசையும், உடம்பலுப்பையும் ஞாபகப்படுத்தினதுதான் மிச்சம். இனிமேல் நீதான் பண்ணனும்."

"பண்ணினாப் போச்சு. நீங்கள் பூவை ஒண்ணொண்ணா சொல்லிப் போடறதை நான் ஒண்ணும் சொல்லாமல் அள்ளிப் போடுவேன். நீங்கள் நைவேத்யமாப் பண்றதை நான் வெறுமென எதிரே வெச்சு, கையைக் காட்டிக் காக்காய்க்குப் போடுவேன். எல்லாமே செஞ்சவரைக்கும் தான். இந்த அறுபது வருஷம் விடாமே பண்ணினேளே; அதை அவள் தெரியாதவளா?"

"பண்ணி என்னத்தைக் கண்டோம்?"

"ஏன் அலுத்துக்கறேள்? பிள்ளைகள் மூணுபேரும் மூணு அர்ஜுனா. பெண்கள் ரெண்டுபேரும் நல்லபடியா வாழறா. இன்னும் நமக்கு என்ன வேணும்? இந்த மூணு நாளும் பழைய மாதிரி குடும்பம் சேர்ந்து இருந்து, இன்னியோட அவாளவாள் திரும்பிப் போயிட்டாளேன்னு நினைச்சுப் பார்த்தால், சிரமமாத்தானிருக்கு."

"இந்த மூணு நாளும் நிர்த்தூளி. பேரப்பிள்ளைகளா, வானரங்களா?"

"அப்படிச் சொல்லாதேங்கோ. குழந்தைகள் பின்னே எப்படியிருக்கும்? அப்படித்தானிருக்கும்."

"அமலி, நீ பிக்கு."

"வசிஷ்டர் வாயால் பிரும்மரிஷி."

"அமலி, இவா நமக்காக வந்தாள்னு மகிழ்ந்துபோறே. அவனவன் தன் தம்பட்டமடிக்க, தன் சுயவிளம்பரத்துக்கு, தன் பெருமையைக் காட்டிக்க வந்தாங்கடி! தாஸரதி ஸீமந்த புத்ரன் தன் புதுக் காரைக் காட்டிக்க. ரகு தான் சிங்கப்பூர் போன வைபவத்தைப் பீற்றிக்க. மூணாமவன்—"

"ரவியை ஒண்ணும் சொல்லாதீங்கோ. வந்த இடத்தில் இந்தச் சந்தோஷத்தில் ஒட்டமுடியாமல் பேந்தப் பேந்த முழிச்சுண்டு நேற்று ராத்திரி ரயிலுக்கே போயிட்டானே! உங்களிடம் சொன்னானா? அவன் பெண்டாட்டி விவாக ரத்து கேட்டு வக்கீல் நோட்டீஸ் விட்டிருக்காளாம்." அமலி குரல் நடுங்கிற்று. ஆனால் அழவில்லை.

கிழவருக்குத் 'திக்'கென்று ஆகிவிட்டது. 'என்னிடம் யார் என்னத்தைச் சொல்றா?' என்று முணுமுணுத்தார். "படிச்சுப் படிச்சுக் காலில் விழாதகுறையாச் சொன்னேனே கேட்டானா? காதல் கலியாணம்! நன்னா வேணும்னு என் வாயாலே சொல்லல்லே. ஆனால் அவன் செஞ்சதை அவன் தானே அனுபவிச்சாகணும்! பெற்ற கடன் நாமும் அனுபவிக்கிறோம்."

"வயத்தை ஒட்டிக்கறது. பெண்ணைப் பெத்தவாள், பெண்ணுக்குப் புத்தி சொல்லமாட்டாளோ? ஆனால் அவா தான் அவளைவிட முஸ்தீப்பா நிக்கறாளாம்."

"அதன் பேர்தான் பெரிய இடத்து சம்பந்தம்."

"நான் போய், நாட்டுப் பொண்ணை ஒரு வார்த்தை கேட்டுட்டு வரலாமான்னு உடம்பு பறக்கறது."

"போ, கேளு—அவள் கொடுக்கறதை வாங்கிக் கட்டிண்டு வா."

"அப்படி என்ன கேட்டுடுவாள்?"

"சொல்லட்டுமா? 'உங்கள் பிள்ளைக்கு ஆண்மையில்லை'—"

"என்ன சொன்னேள்?"

அமலி எழுந்து நின்றாள். அடுப்பில் கொள்ளிக்கட்டை சரிந்தது.

"பொறு பொறு, ரத்தம் கொதிக்காதே. நான் சொல்லலலே. அவள் சொல்வாள்னு சொன்னேன். பெண்ணைத்தான் தள்ளி வெக்கறதைக் கேள்விப்பட்டிருக்கோம். ஆனால் ஆண்களைத் தள்ளிவெக்கற காலமும் வந்துடுத்து—என்ன பொக்கைவாய்ச் சிரிப்பு?"

"இல்லை, கேள்விப்பட்டிருக்கோம்னு சொன்னேளே அதுக்குச் சிரிப்பு வந்தது."

"அதில் என்ன சிரிப்பு?"

"ஏன் இந்த வீட்டிலேயே நடக்கல்லியா?"

இருவருமே, சட்டென மௌனமானார்கள். ஓட்டுக் கூரைமேல் ஒரு காகம் உட்கார்ந்து கரைந்து உடனே பறந்தது.

"சொல்லிக் காண்பிக்கணும்னு எண்ணமில்லே. சொன்னத்துக்கு நினைப்பு வந்தது. பேசிட்டேன். கோவமா?"

அவர் பேசவில்லை. வாசற்படியில் தயங்கி நின்றார். முகம் வாடிவிட்டது.

"நாம் பிரிஞ்சிருந்தது மூணு வருஷம்தான். ஆனால் அது வீண்தானே? அதுவும் கலியாணமான புதுசு. சரியான காரணமுமில்லே."

"காரணம் நான் இல்லை அமலி."

"அது எனக்குத் தெரியாதா? காரணம் பெரியவா வீம்புதான். சாந்தி முகூர்த்தத்துக்குப் பேசினபடி எனக்கு வங்கி போட்டு அனுப்பல்லியாம்."

"மூணு பவுன்தான் அமலி. அப்போ பவுன் பதிமூணு ரூபாதான் அமலி."

"இப்போ உங்க அப்பாவுக்கு வக்காலத்துப் பேசறேளா? பவுன் ரூபா பதிமூணுதான். ஆனால் காசுக்குப் பஞ்சமாச்சே! அதுக்காக, சாந்தி நடக்காமலே என்னை வீட்டுக்கு அனுப்பிச்சுட்டது நியாயமாமோ?"

அவளுக்கு மூச்சு தேம்பிற்று. அவர் தலைகுனிந்து நின்றார். அவளுக்குப் பரிவு தாங்கவில்லை. அருகில் வந்து நின்றாள். தொடணும் போலிருந்தது. ஆனால் வெட்கம். ஒருவரையொருவர் தொட்டே எத்தனையோ நாளாச்சு.

அவர் முகத்தடியிலிருந்து: "என்மேல் உனக்குக் கோபமாயிருந்திருக்கும்."

அவள் சற்று யோசித்துவிட்டு, "அப்படித் தனியாத் தெரியல்லே. நாம் என்ன செய்ய முடியும்? பெரியவா மனசு வெச்சாத்தானே உண்டு! அந்த மூணு வருஷமும், அதுவும் கடைசி ரெண்டு, நெருப்பை மிதிச்சுண்டுதானேயிருந்தேன். வாழாவெட்டி வெளியில் தலை காட்ட முடியுமா? இத்தனைக்கும் அடுத்த தெருவுக்கு அடுத்த தெருதான் நாம். தற்செயலாகத் தெருவில் பாதை குறுக்கிட்டதுகூடக் கிடையாது. ஆனால் ஒருநாள் நான் உங்களைப் பார்த்தேன். நீங்கள் பார்க்கல்லே."

நெல்லுப் பரணுக்குப் போகும் மரப் படிக்கட்டில் ஒரு படியில் அவர் உட்கார்ந்துகொண்டார்.

"அன்னிக்குச் சோமவாரம். அம்மாவோடு கோவிலுக்குப் போயிருந்தேன். நீங்கள் திருக்குளத்தில் குளிச்சுட்டுப் படிக்கட்டு ஏறிவரேள், கையில் கமண்டலத்துடன், ரிஷிகுமாரன் மாதிரி. உடம்பில் ஜலம் முத்துத துளிச்சுண்டு; ஏற்கெனவே நல்ல சிவப்பா, அப்படியே தகதகத்துண்டு—அப்பா, உடம்பு சிலுக்கறது.' கைகளில் முகத்தைப் புதைத்துக்கொண்டு, அங்கிருந்து 'இந்த மஹா புருஷனை அடைவேனா'ன்னு நெனச்சுண்டேன்."

"நான் மஹாபுருஷன் இல்லை," என்று அவர் முணு முணுத்தாலும் உள்ளூர சந்தோஷமாயிருந்தது.

"அதுக்காக விரதம் எடுத்தேன். அப்படிப் பட்டினி கிடந்தேன், இப்படி மெலிஞ்சேன்னு சொல்லல்லே. பெருமாளுக்கு அங்கப்ரதக்ஷணம் பண்ண யாரோ சொன்னாள். மறுத்துட்டேன். பிராகாரத்தில் நான் உருண்டு நாலுபேர் கண் எச்சில் என்மேல் பட நான் விரும்ப வில்லை."

அடுப்பை ஊதினாள். ஜ்வாலை குபீரிட்டது.

"உங்களைப் பார்த்த ஆறா மாசமே நான் உங்களிடம் வந்து சேர்ந்துட்டேன், வெச்சுக்கோங்கோ. தவம் என் கிறது கண்ணை மூடிண்டு மாலையை உருட்றது இல்லே. தவங்கிறது ஒரு நினைப்பின் ஓரே நினைப்புன்னு தோணறது. வங்கியோடுதான் வந்தேன். மூணரைப் பவுன்."

"ஆகாதா? நீ போனப்போ பதினஞ்சு வயது; வந்தப்போ பதினெட்டு. இல்லையா?"

"ஓஹோ, கேலி பண்ணறேளா? நானே சத்தே வாளிப்புத்தான். என்னவோ தூர்க் கனா. ஆனால் மறக்காத கனா. சரி, வென்னீர் சுட்டுப்போச்சு. குளிக்க வாங்கோ."

அவர் சந்தியாவந்தனம் பண்ணிவிட்டுப் பூஜை அறையுள் நுழைந்தபோது அவள் சுவாமி அலமாரியெதிரில் கைகூப்பியபடி நின்றிருந்தாள். அவர் வந்தது தெரிய வில்லை. அவருக்குக் கொஞ்சம் நெஞ்சைப் பிராண்டிற்று. ஆச்சர்யமா, பொறாமையா?

அவள் கண்ணைத் திறந்ததும்: "தியானம் மும்முரம் போல இருக்கு. அப்படி என்ன வேண்டுதலையோ?"

நகை பூத்தாள்: "எல்லாத்தையும் சொல்லிவிட முடியுமா? நாங்கள் பொம்மனாட்டிகள். எங்களுக்குள் எத்தனையோ ரகஸ்யமிருக்கும். சரி, சாப்பிட வரேளா? சமையல் எளிசானாலும் எப்படியோ அதே நேரம் ஆயிடறது."

உச்சி வெய்யில் நகநகத்தது. ரேழித் திண்ணையில் அமலி, தலைக்குயரக் கட்டையை வைத்துக்கொண்டு கண் அயர்ந்துவிட்டாள். கடை வாயில் வெற்றிலைச் சாறு வழிந்தது இன்னமும் குறட்டையாக மாறவில்லை—பெரிய மூச்சில் வயிறு மிதந்தது. காற்று சுகமாக வீசியது.

ஆனால் அவருக்குத் தூக்கம் வரவில்லை. ரேழித் திண்ணையில் மாறி மாறிப் புரண்டார். மூட்டுக்கு மூட்டு வலி. மனம் நிலைப்படாமல் சஞ்சலித்தது.

சத்தமே ஆகல்லே. காரணம் வயசா, உடம்பா, மனசா? தின ஒழுக்கத்தில் சற்றுப் பிசகினால்கூட முதல் கோணல் முற்றிலும் கோணல். நிதானமே போச்சு. இவன்கள் வந்து கூத்தடிக்கல்லேன்னு யார் அழுதா? நாங்கள் கிழங்கள். எங்களை எங்கள் நிம்மதியில் இருப்பது இவர்களுக்கு ஆகல்லியே! இவாள் பிரியமாயிருந்தாலும் இருக்கலாம். இவாள் மாதிரி பிரியத்தை வேண்டப்பட்டவாளும் இருப்பா. ஏன் இவளே இருக்காளே, ஆனால் எனக்கு வேண்டாம்.

"அம்மா, இன்னும் உக்காரேதேங்கோ, பெருக்கிடறேன்." உட்கார்ர இடத்தைப் பெருக்கிட்டால் ஆயிடுத்தா? கூடம் முழுக்கக் குப்பை என்ன ஆறது? இவாள் போட்ட குப்பைதானே? ஆனால் இந்த மக்குக்கு உடனே உச்சி குளிர்ந்துபோறது. காரியமெல்லாம் இவன் தலை மேலே. இவளும் மத்தவாளைச் செய்யவும் விடமாட்டாள்.

பெரியவாளைத் தரிசனம் பண்ணப்போறாளாம். ஏன், அவரைப் பார்க்க அந்தக் காரில் நாங்கள் வரமாட்டோமா, அழைச்சுண்டு போனால்! "காரிலே புழுக்கம் தாங்காது.

அத்தோடு நீங்க பார்க்காத பெரியவாளா? காஞ்சிபுரம் உங்களுக்குக் கொல்லைப்புறம்.'' தாஸானு சாமர்த்தியமே, இதிலே நம்பிக்கையில்லே அதிலே நம்பிக்கையில்லேனுட்டு பெரியவாள்மேலே பக்தி பொங்கி வழியறதோ? பட்டுப் புடவை வாங்கப்போறான்கள்.

ரகு ஒரே வாய்ச்சவடால். ஒரு வேலையிலும் நிலைச்சு நிக்கறதாத் தெரியல்லே. வேலையில் இல்லாமலும் இல்லை. ''வேலைக்கு நான் தேட வேண்டாம். அது என்னைத் தேடிண்டு வரும். நான் படிச்சிருக்கிற படிப்பு அப்படி!''

மூணாமவன் என்னைக்குமே மூடு சூளை. இப்போ தன் சூளையில் தானே வெந்துண்டிருக்கான். இவாளை அடுத் தடுத்து மேம்படிக்க வச்சு இவள் நகையெல்லாம் ஜாடா முழுகிப்போச்சு. நினைச்சுப் பார்க்கறதுகளா? ஒரு காலணா ஒத்தாசையில்லை. ஒரு தடவை கிஸ்திக்குப் பணம் தட்டுப் படறது, உழவு மாடு வாங்கணும்னு கேட்டு எழுதினால் ஒரு மாசம் கழிச்சுப் பதில் வரது, 'இதுக்குத்தான் நிலத்தை அப்பவே வித்துடச் சொன்னேன்'னு. எல்லாம் பொய்த்துப் போச்சு. இதுகளா விழுதுகள்? கழுத்துக்குச் சுருக்குகள்.

''என்ன நீங்களே பேசிக்கறேள்?''

''பேசினேனா என்ன?'' முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

சின்னச் சின்ன ஓசைகள்கூடப் புஷ்டியான அர்த்தம். பிதுங்கும் இரவின் நிசப்தம். ரேழித் திண்ணையில், தலைக்கு நேர்விட்டத்தில் பட்சிக் கூண்டில் சிறகுகளின் படபடப்பு. அவை ஏன் தூங்கவில்லை. அங்கேயும் கலவரமா? இவ்வுலகமே பிரம்மாண்டமான கூண்டு. ஜந்துக்கள் மூலைக்கு மூலை ஓடுகின்றன. நாம் ஜந்துக்கள் இல்லாமல் பின் என்ன? நட்சத்திரங்களைப் பார்த்து ஏங்குகிறோம். அவை நம்மைப் பார்த்துச் சிரிக்கின்றன.

"அமலி, தூங்கிட்டையா?"

"என்ன வேணும்?"

"இன்னிக்கு மூணா மாசம் எனக்கு 81வது ஜன்ம நட்சத்ரம்."

"அப்டின்னா சதாபிஷேகம் கிட்ட வந்துடுத்துன்னு சொல்லுங்கோ. நமஸ்காரம் பண்ணறேன்."

"உன் நமஸ்காரம் கிடக்கட்டும். நீ கோட்டை கட்டிண்டிருக்காதே. அடுத்தடுத்துப் புடவையும் வேட்டியும் குட்டி போடும்னு."

"போடாட்டா போறது. பிள்ளைகளுக்குத் தெரிவிக்க வேண்டியது நம் கடமை."

"இதுலே வைதிக காரியங்களை ஏனோ தானோன்னு விட முடியாது. மாங்கல்யம் பண்ணியாகணும். இவா தான் எல்லாம் செய்யணும்."

"செய்யமாட்டாளா என்ன?"

"எனக்கு நம்பிக்கையில்லை."

"அவாளுக்குத் தெரியப்படுத்துவது நம் கடமை."

"உனக்கு எங்கே சபலம் விடறது?"

"செய்யாட்டாப் போறா. நம்மால் எதுவுமே முடியாட்டா, எதிரேயே பெருமாள் கோவில். மஞ்சள் சுபிறில் மஞ்சளைக் கோத்து, சன்னதியில் எனக்குக் கட்டிடுங்கோ. எதேஷ்டம்."

அவருக்கு நெஞ்சை என்னவோ பண்ணிற்று. "அமலி, வரவர எனக்கு உன்னைப் புரியல்லே. நீ அசடா, புத்திசாலியா, விவேகியா? எல்லாத்துக்கும் பதில் வெச்சிருக்கே, எல்லாத்துக்கும் சமனமாயிடறே. என்னால் முடியல்லியே."

"எல்லாம் முடிஞ்சவரைக்கும்தான். எண்ணம் அழுக்கில்லாமல் இருந்தால் சரி."

மௌனம்.

சற்றுநேரம் கழித்து: ''அமலி, தூங்கிட்டையா?''

''இல்லே, என்ன வேணும்?''

''எனக்கு மனசு சரியில்லே. இல்லை, நீ எழுந்திருக்க வேண்டாம். விளக்கைப் போட வேண்டாம்.''

''திரும்பத் திரும்ப நம்ம பசங்கதானே! ஏன் வீண் கவலைப்படறேள்.''

''தாஸ் நிலத்தை விற்கக் கெடுபிடி பண்ணுவான் போலத் தோணறது. நான் சம்மதிக்காமப்போனால். தன் பங்கைக் கேட்பான்போல இருக்கு.''

''சரி, கொடுத்துடுங்கோ.''

''ஒருத்தன் கேட்டால் மத்தவன்களும் கேட்க வேண்டியதுதானே? பெண்களுக்கும் இப்போ பங்குண்டு.''

''சரி, பிரிச்சுக் கொடுத்துடுங்கோ.''

''ஜடம், ஜடம்! அப்புறம் நம் பங்கு என்ன இருக்கும்? நாக்கை வழிச்சுக்க வேண்டியதுதான்.''

''இதோ பாருங்கோ. நீங்கள் நினைக்கறமாதிரி குழந்தைகள் அத்தனை கெட்டவா இல்லே. நாமும் அவாளை நம்பணும், கவளம் தொண்டையில் சிக்கினால் சாவுன்னா சாப்பிடவே முடியாது. அப்படி நம்மை த்ராட்டில் விட்டுடமாட்டான்கள்.''

''அதுசரி, அங்கே மூணு மாசம். இங்கே மூணு மாசம். அடுத்து மூணு மாசம்னு பெத்தவாளை ஏலம் விட்டால் உனக்கு வேண்டியிருக்கும்போல இருக்கு: என்ன சிரிக்கறே?'' கோபம் வந்துவிட்டது.

''நீங்க சொல்றதுக்குச் சிரிப்பு வந்தது. சரி, நீங்கள் சொல்றபடியே வெச்சுப்போம். நாமும் எப்பத்தான் ஊர் ஊராப் போயிருக்கோம்? இப்படியும் ஒரு மாறுதல்னா இருக்கட்டுமே!''

தலையிலடித்துக் கொண்டார். ''நீ மாறவே மாட்டாய். நீ காமாலைக் கண்ணிதானே!'' திடீரென ஓர் எண்ணம் உதித்தவராய்: ''அமலி ஏன், இப்படியும் தோணறது. 'நான் அப்பாவை மூணு மாசம், நீ அம்மாவை ஆறு மாசம்,' இந்த மாதிரியும் பங்கு போட்டுக் கொள்ளலாமில்லியா?''

அவளுக்கு ஒரு மூச்சு தவறுவது இருட்டில் கேட்டது.

''என்னன்னா சொல்றேள்? நம்மைப் பிரிச்சுடுவாளா?'' திடீரென்று குரல் தீனமாகிவிட்டது.

''ஏன் நடக்கக்கூடாது? எல்லா சாத்தியக்கூறையும் யோசிக்க வேண்டியதுதானே, ஒரே சமயத்தில் இரண்டு பேர்னா அதுவும் பளுதானே? காலமும் அப்படித்தானே இருக்கு! சரி விடு—யோசனை பண்ணிப் பண்ணி மண்டையைக் குடையறது. நீ சொல்ற மாதிரி எல்லாம் முடிஞ்ச வரைக்கும்தான். அப்புறம் அவள் விட்ட வழி.''

கால் தூக்கம் அரைத் தூக்க மயக்கத்தில் யாரோ தன் கையைப் பிடித்தமாதிரி—அவள்தான். அவர் விடுவித்துக் கொள்ளவில்லை. அந்த மௌனச் சைகை வேண்டியிருந்தது.

கூடவே ஒரு வண்டின் கூவல் எங்கிருந்தோ கிளம்பிற்று. இருட்டில் சுற்றிச் சுற்றி வட்டமிட்டது. ஒரு தடவை முகத்திலும் மோதிற்று. கொட்டினால் அவ்வளவுதான். அவள் கமேல் அவர் பிடி கொஞ்சம் இறுகிற்று. எங்கோ இருட்டில் ழி தப்பி வந்திருக்கிறது. அரைக்கணம் பயத்தில் செயலிழந் ார். அப்பவே அவர் பிடியிலிருந்து அவள் கை நழுவித் வண்டு விழுந்தது.

''அமலி! அமலி!!''

பதில் இல்லை.

எழுந்து குனிந்து அவள் தோளை உலுக்கினார். ''அமலி!''

ஊஹூம்.

ஸ்விச்சைப் போட்டார். விளக்கு வரவில்லை. மின்சாரம் ஃபட்.

''அமலி! அமலீ!!''

அந்த அலறலில் மிரண்டு வண்டின் ரீங்காரம் ஜன்னல் வழிவெளியே சென்றுவிட்டது.

—குமுதம்

# உச்சி வெய்யில்

குளிர், பல் கிட்டிற்று. போர்வையை மேலே சுற்றிக் கொண்டு பாறைமீது உட்கார்ந்தபடி, பிள்ளையின் வருகைக் குக் காத்திருந்தார். மணி ரெண்டுக்கு மேலாறது இன்னும் காணோமே. நைட் ஷிஃப்ட்டில் 12-30 மணிக்கே திரும்ப வேண்டியவன்.

உலகில் உயிரிலாதது எதுவுமில்லை. கல்லானாலும் எங்களுக்கும் வளர்ச்சி உண்டு. உங்கள் கணக்கில் எத்தனையோ வருடங்களில், கால், அரை அங்குலம் கூடி யிருப்போமாம்.

யார் யாரோ எத்தனை எத்தனை முறையோ, காலம் காலமாய் என்மேல் நடந்து சென்றிருப்பரோ! ஆனால் இந்தப் பெரியவர், இந்த நள்ளிரவில், என்மேல் உட்கார்ந்து தன் மகனுக்குக் காத்திருந்த வேளையில்தான், அவருடைய பிள்ளைப் பாசத்தின் நெஞ்சு நெகிழ்ச்சியில், என் ப்ரக்ஞை யின் முதன் மூச்சு என்னுள் பாய்ந்திருக்க வேண்டும்.

ஒண்டியா சமைத்துச் சாப்பிடறான். ஓட்டல் சாப்பாடு ஒத்துக்கல்லியாம். கட்டுப்படியும் ஆகல்லே. ஆறு மாசத்துக் கொரு தடவை ஊருக்கு வந்து தங்கும் அந்த ரெண்டு மூணு நாளில் அவனைப் பார்க்க வயிறு ஒட்டிக்கறது. இளைச்சு, கறுத்துப்போய்...பாதி நாளைக்குச் சமைக்கமாட்டானாம். ராத்திரி டூட்டியிலிருந்து திரும்பினதும், ஆடையைக் கூடக்

களையாமல் ஏற்கனவே நாள் கணக்கில் விரிச்சே கிடக்கும் படுக்கையில் பொத்துனு விழுவதுதான் தெரியும். நினைப்பு வரச்சே அது ஒன்பதோ பத்தோ அதுக்குமேல் சமைக்க எங்கே கைவரும். 'டீ'க் கடையில் காபி, டீ, பன், மசால் வடை, எது கிடைச்சதோ, காலத்தை ஓட்டு.

உயிருடன் இருப்பது ஒரு நிலை. உயிரோடு இருக்கிறேன் என்று உணர்ந்து வாழ்வது வேறு நிலைதான். ப்ரக்ஞையின் முதல் மூச்சென்று சுலபமாகச் சொல்லிவிட்டேன். என்னுள் ஏதேதோ புரண்டெழுந்து—விழிப்பு என்பது சாமான்ய மானதா?

ஆகவே பிள்ளைக்குச் சமைச்சுப் போட வந்திருக்கேன். என்ன, முட்டி முட்டி இன்னும் ஒரு மாசம் இருக்கலாம். ஊரில் காரியம் மலையாக் காத்துக் கிடக்கு. தை வந்ததும் கார் அறுப்பு—வயலில் கதிர்கள் கனம் தாங்காது சாஞ்சுடும். கொல்லையில் தேங்காய்க் குலை முத்தியிருக்கும். இப்பவே எந்த ராத்ரி பங்காளி வந்து பறிச்சுண்டு போயிருக்கானோ? சுப்புவுக்கு வரன் மும்முரமா தேடியாகணும். இந்தத் தைக்கேனும் வழி பிறக்குமா?

கறிவேப்பில்லைக்கன்னு புழைச்சுடுத்துன்னு கடிதாசிலே ஓரத்துலே ஒரு வரி கண்டதுமே உடம்பு பரபரத்துப் போச்சு. அதைப் பார்க்காமல் நினைக்காமல் இருப்புக் கொள்ளல்லே. இங்கே இவன், அங்கே அது—அதனாலே ரெண்டும் ஒண்ணா யிருமா. இதென்ன தத்துப் பித்து! மனம் மனசைச் சீறித்து.

"அப்பப்பா, என்ன ருசி! இந்தக் கீரை பொரிச்சுக் குழம்பைத் தினம் பண்ணிப் போட்டாலும் ஆயுசுக்கும் அலுக்காமே சாப்பிட்டுண்டிருப்பேன்."

கூடச் சாப்பிட உட்கார்ந்தவர், இலைமேல் முகம் இன்னமும் தாழக்குனிந்தது, கண்ணில் துளும்பலை மறைக்க.

"சேது, நீ தினம் ஒரு வேளையானும் சமைச்சுக் கணும்டா! ஒண்ணுமே முடியாட்டா, சாதம் வடிச்சுத் தயிர், பருப்புப் பொடி, கறிவேப்பிலைப் பொடி பண்ணி வெச்சுட்டுப் போறேன். அப்பளாம் சுட்டுக்கோ."

"உத்யோகத்தில் அப்படியெல்லாம் கையடிச்சுக் கொடுக்க முடியாதப்பா. வயிற்றுப் பிழைப்பு விட்ட வழி தான் உண்டு."

"அப்படியானா, ஒரு கலியாணத்தைப் பண்ணி வெச்சுட வேண்டியதுதான்."

"சரியாப் போச்சு, நானே இன்னும் ஊணிண்ட பாடில்லே. கல்யாணம் ஒண்ணுதான் குறைச்சல்."

"ஏண்டா, என் தள்ளாமைக் காலத்தில் இப்படிப் படுத்தறேள்?"

சிரித்தான். "காலா வட்டத்தில் எல்லாம் சரியாப் போயிடும்பா."

"ஆபத்தாமபஹத்தாரம் தாதாரம் ஸர்வ ஸம்பதாம்—மணிசத்தம் கேக்கறாப்போல இருக்கே! ஆமாம், அவனே தான். ராமா, வயிற்றிலை பாலை வார்த்தையா?" பாறையி லிருந்து எழுந்திருந்தார். "ராம மந்த்ரத்தைவிட மந்திரம் இல்லேடா சேது"—

'விர்ர்ர்'ரென்று அவர் காலில் உராய்வதுபோல வந்து நிறுத்தி இறங்கினான். அவன் முகம் கடுத்தது.

"அடைகாக்க ஆரம்பிச்சாச்சோன்னோ? வீட்டுக்குள்ளே இருந்தது போக வெளியிலேயே வந்தாச்சா? அதனால் நான் வந்துடுவேனா? உங்கள் உடம்பைப்பத்தி நீங்கள் என்ன நினைச்சுண்டிருக்கேள்?"

"நீ கொஞ்சம் மரியாதை காட்டலாம் சேது"—

"மரியாதையா?" பட்டாணிபோல் குதித்தான். "எனக்கு உங்கள் உடம்புதான் இப்போ முக்கியம். உடம்பை வெச்சுண்டுதான் அப்புறம் அதுக்கு மரியாதை. இங்கே குளிர்னா என்னன்னு உங்களுக்குத் தெரியாது. சில் மாரில் கவ்விட்டா, மரணச்சளிதான். என்மேல் பழி சுமத்திட்டுப் போகணும்னு பாக்கறேளா? மரியாதையாம், மரியாதை!"

அவரைத் தூக்காத குறையாக, உள்ளே தள்ளிக் கொண்டு போனான். கதவு அவர்கள் பின்னால் அடித்து மூடிக்கொண்டது. சாக்ஷியாக சைக்கிள் வெளியே நின்றது.

நானும் சாக்ஷி நிற்கிறேன், அல்ல உட்கார்ந்துகொண்டு இருக்கிறேன், அல்ல இருக்கிறேன்.

பெத்த மனம் பித்து பிள்ளை மனம் கல் என்று கல்மேல் ஏன் பழி? நான் நெகிழ்ந்துவிட்டேன். என்மேல் ஓரிரண்டு தூறல்—மேகத்தின் கண்ணீர்? அங்குமிங்குமாய் நக்ஷத்ரங்கள் தூக்கம் கலைந்து விழித்துக் கொள்கின்றன.

சிருஷ்டி எங்களுக்குத் தந்த பாஷை மோனம். மோனத்துக்குப் பேச்சென்று இல்லை. ஆனால், மோனத்தில் இல்லாத பாஷையே இல்லை. அதே, உங்கள் பாஷை எனக்கு உணர்விலேயே புரிகிறது.

எங்களுக்கு வாயில்லை, சத்தமில்லே, தொட்டுக் கொள்ள நெஞ்சென்று தனி அங்கமில்லை. ஆனால், நெகிழ்ச்சி உண்டென்று வந்திருப்பதால் கண்டுகொள்கிறேன். அந்தந்த சமயத்துக்கு உடல் பூரா பார்வை, உடல் பூரா செவி.

உணர்வும் முன்னாலேயே இருந்திருக்கும். அதைத் தட்டி எழுப்பும் விழிப்புத்தான் புதிது. உணர்வின் ஏடுகள் புரள்கின்றன. முன்பின், இப்போ, எல்லாம் தம்மைத்தாமே வெளிப்படுத்திக்கொள்கின்றன. இதுதான் நினைவு?

என்மேல் ஏதோ மெத்தென்று வீசி ஒற்றி விழுந்து எழுகிறது. ஓ, நீ என்னை நட்பு பிடிக்கிறாயா? நீதானே காற்று?

"ஆம், நீ இப்பத்தான் தூக்கம் கலைந்திருக்கிறாய், இல்லையா? என்னைச் சோதரனாக்கொள். ஆம், உறவு எங்கேனும், யாரேனும் ஆரம்பிக்க வேண்டும் அல்லவா? சோதரனே, உன்னைச் சுற்றிலும் விழித்துப் பார்."

மையிருள் என்மேல் கவிகின்றது. இப்போது மேகங்கள் வலுவிழந்து கலைகின்றன. தேய்ந்த நிலவின் இருண்ட வெளிச்சத்தில் என் விளிம்புகள் தெரிகின்றன.

என் அடிவாரத்தில் பொட்டுகள் சொட்டினாற்போல் வீடுகள். கட்டான் கட்டானாய் வயல்கள். எதிருக்கெதிர் வீடுகள். நடுவே பாம்பு வளையில் ஓடும் பாதைகள். மனிதன் ஏன் ஓடியாடி அலைகிறானோ, இப்போது வீட்டுள் களைத்துத் தூங்குகிறான். அதுவும் என்ன நிச்சயம்? ஆனால் நான் காவல். நானும் பயப்படுகிறேன் என்று நினைத்துக்கொள்வதில் ஒரு பெருமிதம் உணர்கிறேன். எனக்கு இனி உறக்கம் என்பதில்லை. இப்பத்தானே விழித்திருக்கிறேன்!

நேரம் முதிர முதிர, வானம் சாம்பல் பூத்துப் படர்ந்து, திட்டு வலுத்து வெண் சிவப்பாகி அடுத்து அத்துடன் மஞ்சள் குழைந்து, செஞ்சிவப்புச் சாயம் தோய்ந்து—என்னுள் ஏதோ பரபரப்பு—ஏதோ கம்பீரம் உருவாகிக் கொண்டிருக்கிறது. இது எனக்கொரு விழிப்பு. விழிப்புள் விழிப்பு.

தங்கத் தாம்பாளம் தகதகத்துக்கொண்டு எழுகிறது. அதனுள் விடும் ஒளி மனிதனா, தேவனா? பார்வையைப் பறிக்கும் அந்த ப்ரகாசத்தின் கூச்சம், அந்த ஊருக்குத் தெரியவில்லை. தெரியலாகாதென்றேதான் இந்த ஒளியோ?

பலவர்ண மேகத்திரள்கள் பரிவாரம் சூழ்ந்திருக்கின்றன. நான் என்னவோ இருக்குமிடத்தில்தான் இருக்கிறேன். ஆனால் நானும் இந்தப் பரிவாரத்தில் சேர்த்திதான். எப்படி

யென்றுதான் விளங்கவில்லை. இத்தனை மேகங்கள் எப்போது திரண்டன? நாளாவட்டத்தில் தெரிந்துகொண்டேன். முதன்முதலாக நினைவு தே ன்றிய நாள் முதலாய் இப்படித்தான் நேர்ந்துகொண்டிருக்கிறது. திடீரென்று பாறை பாறை, மதில் மதில், உடனேயே அத்தனையையும் விரட்டி அடித்துவிட்டு, பூரித்த முழு நீலத்தின் நடுவே புரியாத கோலத்தில் ஜ்வலித்துக்கொண்டிருக்கும் அந்த ஜோதி

இவருடைய ரஸ்மி படாத இடமே இல்லை. என்மேல் என்னைச் சூழ்ந்து செழித்த பசுமையில், என்னைப் போலவே ஆங்காங்கே நிற்கும் இக்குன்றுகள் மேல், விட்டு விட்டு நட்ட தந்திக் கம்பங்களில், கம்பிகள் ஜ்வலிக்கின்றன, தந்திகள் வாசிக்கின்றன. இருந்த இடத்தில் இருந்தபடி, இந்தப் பெரிய ஆசீர்வாதத்தில் அதிசயிக்கத்தான் முடியும். அதிசயிக்கிறேன்.

அதிசயம் விழிப்பின் விரிவு.

அதோ மலைமீது கோவில் ஸ்தூபியைத் தகதகப்புத் தொட்டு, ஸ்தூபி நெருப்புப் பந்தாய் மாறுகிறது. மலை அடிவாரத்தில். ஏரியில் நீர்மட்டம் வெள்ளித் தகடாய் மாறி விட்டது.

ஆள் நடமாட்டம் ஆரம்பித்து, உடனேயே அதிகரித்தும் விட்டது. மனிதன் மறுபடி ஓடியாடி அலைய ஆரம்பித்து விட்டான். படிப்படியாக உயர்ந்து உச்சியை அடைந்ததும் வெயிலின் வெம்மையில், நான் காணும் உலகம் திரைச்சீலையாக நடுங்குகிறது. இந்தச் சமயத்துக்கு இவருக்கு ஏன் இத்தனை கோபம்?

ஆனால் உச்சியிலிருந்து இறங்கத் தொடங்கியதும், இந்தக் கோபம் தணியத் தொடங்குகிறது. அவரும் படிப் படியாக இறங்குகிறார். எதிர்வானம் தண்ணிய சிவப்பில்,

மேகங்கள், பலவர்ணத் தீட்டலில், பாறைகள், குடிசைகள், தீசல்கள் ஈட்டுகின்றன. அவருடைய அற்புதமான ஜ்வலிப்பை இப்போது கண்ணைக் கூசாமல் தரிசிக்க முடிகிறது.

என்றோ ஒரு நாள். இந்தக் காலத்தின் அளவு என் கணக்கிலுமில்லே மனிதன் கணக்கிலுமில்லை. என்றோ ஒரு நாள் நானே இந்த நெருப்பின் பொங்கலில் சிதறித் தெறித்த செந்தணல் பொறியாகப் பூமியில் விழுந்து நீர்த்து இறுகிப் போய். நாளடைவில் மண்ணும் புழுதியும் சேர்ந்து கெட்டிப் பட்டுப்போன உருவமோ என்று திகைக்கையில் என் கல்லும் குறுகுறுக்கிறது.

ஒளிமங்கி, இருள்கூடி, இரவு மீண்டும் வந்துவிட்டது. இப்படி மாறி மாறி பகல் இரவைத் துரத்தி, இரவு பகலைத் துரத்தி இந்த ராட்டினம் இதுவரை எத்தனை, இனிமேலும் எத்தனையோ?

இதுபோன்ற ஒரு பகலில் கிழவனார் ஊருக்குப் போய் விட்டார். அவரை வண்டி ஏற்றி அனுப்பிவிட்டு, பையன் திரும்பி வந்து வாசற்படியில், முழங்கால்களைக் கட்டிய கை களினிடையே முகம் கவிழ்ந்து உட்கார்ந்துவிட்டான். அவன் தோள்கள் குலுங்கின. இவன் துக்கத்துக்கு என்னால் என்ன செய்ய முடியும்?

மறுபடியும் அவன் இஷ்டப்படிதான் வருகிறான். போகிறான். அவனால் முடிந்ததும் அதுதான். மனிதர்களின் கவலைகள், துயரங்கள், அவரவரது தனித்தனி.

என்னைச் சூழ்ந்த மற்ற குன்றுகளைக் காட்டிலும் நானே பெரியவனாயிருக்கிறேன். உயரமில்லை, பரவல். என் நடுவே ஒரு சுனை. தண்ணீர் மெதுவாய்க் கொப்புளித்த வண்ணமாயிருக்கிறது. பூமியின்கீழ் என் வேரும் அதன் சுரப்பும் எத்தனை ஆழமோ? தண்ணீரின் விறுவிறுப்பை உணர்கிறேன். ஆனால் இதைத் தேடி வருவோர் அதிக மில்லை. சுற்றி கிணறுகளும் பம்பு செட்டுக்களும் ஏராளம். எட்டு தூரத்தில் ஏரி.

என் விலாவில் கரடு முரடு பள்ளங்களும், மேடுகளும், புரையோட்டங்களும், முடிச்சுக்களும்.

ஒரு பிற்பகல். இரண்டு வாண்டுகள் வந்து என்மேல் உட்கார்ந்தன. ஒருவன் இருமிக்கொண்டே, கஷ்டப்பட்டுப் புகை பிடிக்கிறான். இவன், ''டேய், இதனுள்ளே இருள் இருளா இடமெல்லாம் இருக்குது. நீ உள்ளே போயிருக்கியா?''

''நீ போயிருக்கையா?''

''போனேனே, பத்து நாளைக்கு முன்னாலே.''

''என்ன கண்டே, ஏதாச்சும் புதையல் கிடைச்சுதா?''

''வளைஞ்சு வளைஞ்சு உள்ளே ரொம்ப தூரம் போவுதுடா. போவப் போவ அம்போன்னு இருட்டு. திரும்பிடலாமான்னு ஒரு சமயம் நெனச்சேன். ஆனால் வழி தெரியல்லியே! இனிமே ஆத்தா தம்பி தங்கச்சியைப் பாக்கப் போறேனான்னு அழுகை வந்திருச்சி. சமயத்துலே கறுப்பு கலைஞ்சு வெளிச்சம் கொஞ்சம் கொஞ்சமா விட்டுக் கொடுத்து, நடக்க நடக்க விரிஞ்சுக்கிட்டே போச்சு. திடீர்னு இடம் அகலமா அறையாட்டம் பெரிஸ்ஸா, நடுவுலே நிக்கிறேன். ஓரமா பாறையிலே அலுமாரியாட்டம் ஒரு பொந்துலே அம்மன் சிலை. இன்னும் உருவாயிட்டே இருக்குது. குந்தியிருக்கா. தடால்னு விழுந்து ஆத்தாளைக் கும்பிட்டேன். என்னைப் பார்த்து சிரிச்சா.''

''அப்படி விடறா டகல்''—

''என் தலைமேலே கையை வெச்சு சொல்றேன், விட்டேன்னு சொல்லு. நீ சொல்லமாட்டே. நான் சொல்றேன். அப்போ அந்த அறையிலே மூலையிலே இன்னொரு பாதை தெரியுது. அது வழி பத்தடி நடந்தேன். ஒரு திருப்பத்துலே சட்டுனு வெளிலே வந்துட்டேண்டா. சந்தோசத்

துலே சுத்திச் சுத்தி வந்து. வந்த வழியைத் தேடினால் சிக்கல்லே. கிடைக்கல்லே. நான் உள்ளே போனது அத்புதம், கண்டதும் அத்புதம், வெளியிலே வந்தது அத்புதம்.''

அவர்கள் போன பின்னர் அந்தப் பையன் சொன்னது வெகுநேரம் புரிந்தும் புரியாமலும் உறுத்திக்கொண்டிருந்தது.

பகலும் இரவுமாய் மாறி மாறி நாட்கள் நகர்கின்றன. ஒரு சமயம் ஓடுகின்றன. ஒரு சமயம் தயங்குகின்றன. ஆனால் எந்த சமயமும் நின்றதில்லை.

என்னைச் சுற்றி வீடுகள் முளைத்துக் கொண்டிருக்கின்றன. காலியாகின்றன. குடித்தனங்கள் மாறுகின்றன. வயல்களில் கதிர்கள் பெருமூச்செறிகின்றன. ஏரி வற்றுகிறது. மழை பெய்கிறது. தடித்த தூறல்கள் என்மேல் தழுக்கு வாசிக்கின்றன. மழை கொட்டுகிறது. ஏரி நிரம்பி வழிகின்றது. குளிர் கிட்டுகிறது. இலைகள் உதிர்ந்து மரங்கள் நிர்வாணமாகின்றன. நான் ஏற்கனவே நிர்வாணம் தான். ஆனாலும் இப்போது அதுமாதிரி ஒரு உணர்வு தோன்றுகிறது.

மரங்கள் ஒரு பக்கம் பட்டுப்போய்க்கொண்டே மறு பக்கம் துளிர்க்கின்றன. ஏதேனும் நிகழ்ந்துகொண்டு வர்ணங்கள் நேர்ந்த வண்ணமிருக்கின்றன.

ஒரு தினம் எனக்கு அண்டைக் குன்றை மொய்த்துக் கொண்டிருந்த ஜனங்கள் அத்தனைபேரும் சட்டென இறங்கி ஓடிப்போன கொஞ்ச நேரத்துக்கெல்லாம் பெரிய சத்தத்துடன் குன்று வெடித்தது. பெரிய விரிசல், பெரிய பள்ளம் விட்டுக்கொண்டு பெரிதும் சிறிதுமாய்க் கற்கள் சரிந்தன. அதை என்னவோ செய்திருக்கிறார்கள்.

எனக்கும் இந்தக் கதிதானே ஒருநாள் என்று தோன்றினதுமே உள்ளே 'சில்'லென்றது. ஆகவே ஆயசு எனக்கும் கணக்கில்தான் இருக்கிறது. இது நல்லதா,

கெட்டதா? புரியாத புதுக்கேள்வி வாட்டுகிறது. ஆனால், எது, என்ன, எப்படி நேர்ந்தாலும் என்னால் என்ன செய்ய மு யும்? அன்றொரு நாள் பறந்துகொண்டேயிருந்த பக்ஷி ஒன்று பொத்தென என்மேல் விழுந்து பொடி நேரத்தில் உயிரற்று சிறகுக் குதறல் ஆகிவிட்டது. மாரடைப்பா, சிறகின் களைப்பா, விழுந்த அதிர்ச்சியா, எது எப்படியிருந்தாலும் என்னால் என்ன செய்ய முடிந்தது? மொத்தா கார மான, செயலற்ற ஜீவன்.

இப்போது ஒரு தனிமை தெரிகிறது. இது உணர்வு பெற்றதன் விளைவு. அறிகிறேன். ஆயுசு, தனிமை, வெறிச்சோ—என்ன செய்வேன்? என்னைச் சுற்றி நல்லன, பொல்லாதன, சுகம், துக்கம், வாழ்வு, அறிவு நிகழ்வன யாவுக்கும் என்வரை செயலற்ற சாக்ஷி நான். இந்த உணர்வு வேண்டாம் என்று மறுப்பதும் என்னிடம் இல்லையே! பெற்றபோது தேடியா பெற்றேன்?

ஆனால் பெற்றதை இழக்கவும் மனமில்லை. சம்பவங் களின் பவனி, ஆச்சர்யம் குன்றா அனுபவம். உணர்வு இலாது இது சாத்தியமா?

ஒரு நாள்—

இரவு டியூட்டியிலிருந்து திரும்பி வந்து பாயில் விழுந்து—கண்கள் எரிந்தன—அடித்துப்போட்டாற்போல் களைத்து, அவ்வப்போது கலைந்த தூக்கங்களிலிருந்து ஒருவாறு மீண்டு பார்வை சுவர்க்கடியாரத்தில் நிலைத்ததும் அது பதினொண்ணு காட்டியது அவனுக்கே ஆச்சர்யமாயிருந்தது. இத்தனை நேரமா ஆயிட்டுது?

சோம்பல் முறித்து எழுந்து, வாயில் டூத்-ப்ரஷ்ஷுடன் வாசலுக்கு வந்தான். பாறைமேல் கூட்டம். ஐந்தாறு பேர் நெருக்கமாக நின்றாலும் கும்பல்தான். மேலும் கீழுமாய்ப் பார்த்துக்கொண்டு, சிரித்துக்கொண்டு, கொக்கரித்துக் கொண்டு, ஓரிரு விரல்கள் உற்சாகமாய் ஆகாயத்தைச்

சுட்டிக்காட்டிக் கொண்டு—அண்ணாந்தான். ஒரு புடவை, ரோஸ் கலர், பட்டை நீலக்கரை, உயரக் காற்றில் மிதந்து கொண்டிருந்தது. அவனும் ஓடிப் பாறைமீது ஏறினான்.

கீழே, தண்ணீரில், மார்பளவு ஆழத்தில் அமிழ்ந்து, கைகளால் மார்பைப் பொத்திக்கொண்டு உட்காரவா, நிற்கவா, நிற்குமளவுக்கு ஆழம் இருந்ததா? முழுக்க மூழ்கியேவிட ஆழம் இருந்ததா? கேள்விமேல் கேள்வி நெஞ்சில் அடுக்கிச் சரிந்தன.

கண்களை இறுக்க மூடிக்கொண்டு, உள்ளே கூசிப் போய்—

இவள் நிலை பொறுக்க முடியவில்லை. என் செய்வேன். நண்பன் என்று சொல்லிக்கொண்டு காற்றின் வேலை, "இப்போ ஒரு வேடிக்கை காட்றேன் பார்!" இது ஒரு விளையாட்டா, ஐயோ என்ன செய்வேன்!

என்ன செய்தான் என்று தன் நினைப்பிலேயே அவன் இல்லை. இடுப்பு லுங்கியை அவிழ்த்து அவளிடம் வீசியெறிந்தான். மூழ்குபவன் கரையோரம் கோரையைப் பற்றுவது போல் அவள் அதைப் பற்றிக்கொண்டு தண்ணீருள் மூழ்கினாள்.

"ஏண்டா, நீங்க அவங்க அவங்க தாய்மாருக்குப் பொறந்தவங்கதானே! உங்களுக்கு அக்கா தங்கை, பொண்ணுன்னு கிடையாது? வேடிக்கையா பாக்கறீங்க உங்களுக்கு வெக்கமாயில்லே?"

இத்தனை சீற்றம் எங்கிருந்து வந்தது? இந்தக் கோபம் அவனுடையது மட்டுமன்று. இது மானுடத்தின் கொதிப்பு. உடம்பு கிடுகிடென ஆடிற்று.

அவர்கள் பின்னடைந்தனர். அந்தச் சொற்கள், அந்தக் குரல் அவர்களுடைய பச்சை நரம்பை எங்கோ தொட்டிருக்க வேண்டும். பதில் பேசாமல், ஒன்றும் இரண்டுமாய் விலகிப்போனார்கள். போயேவிட்டார்கள்.

இறங்கி வந்தான். தண்ணீரினின்று அவள் எழுந்தாள். வேட்டியை, அக்குள்வரை இழுத்து இறுக்கக் கட்டியிருந்தாள்.

"என் புடவை! என் புடவை!" அலறினாள்.

அது எங்கே பறந்துபோய், எல்லாருக்கும் இன்னும் மாயம் காட்டிக்கொண்டிருக்கின்றதோ? அல்லது எந்த தந்திக்கம்பத்தில், எந்த மரத்தின் உச்சாணிக் கிளையில் சிக்கி...

"எங்கேன்னு தேடறது? இப்போ என்ன செய்ய முடியும்?"

"என் நயினா! என் நயினா! என்னைப் பலி போட்டுடு வாரு!"

"அப்போ இங்கே தண்ணிலேயேதான் இருக்கப் போறியா?"

ஒன்றும் புரியாமல் கைகளை உதறினாள். விழிகள் திகில் சுழிகள். "இதோ என் வீடு. இப்போ உள்ளே வா. யோசிப்போம். உன்னை ஒண்ணும் செய்யமாட்டேன், வா!"

ஒடுங்கிக்கொண்டே உள்ளே வந்தாள். வாசற்கதவை இழுத்து மூடினான். இருக்கும் ஒரு அறையில் அவளை இருக்கச் சொல்லிவிட்டு, 'டீ' போட்டு இரண்டு தம்ளர்களில் ஊற்றிக்கொண்டு வந்து, ஒன்றை அவளிடம் கொடுத்து விட்டு, தான் மெதுவாகப் பருகினான். இது நானா வாங்கிக் கொண்ட வம்பா? மத்தவங்கமாதிரி நானும் வேடிக்கை பார்த்துட்டுப் போயிருக்கலாமோ? ஆனால், எனக்கு அப்படித் தோணல்லியே!

சரியான நாட்டுக்கட்டை, குதிரைக் குட்டிபோல் 'விண்' ணென்றிருந்தாள். மாநிறத்துக்கும் மட்டு. கூந்தல் நீளமாய், நனைந்து அடையாய்ப் பிடறியில், தோள்களில் முதுகில் ஒட்டிக்கொண்டிருந்தது. புஜங்களில், கழுத்துக்குக் கீழ்

மார்பில், ஜலம் முத்திட்டு நின்றது. உடம்பு இன்னமும் உதறிற்று, குளிரா, பயமா, இரண்டுமா? விழிகள் ஏற்கனவே பெரிதில், பயத்தில் இன்னும் பெரிதாய்க் காட்டின.

"எங்கிருந்து வரே?"

கையை வீசி, அஸ்வாரஸ்யமாய் எங்கோ காட்டினாள். புரியவில்லை. இப்போது அது அவளுக்கு முக்கியமில்லை.

திடீரென்று தேம்பித் தேம்பி அழுதாள், மார்பே உடைந்து விடும்போல்.

"ஏன் அழுவரே? இப்ப என்ன ஆயிடுச்சி?" என்று முனகினான். அவனுக்கே அவன் வார்த்தைகளில் தைரியமில்லை.

"இன்னும் என்ன ஆவணும்? மானம் போச்சே! நாலு பேர் கண் எச்சில் பட்டிடுச்சே!"

"சரி, இப்போ என்ன பண்ணச் சொல்றே? நீயே வாங்கிண்ட வினைதானே!"

இதைக் கேட்டதும் சற்று அடங்கினாள். "புடவைமேல் கல்லை வெச்சிட்டுத்தானே தண்ணியிலே இறங்கினேன். தண்ணிமேலே திடீர்னு ஆசை ஆயிடுச்சு."

"சரி விடு" சங்கடமாயிருந்தது.

"புடவையில்லாமே எப்பிடி வீட்டுக்குப் போவேன்? என் நயினாவை உனக்குத் தெரியாது. சித்தாத்தாளைக்கூட ஒரு கணக்கிலே சேர்த்துக்கலாம். அவரை முடியாது. வீட்டை விட்டுத் துரத்திடுவாரு."

"இதோபார். இப்படியெல்லாம் பேசி ஒரு மண்ணும் ஆவப்போவதில்லை. நிலைமையை சமாளிச்சுத்தான் ஆவணும். நானும் கூடத் துணைக்கு வரேன்."

"வேறே வினையே வேண்டாம். இல்லாத ஜோடனையெல்லாம் பண்ணிடுவான். ஐயோ, என்னை இனி யாரு கலியாணம் கட்டுவாங்க?" மறுபடியும் அழ ஆரம்பித்தாள்.

"நான் கட்டிக்கறேன்.

எப்படி இந்த வார்த்தை வெளி வந்தது? அவனுக்கே தெரியவில்லை. மீண்டும்,

"ஆமா, நான் கட்டிக்கறேன்."

ஆச்சரியத்தில் திக்குமுக்காடிப் போனாள். வாய் லேசாய் மொட்டுப்போல் திறந்தது. குழந்தைபோல் இருந்தாள். பாவமாய், அகதியாய்... அவளை அப்படிப் பார்க்க அவனுக்கு என்னவோ பண்ணிற்று.

"இதோபார் ஆமா"—உற்சாகமானான். "நீ யாரோ நான் யாரோ, உன்னை முன்னே பின்னே பார்த்ததில்லை. உனக்கும் நான் அப்படித்தான். ஆனால் நான் உன்னைக் கட்டிக்கிறேன். நீ எனக்கு ஆக்கிப்போடுவியா, மாட்டியா?"

பொம்மைமாதிரி தலையை ஆட்டினாள். அவளுடைய திகைப்பில் அவன் சொன்னது அவளுக்குச் சரியாகப் பதிவானதோ?

"ஆக்கத் தெரியுமா?" சிரித்தான். "தெரியாட்டியும் அக்கறையில்லை. துணையிருப்பேல்ல? நீ எனக்கு, நான் உனக்கு. நமக்குக் கலியாணம் இப்பிடித்தான் கூடணும்னு இருந்திச்சின்னா யார் என்ன செய்ய முடியும்? வா, எழுந்திரு."

வீடு திறந்தபடி கிடக்க, இறங்கி, தெருவென்ற பேரில் உருவாகிக்கொண்டிருக்கும் அகல நடைபாதையில் உச்சி வெயிலில் இருவரும் பக்கத்தில் பக்கத்தில் நடந்து செல்கை

யில் ஆங்காங்கே வாசல்களில் தலைகள் எட்டிப்பார்த்தன. ஊரில் இன்னேரத்துக்கு அப்பா மாத்யான்னிகம் பண்ணிக் கொண்டிருப்பார். ஆம், நான் எங்கே அடி எடுத்து வைத்துக்கொண்டிருக்கிறேன்? இவளும்தான். எங்கே போய்க் கொண்டிருக்கிறோம்? ஆனால் நிச்சயம் இனி கேள்விக்குறியில்லை. இனி அடி திரும்ப முடியாது.

சூரிய பகவானே, குழந்தைகளுக்கு அருள்புரியுங்கள்.

●

—இந்தியா டுடே

# அவள்

கமலாம்பிகே! ஜம்பு குருக்கள் துண்டை உதறிப் போட்டுத் திண்ணைமேல் உட்கார்ந்தார்.

பெயரைச் சொல்லிச் சொல்லி, அது மூச்சோடேயே கலந்துபோய், மூச்சும் நாமமும் வேறென்று நினைக்கவே மறந்துபோச்சு.

அம்மன் சன்னதிக்கு வெளியே சுவரை ஒட்டி ஒரு திண்ணை, அதில்தான் அவர் ஒழிந்த நேரங்களில் உட்காருவதும், சமயங்களில் இரவு படுப்பதும் வழக்கம். இன்று (பௌர்ணமி மட்டும்) நடு நிசியில், கர்ப்பக்ருஹத்தில் ஒரு சந்துவழி, சந்திரன் அம்மன் முகத்தை வியாபிக்கும்போது அவள் கண்கள் விழித்தெழுவதுபோல மாயங்காட்டுவதற்குக் காத்திருப்பார். அவருக்கு அது கண்கொளாக் காக்ஷி.

கமலாயதாக்ஷி.

ஏனோ தெரியவில்லை. மனது அலசிப் பிழிந்து உலாத்தினாப்போல், துல்லியமாய், லேசாய், குளுமை வழிந்து நிறைந்திருந்தது.

கைகளைக் கோர்த்து, தலைக்கு வைத்து மல்லாந்து படுத்தார். கண்ணுக்கு நேரே கூரையில் கல் தாமரை? இதவான மோனம் சூழ்ந்தது.

கோவிலுக்கடுத்தாற் போலேயே சொப்பாட்டம் வீடு. ஒரு சின்ன அறை, அதற்கேற்ற கூடம். இந்த இரண்டு கட்டைகளுக்குப் போதாதா?

அகிலா இரண்டாவது ஜாமத்தில் இருப்பாள். அவளுக்கு இப்போ கொஞ்சம் முடியல்லே. வயசாகல்லியா? இரண்டு பேருக்கும் வயசு வித்தியாசம் அஞ்சுக்குள். உறவு விட்டுப் போகாமல் இருக்க அவளுக்கு அஞ்சு வயசிலேயே போட்ட முடிச்சு. சட்டம் இருந்தாலும் கிராமத்துள் எட்டாது.

ஆனால் புத்ர பாக்யம் இல்லை. விரதங்கள் முழிச்சது தான் மிச்சம். யார்மேல் குத்தம்னு ஆராய விஞ்ஞானம் அந்த அளவுக்கு அப்போது வளரவில்லை. வளர்ந்திருந் தாலும் அதன் உதவியைத் தேடத் தோன்றியிருக்காது. நமக்கு ப்ராப்தி அவ்வளவுதான்; அகிலாண்டேசுவரியின் சித்தம், அதனால் நம் வசத்தில் என்ன இருக்கு?

உறவில் ஒரு பையனை ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டார்.

பின்னால் தனக்கு வாரிசாயிருப்பான் என்று வரித்த பையன், ஒருநாள், கிழங்காட்டம் பொன் கட்டிய அவருடைய ருத்ராக்ஷ கண்டியை எடுத்துக்கொண்டு ராவோடு ராவாய் மறைந்தவன், போனவன் போயே போனாண்டி ஆனபின் ஆத்திரப்பட்டு, அழுது ஓய்ந்தபின், அகிலா ஒருமுறை கைகொட்டிச் சிரித்துவிட்டு, "இனி உங்களுக்கு நான் குழந்தை. எனக்கு நீங்கள் குழந்தை" என்று தேற்றினபோது, குருக்களுக்குப் புத்தி தெளிந்தது. ஆனால், இருந்த இடத்தில் தொடரப் பிடிக்கவில்லை. அன்று தென்னாட்டை உதறி வந்ததுதான், இங்கு வந்து நாற்பது வருடங்களுக்கு மேல் ஆகிறது.

இந்தக் கோவில் பெரிசு ஒழிய, ரட்சணையும் போஷணை யும் போதாது. இன்னமும்தான். வந்த புதிதில், முதன் முதலாக அம்பாளை ஆள் உயரத்துக்கு, கிழிசல் தோம்பும்

பாவாடையில் கண்டதும், வயிறு ஒட்டிக்கொண்டது. இரண்டு கால பூஜை என்று பேர். நாட்டாமைக்காரிடமிருந்து தினம் இரண்டுபடி அரிசி. அதுதான் சாமி நைவேத்யத்துக்கும் அவர் சம்பளத்துக்கும்.

தெய்வத்தின் தீன நிலை ஜம்பு குருக்களுக்குப் பலத்தைத் தந்தது. அல்லது அவருக்கே சமயத்துக்கு முகராசி வந்ததா? பார்க்கவேண்டிய இடங்களில், பார்க்கவேண்டியவர்களைப் பார்த்தார், கெஞ்சினார், அதட்டினார், கொஞ்சினார். முயற்சி ஓரளவுக்குத் திருவினை கண்டது. ஓரளவுக்குத்தான் அம்பாளுக்கு உடுக்கை மாற்ற முடிந்தது!

"கமலாம்பிகே! என் குழந்தே!"

ஆம், குழந்தைதான். மதமதவெனப் பதினாறு வயதுக் குழந்தை. வளர்த்திக்குக் கேட்பானேன்? தினே தினே எத்தனை நீராட்டல், எத்தனையெத்தனை ஸஹஸ்ரநாமங்கள் லக்ஷக்கணக்கில் சேர்ந்து அர்ச்சனையின் ஊட்டம்! சில சமயங்களில் தொங்கும் அகலில் சுடரின் நிழலாட்டத்தில் கல் ஓவியம் கண் திறந்தபடி சிரிப்பில் முன் பற்கள் இரண்டு லேசாய்த் தெரிவதுபோலும்—பரபரத்து நெருங்கி வந்து உற்றுப் பார்ப்பார். கல்லுக்கு அத்தனை நெகிழ்ச்சி ஸ்தபதியின் வெறும் கைத்திறன் மட்டுமல்ல, ஸ்வயார்ப்பணம். சிற்பி யாரோ? அவன் பேரும் அடையாளமும் தெரியாமல் இருப்பதால்தான் அவள் அநாதியாய், அத்தனை ஸௌந்தர்யவதியாய் விளங்குகிறாள்.

கமலாம்பிகை பற்றி அகிலாவுக்கு குருக்களின் படபடப்பு உண்டோ? யார் கண்டது? வெளியில் தெரியவில்லை. சுபாவத்திலேயே அவள் கொஞ்சம் கெட்டி. வளவளவென்றிருக்க மாட்டாள், சற்று விரக்தியானவள்கூட. கோவிலில், தேவி வழிபாடில் தன் கணவனின் உற்சாக ஈடுபாடுடன் அவள் இழையாவிட்டாலும் அவளுக்கும் பக்தி உண்டு. ஆசாரம் உண்டு.

குருக்கள் தூக்கத்தின் மெத்தான ஆலிங்கனத்தில் புரண்டு படுத்தார் செருகிய இமைகளின் கீற்றில் எட்ட ஒரு நீலப்பொறி தெரிந்தது. அது கிட்டக் கிட்ட நெருங்கு கையிலேயே பெரிதாகிக்கொண்டே வந்து, அந்த ராக்ஷஸச் சுடரின் தண்ணொளி கண் கூசிற்று. கண்ணைக் கசக்கிக் கொண்டு விழித்தபோது பொலபொலெனப் புலரும் வேளை, திண்ணையில் அவர் பக்கத்தில் வெகு நெருக்கமாய், அவர் மேல் இடித்துக்கொண்டு ஒரு உருவம் உட்கார்ந்திருந்தது. பதறி எழுந்தார்.

"நான்தான் அப்பா!" குரலில் ஆண் கார்வை. அவர் தோளைத் தொட்டாள். சிரித்தாள். 'ஏன் பயப்படறேள்?' பாவாடைத் தாவணியில் மதமதவெனப் பதினாறு.

குருக்களுக்கு முகத்தின் அங்கங்கள் துடித்தன. வாயுள் நாக்குத் தடித்தது. இழுத்து விடுமோ? "நீயா?"

"ஏன், நானாயிருக்கப்படாதா?"

கைகள் கூப்பிக்கொண்டன.

"ஜகன்மாதா, நீ என்னை அப்பா என்று அழைக்கும் விபரீதம் என்ன? அபராதம் ஏதேனும் நேர்ந்துடுத்தா? மன்னிச்சுடு தாயே, மன்னிச்சுடு." கண்கள் துளும்பின.

"உம்—என்ன உளறல்? ஆசைப்பட்டு வந்திருக்கேன்!"

அவர் பார்வை அவரை அறியாமலே கர்ப்பக்ருஹத்துள் சென்றது.

"அங்கே என்ன இருக்கு, கல்தான்!" கைகொட்டிச் சிரித்தாள். "நான் இங்கேன்னா இருக்கேன், அப்பா நீங்கள் வளர்த்த நான். அப்பா, நீங்கதான் சொல்லணும். மனுஷாள் என்னைக் கல்லில் பார்க்கத் தயாராயிருக்காள், ஆனால் உயிரில் பார்க்க ஏன் பயப்படறாள்?" அவர்களுக்கே இஷ்டமில்லையா?"— அவள் கண்கள் பளபளத்தன. கண்ணீரிலா?

"தேவி, என்னை—எங்களை மன்னிச்சுடு"

"ஸப்!" கூம்பலில் உறைந்துபோன அவர் கைகளைப் பிரித்துவிட்டாள். அவளுடைய உடலின் உற்ற கறுப்பில் உள்ளங்கைகள் செந்தாமரை. வெள்ளை விழியோரங்களில் செந்நரம்புக் கொடி. உதடுகள் வெற்றிலைச் சிவப்பு. புருவ நடுவில் குங்குமம். நெற்றியில் சூர்யோதயம்.

"அப்பா, நான் பிறந்த வீட்டுக்கு வர ஆசைப்படறேன். என்ன முழிக்கறேள்? நான் உங்கள் வீட்டில் வந்து இருக்கப் போறேன். ஒருநாள்தான்"—சுட்டுவிரலைக் காட்டினாள்.

வாயடைத்துப் போனார். உள்ளே சந்தோஷம், பயம் இரண்டும் சேர்ந்த குழப்பம்.

"அப்பா, பொண்ணாப் பிறந்தால் பிறந்தாத்து ஆசை துப்புற விட்டுடாது."

"பாண்டிய ராஜகுமாரி, நீ என்னை கேலி செய்கிறாய்."

"'கமலாம்பிகே, குழந்தே'ன்னு மூச்சுக்கு மூச்சு கூப்பிட்டது யார்?"

"அம்மா, என்னைக் கேட்கணுமா, என்னைக் கேட்காமலே என் வீட்டுக்கு நீ வந்து உட்கார முடியாதா?"

"வாய்ச்சொல் கௌரவம்னு ஒண்ணு இருக்கேப்பா! தவிர, நான் வெகுளி. என் கணவரின் எல்லையற்ற பொறுமையும் உங்களைப் போலோரின் எல்லையற்ற அன்பும்தான் நான் இந்த அளவுக்கு என் இஷ்டத்துக்கு வளரக் காரணம். பொறுமைக் கடல்னா அவர்தான். எனக்கு அது முற்றிலும் பொருந்தாது. நான் வெகுளி, இப்பவும் அவரைக் கேளாமல் தான் வந்திருக்கேன். அவர் தடுக்கவில்லை. உங்கள் விஷயத்தில் தடுக்கமாட்டார். என் குழந்தைகளிடம் எப்போதுதான், எப்படித்தான் நான் இருக்கிறது அப்பா?"

அவள் குரல் நடுங்கிற்று, ''அப்பா, நீங்கள் எல்லோரும் தெய்வத்தை உங்கள் தன்மையில்தான் படைத்திருக்கிறீர்கள். எனக்கும் ஏக்கம் உண்டு, கண்ணீர் உண்டு. அவருக்கு அதெல்லாம் இல்லை. அவருக்கு உருவமே இல்லை.''

சிரித்தாள். ''வாங்கோ போகலாம்.''

குனிந்த தலை நிமிராமல், அகிலா கோலத்தில் முனைந்திருந்தாள். பெரிய தாமரை. அடுக்கடுக்கான இதழ்களின் சிக்கலான கோடுகள். விரல்களின் நுனியிலிருந்து கோல மாவு, தீர்மானமான வளைவுகளில் சொரிந்தது.

இந்த வயதிலும் அகிலா நிறம் குன்றவில்லை. அழகாயிருந்தாள், அது. கண்ணைப் பறிக்கும் ஒரு தினுசான வெளிறிச் சிவப்பு. வயதுக்கு மயிர் நரைக்கவில்லை. வங்கிக் கூந்தல், இன்று, எண்ணெய்ஸ்நானத்தில் சற்று புஸு புஸு. தாடைகளில், கழுத்தில் இப்பத்தான் சுருக்கங்கள் தெரிய ஆரம்பித்திருக்கின்றன. பட்டுப்புடவையிலிருந்தாள். வெள்ளிக்கிழமை அல்லவா!

கோலத்தின் வெளி ஓரங்களைச் சரிபண்ணிவிட்டு, பார்வை திரும்புகையில் பூவின் மையத்தில் இரண்டு பாதங்கள் நின்றிருக்கக் கண்டாள். கண்கள் மெதுவாய் மேனோக்க...

பாரிந்தப் பொண்ணு? எப்படிக் கோலத்துள் வந்தாள்?

''என் பாதங்களுக்கு அளவெடுத்த மாதிரியே இருக்கே அம்மா!''

அகிலாவின் விழிகள் வட்டங்களாயின. எனக்கு இவள் மேல் ஏன் கோவம் வரல்லே? வந்தவளின் கண்கள் அவள் மேல் குனிந்து சிரிக்கையில் அகிலாவுக்கு என்னவோ பண்ணிற்று (வயிறு திறந்துகொண்ட மாதிரி என்று சொல்லலாமா?) கோலத்தில் சில கோடுகள் அழிந்திருந்தன.

அருகே கைகட்டி நின்ற குருக்கள்மேல் அவள் பார்வை திரும்பியது.

"அகிலா, இவள் நம்மோடு இருக்க வந்திருக்காள்."

அகிலாவின் புருவங்கள் உயர்ந்தன. உடனே சமாதானப் படுத்துகிறமாதிரி, அவர், "இவள் கணவன் வீட்டிலிருந்து வந்திருக்காள்."

"கோவிச்சுண்டா?"

குருக்கள் முகம் மாறிற்று. ஓ, இப்படியும் ஒரு கோணம் இருக்கா?

அவள் சிரித்தாள். "சுமாச்சுமா வந்திருக்கேன். ராத்ரி போயிடுவேன்."

"ராத்ரி என்ன கணக்கு?"

"சூர்யோதயத்திலிருந்து அஸ்தமனம்வரை ஒரு பகலாகு மோன்னோ?"

அகிலாவுக்குப் புரியவில்லை.

"உள்ளே வா கண்ணு—இல்லே சத்தேயிரு, கோலத்தில் நிக்கறே ஆரத்தி கரைச்சு கொண்டு வரேன்,"

அவள் தோளைத் தொட்டபடி, வாசற்படி தாண்டியதும், அவளுக்குக் கழுத்திலிருந்து கால்வரை—"ஜிவ்"—உயிர் வெளியே குதிக்கும்போல் பரபரப்பு, ஆனந்தம், பயம். கையை மார்க்குலையில் அழுத்திக்கொண்டாள்.

"ஏண்டிம்மா குழந்தே, மாப்பிள்ளையைக் கூட அழைச்சுண்டு வரப்படாதோ?"

"அவர் மாப்பிள்ளையாச்சேம்மா, அவர் எப்பவும் மாப்பிள்ளை முறுக்குத்தான், எனக்குப் பிறந்தாத்து எண்ணம் வந்துடுத்து, வந்துட்டேன்."

"குழந்தை, நீ உறவு கொண்டாடச்சே, எனக்கு உன்னைப் பெத்த சந்தோஷமே வரது."

"ஏம்மா, பெத்தால்தான் உறவா? பாவனைதான் உறவு. ரெண்டுபேரும் சேர்ந்து நில்லுங்கோ, நமஸ்காரம் பண்றேன்."

"பண்ணடி கண்ணே, மகராஜியாயிரு."

அவர் கண்கள் பயத்தில் சுழன்றன. தடுக்க முயன்ற கைகளைச் சிரமப்பட்டு, பின்னுக்கு இழுத்துக்கொண்டார்.

நமஸ்கரிப்பில் குனிந்த அவள் முகம் நிமிர்கையில், கூடத்து ஜன்னல் வழி வெயில் பட்டு, முகமே சிவப்பாய் ஏற்றிக்கொண்டது.

ஜ்வாலாமுகி.

அகிலா கண்களைக் கசக்கிக்கொண்டாள். ஊஹூம் ஒன்றுமில்லையே. அந்தப் பெண் எழுந்து நின்றுகொண்டிருந்தாள்: "நீங்கள் இப்படி வாழ்த்தி வாழ்த்தித்தான் நான் வயசுக்குமீறிக் குதிரையா வளர்ந்துட்டேன்." 'ஹூம்'—மூக்கைச் சுருக்கிக்கொண்டாள். "'கம்'முனு வாசனை! அப்பா பசிக்குது."

அடுப்பு மேடைமீது இறக்கி வைத்திருந்த வெண்கலப் பானையின்மேல் தட்டை எடுத்தவுடன்,

"ஆ, சக்கரைப் பொங்கல்! எனக்கு உசிராச்சே! அம்மா, அத்தனையும் எனக்குத்தானே?"

"ஆமாண்டி செல்லம், உனக்கேதான். வெள்ளிக் கிழமை, பௌர்ணமியாச்சே! நைவேத்யத்துக்குப் பொங்கல் வெச்சேன். அப்பா ஸ்நானம் பண்ணிண்டிருக்கார். நிமிஷமாக் கோவில் பூஜை பண்ணிட்டு வந்துடுவா—ஆ—என்னடி பண்ணறே?"

அவள் பொரிக்கப் பொரிக்கப் பொங்கலை விரலால் வழித்து வாயில் கப்பி, விரல்களைச் சப்பினாள்.

'திக்'கென்றது. அகிலா குருக்களைத் தேடிச் சென்றாள். அவர் கிணற்றடியில் ஸந்தியாவந்தனம் பண்ணிக்கொண்டிருந்தார்.

"யார் இந்தப் பெண்? இவளை எங்கே பிடிச்சுண்டு வந்தேள்?"

"என்ன ஆச்சு?"

"நைவேத்யத்தை ருசி பார்த்து, எச்சில் பண்ணி வழிச்சு முழுங்கிண்டிருக்கா."

"ஓ!" குருக்களுக்கு ப்ரமை பிடித்தாற்போல் ஸ்தம்பித்து, உடனே சிரித்துவிட்டார்.

"இதிலே என்ன சிரிக்கக் கண்டுட்டேள்?"

குருக்கள் சமாளித்துக்கொண்டு "இதோ பார் அகிலா, பொறுத்துக்கோ. இன்னி சாயங்காலம் வரைக்கும்தான்."

"இதென்ன ரெண்டுபேரும் சாயந்திரத்துக்குக் கண்டம் வெச்சிப் பேசறேள்! அவளை வெள்ளிக்கிழமை அதுவுமா யார் போகச் சொல்றா?"

"அகிலா, அவள் நம் இஷ்டத்திலில்லை. நாம்தான் அவள் இஷ்டத்திலிருக்கிறோம்."

"இதென்ன பாஷை, என்ன புதிர்?"

"சாயந்தரம் வரைக்கும்தான்"—கெஞ்சினார்.

ஒன்றும் புரியவில்லை. பொட்டைத் தேய்த்துக்கொண்டு அகிலா உள்ளே சென்றாள். கூடவே பிடரி குறுகுறுத்தது. பயம்?

அவள் டப்பாக்களைத் திறந்து, உள் பார்த்து மூடிக் கொண்டிருந்தாள்.

"என்னம்மா தேடறே?"

"பசிக்கறதம்மா"

அகிலாவின் பார்வை அடுப்பு மேடைமேல் சென்று திக்கிட்டது.

"பெண்ணே, உன் பேர் என்ன?"

"கமலா."

"சரி, வா கமலா, இந்த மணைமேல் உட்கார், வெள்ளிக் கிழமை. ஒரு கை எண்ணெய் தலையில் வைக்கறேன். சற்றுப் பொறு, சமையலாயிடும்."

"ஆமாம், எத்தனை நாள் வேணுமானாலும் பட்டினி கிடப்பேன். பசிக்கணும்னு நெனச்சேன்னா தாங்கவே முடியாது. என் பசி ஒருத்தி பசி மட்டுமல்ல. எத்தனையோ பசிகள்."

என்ன உளறுகிறாள்? வெண்கலப் பானை காலி. இன்னுமா பசி? அதென்ன பசி? ஆச்சரியம், கூடவே பயம்.

கூந்தலின் அடர்த்திக்கும் நீளத்துக்கும் எண்ணெய் பற்றவில்லை. எண்ணெய்க் காப்பில் கருங்காலி சிற்பம் போலப் பளபளத்தாள்.

சுவரில் மாட்டியிருந்த படத்தெதிரே—அவள் நின்றாள்.

அகிலாவின் பட்டுப் புடவையில், கோடாலி முடிச்சிட்டுக் காடாய்ப் படர்ந்த கூந்தல், நெற்றியில் குழைத்துப் பட்டையாயிட்ட விபூதி (அவள் வீட்டுப் பழக்கமாம்) நடுவில் குங்குமம். அசைவற்ற சுடராய்த் தியானத்தில் நின்றாள்.

குத்துவிளக்குச் சுடர் அவளைக் கண்டு அஞ்சினாற் போல் பின்வாங்கி, முதுகு நெளிந்து ஆதரவு கண்டாற் போல நிமிர்ந்து பிதுங்கிற்று. உதடுகள் செதுக்கலில் அசலனமாய், மோவாய் நடுவே குழிவு. அகிலா அதிசயித்து நின்றாள். அறியாமல் கைகள் கூப்பிக்கொண்டன. பார்க்கப் பார்க்க இவளிடம் ஏதேதோ புதுப்புது அழகுகள் தோன்றிக் கொண்டேயிருக்கின்றன. அப்படியே கல்லாகிவிட்டாளா? பயம் வந்துவிட்டது. "கமலா! கமலா!!" அவள் தோளைத் தொட்டு அசைத்தாள்.

விழிகள், மெல்லத் திறந்து, அவளை அணைத்தன.

அகிலாவுக்கு நெஞ்சு விம்மிற்று. ''என்ன அம்மா—?'' அவளும் அவளை அணைத்துக்கொண்டாள். அகிலா பொட்டென உடைந்துபோனாள். விக்கி விக்கி அழுதாள். இத்தனை நாள், தனக்குத்தானே ஒப்புக்கொள்ளாமல், தன்னுள் சிறை கிடந்த தாய்மையின் தவிப்போ? குருக்கள் இல்லை. கோவிலுக்குப் போயிருந்தார்.

அவர் கோவிலிலிருந்து திரும்பியபோது, அவர் முகம் ஒரு தினுசாக மஞ்சள் பூத்து வெளிறிட்டிருந்தது.

''என்ன ஆச்சு?''—அகிலா பதறிப் போனாள்.

அவர் உதடுகள் நடுங்கின. வாய், ஏதோ சொல்ல முயலும் முயற்சியில் தோற்றன.

அவர் கண்கள் அவளை நாடின. அகிலாவின் கேள்விக்குப் பதில் அங்கேதான்...கமலா பொட்டெனச் சிரித்தாள். அவள் விழிகள் கூத்தாடின.

''ஒண்ணுமில்லேம்மா, அப்பா அனாவசியமா மிரண்டு போயிருக்கார். காரணம் இங்கிருக்க, எங்கேயோ தேடினால்? சரி சரி, ரொம்பப் பசிக்கிறது. அப்பா, சோத்து மூட்டையை அவிழுங்களேன். அம்மா, எனக்கு ஊட்டிவிடறியா?''—சிரித்தாள். பருப்புஞ் சாதத்துலே நெய்யும் சர்க்கரையும் கலந்து. இது போதாது, நிறையப் பிசை. எல்லாருக்கும் சேர்த்துப் பிசை. ஒரே பாத்திரத்தில்.''

சிரித்தாள். பற்களில் நக்ஷத்ரங்கள் மின்னின. அகிலா கண்ணைக் கசக்கிக்கொண்டாள். ஒண்ணுமில்லியே!

அவள் வாயில் கவளத்தைப் போட்டதும் அகிலா ஒரு அசாத்ய பரவசத்தில் ஆழ்ந்தாள். திடீரெனச் சுரப்பில் தன் ரவிக்கை நனைந்ததை உணர்ந்தாள். அவளுக்கு அது ஆச்சர்யமில்லை. ஊட்டக் கேட்டது ஆச்சர்யம் இல்லை. எதுவுமே ஆச்சர்யமில்லை. ஒரே அன்பு வெள்ளத்தில் மூழ்கிப்போனாள்.

இப்ப நான் உங்களுக்கு ஊட்டறேன், "அ...ஆ... அப்பா, வாயைத் திறவுங்கோ."

ஆ...மதுரமே! ஒரே கலம். எச்சில், தீண்டல், ஆசாரம், பூஜை, புனஸ்காரம் என்ன வேண்டிக்கிடக்கு? எல்லாமே ஒரே அன்பு வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போயின.

முதன் முத்தத்தின் எச்சிலில் ஆரம்பித்து
உயிர் முத்து வைத்த வித்திலிருந்து கடைசியில்
கடைவாயில் வழியும் எச்சில்வரை
தலைமுறை தலைமுறை எச்சில்
இல்லாவிடில்
இப்புவனமே ஏது?

வந்தவள் சொன்னாளா? நெஞ்சில் தானே தோன்றியதா? ஒரே ஆனந்த மூர்ச்சையில் எந்நேரம் மூழ்கியிருந்தனரோ?

தோட்டத்தில் கிணற்றடியில் பலா மரத்தில், கூட்டில், இரையைத் தாங்கிவரும் தாயைக் கண்டு குஞ்சுகள் ஆர்ப்பரிக்கின்றன.

தூரக் காட்டில் தேன் குருவி பசு சொகுசில் பூவுக்குப் பூ அந்தரத்தில் நின்று தேனை உறிஞ்சுகிறது.

மேகங்களற்ற நிர்ச்சலமான நீலத்தில் வெள்ளித் தாம்பாளம் கண் கூச தகதகக்கிறது. இல்லை, இது அவள் அபய கரத்தில் ஜ்வலிக்கும் மோதிரத்தின் முகப்பு.

நண்பகல் சொக்கல்.

நேரம் முதிர முதிர, அவள் வதங்கலுற்றாள். வேர் கழன்ற இலைபோல் கொஞ்சங் கொஞ்சமாய்த் துவண்டு...

"என்ன குழந்தை ஒருமாதிரி ஆயிட்டே, உடம்பு சரியில்லையா?"

"அவர் நினைப்பு வந்துவிட்டதம்மா."

"என்ன அதுக்குள்ளேயுமா? சாயந்தரம்தான் போப் போவதாச் சொல்லிண்டிருக்கே! வெள்ளிக்கிழமையுமதுவுமா."

"அவர் நினைப்பு வந்துட்டதம்மா." நினைப்பு வந்தால் விடாதம்மா. நொடியும் யுகம் அம்மா."

"நீ என்ன சொல்றேன்னு விளங்கல்லியே!"

"புரியறதுக்கு ஒண்ணுமில்லேம்மா. அவர் பொறுமை கடலினும் பெரிது. கோபம் கடல் பற்றி எரியும்போல். நான் போகணும்."

அகிலாவுக்குப் பயத்தில் உடல் சிலிர்த்தது.

"நீ வந்த அதிசயம் என்ன, போற சுருக்கு என்ன? ரெண்டுமே எனக்கு அப்பாற்பட்டது. சரி வா, பின்னி விடறேன்." இதுமாதிரி சடையைப் பின்ன எத்தனையோ கொடுத்து வெச்சிருக்கணும். இது கூந்தலா, காட்டாறா, பின்னப் பின்னச் சோம்பிக்கொண்டே, தடுமனாய்ப் பாம்பு நீண்டது.

"கமலா, என் பட்டுப் புடவையிலேயே அவரிடம் போ, என் நினைவாயிருக்கட்டும்."

"ஐயையோ அதெல்லாம் வேண்டாம், எப்படி வந்தேனோ அப்படித்தான் போகணும். அவர் அப்படி."

இப்படியும் ஒரு புருஷன். அவன்மேல் இவளுக்கு இத்தனை மோகம்! ஒண்ணும் புரியல்லே. "சரி வா, போகலாம்."

"நீங்கள் வேண்டாம், எப்படிப் போனேனோ அப்படிப் போயிடறேன் அப்பா வேணும்னா கோவில்வரை வரட்டும். அவர் சுவாமி சன்னதியில் இருப்பார்."

அகிலா அவர்களைப் பார்த்துக்கொண்டே நின்றாள். தானே தன்னை விட்டுப்போவது போலிருந்தது.

அப்பாவும் மகளும் இடைவழியில் பேசவில்லை. குருக்கள் நெஞ்சில் ஏதேதோ குழுமிற்று. சொல்லவில்லை.

த்வஜஸ்தம்பத்தண்டை அவரைக் கையமர்த்தினாள் "போயிட்டு வரேனப்பா..."

உள் ப்ரகாரத்துள் ஆவலுடன் ஓடினாள்.

"அப்பா! அப்பா!" அலறல் கேட்டு குருக்கள் உள்ளே ஓடினார்.

"அப்பா, அப்பா! அவரைக் காணோமே!"—இரண்டு கைகளையும் விரித்தவண்ணம் அவள் கதறுகையில், பிரமிக்கத்தக்க அழகில் பொலிந்தாள்.

ஐயர் எட்டிப் பார்த்தார். கர்ப்பக்ருஹத்தில் லிங்கத்தைக் காணோம்.

"ஆண்டவா, ஆண்டவா!" கதறிக்கொண்டே வெளியே ஓடினாள். குருக்களும் கத்திக்கொண்டே தொடர்ந்தார். "இங்கே லிங்கம் இல்லை. அம்மன் சன்னதியில், மத்யானத்திலிருந்தே மூலவர் இல்லை. ஐயோ! என்ன செய்வேன்!"

"என்ன செய்வேன்! என்ன செய்வேன்!" அழுது கொண்டே, தன்னை அழுத்திய துக்கத்தைத் திமிறிக் கொண்டு குருக்கள் விழித்தெழுந்தார். உடல் பூரா வேர்வை ஸ்நானம். கண்ணைக் கசக்கிக்கொண்டார். எழுந்து உட்கார்ந்தார். கனவின் பீதி தெளியவில்லை. இருக்கிறாளா? இருந்த இடத்திலிருந்து எட்டிப் பார்த்தார்.

கர்ப்பக்ருஹத்தில், சந்து வழி, சாய்வாட்டில், அவள் முகத்தில் நிலாவின் வியாபகத்தில் சிரித்துக்கொண்டிருந்தாள்.

இந்தியா டுடே

MK Colour Process, Madras-14.
Phone : 841478